# கடோபநிஷதம்

(மரணத்திற்கு பின்னால்...)



ப்ரக்ருன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கடோபநிஷதம் |
| தெளிவுரை | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2021 |
| அளவு | : | A4 |
| பக்கங்கள் | : | 202 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# கடோபநிஷதம்

(மரணத்திற்கு பின்னால்…)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# கடோபநிஷதம்

கடோபநிஷதம் (சமஸ்கிருதம்: कठोपनिषद् (Kaṭhopaniṣhad) அல்லது कठ उपनिषद् என்பது முக்கியமான உபநிடதங்களில் ஒன்றாகும். இந்த உபநிஷதம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாகமும், மூன்று அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் இரண்டு பாகங்களுக்கும் சேர்த்து ஆறு அத்தியாயங்கள் காணப்படுகின்றன.

அதுப்போலவே, நான்கு வேதங்களாகத் தொகுக்கப்பட்ட யஜுர் வேதத்தில், சுக்ல யஜுர் வேதம், கிருஷ்ண யஜுர் வேதம் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு. அதிலே, கிருஷ்ண யஜுர் வேதத்தில், தைத்திரீய ஆரண்யகம் என்ற பகுதியில், இந்த '**கடோபநிஷதம்**' வருகின்றது.

இந்த கடோபநிஷதம் ஒரு கதைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதிலே, நசிகேதன் என்ற ஒரு சிறுவன் எமதர்ம ராஜனை சந்திக்கும் நிலையில், அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளும் போது, மிக உயரிய ஆத்மஞான விசயங்களைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும் நசிகேதன் எமதர்மனிடம் கலந்துரையாடுவதுப் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிற்றரசன் **வாஜசிரவஸ்** என்பவர் தனக்கு இன்னும் சில தேவைகளைக் கருதி, அத்தியாவசியப் பலன்களில் ஆசைகள் கொண்டு, காமியக் கர்மாவாக செய்யக்கூடிய **விசுவஜித்** என்ற யாகத்தை செய்ய விரும்பி, அதற்கான யாக குண்டத்தில் அக்னி வளர்த்து, குறிப்பிட்ட தேவனை உபாசனை செய்து, அதற்குரிய மந்திரங்களை உச்சரித்து, அதற்கான ஹவிஸ்பாகம் யாகத்தில் அக்னிக்கு சமர்பித்து, அத்துடன் இன்னும் சில பொருட்களை பலன் கருதி, அதற்கான தானமாகக் கொடுக்க விரும்பினான். ஆனால், அந்த யாகத்திற்கான நிபந்தனை வினோதமானது. அதாவது, **அந்த யாகம் செய்பவர்கள் தன்னிடம் இருக்கும் அனைத்தையும் தானம் செய்ய வேண்டும்.**

ஆனால், அந்த சிற்றரசனாகிய தனது தந்தை வாஜசிரவஸ் சரியானபடி, முறையாக தானம் செய்யாமல், தனக்கு உபயோகமற்ற, தேவையற்ற, எதற்கும் பயன்படாத பொருட்களை மட்டுமே தானம் செய்வதைக் கண்ட அவனது மகன் நசிகேதன் அதனை எதிர்த்தான். தந்தை, யாக நியதிகளைச் சரியாகக் கடைபிடிக்கவில்லை என்பதைக் கண்ட அவன் தந்தையின் தவறைச் சுட்டிக்காட்ட முற்பட்டான். அதை வாஜசிரவஸ் விரும்பாததால், நசிகேதன் எமதர்மனிடம் செல்ல நேர்ந்தது. எமதர்மனிடம் நசிகேதன் மூன்று வரங்களைப் பெற்றான். அந்த மூன்று வரங்களின் வாலாக, இந்த உபநிஷதத்தில் பல உயர் உண்மைகள் போதிக்கப்படுகின்றன.

பிறப்பும் மரணமும் வாழ்க்கையின் இரண்டு மாபெரும் புதிர்கள். பிறப்பு நம் வாழ்வில் நடந்துவிட்ட ஒன்று. அதைப்பற்றி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. மற்றொரு புதிர் மரணம். **மரணம் என்றால் என்ன?** அப்போது மனிதனுக்கு என்ன நடக்கிறது? அதன்பிறகு அவன் என்ன ஆகின்றான்? போன்ற கேள்விகளுக்கு விடைக் காண அன்றிலிருந்து இன்று வரை மனிதன் முயன்று கொண்டிருக்கிறான்.

சாஸ்திரங்களும் அதனைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து விளக்கத்தான் செய்துள்ளன. ஆனாலும் மரணம் என்பது இன்றுவரை ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இந்த கடோபநிஷதம் தனக்கென்று ஒரு கோணத்தை எடுத்துக்கொண்டு மரணத்தை ஆராய்கிறது. மரணத்தின்போது என்ன நடக்கின்றது? என்பதைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்த உபநிஷம் கூறுகிறது (2.2).

ஆனால், மரணத்தைப்பற்றி ஆராய்வதைவிட அதை வென்று, மரமணமற்ற பெரு வாழ்வாகிய அறுதி உண்மையை வாழும்போதே அடையக்கூடிய **ஜீவன்முக்தி நிலை** மட்டுமே அனைவருக்கும் இன்று மிகவும் அவசியமானது. தற்போது நம்மிடம் தரப்பட்டுள்ள வாழ்க்கையை **உரிய முறையில், உயரியதை நாடி வாழ்வதே அதற்கான வழி!** என்று இந்த உபநிஷதம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இது மிகவும் பரவலாக ஆய்வு செய்யப்பட்ட உபநிடதங்களில் ஒன்றாகும். கடோபநிஷத் 17 ஆம் நூற்றாண்டில் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது, அதன் பிரதிகள் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பாவில் அன்றே விநியோகிக்கப்பட்டன.

மாக்ஸ் முல்லர் மற்றும் பலரும் இந்த கட உபநிஷதத்தை அவர்களது தாய்மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். ஆர்தர் ஸ்கோபன்ஹவுர் போன்ற பிற தத்துவவாதிகள் இதைப் பாராட்டியும் உள்ளனர். எட்வின் அர்னால்ட் அதை **"மரணத்தின் ரகசியம்"** என்ற உரை நடையில் மொழிப்பெயர்த்தார். மேலும், ரால்ஃப் வால்டோ எமர்சன் தனது இம்மார்டலிட்டி எனும் கட்டுரையின் இறுதியில், இந்த கடோபநிஷதத்தை மையக் கருத்தாகக் கொண்டு பல விசயங்களை உருவாக்கியுள்ளார்.

ஆகவே, உலகத்தில் நிகழும் அனைத்து நிகழ்வுகளுக்கும் சரியான விளக்கம் நம் வேதத்தில் அடங்கியுள்ளது. அனைத்து மக்களுக்கும் எல்லா காலத்துக்கும் பொருத்தமானது வேதம். எனவே, யார் என்ன கருத்துக்களை எப்பொழுது கூறினாலும், அது வேதத்தின் கருத்துக்கு ஒத்து இருந்தால், அதுவே சரியான கருத்து. இல்லையெனில், அவைகள் தவறான கருத்து. ஆகவே, அந்த நிலையில் மற்ற **மதங்கள், அறிவியல், பொருளியல், சமூகவியல்** போன்ற அனைத்து துறைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏன் இவ்வாறு ஆணித்தரமாக நம்மால் வேதத்தைப் பற்றி கூறமுடிகின்றது என்றால், அது அபௌருஷேயம் ஆகும். அதாவது, இது மனித அறிவினால் இயற்றப்பட முடியாதது என்பதே ஆகும்.

நம்முடைய பண்டைய ரிஷிகள் அவைகளை எல்லாம் தொகுத்து நான்கு வேதங்களாகவும், உபநிஷதங்களாகவும் கொடுத்தனர். இந்த உலகம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும் ஒரு **மாயை** என்பது வேதாந்தத்தின் முடிவு.

அவ்வாறு மாறும் உலகம் எப்படி மாறுகிறது? அதன் மாற்றத்திற்கு காரணம் என்ன? அது எப்படி மாறக்கூடும்? என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவது அறிவியல். வேதத்தின் துணையில்லாமல் அறிவியலால் **'இது தான் உண்மை'** என்ற முடிவுக்கு என்றுமே வர முடியாது. அறிவியல் என்பது வேதத்தின் அடிப்படையில் அமையாது என்பதால், அறிவியல் என்பது என்றும் உண்மையை தேடியலையும், ஒரு புதிரான துறையாகவே இன்றுவரை இருக்கின்றது. ஆக, இதிலே, விடைக்காண முயற்சிக்கும் மனிதன் தன்னுடைய புத்தியைக் கொண்டு விசாரத்தினால் வெளிப்படும் விவேகம் அவனையே அவனுக்கு காட்டிக் கொடுக்கும், **இருத்தல், உணர்வு (அறிவு), ஆனந்தம்** என்ற இதன் சேர்க்கையில் வந்த **சச்சிதானந்தம்** என்பது பரமனின் மூன்று தன்மைகள் கொண்ட அபரிமிதமான ஆற்றல் என்பதினால், அது அறிவியலுக்கு அப்பாற்பட்டவைகள்.

உதாரணமாக, ஜடமான பொருளிலிருந்து உணர்வு (Consciousness) தோன்றியது என்பது போன்ற கருத்துக்களை அறிவியல் அறிஞர்களால் நிரூபிக்கவே முடியாது. அதே நேரத்தில் வேதத்தின் கருத்தான **உலகே மாயை** என்பதை அறிவியல் மூலம் நிருபிக்கலாம். எனவே, வேதம் உண்மையான அறிவியலை ஏற்றுக்கொள்ளுகிறது. அறிவியலால் எப்பொழுதும் எட்ட முடியாத துறைகளில் நிலவும் கருத்துக்களை சரிபார்க்க வேதத்தின் துணை அறிவியலுக்கும் தேவை. இவ்வாறு வேதங்களிலும், உபநிஷதங்களிலும் அவற்றிலிருந்து தோன்றிய ஏனைய விஷயங்களிலும் இன்று நாம் பயன்படுத்தும் அறிவியல் தத்துவங்கள் நிறைய சொல்லப்பட்டுள்ளன.

இந்த கடோபநிஷதம் கதை நம்முடைய நடைமுறை அறிவுக்கு அல்லது நேரடி அனுபவத்திற்கு வர முடியாதது போன்று காணப்பட்டாலும், அதாவது, இறந்தவர் உடலுடன் எம்லோகம் செல்வது என்பது உண்மையில் முடியாது என்றாலும், அந்தக் கதையின் வாயிலாக இந்த உபநிஷதம் கூறவருகின்ற ஆழமான ஆத்ம உண்மையை அறிவது மட்டுமே நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

நன்றி

என்றும் அன்புடன்,
**ப்ரக்ஞன்.**

# கட உபநிஷதம்

## முகவுரை

**மனிதப் பிறவியின் மகத்துவம்:**

நாம் இந்த கடோபநிஷதம் சொல்லுகின்ற ஸ்லோகத்தை ஒவ்வொன்றாக, தனித்தனியாகப் பார்ப்பதற்கு முன்னால், இந்த உபநிஷதம் கூறவருகின்ற சாரத்தை ஒருமுறை முழுமையாகப் பார்த்துவிட்டு, அதன்பிறகு உபநிஷதம் உள்ளேயுள்ள ஒவ்வொரு மந்திரங்களுக்கும் விளக்கம் பார்க்கலாம்.

முதலில் மனிதப் பிறவியின் மகத்துவம் பற்றிக் காண்போம். பொதுவாக, மனிதன் ஒழுக்க நெறியுடனும், வாழ்க்கையில் ஏதேனும் ஒரு குறிக்கோளுடனும் வாழாமல், மனம்போன போக்கிலே, ஏனோ தானோ என்று வாழாமல் இருப்பதற்கே நம் ஹிந்து தர்மத்தில் பலப்பல தத்துவங்கள் உரைக்கப்பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது.

அதில் முக்கியமானது கர்மா தத்துவம். அதற்கடுத்து, பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் வழி கூறப்பட்டுள்ளது. இதைப் பற்றி திருக்குறளும், பிறவி எனும் பெருங்கடலை நீந்தாத மனிதரால் இறைவனடி சேர்வது இயலாது என்பதை எடுத்துக் கூறுகின்றது.

படைப்பட்ட சீவராசிகளின் படைப்பில் பிறவிகள் என்று பார்த்தால், பல்வேறு பிறவிகளை எடுக்க மனிதன் மொத்தம் 84 இலட்சம் யோனிகளில் பிறக்க வேண்டும், பிறந்து, பிறந்து, இறக்க வேண்டும். இதில், எந்த மனிதப் பிறவியில் அவனுக்கு முக்தியடைய முடியும் என்பது அவனுக்கே தெரியாது. இதைக் கொஞ்சம் ஆழ்மாக சிந்தித்தால், அப்படி எத்தனைப் பிறவிகள் கடந்து, முடிவில் எந்த மனிதப் பிறவியில் முக்தியடைய முடியும் என்பதுப்போன்ற கேள்விகள் மனிதனுக்கு எழுவது இயல்பாகவே உள்ளது.

அதாவது, எத்தனைப் பிறவிகளைத் தாண்டி தான் முக்தி அடைய முடியும்? என்பதை எவராலும் எடுத்துக் கூறவே முடியாத நிலையில், இதிலே, இன்னொரு விஷயமும் உண்டு. மனிதன் மிகக் கீழான கெட்ட குணத்தில் ஒரு பிறவியில் வாழ்ந்தால், அவனது அடுத்த பிறவியில் ஏதேனும் ஒரு மிருகமாக, அது கழுதையாக அல்லது நாயாகக் கூடப் பிறப்பான் என்றும் நமது சாஸ்திரங்கள் சொல்கின்றன.

அப்படியானால், இந்த 84 இலட்சம் பிறவிகளில் எத்தனை முறை மீண்டும், மீண்டும் அந்தந்த உடல்களில் பிறவிகள் உண்டாகும் என்பதும் தெரியவில்லை.

இதையடுத்து இன்னொரு விஷயமும் உண்டு. சரி மனிதன் நல்வினை செய்கிறானோ? அல்லது தீவினை செய்கிறானோ? எப்படியிருந்தாலும், இந்த வினைகளின் அடிப்படையில் அவனுக்கு இன்னும் பல பிறவிகள் எடுத்த பின் மட்டும்தானே அவனுக்கு முக்தி கிடைக்கப் போகிறது.

அப்படியானால், ஏன் நாம் நல்வினை செய்ய வேண்டும்? நம் மனம் போன போக்கில் சந்தோஷமாக வாழ்ந்து விட்டுப் போனால் போகிறது. எதற்காக நாம் நேர்மையாக, தெய்வ பக்தியுடன் நல்வினைகள் மட்டுமே ஆற்றி வாழ வேண்டும் என்று ஒரு சராசரியான மனிதனுக்குத் தோன்றாதா?

உண்மைதானே! அவன் அப்படி சொல்வது?

ஏன் நாம் பக்தி செலுத்த வேண்டும்? ஏன் நாம் ஞானம் பெற முயல வேண்டும்? ஏன் நாம் சரியாக நமது கர்ம வினையை ஆற்ற வேண்டும்? இப்படிப்பட்ட சிந்தனைகள் சராசரியான மனிதனுக்கு வரவே கூடும்.

இதை வேறு ஒரு விதத்தில் நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, எல்லாப் பிறவிகளும் கெடுசெயல்களே செய்துவந்த பாவியாகிய மனிதன் பலப்பல முறைகள் பல்வேறு ஈனப்பிறவிகளிலே பிறந்து, அவனது பாவச்சுமைகள் தாங்காமல் கடைசியாக ஏதாவது ஒரு மனிதப் பிறவியில், மனம் திருந்தி, இதுப்போன்ற வேதாந்த சாஸ்திரங்களைப் படித்து, அதன் வாயிலாக அடைந்த விவேகத்தினால், விடுதலை அடையவும் முடியும்.

சரி அப்படியென்றால் அந்த மனிதனளவு பாவம் செய்யாத மனிதனுக்கு? கண்டிப்பாக மேற்சொன்ன மனிதனை விடவும் குறைந்தளவு பாவங்களைச் செய்கின்ற இன்னொரு மனிதனுக்கு எந்தப் பிறவியில்தான் முக்தி கிடைக்கும்? என்றுப் பார்த்தால், அவனுக்கு இதுப்போன்ற பல்வேறு உடல்களில் பிறக்கும் பிறவிகள் குறைந்து, அவன் அடைந்த அரிதான மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்து, அதன் வாயிலாக அவன் கற்ற ஆத்மஞான கல்வியினால், விவேகம் உண்டாகி, அவனுக்கு பிறவாப் பெருநிலையாகிய முக்தி விரைவில் உண்டாகும்.

அதாவது, நாம் நம்முடைய பள்ளிக்கூடங்களில் எவ்வளவுக்கு எவ்வளவு சிறப்பாகப் படிக்கிறோமோ? அவ்வளவுக்கு அவ்வளவு மதிப்பெண்கள் கிடைத்து ரேன்க் வாங்குவோம் என்பதைப் போலத்தான் இதுவும்.

இதுப்போல, மனிதப் பிறவியின் மகத்துவம் புரிந்தால் மட்டுமே மனிதனுக்கு நன்மை – தீமைகளைப் பகுத்தறியும் விவேகத்தினால், தீவினைகளை அகற்றி நல்வினைகளை மட்டும் செய்யும் எண்ணம் உண்டாகுமே தவிர, இத்தனையாவது பிறவியில்தான் இவனுக்கு மோக்ஷம் என்பதை யாராலும் சொல்லவே முடியாது. இதையேதான் உபநிஷதக் கருத்தும் வலியுறுத்துகிறது.

## எல்லாம் விதிப்படியா? :

விதி என்கிற தத்துவத்தைக் கூறும்போது, சிலர் சொல்வதுண்டு *"எல்லாம் விதியின் படிதானே நடக்கும் அப்புறம் ஏன் மனிதன் நல்வினையாற்றுவதோ, பக்தியை செய்வதோ, ஞானம்பெற முயலுவதோ தேவை? அது பாட்டுக்கு விதி நடந்து விட்டுப் போகட்டுமே"* என்பர்.

இதுவும் மேலோட்டமாகப் பார்த்தால் உண்மையாகத்தானே தோன்றுகிறது?

காரணம், நம்முடைய ப்ராரப்த கர்மாவும் நம்வினைப்படியே நம்மை வழி நடத்துகின்றது எனும்போது, இதில், நாம் என்ன செய்துவிட முடியும் என்ற எண்ணமும் எல்லோருக்கு எழுகின்றது.

இதில், உண்மைதான் என்ன? சரி இன்னொரு கூற்றும் உள்ளது விதியை மதியால் வெல்லலாம் என்று. இதென்ன புதிதாக இருக்கிறது எல்லாம் விதிப்படியே நடக்கும் என்றால் எப்படி விதியை மதியால் வெல்லலாம் என்றும் தோன்றும். இதற்கு சில கதைகள் உதாரணமாக உள்ளது. அதிலே, சத்தியவான்–சாவித்திரி கதையையும், என்றும் பதினாறான மார்க்கண்டேயன் கதையும் வருகின்றது. அவர்களிருவருமே மதியால் விதியை வென்றவர்கள்.

சாவித்திரி யமதர்மனை வாக்குக் கொடுக்க வைத்தும், மார்க்கண்டேயன் சிவபெருமான் லிங்கத்தைக் கட்டிப் பிடித்தும் விதியை வென்றவர்கள். ஆனால் இதெல்லாம் நடக்குமா? என்றும் நமக்கு சந்தேகம் வர்லாம்.

அதனால், இதனை வேறு வகையில் பார்க்கலாம்.

உண்மையில் மனிதனின் வாழ்க்கைப் பயணம் விதியினால் மட்டுமே நடைபெறக் கூடிய ஒன்றா? கண்டிப்பாக இல்லை. அதற்கு மதியும் கூடத்தான் காரணமாக இருக்கிறது.

இதனையே இன்னொரு வழியில் விதியும், மதியும் சேர்ந்ததாக இருக்கிறதோ என்றும் சொல்லலாம். இதையே இன்னும் வேறொரு வழியில் வாழ்க்கை விதியின் வழியே

என்றாலும் கூட மதியின் செயல்பாட்டால் அந்த விதியின் போக்கை அவ்வப்போது சற்று மாற்றியும் கொள்ளலாம் என்றும் கூடக் கொள்ளலாம்.

இப்போது கடைசியாகக் கூறியதுதான் உண்மை. மதியின் செயல்பாட்டால் நம்முடைய விதியின் போக்கை ஓரளவுக்குக் கட்டுப்படுத்திக் கொண்டு செல்ல நம்மால் கண்டிப்பாக இயலும்.

இந்த இடத்தில் விதி என்பதை நம்முடைய முற்பிறவி வினைப்பயன் என்று நாம் வைத்துக் கொள்ளலாம். அப்படியானால் அது இப்பிறவியில் நாம் செய்யும் காரியங்கள் எதற்கும் தொடர்பில்லாதது என்கிற பொருள் இங்கு வருகிறது. இன்னொன்று நம்முடைய விதியை நாமே எழுதிக் கொள்வதில்லை. அது முற்பிறவியின் வினைகளை வைத்து யாராலோ எழுதப்படுகிறது.

அப்படியிருக்க எப்படி அதனை மதியின் மூலமாக மாற்ற இயலும்?

விதி என்பது எப்படியிருந்தாலும் முன்கூட்டியே எழுதப்பட்ட ஒன்றுதானே அப்படியிருக்க எப்படி அதனை மதியினால் மாற்ற முடியும்? அதே விதிதானே நம்முடைய மதியினுடைய இயக்கத்தையும் நிர்ணயிக்க முடியும்? இந்த மதி இப்படித்தான் இயங்க வேண்டும் என்கிற செய்தியும்தானே விதியின் மூலம் எழுதப்பட்டிருக்கும்? பின் மதியினால் எப்படி அதன் போக்கை மாற்றிக் கொள்ள முடியும்?

இதைப் பற்றி இன்னும் சற்று ஆழமாக நாம் உணர்ந்து கொள்ள **மதி என்றால் என்ன?** என்றும், அதன் இயக்கம் குறித்தும் நாம் தெரிந்து கொண்டால் புரியும்.

## மதியும் விதியும்:

விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்லும்போதே இரண்டும் வெவ்வேறு தன்மைகளுல்லவை என்பதும் நமக்குப் புரிந்துவிடும். இதில் விதி என்பது யாராலோ முற்பிறவியின் வினைப்பயனாக நமக்கு சொல்லப்பட்டுள்ளது என்றால் மதி என்பது என்ன? என்பதைக் காண்போம்.

மதி என்பது நம்முடைய '**புத்தி**' ஆகும்.

இந்த இடத்தில் பல அன்பர்கள் புத்தியையும், மனதையும் போட்டுக் குழப்பிக் கொள்வார்கள். அதைக் குழப்பமில்லாமல் விளக்கமாகக் காணலாம். மனம் என்பது

எண்ணங்களை எண்ணுவது. எண்ணங்களிம் எழுச்சியில் நாம் இருக்கும்போது, நாம் ஒரு பாதையில் நடந்து செல்லும்போது, அங்கே ஒரு பணக்கட்டு கீழே கிடைப்பதைப் பார்க்கின்றோம். ஆனால், அந்த பணக்கட்டிற்கு அருகில் யாருமே இல்லை. இந்த நிலையில், நமக்குக் கொடுக்கப்பட்ட விசயங்கள் என்னென்ன என்று பார்த்தோமானால்,

1. அந்த பணத்தை யாருமே பார்க்கவில்லை. ஆகவே, அது நமக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடலாம்.
2. இல்லை! இல்லை! அது மற்றவர் பணம். ஆகவே, அதனை அவசியம் தொலைத்தவர்கள் யார் என்று எங்கேயே காத்திருந்து, அவர்கள் தேடிக் கொண்டு வரும்போது, அவர்களிடமே அந்தப் பணத்தை தொஇருப்பிக் கொடுத்துவிடலாம்.
3. அடுத்து, அந்தப் பணத்தை கொண்டு சென்று காவல் நிலையத்தில் ஒப்படைக்கலாம்.

இதுப்போன்ற, பலவழிகள் நமக்கு இருந்தாலும், இதில் மனம்போன போக்கு என்பது, நம்மை நம் மனம் அந்தப் பணத்தை வைத்துக் கொள். இது இனக்கு கடவுள் கொடுத்த பரிசு என்றெல்லாம் எமாற்றும்.

அதுவே, நம்மிடம் உள்ள புத்தியினால், இதைப் பகுத்தறிந்துப் பார்க்கும்போது, அந்தப் பணத்தை இழந்தவனும் நம்மைப் போன்று கஷ்டப்பட்டு சம்பாதிக்கின்றவன்தானே. ஆகவே, அவன் எதற்காக இந்தப் பணத்தைக்கொண்டு சென்றானோ? அது மருத்துவம் அல்லது திருமணம் என ஏதாவது ஒரு செலவுக்காகவும் இருக்கும் என்று ஆராயலாம்.

இதிலே மனம் போன போக்கிலே முடிவுகள் செய்யும்போது, அதன்காரணமாக, நமக்கு இன்னும் பல சிக்கல்கள் வரலாம். உதாரணமாக, அந்த பணத்தை நாம் எடுக்கும்போது, அங்கே அருகே உள்ள சி.சி.டிவி கேமாராவில் பதிவு செய்யப்படலாம். அதன்காரணமாக, நம்மை காவல்துறை கண்டுபிடித்து, நமக்கு அவமானம் நேரலாம். அல்லது அந்தப் பணம் கள்ளப்பணம் என்பதாகவும் இருக்கலாம். இப்படி எந்த வகையில் வேண்டுமானாலும், அடுத்தவர் பணத்திற்கு நாம் ஆசைப்படும்போது, அந்தப் பணத்தினால் நமக்கு நன்மைகள் வருவதைவிட, தீமைகள் அதிகம் வரலாம்.

அதுவே, அந்தப் பணத்தை உரியவரிடம் ஒப்படைக்கும்போது, அந்த நேர்மைக்கு அவர்களது வாழ்த்துக்கள் நம்மை இன்னும் உயரிய நிலைக்கு கொண்டு செல்லலாம். பணத்தைக் கண்டுப்பிடித்துக் கொடுத்ததினால், பணம் தொலைத்தவர்கள் அல்லது காவல்துறையின் மூலம் நமக்கு பாராட்டுகள் கிடைக்கலாம். அந்த நேர்மைக்கு என்றும் ஒரு விலை உண்டு. **அதுவே, மனத்தூய்மை.**

அதற்கான பரிசு **ஆத்மஞானம்** என்றால் ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆம்! இதுவே, இறைவன் நம்மிடம் பொழிகின்ற உண்மையான அன்பு, கருணை, வாய்ப்பு என்று பார்க்க வேண்டும்.

ஆக, எது சரி, எது தவறு என சிந்தித்துப் பார்த்து, சரியான ஒரு முடிவைக் கொடுப்பது **புத்தி** என்றும், உடனடியாக நடைமுறைப் படுத்தத் தூண்டுவது **மனம்** என்றும் பிரித்துப் பார்த்து புரிந்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, **தர்மம் – அதர்மம்** என்ற இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வேண்டும். அது தெரியாமல் வாழும்போது, நம்முடைய வாழ்க்கையில் துயரங்கள் வருவதை தவிர்க்க முடியாது.

பொதுவாக, நாம் உழைக்காமல் பணம் சம்பாதிக்க கூடாது. அதாவது, சூதாட்டம், மதுவிற்பனை, சேர் மார்க்கெட் மற்றும் நெட் ஒர்க் மார்க்கெட்டிங் போன்றவைகள் எல்லாம் அதர்ம வழியில் பணம் சம்பாதிக்கும் செயல்கள். அதாவது, மற்றவர்கள் உழைப்பை உறுஞ்சி வாழுகின்ற வாழ்க்கை. இவ்வாறு பணம் சம்பாதிப்பவர்கள் அடுத்தப் பிறவியில், மற்றவர்கள் இரத்தத்தை உறுஞ்சுகின்ற கொசு அல்லது அட்டைப்பூச்சி போன்ற இழி பிறவிகளில்தான் பிறக்க வேண்டும்.

यदा यदा हि धर्मस्य
ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य
तदात्मानं सृजाम्यहम् ।। 7।। (பகவத் கீதை. அத்தியாயம் – 4.7)

ய**தா** ய**தா** ஹி **த**ர்மஸ்ய
**க்**லானிர் **ப**வதி **பா**ரத
அப்யுத்**தா**னம**த**ர்மஸ்ய
**ததா**த்மானம் ஸ்ருஜாம்யஹம்.

*எப்பொழுதெல்லாம் தர்மம் குறைகிறதோ, அநியாயம் பெருகுகிறதோ? அப்போதெல்லாம் நான் பூமியில் என்னை வெளிப்படுத்துகிறேன்.*

தர்மம் என்பது நமது ஆன்மிக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உகந்த செயல்களாகும். இதற்கு நேர்மாறானது அதர்மம் (அநீதி) ஆகும். எப்போதெல்லாம் அதர்மம் தலை தூக்குகின்றதோ? அப்போதெல்லாம், தர்மத்தை நிலை நாட்டுவதற்காக, அதன் நிமித்தம் என்னுடைய சுயம் ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படும்.

परित्राणाय साधूनां
विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय
सम्भवामि युगे युगे ।। 8।। (பகவத் கீதை. அத்தியாயம் – 4.8)

பரித்ரானாய சா**தூ**நாம்
விநாஸாய ச **து**ஸ்க்ருதாம்
தர்மசன்ஸ்**தா**பநார்**த்தா**ய
சம்**ப**வாமி யுகே யுகே.

*நேர்மையானவர்களைக் காக்கவும், துன்மார்க்கரை அழிக்கவும், தர்மத்தின் கொள்கைகளை மீண்டும் நிலைநாட்டவும் நான் இந்த பூமியில் யுகமாகத் தோன்றுகிறேன்.*

தீயவர்களை அழித்தொழிக்க சர்வ வல்லமையுள்ள இறைவன் ஏன் அவதாரம் எடுக்க வேண்டும்?

உண்மையில் நீதிமான்களைக் காக்க வேண்டிய இறைவன் தனது பக்தர்களின் இதயங்களின் உள்ளேயே அறிவாக (புத்தியாக) அமர்ந்திருக்கிறார். அவர் எப்போதும் பக்தர்களின் ஹிருதயத்தின் உள்ளே புத்தியாகப் பிரகாசிக்கின்றார், துயரங்களிலிருந்து அவர்களை பாதுகாக்கிறார்.

இதற்காக ஒரு அவதாரம் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

வேதங்களில் தர்மம் என்றென்றும் விவரிக்கப்பட்டுள்ளது. தர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என்றால், இறைவன் ஒரு துறவி மூலம் அதை மீண்டும் நிறுவ முடியும். இதைச் சாதிக்க, அவர் சாதுக்களின் உருவத்தில், எப்படி வேண்டுமானாலும், இப்படி ஏதாவது ஒரு வழியில் வெளிப்படுவார்.

### விதியும், மதியும் ஒரு விளக்கம்:

ஒரு சிலர் விதி என்பது மனிதனே உருவாக்கிக் கொண்ட கற்பனை அதன் மூலம் அவன் உழைக்காமல் சோம்பிக் கிடந்து வீணாகப் போகிறான் என்றனர். அது அப்படியல்ல இப்போது சில உதாரணங்கள் மூலம் அதைத் தெளிவாகப் பார்க்கலாம்.

விதி என்பது பூமியில் நமக்கு அளிக்கப்படும் நமக்கான ஒரு ஆட்டக்களம். ஆனால், அந்தக் களத்தில் ஆடுவது நம்முடைய மனதையும், புத்தியையும் வைத்துதான் நாம் ஆடியாக வேண்டும்.

உதாரணமாக ஒரு சிறுவன் எட்டு வயதில் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் உள்ளவன். அவன் தாயை சிறு வயதில் இழந்தது விதி. இன்னமும் அவன் தந்தையும் திடீரென அவனுக்குப் பத்து வயதாகும்போது இறந்துப்போகவே அவன் இன்னும் அனாதையாகிறான். இதுவும் விதிதான். இப்போது அவனை பத்து வயதில் அனாதையாக வாழ்க்கைக் களத்தில் விதி நிற்க வைக்கிறது.

இந்த நிலையில் அவனுக்கு உதவிக்கு ஆட்கள் இல்லாமல், அவனது பொருளாதரத் தேவைக்காக பிக்பாக்கெட் அடிக்கவும், ரவுடித்தனம் செய்யவும் சிறுவயதிலேயே பழகி பெரிய தாதாவாகிறான். இதுதான் அவன் மதியின் செயல். அவன் மதி அவனைத் தீவினைக்கு வழிநடத்தி சென்றது.

அதே இன்னொருவன் அவன் போலவே அப்பா, அம்மாவை இழந்தவன். இவனது உதவிக்கும் யாரும் இல்லை. இருந்தாலும், இந்த நிலையில் இவன் பிச்சை எடுத்தேனும் பிழைத்துக் கொள்ளலாம் என்று, பிச்சை எடுத்து வந்த பணத்தில் சிறிது, சிறிதாக முன்னேறி வாழ்வில் சிறந்த இடத்தைப் பிடிக்கிறான். இதுவும் மதியின் செயல்தான்.

இங்கு இந்த இருவருக்கும் உள்ள வித்தியாசம் இரண்டாமவன் மதி அவனை நல்வினை செய்ய வழிநடத்தியது. இங்கும் கூட அவனுக்கு இடையில் பலவழிகளில் விதி அவனிடம் சில விளையாட்டுகள் காட்டலாம். அதையெல்லாம் அவன் எதிர்கொண்டு, அவனது குறிக்கோளில் மாறாமல், இறுதியில் சிறந்த இடத்தை அடைகிறான். இதையே விதிக்கும், மதிக்கும் உள்ள வித்தியாசமாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

## மனதின் இயக்கம்:

மனம் என்பதற்கும், மனிதன் சிந்திப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நினைக்கும் அக்கணமே ஒரு செயலில் ஒருவனை ஈடுபட வைப்பதை **மனம்** என்று கொள்ளலாம். இந்த மனத்தின் அடிப்படை கருவிகளாக என்ன உள்ளது என்பதைக் காண்போம்.

மனம் எதன் மூலமாக ஒரு மனிதனை இயக்குகிறது?

மனம் என்பது ஏதோ ஒன்றை நினைக்கிறது. (நன்றாகக் கவனியுங்கள் சிந்திக்கவில்லை நினைக்க மட்டுமே செய்கின்றது. சிந்தித்தால் அது புத்தி. இந்த இரண்டுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் உண்டு.) சிந்தனை என்பது நிதானமாக தனக்கு ஒரு செயல் தேவையா? அதனால், நன்மைகள் விளையுமா? அல்லது தீமைகள் விளையுமா? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து, ஒருவனை புத்தியால் பகுத்தறிய வைப்பது.

ஆனால் மனமென்பது அப்படியல்ல. நினைத்த அக்கணமே மனிதனை இயங்க வைப்பது. புத்தியை அதிகம் பயன்படுத்தாதவர்கள் தோல்வியாளர்கள் ஆவதற்கு அவர்கள் மனம் போன போக்கில் போவதுதான் காரணமாக உள்ளது.

இப்போது, ஒரு உதாரணம் பார்க்கலாம். இரண்டு கல்லூரி மாணவர்கள் சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். அங்கே சிறிது தூரத்தில் ஒரு கோவில் இருப்பது அவர்களுக்குத் தெரிகின்றது.

அதிலே, ஒருவனது மனம் நினைக்கிறது. ஆமாம் கோவிலுக்கு சென்று என்ன சாதித்தோம்? சாமியாவது, பூதமாவது என்று நினைக்கின்றது. உடனே, அவன் அந்தக் கோவிலை தாண்டி, நேராக நடந்து போகிறான்.

இன்னொருவனது மனம் நினைக்கின்றது. கோவிலுக்கு செல்லலாமா? என்று நினைக்கின்றது. அவன் உடனடியாக அந்த எண்ணத்தை சற்று நிதானமாக நின்று சிந்தித்துப் பார்க்கிறான். கோவிலுக்கு செல்வதால் தீமைகள் எதுவும் இல்லை. நாம் நன்றாக வாழ அந்த தேவதையின் அருள் கிடைக்கும். ஆகவே, இந்த வழியில், இந்தக் கோவிலை இப்போதுதான் பார்க்கின்றேன். ஆகவே, உள்ளே செல்லலாம் என நினைக்கிறான். அந்த கோவிலுக்குள் சென்று, இறைவனை வேண்டி சிறிது நேரம் தியானத்தில் அமர்கிறான். சற்று நேரத்தில், அந்தக் கோவிலுக்கு ஒரு உபன்யாசகர் வருகின்றார். அவர் அங்கிருந்தவர்களுக்கு நல்ல பல உபதேசங்களைத் தருகின்றார். அதன் வாயிலாக, அவன் அறிவுக் கண் திறக்கின்றது. அவனது வாழ்க்கையின் குறிக்கோள் அவனுக்குப் புரிகின்றது.

அதுவே, கோவிலுக்கு போகாமல் நேராகப் போனவன் அந்தக் கோவிலைத் தாண்டி செல்கையில் கொஞ்ச தூரத்தில் ஒரு திரையரங்கம் இருப்பதைப் பார்க்கின்றான். இவனது அபிமான கதாநாயகன் அந்தப் படத்தில் நடித்திருப்பதைப் பார்க்கின்றான். அவனும் அந்தப் படத்திற்கான டிக்கெட் வாங்கிக் கொண்டு, படம் பார்க்க போய்விட்டான்.

இந்த இருவரில், ஒருவன் கோவிலுக்கு சென்று சில ஒழுக்க நியதிகளை கற்றுக் கொண்டதன் மூலம், வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வருகின்றான். அதுவே, மற்றொருவன் கோவிலுக்குப் போகாமல், திரையரங்கம் சென்று, திரைப்படம் மூலம்

வாழ்க்கையில் எப்படி வாழ வேண்டும் என்ற ஒழுக்கத்தை உணராமல், கண்டபடி வாழ்ந்து வீணாகப் போகின்றான். அதாவது, முதலாமவனை விட இரண்டாமவனுக்கு மனதுடன், புத்தியும் வேலை செய்தது. அதனால் அவன் சரியான முடிவை எடுத்தான். வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினான். இதுவே, எண்ணங்களுக்கும், சிந்தனைக்கும் காரணமான மனதிற்கும், புத்திக்கும் உள்ள வித்தியாசம்.

சரி மனதின் இயக்கம் மட்டும் இருக்கும் ஒருவனுக்கு எந்தக் காரணங்களால் மனம் சலனமடைகிறது.

## மனதின் தாக்கம் எதனால் வருகின்றது? :

மனம் பற்றியும், புத்தியைப் பற்றியும் பார்த்ததில், மனதில் நினைவலைகள் எதனுடைய தாக்கத்தால் உருவாகின்றன என்பதைப் பற்றியும் சற்று சிந்திக்கலாம்.

மனதில் நினைவலைகள் உருவாவது உண்மையில், நம்மிடமுள்ள ஐம்புலன்களின் தாக்கத்தால்தான் நடக்கின்றது. ஐம்புலன்களான கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகியவைகளே நம் மனதில் பல்வேறு நினைவலைகளை உருவாக்குகின்றன. இந்தப் புலன்களின் ஆதிக்கம் இல்லாமல் நாம் தூங்கும்போது, நம் மனம் வெளிப் பொருட்களை சிந்திக்கவே செய்யாது. உதாரணமாக, கண்கள் எதையாவது காண்கின்றன அதன் மூலம் மனம் சிந்திக்கின்றது. காதுகள் எதையாவது கேட்கின்றன அதன் வாயிலாக மனம் சிந்திக்கின்றது.

வாய் ஏதாவது உணவை உண்கிறது, அதன்மூலமும் மனம் சிந்திக்கின்றது. மூக்கு எதையாவது நுகர்கிறது அதனாலும், மனம் சிந்திகின்றது. தோல் தொடுவுணர்ச்சி அல்லது ஸ்பரிசத்தை உணர்கிறது. அதன் மூலமும் இந்த மனம் சிந்திக்கின்றது. ஆக இவ்வாறு இந்த ஐம்புலன்களின் மூலமாகத்தான் மனதின் தாக்கமே நிகழ்கிறது.

ஆனால், அதே ஐம்புலன்களின் செயல்பாடுகளை நம்முடைய மனதினாலும், புத்தியினாலும் இயக்க முடியும். பொதுவாக, சாதாரண மனிதர்களின் புலன்கள் அதிகளவில் மனதினால் மட்டுமே அதிகம் இயக்கப்படுகின்றன. அதனால்தான் அவர்கள் அதிகமாக உணர்ச்சி வசப்படுகிறார்கள். பொதுவாக, உணர்ச்சி வயப்படுகிறவர்கள் அவைகளை கையாளத் தெரியாமல், கண்டபடி செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள். அதன்காரணமாக, அவர்களது செயல் விளைவுகளின் வாயிலாக, பலரும் பல விஷயங்களிலும் தோல்வியையும், உடல் நல பிரச்சனைகளையும் அடைகிறார்கள்.

அதுவே, புத்தியின் கட்டுப்பாட்டில் புலன்களைக் கையாளத் தெரிந்தவர்கள் கண்டபடி செயல்களை செய்ய மாட்டார்கள். உதாரணம், உண்ணும் விசயத்தில் புலன்களில் கட்டுப்பாடை கொண்டதினால், இவர்கள் நன்மை – தீமைகளை பகுத்தறியும் புத்தியினால், விவேகத்தினால், எதையும் சரியாக கையாள்பவர்களாக இருப்பதினால், பெரும்பாலும் பெரிய நோய்களாகிய **சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்தம்** மற்றும் **புற்றுநோய்** போன்றவற்றில் சிக்க மாட்டார்கள்.

சரி! இதனால் இவர்களுக்கு என்ன பயன் என்று நினைக்கிறீர்களா?

புத்தியை சரியாகக் கையாண்டு, அதன் வாயிலாக அவர்களுடைய புலன்களைக் கையாளத் தெரிந்ததினால், மனம் மற்றும் உடல் சார்ந்த விசயங்களில், இவர்கள் விவேகத்துடன் நடந்துக் கொள்வதினால், எல்லா விசயங்களையும் சரியாகச் செய்வார்கள். அந்தவகையிலே, அவர்களின் ஆன்மீகம் அல்லது துறவற வாழ்க்கை உண்மையானதாகவும் பொருள் நிறைந்ததாகவும் முக்தியின் பாதையில் அவர்களைக் கொண்டு சேர்க்கக் கூடியதாகவும் அமையும். ஆகவே, மனிதனின் இலட்சியம் முக்தியடைவது என்று வைத்துக் கொண்டால், விழித்துக் கொண்ட புத்தியினால், மிகப் பெரும் பலன் எனும் ஆத்மஞானம் ஒன்றே நம்மை பிறவாப் பெரு நிலைக்கு கொண்டு சேர்க்கும் என்பதையும் நாம் நன்கு உணர வேண்டும்.

**புத்தி எழுச்சி பெற்றால்:**

புத்தி எழுச்சி பெறுவது என்றால் என்ன? இந்த விஷயத்தில் மனதின் பங்கு என்ன?

புத்தி எழுச்சி பெறுவது என்பதை புத்தி விழிப்படைதல் என்று இன்னொரு புறத்தில் சொல்லலாம். இங்கு மனதின் பங்கு மிகக் குறைவாகவே ஆதிக்கம் செலுத்தும். ஆனாலும் மனதின் பங்கு இதில் இல்லாமலே போகவில்லை. அவ்வாறு இல்லாமல் போகவும் முடியாது.

ஏனென்றால், நமக்கு எண்ணங்களை உணரும் திறனை அளிப்பது மனம்தான். ஆனால், புத்தி விழிப்படைவது என்பது மனதின் உணரும் திறனுக்கும் அப்பாற்பட்டது. புத்தி விழிப்படையும் நிலை என்பது, மனம் அடைந்த முதிர்ச்சி என்றும் கூறலாம். அந்த வகையிலே, ஆன்மீக வாழ்வில் மன முதிர்ச்சி அடைந்தவர்கள் அனாவசியமான விசய, சுகங்களில் சிக்க மாட்டார்கள். இவர்கள் அடைந்த ஆத்ம ஞானத்தின் மூலம், அந்த அறிவை அனைத்திலும் காண்பார்கள். இதனால், இவர்களிடம் மனதின் இருமைகளான விருப்பு – வெறுப்பு இருக்காது. இதுவே, புத்தி விழித்துக் கொண்டதற்கான அடையாளம் என்றும் கூறலாம்.

## புத்தி விழிப்படைவது எப்படி?:

புத்தி விழிப்படைவது என்பது, அறிவுணர்ச்சி மேம்பட்ட நிலையில் இருப்பதையே குறிக்கும். அறிவுணர்ச்சி எவ்வாறு மேம்பட்ட நிலைக்கு வரும்? இது அறிவுணர்ச்சியின் தன்மைகளைப் பற்றி நாம் புரிந்து கொண்டால் தானாகவே புரியும். அறிவுணர்ச்சி மூன்று தன்மைகளை உடையதாக உள்ளது அல்லது மூன்று நிலைகளில் செயல்படுகிறது.

1. இயல்புணர்ச்சி (INSTINCT)

இதை ஒரு குறிப்பிட்ட வாழும் சூழலில் இயல்பாக எழக் கூடிய உணர்ச்சியாகக் கொள்ளலாம். மீன் குஞ்சுக்கு யாரும் நீந்தக் கற்றுக் கொடுக்கவில்லை. குருவிகளுக்கு யாரும் கூட்டைக் கட்ட சொல்லியும் தருவதில்லை. இவைகள் பிறவியிலிருந்தே அவற்றுக்கு இயல்பாகக் காணப்படக் கூடிய ஒரு விஷயம். அதே போலத்தான் ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகக் காணக்கூடிய இயற்கையான மனப்போக்குகளே இயல்புணர்ச்சி ஆகும். இது ஆழ்மனத்திலிருந்து வருவதால் (SUBCONSCIOUS MIND) பொதுவாகத் தவறுவதில்லை. இதற்கேற்பவே பொதுவாக ஒரு மனிதன் வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்கிறான். ஆனாலும் கூட இது நமது ஆதிக்கத்தின் கீழ் இல்லாததால் நாம் அதை விரும்பியபடி எல்லாம் பயன்படுத்த முடிவதில்லை.

2. அறிவு (INTELLECT)

புற உலகிலிருந்தும், வாழ்க்கை அனுபவங்களில் இருந்தும் பெறக்கூடிய அறிவு இது. புற உலகைச் சார்ந்திருப்பதால், இது தவறாகப் போகும் வாய்ப்பும் உள்ளது. எனவே நாம் இதை முழுமையாக நம்பி செயல்பட முடியாது.

3. உள்ளுணர்வு (INTUITION)

கற்றறிவு, கேட்டறிவு போன்ற எந்தப் புற அறிவுகளின் துணையுமின்றி, உணர்வின் ஆழங்களிலிருந்து எழுகிற அறிவு இது. இந்த சுய அறிவு ஒருபோதும் பொய்ப்பதில்லை. இந்த உள்ளுணர்வு விழிக்கப்பெற்றவர்களே படைப்பாளிகளாக இருக்கின்றார்கள்.

இது எல்லோரிடமும் செயல்படத் தொடங்கவில்லை. கல்வி, விஞ்ஞானம், கலைகள், மதம் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அவற்றின் உன்னத சிகரங்களை எட்டுவதற்கு வாசலாக உள்ளது இந்த உள்ளுணர்வே ஆகும். இது விழிப்பதே புத்தி விழிப்பதாகும்.

## உயர்ந்ததை நாடு:

புத்தியை விழிப்புற செய்வதற்காக ஒரு மனிதன் முயற்சி செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் அதிகபட்சமான உயர்ந்த நோக்கம் என்னவாக இருக்க முடியும்? ஆன்மீகத்தின் அடிப்படையில் பார்த்தால், இறையுடன் ஒன்றுதல், முக்தி அல்லது மோட்சம்தான் அதன் இறுதி நோக்கமாக இருக்க முடியும். அவ்வாறு ஒரு ஆன்ம சாதகன் முயற்சிக்கின்ற பட்சத்தில் அவன் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்?

இதனை ஒரு எளிய உதாரணத்தின் மூலம் பார்க்கலாம். புத்தி மனதின் மூலமாக ஐம்புலன்களையும் கையாள்கிறது. இங்கு கையாள்கிறது என்கிற சொல்லுக்கு மிகுந்த முக்கியத்துவம் உள்ளது. நான் கட்டுப்படுத்துகிறது (CONTROL) என்கிற வார்த்தையை இங்கு உபயோகிக்கவில்லை. கையாளுதல் (HANDLE) என்கிற சொல்லையே இங்கு பயன்படுத்த வேண்டும். இது ஏன்? என்று சற்று சிந்தித்தால் புரிய வரும்.

உண்மையில் மனிதனிடம் உள்ள புலன்களை அவனால் கட்டுப்படுத்துவது என்பது இயலவே இயலாது அவ்வாறு புலன்களை அடக்குகின்றேன் என்று ஏதாவது ஒரு செயலை அவன் செய்வதாக இருந்தால் கூட, அவன் அந்தப் புலன்களை அடக்கும் விஷயத்துடன் மட்டுமே போராடிக் கொண்டிருப்பானே தவிர, வேறெந்தப் பாதையிலும் வெற்றிகரமாகப் பயணிப்பது இயலவே இயலாது.

ஒரு மனிதன் நல்ல செயல்களை செய்து, நல்லவனாக வாழ்ந்து, ஞானம் பெற்று, ஏதோ ஒரு யோகத்தின் மூலம் மோக்ஷம் பெற விழைகிறான் என்று கொள்ளுங்கள். ஆனால், தற்சமயம் அவன் புலன்கள் அவனைத் தற்காலிகமான இன்பங்களின் பக்கமே அவனை இழுத்து சென்று கொண்டிருகின்றன என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் அவன் எவ்வாறு அதிலிருந்து மீண்டு வர முடியும்?

இதற்கு ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது. புலன்களுடன் போராடாமல், புத்தியைக் கொண்டு மட்டுமே, சரியானத் தீர்வை அடைய வேண்டும். புத்தி சரியாக விழித்துக் கொண்டு இருந்தால் போதும், புலன்கள் அதன் கட்டுப்பாட்டில் இருக்கும். புத்தி விழிப்படைய என்ன செய்ய வேண்டும்? அதைப் பற்றிதான் இந்த **கடோபநிஷதம்** இனி பேசப்போகின்றது.

# கடோபநிஷதம்

கட உபநிஷதத்திற்கான சாந்தி மந்திரம் இது.

ॐ सह नाववतु ।
सह नौ भुनक्तु ।
सहवीर्यं करवावहै ।
तेजस्वि नावधीतमस्तु । मा विद्विषावहै ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

**ஓம் ஸஹ நாவவது |**
**ஸஹ நௌ புனக்து |**
**ஸஹ வீர்யம் கரவாவஹை |**
**தேஜஸ்வி நாவதீதமஸ்து | மா வித்விஷாவஹை: ||**

**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||**

ஸஹ நௌ – நம் இருவரையும்; அவது – காப்பாராக; ஸஹ நௌ – நம் இருவரையும்; புனக்து–அனுபவிக்குமாறு ஊக்குவிப்பாராக; ஸஹ – சேர்ந்து; வீர்யம் – ஈடுபாடுமிக்க ஆற்றலுடன்; கரவாவஹை – உழைப்போமாக; அதீதம் – கற்றது; நௌ – நமக்கு; தேஜஸ்வி – பயனுள்ளதாக; அஸ்து – விளங்கட்டும்; மா வித்விஷாவஹை – வெறுக்காமல் இருப்போமாக!

ஆச்சாரியர், சீடர் ஆகிய நம் இருவரையும் இறைவன் காப்பாராக! தூய அறிவின் ஆற்றலை நாம் இருவரும் அனுபவிக்குமாறு ஊக்குவிப்பாரக! நாம் இருவரும் ஈடுபாடுமிக்க ஆற்றலுடன் உழைப்போமாக! கற்றது நமக்குப் பயனுள்ளதாக விளங்கட்டும்! எதற்காகவும் நாம் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக!

குறைகளும் தடைகளும் இல்லாமல் உபநிஷதக் கல்வி நிறைவேற இந்த மந்திரம் பிரார்த்திக்கிறது.

வேத சாஸ்திரங்களில் வருகின்ற மந்திரங்கள் அனைத்தும் இறுதியில் **ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:** என்று நிறைவுறுவதைக் காணலாம். **சாந்தி:** என்றால் அமைதி என்று பொருள்.

# முதல் பகுதி

**1 – 1 எல்லாம் உன்னுள்**

நசிகேதன் (1–5)

கட உபநிஷதத்திற்கு ஒரு முன்னுரைபோல் அமைகிறது இந்த முதல் அத்தியாயம்.

மரணத்தை ஆராய, மறு வாழ்க்கையைச் சிந்திக்க, உயர் வாழ்க்கையை விரும்ப, ஆத்மாவை உணர, இறைவனை நாட எத்தகைய மனப்பக்குவம் தேவை, என்னென்ன தகுதிகள் வேண்டும்? என்பதையெல்லாம் இங்கே நாம் காண்கிறோம். நசிகேதன் என்ற சிறுவனிடம் இவையெல்லாம் இருந்தன என்று கூறுவதன்மூலம், உயர்வாழ்க்கையை விரும்புவர்களிடம் இத்தகைய பண்புகள் இருக்க வேண்டும் என்பதை இந்த அத்தியாயம் சுட்டிக்காட்டுகிறது.

**நசிகேதனின் தந்தை செய்த யாகம்**
–––––––––––––––––––––––––––

ॐ उशन् ह वै वाजश्रवसः सर्ववेदसं ददौ ।
तस्य ह नचिकेता नाम पुत्र आस ॥ १॥

ஓம் உசன் ஹ வை வாஜச்ரவஸ: ஸர்வவேதஸம் ததௌ
தஸ்ய ஹ நசிகேதா நாம புத்ர ஆஸ || 1 ||

பொருள்:

முன்பொரு சமயம் வாஜசிரவஸ் என்பவர் கர்ம பலனில் ஆசை கொண்டவராய் தன்னிடமுள்ள எல்லாப் பொருள்களையும் தானமாகக் கொடுத்தார். அவருக்கு நசிகேதன் என்ற ஒரு மகன் இருந்தான்.

இயற்கையை எண்ணற்ற சக்திகள் ஆட்சி செய்கின்றன. ஒவ்வொரு சக்தியையும் ஒரு தேவனாகக் கண்டார்கள் வேத முனிவர்கள். காற்று வீசுவதும். சூரியன் சுடுவதும், மழை பெய்வதும் எல்லாம் இந்த தேவர்களின் ஆற்றலால் என்று அவர்கள் கருதினர்.

இந்த தேவர்களை வழிபடுவதன்மூலம் உலக வாழ்க்கைக்கான அனைத்தையும் பெறலாம் என்று கண்ட அவர்கள், தேவர்களை வழிபடுவதற்காகக் கண்ட வழிமுறையே யாகம். இக உலக வாழ்க்கைக்கான வசதிகளைப் பெறுவதற்காகவும், சொர்க்க போகங்களை அனுபவிப்பதற்காகவும் அவர்கள் யாகத்தை வழியாகக் கொண்டனர்.

யாக குண்டத்தில் அக்கினி வளர்த்து, குறிப்பிட்ட தேவனை உத்தேசித்து, உரிய மந்திரங்களுடன் உரிய பொருட்களைச் சமர்பித்து வழிபடும் போது, அந்த யாகம் அதற்குரிய பலனைத் தருகிறது.



அத்தகையதொரு யாகம் **விசுவஜித்** என்பதாகும். அதாவது பேரரசனாகி உலகத்தையே ஆள்வது இந்த யாகத்தால் பெறப்படும் பலன். ஆனால், அந்த யாகத்திற்கான நிபந்தனை வினோதமானது – அனைத்தையும் ஆள்வது அவரது நோக்கம், ஆனால், நிபந்தனை என்னவென்றால், தன்னிடமுள்ள அனைத்தையும் தானம் செய்ய வேண்டும். வாழ்க்கையைக் கொடுத்தால் வாழ்க்கையைப் பெறலாம் என்பார்கள். எல்லாம் நமக்கு வேண்டுமென்றால், நாம் எல்லாவற்றையும் விட வேண்டும். அதாவது அனைத்தையும் துறந்தவனுக்கு அனைத்தும் உரியதாகும். வேதகாலத்திலிருந்தே வந்திருக்கின்ற கருத்துச் செல்வம் இது.

வேதத்தில் விஸ்வஜித் யாகத்தை செய்பவன் உலகம் முழுவதையும் அரசாளக்கூடிய தகுதியை பெறுவதாக கூறுகிறது. அதாவது, இந்த யாகத்தை செய்பவன் உலகத்தை அரசனாக இருந்து ஆட்சி நடத்துவான் என்பது பொருளாகும். உலகம் முழுவதையும் வெல்லவேண்டும் என்றால்? ஆள வேண்டும் என்றால் அது பெரிய சுயநலமாகும்.

இந்த சுயநல காரியத்தை செய்வதற்கு, வேதம் துணை போகிறதே என்றால், வேதம் விஸ்வஜித் யாகம் யார் செய்யலாம்? அவனுக்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்று மிகப்பெரிய பட்டியல் போட்டு தருகிறது. அதிக ஆசையும், அறிவு குறைவும் உள்ள சாதாரண மனிதர்களுக்கு அந்த பட்டியல் பயன் தராது.

அதாவது, மனிதன் தனக்கு சொந்தமானது, எனக்கு சுகமானது என்னைக் காப்பாற்ற கூடியது, என்னை வருங்கலத்தில் தாங்க கூடியது என்று எதை எதையெல்லாம் மனிதன் கருதுகிறானோ அவைகளை முதலில் மற்றவர்களுக்கு மனமுவந்து வழங்கிடவேண்டும். இடுப்பில் கட்டிய ஒற்றை கோவணம் மட்டுமே சொத்து என்ற நிலையில் **விஸ்வஜித்** யாகத்தை துவங்கவேண்டும். இப்போது நினைத்து பாருங்கள் பிறர் பொருட்டு அனைத்தையும் இழந்தவன், தனது என்ற அகம்பாவத்தை துறந்தவன் உலக பற்றுகளை துறந்தவனாகிறான்.

இவ்வாறு, இந்த உலகப் பொருட்களின் மீது உள்ள ஆசை எப்போது ஒருவனுக்கு ஒழிந்து போகிறதோ? அப்போதே, அந்த மனிதன் இந்த உலகத்தை வென்றவனாகிறான். ஆக, இந்த உலகத்தை வெல்லுதல், என்று வேதம் சொல்வதன் உண்மையான பொருள் இது மட்டும்தான். அப்படிப்பட்ட உலகையே ஆளும் நோக்கத்துடன் விசுவஜித் என்ற யாகத்தைச் செய்ய நினைத்தார் வாஜசிரவஸ். அவர் இந்த யாகத்தின் முடிவில் தமது செல்வம் அனைத்தையும் தானம் செய்ய வேண்டும்.

**தானப் பொருட்களைக்கண்ட நசிகேதனின் சிந்தனை**

---

तँ ह कुमारँ सन्तं दक्षिणासु
नीयमानासु श्रद्धाविवेश सोऽमन्यत ॥ २॥

தம் ஹ குமாரம் ஸந்தம் தக்ஷிணாஸு
நீயமானாஸு ச்ரத்தா விவேச ஸோ(அ)மன்யத || 2 ||

பொருள்:

தட்சிணைகள் எடுத்துச் செல்வதைச் சிறுவனான நசிகேதன் கண்டான். சிரத்தை அவனை வந்தடைந்தது. அவன் சிந்திக்கலானான்.

சிரத்தை என்றால், **விசுவாசத்துடன் கூடிய நம்பிக்கை** என்று பொருள் கொள்ளலாம். ஒன்றை நம்புகிறேன் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதல்ல. அந்த நம்பிக்கையைச் செயல்படுத்துவது, அந்த நம்பிக்கையின் லட்சியத்தை அடையப் பாடுபடுவது – **இதுவே சிரத்தை**.

ஆகவே, உயர் லட்சியத்தை அடைவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் சிரத்தை தேவை (**ச்ரத்தா யத்பூர்வக: ஸர்வ புருஷார்த்த ஸாதன ப்ரயோக – முண்டக உபநிஷதம்)** என்கிறார் ஸ்ரீ சங்கரர். இத்தகைய சிரத்தையே இன்று நம் ஒவ்வொருக்கும் வேண்டியது.

சிரத்தையின் பெருமையைப் போற்றுவதாகவும் அது நம்மிடம் வருமாறு பிராத்திப்பதாகவும் ரிக் வேதத்தில் **ச்ரத்தா ஸூக்தம்** என்று ஒரு பகுதியே உள்ளது. சிரத்தை இறைவனின் ஹிருதயத்தில் உள்ளது. அவனைப் பற்றிய ஆழமான இதய தாகத்தால், அது அடையப்படுகிறது என்று அந்த ரிக் வேதப்பாடல்கள் கூறுகிறது. அத்தகைய சிரத்தை நசிகேதனிடம் வந்தது.

**நசிகேதனின் சிந்தனைக்கான காரணம்**

---------------------------------

पीतोदका जग्धतृणा दुग्धदोहा निरिन्द्रियाः ।
अनन्दा नाम ते लोकास्तान् स गच्छति ता ददत् ॥ ३॥

பீதோதகா ஜக்தத்ருணா துக்ததோஹா நிரிந்த்ரியா: |
அனந்தா நாம தே லோகாஸ்தான் ஸ கச்சதி தா ததத் ‖ 3 ‖

பொருள்:

தண்ணீர் குடித்து முடித்த, புல் மேய்ந்து முடித்த, பால் கறந்து முடித்த, கன்று போடும் சக்தியை இழந்த பசுக்களைத் தானம் செய்பவன் மகிழ்ச்சி இல்லாத உலகங்களை அடைகிறான். ஒருவனிடம் இருக்கும் பசுக்களின் எண்ணிக்கையை வைத்து அவனது செல்வாக்கை அந்த நாட்களில் மதிப்பிட்டார்கள். எனவே பசுக்களைத் தானம் செய்வது தானங்களில் சிறந்த ஒன்றாகக் கருதப்பட்டது.

விசுவஜித் யாகத்தின் முடிவில் அனைத்தையும் தானம் செய்ய வேண்டும். ஆனால் வாஜசிரவஸ் தனக்கு உதவாதவற்றையெல்லாம் தானம் என்ற பெயரில் மற்றவர்களுக்கு

கொடுத்தார். அவைகளில் ஒன்றுக்கும் உதவாத கிழட்டு பசுக்களைக் கொடுத்தார். பால் கறக்காத மடி வற்றிய பசுக்களை எல்லாம் தானமாகக் கொடுத்தார்.

இதனால், தானத்தின் உயரிய பலன் இவருக்கு கிடைக்காமல் போவது மட்டுமல்ல, தானத்தின் அடிப்படைக் கருத்தைச் சரியாகக் கடைபிடிக்காததால், இரட்டைத் தவறுக்கு உள்ளானார் வாஜசிரவஸ். அதற்குத் தண்டனையாக மகிழ்ச்சியற்ற உலகங்களில் வாழவும் நேரும் என்பதைப் புரிந்துகொண்ட நசிகேதன் ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டான்.

**நசிகேதன் தந்தைக்கு உண்மையை அறிவுறுத்துதல்**
**––––––––––––––––––––––––––––––––––––––––––**

தந்தை செய்யும் தவறை மறைமுகமாகச் சுட்டிக் காட்டும் நோக்கத்துடன் நசிகேதன் அவரிடம் சென்று கூறினான்:

स होवाच पितरं तत कस्मै मां दास्यसीति ।
द्वितीयं तृतीयं तँ होवाच मृत्यवे त्वा ददामीति ॥ ४॥

ஹோவாச பிதரம் தத கஸ்மை மாம் தாஸ்யஸீதி |
த்வதீயம் த்ருதீயம் தம் ஹோவாச ம்ருத்யவே த்வா ததாமீதி || 4 ||

பொருள்:

நசிகேதன் தந்தையிடம் சென்று, அப்பா, என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்டான். இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் கேட்டான்.

அதற்குத் தந்தை, **உன்னை எமனுக்குக் கொடுக்கப் போகிறேன்** என்று கூறினார். தந்தை தவறு செய்வதைக் கண்டு ஆழ்ந்து சிந்தித்த நசிகேதன், அவரைத் தவறிலிருந்து காப்பாற்றி, அவர் மகிழ்ச்சியற்ற உலகங்களை அடையாமல் தடுப்பது தனது கடமை என்று உணர்ந்தான்.

சிறுவனான தான் நேரடியாக நீங்கள் செய்வது தவறு என்று தந்தையிடம் கூறினால், அது அதிகப்பிரசங்கித்தனமாக ஆகிவிடும் என்று கருதி, மறைமுகமாக அவருக்கு விஷயத்தைத் தெளிவுப்படுத்த எண்ணினான். சிறந்தவற்றை தானம் செய்ய வேண்டும் என்பது யாகத்தின் நிபந்தனை.

ஒரு தந்தைக்கு நல்ல மகனைவிடச் சிறந்த செல்வம் இல்லை. எனவே என்னை யாருக்கு தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்? என்று நசிகேதன் வாஜசிரவஸிடம் கேட்டான். இதன் மூலம் சிறந்தவற்றை தானம் செய்ய வேண்டும் என்பதை மறந்துவிட்டீர்களே!

நசிகேதனின் இந்தக் கேள்வியை முதலில் வாஜசிரவஸ் பொருட்படுத்தவில்லை. சிறுவன் ஏதோ சொல்கிறான் என்று விட்டுவிட்டார். ஆனால், நசிகேதன் விடவில்லை. தந்தையை அணுகி மீண்டும், மீண்டும் அதையே கேட்டான். அதற்கும் வாஜசிரவஸ் பதில் சொல்லவில்லை. எனவே, மூன்றாம் முறையாகக் கேட்டான். அதனால் கோபமுற்ற வாஜசிரவஸ், உன்னை எமனுக்குக் கொடுக்கப்போகிறேன். அதாவது, நீ செத்துத் தொலை! என்று ஆத்திரத்துடன் கூறினார்.

**நசிகேதனின் சுய மதிப்பு**

-------------------------

बहूनामेमि प्रथमो  बहूनामेमि मध्यमः ।
किँ स्विद्यमस्य कर्तव्यं यन्मयाऽद्य करिष्यति ॥ ५॥

பஹூனாமேமி ப்ரதமோ பஹூனாமேமி மத்யம: |
கிம் ஸ்வித் யமஸ்ய கர்த்தவ்யம் யன்மயாத்ய கரிஷ்யதி || 5 ||

பொருள்:

பல விஷயங்களில் நான் முதல் நிலையில் இருக்கிறேன். பல விஷயங்களில் இடைநிலையில் இருக்கிறேன். என்னை எமனிடம் அனுப்புவதன் மூலம் தந்தை என்ன சாதிக்கப் போகிறார்? என்று சிந்தித்தான் நசிகேதன்.

நசிகேதனிடம் நாம் காணும் ஒரு முக்கியப் பண்பு இது. சுய மதிப்பு. தன்னை, வாழ்க்கையில் தனது இடத்தை, தனது குறை நிறைகளை அறிந்து வைத்திருந்தான் அவன். எனவே, அவன் பல விஷயங்களில் முதல் நிலையில் உள்ளேன், பல விஷயங்களில் இடை நிலையில் உள்ளேன்.

ஆனால், எதிலும் கடை நிலையில் தான் இல்லை என்று, துணிச்சலாகவே தன்னை மதிப்பிடுகிறான். அப்படிப்பட்ட என்மீது தந்தை ஆத்திரப்படுகிறாரே! எதற்காக? நான் அவரிடம் எதைச் சொல்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ளாமல், என்னை எமனிடம் அனுப்புவதாகக் கூறிவிட்டாரே என்று ஆதங்கப்படுகிறான்.

நசிகேதன் தந்தையிடம் சிந்திக்குமாறு கூறியது தந்தை ஆத்திரத்தால் சொன்னாலும், சொன்னது சொன்னதுதான், ஆகவே, தான் எமனிடம் கட்டாயம் போயே ஆக வேண்டும்! தந்தை சொன்ன சொல் தவறக்கூடாது என்பதை நிச்சயித்துக்கொண்டான் நசிகேதன்.

அந்தக் காலத்தில் தாயில் சிறந்த கோயிலுமில்லை!

தந்தை சொல்மிக்க மந்திடமுமில்லை! என்பார்கள்.

அதனால், அத்தகைய சான்றோர்களின் அறிவுறுத்தலின்படி அன்றைய வாழ்க்கைமுறை இருந்ததினால், எமனிடம் போகுமுன்பு, தன் தந்தைக்கு அவரது தவறை சுட்டிக் காட்ட விரும்பிய அவன் அவரிடம் பின்வருமாறு கூறினான்.

अनुपश्य यथा पूर्वे प्रतिपश्य तथाऽपरे ।
सस्यमिव मर्त्यः पच्यते सस्यमिवाजायते पुनः ॥ ६॥

அனுபச்ய யதா பூர்வே ப்ரதிபச்ய ததா(அ)பரே |
ஸஸ்யமிவ மர்த்ய பச்யதே ஸஸ்யமிவாஜாயதே புன: || 6 ||

பொருள்:

நம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? என்பதை சற்றே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது உள்ளவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். செடிகொடிகளைப்போல் மனிதன் பிறக்கவும், இறக்கவும் செய்கிறான் என்று தந்தையிடம் கூறினான் நசிகேதன்.

வாழ்க்கையில் அனுபவங்கள் பெரிய வழிகாட்டிகள். நமது அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது உண்மை. ஆனால், பிறருடைய அனுபவங்களிலிருந்தும் நாம் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

தீ சுடும் என்பதை நாமே அனுபவித்துப் பார்க்க வேண்டியதில்லை. பிறருடைய அனுபவத்திலிருந்தே அதைப் புரிந்துக்கொள்ளலாம். அதுப்போல, பிறருடைய அனுபவங்களிலிருந்து உண்மையைக் கற்றுக்கொள்ளுமாறு வாஜசிரவஸிடம் கூறினான் நசிகேதன். நல்லவர்கள் யாரும் இவ்வாறு தங்களைப் போன்று தானம் செய்யவில்லை, அப்படிச் செய்தவர்கள் மகிழ்ச்சியற்ற உலகங்களை அடையாமலும் இல்லை. எனவே, உண்மையாக நடந்துகொள்ளுங்கள் என்று தந்தைக்கு அறிவுறுத்துகிறான் அவன்.

அதுமட்டுமல்ல; தன்னை எமனுக்குக் கொடுப்பதாக தந்தை ஆத்திரத்திலோ, கோபத்திலோ சொல்லியிருந்தாலும், அவர் சொன்ன வாக்கு காப்பாற்றப்பட வேண்டும், தான் எமனிடம் போயே ஆக வேண்டும் என்று அதனை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொண்டான் நசிகேதன்.

அதனால், அவனுக்குத் தந்தையிடம் வருத்தமோ, கோபமோ சிறிதும் வரவில்லை என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும். பிறகு, எமலோகம் போவதான தன் முடிவைத் தந்தையிடம் கூறினான் நசிகேதன். ஆத்திரத்தில், தான் தவறு செய்துவிட்டதை எண்ணிய வாஜசிரவஸ் கவலையில் ஆழ்ந்தார்.

அதைக் கண்ட நசிகேதன் அவருக்கு வாழ்க்கையின் உண்மையை எடுத்துக் கூறினான். இந்த உலக வாழ்க்கை நிலையற்றது. மனிதன் செடிகொடிகளைப்போல் பிறக்கவும், இறக்கவும் செய்கிறான். பிறந்தவர்கள் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் உறுதி. எனவே, நான் எமலோகம் போவதுபற்றி கலங்க வேண்டாம் என்று அவரிடம் கூறிவிட்டு, எமலோகம் சென்றான் அவன்.

**எமதர்மனிடம் மந்திரிகள் கூறியது:**

நசிகேதன் சென்றபோது எமதர்மன் அங்கே இல்லை. எனவே அவன் எமனின் மாளிகையின் முன்னால் மூன்று நாட்கள் காத்திருக்க நேர்ந்தது, அதன்பிறகே எமதர்மன் வந்தான். அவனது மந்திரிகள் அவனிடம் சென்று நசிகேதன் வந்து காத்திருப்பதைப் பற்றி கூறினர்.

वैश्वानरः प्रविशत्यतिथिर्ब्राह्मणो गृहान् ।
तस्यैताँ शान्तिं कुर्वन्ति हर वैवस्वतोदकम् ॥ ७॥

வைச்வானர: ப்ரவிசதி அதிதிர் ப்ராஹ்மணோ க்ருஹான் |
தஸ்யைதாம் சாந்திம் குர்வந்தி ஹர வைவஸ்வதோதகம் || 7 ||

பொருள்:

தூயவன் ஒருவன் விருந்தினனாக வரும்போது நெருப்புப் போலவே நுழைகிறான். நல்லவர்கள், அவனுக்குத் தண்ணீர் முதலானவற்றைக் கொடுத்து, உபசரித்து அவனை அமைதிப்படுத்துகின்றனர்.

எமதர்மனே! நீயும் அந்தச் சிறுவனுக்கு தண்ணீர் முதலியவற்றைக் கொடு! என்று மந்திரிகள் எமதர்மனிடம் கூறினர். விருந்தினர் என்பவர் வழிபாட்டிற்குரியவர். அந்த வேளைக்கு அவர் தெய்வமே. அந்த நிலையில் அவர் போற்றப்பட வேண்டும் என்கிறார் சுவாமி விவேகானந்தர். அவர் கூறுவதுபோல, நாம் விருந்தினர்களை உபசரித்தல் என்பது, இந்தியாவில் ஒரு காலத்தில் வழிபாடாகவே பார்க்கப்பட்டு, அதை மனப்பூர்வமாக செய்யப்பட்டு வந்தது. அதனால், அதன் முக்கியத்துவத்தை மந்திரிகள் எமதர்மனிடம் தெரிவிக்கின்றனர்.

आशाप्रतीक्षे संगतँ सूनृतां
चेष्टापूर्ते पुत्रपशूँश्च सर्वान् ।
एतद्वृङ्क्ते पुरुषस्याल्पमेधसो
यस्यानश्नन्वसति ब्राह्मणो गृहे ॥ ८॥

ஆசா ப்ரதீக்ஷே ஸங்கதம் ஸூன்ருதாம்ச
இஷ்ட்டாபூர்த்தே புத்ர பசூம்ச்ச ஸர்வான் |
ஏதத் வ்ருங்க்தே புருஷஸ்யால்பமேதஸோ
யஸ்யானச்னன் வஸதி ப்ராஹ்மணோ க்ருஹே || 8 ||

பொருள்:

யாருடைய வீட்டில் தூயவன் ஒருவன் உணவின்றி இருக்க நேர்கிறதோ? அற்ப புத்தி உடையவனான அவனது அத்தனை நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும் என எல்லாம் அழிகின்றன.

தான் செய்த புண்ணியங்களின் பலன், இனிய பேச்சின் பலன், யாகங்கள் வழிபாடு போன்றவற்றின் பலன், நற்பணிகளின் பலன் அனைத்தையும் அவன் அப்போதே இழக்கிறான். அவனது பிள்ளைச் செல்வம், கால்நடைச் செல்வம் அனைத்தும் அழிகின்றன என்கின்றது சாஸ்திர தர்மம்.

தூயவன் ஒருவன் வீட்டிற்கு வந்தால், அவனை உபசரிக்க வேண்டியது நமது கடமை என்பதை இந்த மந்திரம் உணர்த்துகிறது. உபசரிக்காவிட்டால், அவனது எல்லா செல்வமும் அழியும் என்றும் சொல்கின்றது. அதேவேளையில், உபசரித்து அவர்களின் மனம் கனிந்த ஆசிகளைப் பெற்றால், அவனுக்கு அனைத்துவிதமான செல்வங்களும் சேரும் என்பதும் சாஸ்திரம் சுட்டிக்காட்டுகின்றது.

मातृ देवो भव/
पितृ देवो भव/
आचार्य देवो भव/
अतिथि देवो भव//

**மாத்ரு தேவோ பவ – அன்னையை போற்றுங்கள்**
**பித்ரு தேவோ பவ – தந்தையை போற்றுங்கள்**
**ஆச்சாரிய தேவோ பவ – குருவை போற்றுங்கள்**
**அதிதி தேவோ பவ – விருந்தினரை போற்றுங்கள்**

**எமதர்மனின் உபசாரம்**

மந்திரிகள் கூறியதைக் கேட்ட எமதர்மன் நேராக நசிகேதனிடம் சென்று அவனை உபசரித்தான்.

तिस्रो रात्रीर्यदवात्सीर्गृहे मे-
ऽनश्नन् ब्रह्मन्नतिथिर्नमस्यः ।
नमस्तेऽस्तु ब्रह्मन् स्वस्ति मेऽस्तु
तस्मात्प्रति त्रीन्वरान्वृणीष्व ॥ ९॥

திஸ்ரோ ராத்ரீர் யதவாத்ஸீர் க்ருஹே மே
(அ)நச்னன் ப்ரஹ்மன் அதிதிர் நமஸ்ய: |
நமஸ்தேஸ்து ப்ரஹ்மன் ஸ்வஸ்தி மே(அ)ஸ்து
தஸ்மாத் ப்ரதி த்ரீன்வரான் வ்ருணீஷ்வ ‖ 9 ‖

பொருள்:

வழிபாட்டிற்கு உரியவனே! விருந்தாளியே, எங்களால் வணங்கத் தக்கவனுமான நீ உணவின்றி என் வீட்டில் மூன்று இரவுகள் தங்க நேர்ந்தது கண்டு வருந்துகின்றேன். தூய பாலகனே! அந்தக் குற்றம் என்னைப் பாதிக்காமல், எனக்கு நன்மை உண்டாகட்டும். உனக்கு வணக்கம். நீ மூன்று இரவுகள் தங்க நேர்ந்ததற்காக என்னிடமிருந்து மூன்று வரங்களைப் பெற்றுக்கொள்.

## நசிகேதன் கேட்டது

**முதல் வரம்:** தந்தையின் நலம் (10 – 11)

शान्तसंकल्पः सुमना यथा स्याद्
वीतमन्युर्गौतमो माऽभि मृत्यो ।
त्वत्प्रसृष्टं माऽभिवदेत्प्रतीत
एतत् त्रयाणां प्रथमं वरं वृणे ॥ १०॥

சாந்த ஸங்கல்ப: ஸுமனா யதா ஸ்யாத்
வீதமன்யுர் கௌதமோ மா(அ)பி ம்ருத்யோ |
த்வத் ப்ரஸ்ருஷ்ட்டம் மா(அ)பி வதேத் ப்ரதீத
ஏதத் த்ரயாணாம் ப்ரதமம் வரம் வ்ருணே || 10 ||

பொருள்:

எமதர்மனே! உன்னிடமிருந்து திரும்பிச் செல்கின்ற என்னை எனது தந்தை புரிந்துக் கொள்ளவேண்டும். என்னை ஏற்றுக்கொண்டு, மனக்கவலை அற்றவராக, தெளிந்த மனத்தினராக, கோபம் அற்றவராக என்னுடன் பேச வேண்டும் மூன்று வரங்களுள் இதையே **முதல் வரமாகக்** கேட்கிறேன்.

எமனைச் சந்தித்து வருகின்ற இவன் ஆவியல்ல, என் மகன்தான் என்று வாஜசிரவஸ் புரிந்துக்கொள்ள வேண்டும், தான் ஒரு தவறு செய்ததாகக் கோபம் கொண்ட அவர் இப்போது அந்தக் கோபத்தை விட்டிருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால், தந்தை தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நசிகேதன் முதல் வரமாகக் கேட்டான்.

## எமதர்மன் வரமளித்தல்

यथा पुरस्ताद् भविता प्रतीत
औद्दालकिरारुणिर्मत्प्रसृष्टः ।
सुखँ रात्रीः शयिता वीतमन्युः त्वां
ददृशिवान्मृत्युमुखात् प्रमुक्तम् ॥ ११॥

யதா புரஸ்தாத் பவிதா ப்ரதீத
ஔத்தால கிராருணிர் மத் ப்ரஸ்ருஷ்ட்ட: |
ஸுகம் ராத்ரீ: சயிதா வீதமன்யுஸ்த்வாம்
தத்ருசிவான் ம்ருத்யு முகாத் ப்ரமுக்தம் || 11 ||

பொருள்:

அருணனின் மகனும் உனது தந்தையுமாகிய உத்தாலகர் எனும் வாஜசிரவஸ் உன்னைக் காணும்போது முன்பு போலவே உன்னைப் புரிந்துகொள்வார். என் அருளால் இனி வரும் இரவுகளில் கவலையற்று தூங்குவார். என்னிடமிருந்து திரும்பிச் செல்கின்ற உன்னைக் கண்டு கோபம் கொள்ளவும் மாட்டார் என்று கூறி முதல் வரத்தை அளித்தான் எமதர்மன்.

**இரண்டாம் வரம் (12 – 18)**

**——————————————**

இரண்டாம் வரம்: சொர்க்க லோகம் 12 – 13

स्वर्गे लोके न भयं किंचनास्ति
न तत्र त्वं न जरया बिभेति ।
उभे तीर्त्वाऽशनायापिपासे
शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १२॥

ஸ்வர்கே லோகே ந பயம் கிஞ்சனாஸ்தி
ந தத்ர த்வம் ந ஜரயா பிபேதி |
உபே தீர்த்வா சனாயாபிபாஸே
சோகாதிகோ மோததே ஸ்வர்கலோகே || 12 ||

பொருள்:

சொர்க்கத்தில் சிறிதும் பயம் கிடையாது. மரண தேவனாகிய நீயும் அங்கில்லை. அங்கே யாரும் மூப்பினால் பயப்படுவதில்லை. அவர்களுக்குப் பசி, தாகம் இரண்டும் கிடையாது. அவர்கள் கவலையற்றவர்களாக மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள்.

स त्वमग्निँ स्वर्ग्यमध्येषि मृत्यो
प्रब्रूहि त्वँ श्रद्दधानाय मह्यम् ।
स्वर्गलोका अमृतत्वं भजन्त
एतद् द्वितीयेन वृणे वरेण ॥ १३॥

ஸ த்வமக்னிம் ஸ்வர்க்யமத்யேஷி ம்ருத்யோ
ப்ரப்ரூஹி தம் ச்ரத்ததானாய மஹ்யம் |
ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்தே
ஏதத் த்விதீயேன வ்ருணே வரேண || 13 ||

பொருள்:

எமதர்மனே! சொர்க்கத்தில் வாழ்பவர்கள் தேவத்தன்மையைப் பெறுகின்றனர். அங்கே அழைத்துச் செல்லக் கூடிய யாகத்தைப்பற்றி உனக்குத் தெரியும். சிரத்தை மிக்கவனான எனக்கு அதைப்பற்றி சொல். இதனை **இரண்டாவது வரமாகக்** கேட்கிறேன்.

மனிதனுக்கு இன்ப நுகர்ச்சியிலுள்ள நாட்டம் முடிவற்றது, ஆயுளோ குறைவு. எனவே இங்கே கிடைக்காத, இங்கே பூர்த்தி செய்ய முடியாத இன்பங்கள் வேறோர் உலகத்தில் இருப்பதாகக் கொண்டு, அங்கே சென்று தனது சுகபோக வாழ்க்கையைத் தொடர நினைக்கிறான் அவன். இதன் விளைவாக எழுந்ததே சொர்க்கம் என்ற கருத்து. எல்லா நாட்டுப் புராணங்களிலும் இந்தக் கருத்து இருப்பதைக் காணலாம்.

பசி, தாகம், மூப்பு, அனைத்திற்கும் மேலாக மரணம் போன்றவை சுகபோகங்களுக்குத் தடையாக உள்ளன. எனவே அந்தத் தடைகள் இல்லாத உலகமாக சொர்க்கத்தைக் கருதினான் மனிதன்.

### சொர்க்கத்திற்குப் போவது எப்படி?

வாழ்வில் சாதிக்க வேண்டிய அனைத்திற்கும் யாகத்தை நாடினான் வேதகால மனிதன் என்பதை 1.1.1 விளக்கவுரையில் கண்டோம்.

சொர்க்கத்திற்குப் போவதற்கென்றும் தனியாக யாகங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றைப்பற்றி எமதர்மனிடம் இரண்டாவது வரமாக நசிகேதன் கேட்கிறான்.

## நசிகேத வித்யை

யாகங்கள் புறத்தில் செய்யப்படுபவை. சில பொருட்களைக் கொண்டு புறத்தில் செய்யப்படுகின்ற கிரியைகள் புண்ணியத்தைத் தரலாம், சொர்க்க வாழ்வைப் பெற்றுத் தரலாம்; ஆனால் அக வளர்ச்சியைத் தருமா, அனுபூதியைத் தருமா என்ற கேள்வி காலப்போக்கில் எழுந்தது. அகப் பயிற்சிகளே அக வளர்ச்சியைத் தர முடியும் என்ற கருத்து வலுப்பெற்றது யாகங்கள் அகமுகமாக்கப்பட்டன. வித்யைகள் உருவாயின. இந்த மந்திரத்தில் யாகம் வித்யையாகப் பரிணமிப்பதைக் காண்கிறோம்.

प्र ते ब्रवीमि तदु मे निबोध
 स्वर्ग्यमग्निं नचिकेतः प्रजानन् ।
अनन्तलोकाप्तिमथो प्रतिष्ठां
 विद्धि त्वमेतं निहितं गुहायाम् ॥ १४॥

ப்ர தே ப்ரவீமி தது மே நிபோத
ஸ்வர்க்யமக்னிம் நசிகேத: ப்ரஜானன் |
அனந்த லோகாப்திமதோ ப்ரதிஷ்ட்டாம்
வித்தி த்வமேதம் நிஹிதம் குஹாயாம் || 14 ||

பொருள்:

நசிகேதா! சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்ற யாகத்தைப்பற்றி கேட்டாய். அது எனக்குத் தெரியும். அதை உனக்குச் சொல்கிறேன். விழிப்புற்றவனாகக் கேள். சொர்க்கத்தைத் தருவதும், பிரபஞ்சத்திற்கு ஆதாரமானதுமான அந்த அக்கினி இதயக்குகையில் உள்ளது.

சொர்க்கத்திற்குப் போவது பற்றிய யாகத்தை அறிய விரும்பினான் நசிகேதன். அது தனக்குத் தெரியும் என்கிறான் எமதர்மன்.

புறக் கிரியைகளான யாகம் செய்யும்போது, சொர்க்கத்தைத் தருகின்ற அதே யாகம் அக அக்கினியாக, ஆன்ம அக்கினியாகக் கொண்டு வித்யையாகச் செய்யப்படும்போது, பிரபஞ்சத்திற்கு ஆதாரமான இறைவனை அடைவதற்கான ஒரு மகத்தான சாதனை என்பதாக ஆகின்றது.

இறை வாழ்வில் முன்னேற முன்னேறத்தான் உபநிஷதங்களின் உட்பொருள் விளங்கும் என்று ஏற்கனவே கண்டோம். **விழிப்புற்றவனாகக் கேள்!** என்று எமதர்மன் அதையே குறிப்பிடுகிறான். அந்த அக்கினி இதயக் குகையில் உள்ளது என்கிறான் எமதர்மன். இதுவே நசிகேத வித்யை.

இதயக்குகை என்பதை அறிவதற்கான, புத்தியை விழிப்புறச் செய்வதற்கான ஒரு பயிற்சியாகவே அது இருந்திருக்கின்றது. ஆன்மீக உண்மைகளை இறைவனைப்பற்றிய உண்மைகளை அறிய புத்தி விழிப்புற்றிருக்க வேண்டும். இந்தக் கருத்து பல இடங்களில் வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

**நசிகேத யாகம்: 15 – 16**

**——————————————————**

சொர்க்கத்தை அடைவதற்கான வழி இதயக் குகையில் இருக்கிறது என்று நசிகேத வித்யையைச் சுட்டிக்காட்டிய எமதர்மன், புறத்தில் அதை யாகமாகச் செய்வதற்கான வழிமுறைகளைக் கூறுகிறான்.

लोकादिमग्निं तमुवाच तस्मै
  या इष्टका यावतीर्वा यथा वा ।
स चापि तत्प्रत्यवदद्यथोक्तं
  अथास्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥ १५॥

லோகாதிமக்னிம் தமுவாச தஸ்மை
யா இஷ்ட்டகா யாவதீர்வா யதா வா |
ஸ சாபி தத்ப்ரத்யவதத் யதோக்தம்
அதாஸ்ய ம்ருத்யு: புனரேவாஹ துஷ்ட்ட: || 15 ||

பொருள்:

ஆதியில் தோன்றிய அந்த யாகத்தைப்பற்றி எமதர்மன் நசிகேதனுக்குக் கூறினான். அந்த யாகத்திற்கு எத்தகைய செங்கற்கள் வேண்டும், எத்தனை வேண்டும், எவ்வாறு யாக குண்டத்தை அமைக்க வேண்டும் என்பதையெல்லாம் உபதேசித்தான். எம தர்மன் கூறியவற்றை நசிகேசன் அப்படியே திருப்பிக் கூறினான்.

நசிகேதன் அவற்றைப் புரிந்துகொண்டதைக் கண்டு மகிழ்ந்த எமதர்மன் மீண்டும் கூறினான்.

तमब्रवीत् प्रीयमाणो महात्मा
वरं तवेहाद्य ददामि भूयः ।
तवैव नाम्ना भविताऽयमग्निः
सृङ्कां चेमामनेकरूपां गृहाण ॥ १६॥

தமப்ரவீத் ப்ரீயமாணோ மஹாத்மா
வரம் தவேஹாத்ய ததாமி பூய: |
தவைவ நாம்னா பவிதாயமக்னி
ஸ்ருங்காம் ச இமாமனேகரூபாம் க்ருஹாண || 16 ||

பொருள்:

நசிகேதனின் பதிலால் மகிழ்ச்சியுற்ற மகாத்மாவாகிய எமதர்மன் அவனிடம், உனக்கு இன்னொரு வரமும் தருகிறேன்: இந்த யாகம் இனி உனது பெயராலேயே விளங்கும். மேலும், பல வண்ணங்களைக் காட்டுகின்ற இந்த மாலையையும் பெற்றுக்கொள்! என்று கூறினான். நல்ல திறமையான மாணவர்களிடம் ஓர் ஆசிரியருக்கும், தகுதிவாய்ந்த சீடனிடம் குருவிற்கும் ஏற்படுகின்ற உணர்ச்சியில் எமதர்மன் கூறிய வார்த்தைகள் இவைகள்.

இரண்டாவது வரத்தையும் அளித்துவிட்டு, இந்த இரண்டு வரங்களையும் அதிகமாகக் கொடுத்தான் அவன். எந்த யாகத்தால் சொர்க்கத்தை அடைய முடியமோ அது **நசிகேத யாகம்** என்று வழங்கப்படும் என்பது முதல் வரம். இரண்டாவதாக ஓர் அழகிய ரத்தின மாலை. இந்த ரத்தின மாலை என்பது பல்வேறு யாகங்களைப் பற்றிய அறிவைக் குறிக்கிறது.

**(ஸ்ருங்காம் அகுத்ஸிதாம் கதிம் கர்ம மயீம் க்ருஹாண – ஶ்ரீசங்கரர்)**

**நசிகேத வித்யையின் மகிமை: 17 – 19**

———————————————————

त्रिणाचिकेतस्त्रिभिरेत्य सन्धिं
त्रिकर्मकृत्तरति जन्ममृत्यू ।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा
निचाय्येमाँ शान्तिमत्यन्तमेति ॥ १७॥

த்ரிணாசிகேதஸ்த்ரிபிரேத்ய ஸந்திம்
த்ரிகர்மக்ருத் தரதி ஜன்ம ம்ருத்யூ |
ப்ரஹ்ம ஜஜ்ஞும் தேவமீட்யம் விதித்வா
நிசாய்யேமாம் சாந்திமத்யந்தமேதி || 17 ||

பொருள்:

நசிகேத யாகத்தை மும்முறை செய்தவன் மூவருடன் தொடர்பு கொண்டு மூன்று பயிற்சிகளைச் செய்யும் போது பிறப்பையும் இறப்பையும் கடக்கிறான். பிரம்மத்திலிருந்து தோன்றியவரும் வழிபடத்தகுந்தவருமான இறைவனை அறிந்து அனுபவித்து அவன் நிலைத்த அமைதியைப் பெறுகிறான். நசிகேதனின் இரண்டாவது வரம் சொர்க்கத்திற்குப் போவதற்கான வழிபற்றியது. அந்த வழி நசிகேத யாகம் எனப்படுகின்றது.

அந்தப் புற யாகத்தை சில நிபந்தனைகளுடன் செய்தால், அதுவே ஓர் அகப் பயிற்சியாக, ஒரு வித்யையாக இறைநெறியில் நம்மைச் சேர்க்கும் என்பதை இந்த மந்திரம் சுட்டிக்காட்டுகிறது.

அந்த நிபந்தனைகள் என்னென்ன?

1. **மூவருடன் தொடர்பு:**

தாய், தந்தை, குரு ஆகிய மூவர் காட்டும் வழியில் செல்ல வேண்டும்.

தாயின் அரவணைப்பு, உலக விஷயங்களில் தந்தையின் வழிகாட்டுதல், அக வாழ்க்கையில் தகுந்த குருவின் வழிநடத்தல் ஆகிய மூன்றும் உரிய வேளையில் சரியாகக் கிடைப்பவனின் வாழ்க்கை வெற்றிகரமானதாக அமைகிறது. இதில் ஒன்று குறைந்தாலும் அந்த வாழ்க்கை நிறைவு பெறுவதில்லை. எனவே இந்த மூவரின் ஆசிகளால் வாழ்க்கை நிறைவு பெற்றவனாக இருக்க வேண்டும்.

இந்த மூவரின் தொடர்பால் ஒருவன் இறைவனை அறிகிறான்; அதாவது இறைவன் ஒருவர் இருக்கிறார், அவரை அடைவதே வாழ்க்கையின் நோக்கம் என்பது அவனுக்குத் தெரிய வருகிறது. இதனையே மந்திரத்தில் வரும் '**அறிந்து**' (விதித்வா) என்ற வார்த்தை குறிப்பிடுகிறது.

ஆனால் அப்படி அறிவது மட்டும் போதாது. அனுபூதியில் இறைவனை உணர வேண்டும், அனுபவிக்க வேண்டும் இதனை மந்திரத்தில் வரும் '**அனுபவித்து**' (நிசாய்ய) என்ற வார்த்தை குறிப்பிடுகிறது.

அதற்கான பயிற்சிகள் எவை?

## 2. மூன்று பயிற்சிகள்:

**தவம், ஸ்வாத்யாயம், ஈசுவர ப்ரணிதானம்** என்பவை மூன்றும் கர்மங்கள் அல்லது மூன்று பயிற்சிகள் என்று பதஞ்ஜலி முனிவர் கூறுகிறார்.

**(தப: ஸ்வாத்யாயேச்வர ப்ரணிதானானி க்ரியாயோக:)**

சொந்த தேவைகளைச் சுருக்கிக்கொள்வதும், தனது வாழ்க்கை பிறருக்குப் பயனுள்ளதாக அமையும் வண்ணம் வாழ்வதும் தவம். நல்ல நூல்களைப் படித்தல், நல்ல கருத்துக்களைப் பிறருக்குச் சொல்லுதல், மந்திர ஜபம், சுயவிசாரம் மேற்கொள்ளுதல் போன்றவைகள் ஸ்வாத்யாயம் எனப்படுகின்றது.

இறைவனை வழிபடுவதும், அவரைச் சரணடைந்து வாழ்வதும் **ஈசுவர ப்ரணிதானம்.** இவ்வாறு மூவரின் தொடர்புடன் மூன்று பயிற்சிகளைச் செய்பவன் இறைவனை அடைகிறான்.

அந்த இறைவன் யார்?

பிரம்மத்திலிருந்து தோன்றியவர். உருவமற்ற, குணங்களற்ற அறுதி நிலையில் இறைவன் **பிரம்மம்** என்று வழங்கப்படுகிறார். சாதாரண மனிதர்கள் புரிந்துகொள்ளத்தக்க நிலையில் குறிப்பிட்ட வடிவத்துடனும், குணங்களுடனும் இருக்கின்ற நிலையில் சற்குண இறைவன், **சிவன், விஷ்ணு, தேவி** என்றும் பல்வேறு பெயர்களைப் பெறுகிறார். இந்த நிலையிலுள்ள இறைவனை அந்த மூவரிலும் பார்க்கின்றான். அவர்கள் மூலம் அவன் பயன் அடைகிறான்.

அதனால் விளையும் பலன் என்ன?

நிலைத்த, நீடித்த **அமைதி** மற்றும் **ஆனந்தம்.**

இறைவனைத் தவிர வேறு எதன்மூலம் கிடைக்கின்ற அமைதியும் நிலையானதல்ல. சில புறக் காரணங்களின் வாயிலாகக் கிடைக்கின்ற அமைதி, அந்தக் காரணம் விலகியதும் குலைந்துவிடும். ஆனால் இறைவனைப் பெறுவதால் கிடைக்கின்ற அமைதி, எதனாலும் குலையாது.

त्रिणाचिकेतस्त्रयमेतद्विदित्वा
य एवं विद्वाँश्चिनुते नाचिकेतम् ।
स मृत्युपाशान् पुरतः प्रणोद्य
शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १८॥

த்ரிணாசிகேதஸ் த்ரயமேதத் விதித்வா
ய ஏவம் வித்வாம்ச் சினுதே நாசிகேதம் |
ஸ ம்ருத்யுபாசான் புரத: ப்ரணோத்ய
சோகாதிகோ மோததே ஸ்வர்க லோகே || 18 ||

பொருள்:

இதற்கு முந்தைய மந்திரத்தில் கூறப்பட்ட மூன்றையும் அறிந்து யார் நசிகேத யாகத்தைச் சரியாகச் செய்கிறானோ? அவன் உடல் மண்ணில் விழும் முன்பே மரணத்தை வென்று, கவலைகளைக் கடந்து, சொர்க்கத்தில் மகிழ்ந்திருக்கிறான்.

அதாவது, நசிகேத யாகத்தை ஒரு வித்யையாகச் செய்யுமாறு இந்த சுலோகம் வலியுறுத்துகிறது. வெறுமனே நசிகேத யாகத்தைச் செய்வதால் சொர்க்க லோகத்திற்குச் செல்கிறான். மூன்றையும் அறிந்து நசிகேத வித்யையைச் செய்பவன் மரணத்தை வெல்கிறான்.

உடல் விழும் முன்பே, அதாவது, இந்த பூமியில் வாழும் போதே மரணத்தை வெல்வது என்றால் என்ன என்பதை அற்புதமாக விளக்குகிறார் ஸ்ரீசங்கரர். அவன் அறியாமையிலிருந்து விடுபடுகிறான்; ஆசை, வெறுப்பு போன்ற உணர்ச்சிகளின் பிடியிலிருந்து விடுபட்டு வாழ்கிறான் என்கிறார் பகவான் ஸ்ரீ சங்கரர். (ம்ருத்யுபாசான் அதர்ம அஜ்ஞான ராக த்வேஷாதி லக்ஷணான்) ஒரு மனிதனின் அறியாமை, அவனை ஆசைகளுக்கு உட்படுத்தி, அதன் வாயிலாக உலக சுக, துக்கங்களின் வசப்பட்டு அவனை பிணைக்கிறது.

இதன் காரணமாக, தொடர் பிறவிக்கு வழி வகுக்குகின்றது. அதுவே, ஆத்ம ஞானத்தினால், அவன் அடைந்த விவேகம் விருப்பு – வெறுப்பு எனும் இருமைகளை இல்லாமல் செய்கின்றது. அதன் வாயிலாக அவனுக்கு பிறவியற்றுப் போவதால், அது மரணத்தை வென்ற வாழ்க்கையாகின்றது.

एष तेऽग्निर्नचिकेतः स्वर्ग्यो
यमवृणीथा द्वितीयेन वरेण ।
एतमग्निं तवैव प्रवक्ष्यन्ति जनासः
तृतीयं वरं नचिकेतो वृणीष्व ॥ १९॥

ஏஷ தேக்னிர் நசிகேத: ஸ்வர்க்யோ
யமவ்ருணீதா த்விதீயேன வரேண |
ஏதமக்னிம் தவைவ ப்ரவக்ஷ்யந்தி ஜனாஸ
த்ருதீயம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ || 19 ||

பொருள்:

நசிகேதா! சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்ற எந்த யாகத்தைப்பற்றி கேட்டாயோ அதை உனக்குச் சொன்னேன். இந்த யாகத்தை மக்கள் இனி உன் பெயராலேயே நசிகேத வித்யை என்று அழைப்பார்கள். இனி மூன்றாவது வரத்தைக் கேள்.

**சொர்கம் என்றால் என்ன?**

பொதுவாக, சொர்கம் என்பதை கிருஸ்துவம் மற்றும் இஸ்லாம் போன்ற மற்ற மதங்கள் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையின் சாம்ராஜ்யமாகும் என்கின்றது. அதாவது, இந்த பூமியில் வாழும் வாழ்க்கையில் நடைப்பெற்ற பல்வேறு நல்ல செயல்கள் மூலம் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற நித்தியத்திற்கான வெகுமதியே **சொர்க்கம்** என்பதாகப் பார்க்கின்றது. அதுவே, இந்த பூமியில் வாழும்போது, அவர்களிடம் காணப்படுகின்ற கெட்ட நடத்தைகளுக்கு தண்டிக்கப்படும் இடமாக **நரகம்** இருகின்றது என்றும் கூறுகின்றது.

ஆனால், சனாதன தர்மத்தின் வழியில் வந்த இந்து சமயத்தில் சொர்க்கத்தை அடைவது என்பது மட்டுமே இறுதி நோக்கம் அல்ல. ஏனெனில், சொர்க்கம் என்பது நிலையற்றது மற்றும் அழியக்கூடிய இந்த உடலுடன் தொடர்புடையது. சொர்க்கம் பூரணமாக இருக்க முடியாது. மேலும், இது இன்பமான மற்றும் சாதாரணமான பொருள் சார்ந்த வாழ்க்கைக்கு பொருந்திய மற்றொரு பெயர் அவ்வளவே என்கின்றது.

இந்து சாஸ்திரங்கள் படி, பூமிக்கு மேலே, மற்ற லோகங்கள் உள்ளன: அவைகளை ஈரேழு பதினான்கு லோகங்கள் என்கின்றோம். இந்தப் பிரபஞ்சத்தில் பதினான்கு உலகங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. அவைகள் ஈரேழு என்றால், மேலுலகங்கள் ஏழு மற்றும் கீழுலகங்கள் ஏழு மொத்தம் பதினான்கு உலகங்கள் என்று அர்த்தம்.

அதாவது, நாம் வாழும் பூமி எனும் இந்த உலகத்திற்கு மேலே ஏழு உலகங்கள் உள்ளன. அவைகள்:–

7. **சத்ய**லோகம்
6. **தபோ**லோகம்
5. **ஜனோ**லோகம்
4. **மஹர்**லோகம்
3. **சுவர்**லோகம்
2. **புவர்**லோகம்

(1) பூமி (**பூ**லோகம்) மேல்/கீழ் உலகங்கள் ஏழு என மொத்தம் 14 உலகங்கள்.

1. **அதல**லோகம்
2. **விதல**லோகம்
3. **சுதல**லோகம்
4. **தலாதல**லோகம்
5. **மகாதல**லோகம்
6. **ரஸாதல**லோகம்
7. **பாதாள**லோகம்

இத்தகைய உலகங்கள் எனும் ஜீவர்களின் வாசதலங்கள் எல்லாமே பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளதால், சொர்க்கம் அல்லது நரகத்தில் வசிப்பவரும் மீண்டும், மீண்டும் வேறு ஒரு லோகத்திற்கு மறுசுழற்சி செய்யப்படுவார்கள். அதாவது, இந்த லோகங்கள் எல்லாம் உண்மையில் மனிதனின் மனம் சார்ந்த வாழ்க்கை என்பதை எடுத்துக் கூறுவதே நம் சனாதன தர்மத்தில் வருகின்ற சாஸ்திரம் கூறும் உண்மை.

இத்தகைய மனம் சார்ந்த உலகங்களில் இருந்து விடுபட வேண்டுமானால், ஜீவன் தன்னை உணர்கின்ற சுய–உணர்தலால் மட்டுமே அது சாத்தியமாகும் என்றும், அதனால், இந்த மனதின் பிறப்பு – இறப்பு சுழற்சி உடைக்கப்படுகிறது என்றும் எடுத்துக் கூறுகின்றது. இத்தகைய இந்த **சுய –உணர்தல்** என்பதே **முக்தி** அல்லது **மோட்சம்** எனப்படுகின்றது. இதிலே, **மோட்சம்** என்ற கருத்து இந்து மதத்திற்கு மட்டுமே உரியது.

மோட்சம் என்பது பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியிலிருந்து விடுதலை மற்றும் பரமனுடனான இறுதி இணைப்பு என்பதைக் குறிக்கின்றது. அதாவது, ஜீவன் தன்னை ஆத்மா, ப்ரஹ்மம் அல்லது பரமாத்மாவுடன் கூடிய ஐக்கியம் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

அந்த வகையிலே, இங்கு இந்த பூமியில் வாழும்போதே ஆத்மஞானம் அடைந்தவன் அந்த பரமனை உணர்ந்து ஒருவன் வாழும் ஆனந்தமான வாழ்க்கையே **சொர்க்கம்** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

இதுவே, இந்த பரமனை அறியாமல், மனம்போன போக்கிலே போகின்றவர்கள் அடையக்கூடிய, இந்த பூமியில் வாழும் வாழ்க்கையே அவர்களை பல்வேறு துயரத்துக்கு உட்படுத்துவதால், அந்த வாழ்க்கை முறையை **நரகம்** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

இதை நம்முடைய நடைமுறை வாழ்க்கையோடு ஒப்பிட்டு புரிந்துக் கொள்ள ஒரு உதாரணம் மூலம் பார்க்கலாம். அதாவது, நாம் அனைவரும் வீடியோ கேம்ஸ் விளையாடி இருப்போம் அல்லது நம்முடைய குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்திருப்போம்.

இதிலே, இன்றைய நவீன வீடியோ கேம்ஸ்கள் எல்லாமே உயர்தர வீடியோ கிராபிக்ஸ் கார்டுகள் (Video Graphics Card) பொருத்தப்பட்ட கணினியில் விளயாடும்போது, விளையாட்டில் வருகின்ற செயற்கையான உலகம் மற்றும் அதில் வருகின்ற ஆட்கள் என எல்லாமே, பார்ப்பதற்கு உண்மை போன்று தத்ரூபமாக 3D வடிவில் உருவாக்கப்பட்ட செயற்கை முறை (Artificial Simulation) உருவகப்படுத்துதல் என்பதாக உள்ள தொழில் நுட்பம் நிஜமாகவே இருப்பதுப் போலக் காட்டும்.

அந்த வீடியோ கேம் விளையாட்டில் உண்மையான உலகம் இருப்பதுப் போன்றும், அதிலே விளையாடும் ஒரு கதாபாத்திரம் உண்மையாக இருப்பதுப் போன்றும் உள்ள நிலையில், இந்த விளையாட்டை விளையாட விரும்பும் குழந்தை அதற்கான உலகத்தையும், தனக்கான ஒரு பிரத்யேக கேரக்டரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

அதாவது, ஒரு குழந்தை செயற்கை உலகம் கொண்ட அந்த வீடியோ கேமில், உண்மையான கதாபாத்திரத்தில் ஒரு கதாநாயகன் போன்று தன்னை காட்டிக் கொண்டு, தனக்கு எதிராக வருகின்ற மற்ற ஏராளமான கதா பாத்திரங்களை எதிர்கொள்ளும். பார்ப்பதற்கு நிஜமாக நடப்பதுப் போலவே இருக்கும்.

அதாவது, அந்த குழந்தை தற்காலிகமாக, அந்த செயற்கை வீடியோ கேம் உலகத்தில் தன்னுடைய வாழ்க்கையை உண்மையாகவே வாழும். ஆனால், அந்த செயற்கை வீடியோ கேமில் விளையாடும் ஒரு கதாபாத்திரத்தில், கேரக்டரில் விளையாடிக் கொண்டிருக்கின்ற கம்யூட்டருக்கு வெளியே இருக்கின்ற உண்மைக் குழந்தையின் கேரக்டர் அது கிடையாது. இருப்பினும், அந்தக் கற்பனைக் கதாபாத்திரம் என்பது தற்காலிகமாக அந்த உண்மைக் குழந்தைக்கு கிடைத்த உண்மையான வாழ்க்கை போன்று காணப்பட்டாலும், அது உண்மையான வாழ்க்கை இல்லை என்பது நமக்குத் தெரியும்.

அதாவது, வைகள் எல்லாம் ஒரு மாயத் தோற்றம் மற்றும் அது ஒரு மாய உலகம் என்பதும், வெளியே இருந்து பார்க்கும் நமக்குத் தெரிவது போன்று, அந்த வீடியோ கேம் விளையாட்டை மும்முரமாக விளையாடும் அந்த உண்மைக் குழந்தைக்கு அந்த கதாநாயகன் கதாபாத்திரம் வீடியோ கேம் விளையாட்டில் மூழ்கி இருக்கும்வரை, அவைகள் அனைத்தும் உண்மையாகவே இருக்கும்.

ஆனால், அந்த வீடியோ கேம் கேரக்டர் என்பது, கம்ப்யூட்டருக்கு வெளியே இருந்து விளையாடும் உண்மைக் குழந்தையின் உண்மை வாழ்க்கை இல்லை.

இதுப்போலத்தான், அந்த தூய அறிவாகிய இறைவன் இந்த உலகம் என்ற வீடியோ கேம் விளையாட்டை உருவாக்கி விளையாடிக் கொண்டிருக்கின்றான். இதிலே, தன்னை (அறிவு) என்பதை மறந்து, மனமாக நினைக்கும்வரை இந்த உலகம் என்பது உண்மையாக இருப்பது போன்றே காணப்படும். ஆனால், விவேகத்தினால் விழித்துக் கொண்டவுடன், அது ஒரு மாய விளையாட்டு என்பது, நம் அறிவுக்கு புரிய வரும். அப்போது மட்டுமே, இந்த உலகம், இந்த உலகத்தில் வாழும் உருவங்கள் என எல்லாமே மாயத்தோற்றம் என்பதும் புரியும்.

## மூன்றாவது வரம் (20–29)

---------------------------

### மரணத்திற்குப்பிறகு மனிதனின் நிலை: 20 – 22

இந்த உபநிஷதத்தின் மையக்கருவான மரணத்திற்குப் பிறகு மனிதனின் நிலை பற்றிய உபதேசம் இங்கிருந்து தொடங்குகிறது.

येयं प्रेते विचिकित्सा मनुष्ये-
ऽस्तीत्येके नायमस्तीति चैके ।
एतद्विद्यामनुशिष्टस्त्वयाऽहं
वराणामेष वरस्तृतीयः ॥ २० ॥

யேயம் ப்ரேதே விசிகித்ஸா மனுஷ்யே
ஸ்தீத்யேகே நாயமஸ்தீதி சைகே |
ஏதத்வித்யாமனுசிஷ்டஸ்த்வயா(அ)ஹம்
வரணாமேஷவரஸ்த்ருதீய || 20 ||

பொருள்:

மரணத்திற்குப் பிறகு மனிதன் வாழ்கிறான் என்று சிலரும், இல்லை என்று சிலரும் கூறுகின்றனர். இந்தச் சந்தேகத்தை உன்னிடம் கேட்டுத் தெளிவுபெற விரும்புகிறேன். நான் கேட்க விரும்பும் மூன்றாவது வரம் இதுவே.

**எமதர்மனின் பதில்**

देवैरत्रापि विचिकित्सितं पुरा
न हि सुविज्ञेयमणुरेष धर्मः ।
अन्यं वरं नचिकेतो वृणीष्व
मा मोपरोत्सीरति मा सृजैनम् ॥ २१॥

தேவைரத்ராபி விசிகித்ஸிதம் புரா
ந ஹி ஸுவிஜ்ஞேயமணுரேஷ தர்ம |
அன்யம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ
மா மோபரோத்ஸீரதி மா ஸ்ருஜைனம் || 21 ||

பொருள்:

நசிகேதா! இந்த விஷயத்தில் தேவர்களுக்கும் கூட சந்தேகம் உள்ளது. இந்த விஷயம் மிகவும் நுண்மையானது. எளிதாக அறியக்கூடியதல்ல. எனவே வேறு வரம் கேட்டுக்கொள். என்னைக் கட்டாயப்படுத்தாதே, விட்டுவிடு.

**நசிகேதனின் பதில்**

देवैरत्रापि विचिकित्सितं किल
त्वं च मृत्यो यन्न सुज्ञेयमात्थ ।
वक्ता चास्य त्वादृगन्यो न लभ्यो
नान्यो वरस्तुल्य एतस्य कश्चित् ॥ २२॥

தேவைரத்ராபி விசிகித்ஸிதம் கில
த்வம் ச ம்ருத்யோ யன்ன ஸுஜ்ஞேயமாத்த |
வக்தா சாஸ்ய த்வாத்ருகன்யோ ந லப்யோ
நான்யோ வரஸ்துல்ய ஏதஸ்ய கச்சித் || 22 ||

பொருள்:

இந்த விஷயத்தில் தேவர்களுக்கும் சந்தேகம் உள்ளதா! எமதர்மனே! இதனை எளிதாக அறிய முடியாது என்று நீயும் சொல்கிறாய். ஆனால் இதை உபதேசிப்பதற்கு உன்னைப்போல் வேறொருவர் கிடைக்க மாட்டார். வேறு எந்த வரமும் இதற்கு இணையாகவும் ஆகாது.

**நசிகேதனைத் திசைதிருப்ப எமதர்மனின் முயற்சி:**

<u>**ஸ்லோகங்கள் – (23 – 25)**</u>

शतायुषः पुत्रपौत्रान्वृणीष्वा
बहून्पशून् हस्तिहिरण्यमश्वान् ।
भूमेर्महदायतनं वृणीष्व
स्वयं च जीव शरदो यावदिच्छसि ॥ २३॥

சதாயுஷ: புத்ர பௌத்ரான் வ்ருணீஷ்வ
பஹூன் பசூன் ஹஸ்தி ஹிரண்யமச்வான் |
பூமேர் மஹதாயதனம் வ்ருணீஷ்வ
ஸ்வயம் ச ஜீவ சரதோ யாவதிச்சஸி || 23 ||

பொருள்:

நூறாண்டு ஆயுள் உள்ள மகன்களையும் பேரன்களையும் கேள். ஏராளம் பசுக்கள், யானை, பொன், குதிரை போன்றவற்றைக் கேள். பூமியில் பரந்த அரசைக் கேள். நீயும் எவ்வளவு விரும்புகிறாயோ அதுவரை வாழ்ந்துகொள்.

एतत्तुल्यं यदि मन्यसे वरं
वृणीष्व वित्तं चिरजीविकां च ।
महाभूमौ नचिकेतस्त्वमेधि
कामानां त्वा कामभाजं करोमि ॥ २४॥

ஏதத் துல்யம் யதி மன்யஸே வரம்
வ்ருணீஷ்வ வித்தம் சிரஜீவிகாம் ச |
மஹாபூமௌ நசிகேதஸ்த்வமேதி
காமானாம் த்வா காமபாஜம் கரோமி || 24 ||

பொருள்:

நசிகேதா! இதற்கு இணையான வரம் என்று நீ எதையாவது கருதினால் அதைக் கேள். செல்வம், நீண்ட ஆயுள், பரந்த பூமியில் அதிபதியாக வாழ்க்கை என்று எதை வேண்டுமானாலும் கேள். உன்னை எல்லா ஆசைகளையும் அனுபவிப்பவனாகச் செய்கிறேன்.

ये ये कामा दुर्लभा मर्त्यलोके
सर्वान् कामाँश्छन्दतः प्रार्थयस्व ।
इमा रामाः सरथाः सतूर्या
न हीदृशा लम्भनीया मनुष्यैः ।
आभिर्मत्प्रत्ताभिः परिचारयस्व
नचिकेतो मरणं माऽनुप्राक्षीः ॥ २५॥

யே யே காமா துர்லபா மர்த்யலோகே
ஸர்வான் காமான்ச் சந்தத: ப்ரார்த்தயஸ்வ |
இமா ராமா: ஸரதா: ஸதூர்யா
நஹீத்ருசா லம்பனீயா மனுஷ்யை: |
ஆபிர்மத்ப்ரத்தாபி: பரிசாரயஸ்வ
நசிகேதோ மரணம் மானுப்ராக்ஷீ: || 25 ||

பொருள்:

நசிகேதா! மானிட உலகில் அடைதற்கரிய ஆசைகள் எவையெவை எல்லாம் உண்டோ? அவைகள் அனைத்தையும் உன் விருப்பம்போல கேட்டு பெற்றுக்கொள்! உனக்கு சாரதிகளுடன் கூடிய தேர்களைத் தருகிறேன். இசைஞானம் கொண்ட வாத்தியக் கலைஞர்களைத் தருகிறேன். ஆண்களை மயக்குகின்ற தேவலோகப் பெண்களைத் தருகிறேன். இத்தகைய தேவலோகப் பெண்கள் மனிதர்களுக்குக் கிடைக்கக் கூடியவர்கள் அல்லவே! ஆகவே, நான் தருகின்ற இவர்களால் நீ வேண்டிய பணிவிடைகளை எல்லாம் பெற்றுக்கொள். ஆனால், மரணத்தைப்பற்றி மட்டும் கேட்காதே.

**நசிகேதனின் ஆசையின்மை: 26 – 29**

**—————————————————————**

श्वोभावा मर्त्यस्य यदन्तकैतत्
सर्वेंद्रियाणां जरयन्ति तेजः ।
अपि सर्वं जीवितमल्पमेव
तवैव वाहास्तव नृत्यगीते ॥ २६॥

ச்வோபாவா மர்த்யஸ்ய யதந்த கைதத்
ஸர்வேந்த்ரியாணாம் ஜரயந்தி தேஜ: |
அபி ஸர்வம் ஜீவிதமல்பமேவ
தவைவ வாஹாஸ்தவ ந்ருத்ய கீதே || 26 ||

பொருள்:

மரணதேவனே! நீ கூறுகின்ற இன்பங்கள் அனைத்தும் நிலையற்றவைகள். மேலும், அவைகள் மனிதனுடைய புலன்கள் அனைத்தின் ஆற்றலையும் வீணாக்குகின்றன.

வாழ்க்கையோ குறுகியது. எனவே நீ சொன்ன யானைகள், குதிரைகள், பெண்கள், ஆடல், பாடல்கள் என எல்லாம் உன்னிடமே இருக்கட்டும். இந்த உலகின் இன்பங்கள் எதுவும் நிலையற்றவைகள். அதாவது, உலகப் பொருட்களிலிருந்து கிடைக்கும் இன்பங்கள் எதுவும் நிலையாக இருக்காது. அந்த இன்பங்களைத் தொடர்ந்து எப்போதும் துன்பங்களும் கூடவே வரும். அது மட்டுமல்ல, இன்பங்களை அனுபவிக்க, அனுபவிக்க அது அவர்களது ஆற்றல்களை எல்லாம் விரையம் செய்து, அவர்களது புலன்களையும், மனதையும் கெடுத்து அழிக்கின்றன.

அதாவது, நம்மையும் அழித்து, நமக்கு துன்பங்களையும் விளைவிக்கின்ற இந்த உலக இன்பங்களை ஒருபோதும் நாடக் கூடாது. காரணம் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஆயுள் மிகவும் குறுகிறது. இறைவன் தந்துள்ள இந்தக் குறுகிய ஆயுளை அற்ப சுகங்களில் செலவிடக்கூடாது. இத்தகைய அரிதான மனிதப்பிறவியில், கிடைத்திருக்கின்ற வாழ் நாட்களை எல்லாம் உயர் லட்சியத்தை அடைவதற்காகவே நாம் பயன்படுத்த வேண்டும். இதனைப் புரிந்துகொண்டு, எமதர்மன் அளித்த சுகபோகங்களை மறுத்துவிட்டான் நசிகேதன்.

न वित्तेन तर्पणीयो मनुष्यो
लप्स्यामहे वित्तमद्राक्ष्म चेत्त्वा ।
जीविष्यामो यावदीशिष्यसि त्वं
वरस्तु मे वरणीयः स एव ॥ २७॥

ந வித்தேன தர்ப்பணீயோ மனுஷ்யோ
லப்ஸ்யாமஹே வித்தமத்ராக்ஷ்ம சேத்வா |
ஜீவிஷ்யாமோ யாவதீ சிஷ்யஸி த்வம்
வரஸ்து மே வரணீய: ஸ ஏவ || 27 ||

பொருள்:

மனிதன் பணத்தால் திருப்தி அடையக்கூடியவன் அல்ல. உன்னை பார்த்ததால் வேண்டிய செல்வம் பெறுவது உறுதி. நீ ஆளும்வரை என் ஆயுளுக்கும் பஞ்சமில்லை. எனவே நீண்ட ஆயுளோ, அளவற்ற செல்வமோ எதுவும் எனக்கு வேண்டாம். நான் கேட்கத் தக்க வரம் அது ஒன்றே.

பத்து ரூபாய் கிடைத்தால், இன்னும் ஒரு நூறு ரூபாய் இருந்தால் நன்றாக இருக்கும் என தோன்றும். அவ்வாறு நூறு ரூபாய் கிடைத்துவிட்டாலோ, இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால் சந்தோஷமாக இருக்கும் என்று தோன்றும். இவ்வாறு, மனதின் ஆசைகளுக்கு அளவே இல்லை. ஆசைகள் எப்போதும் வளர்ந்துகொண்டே செல்வது எல்லோருக்கும் இருக்கின்ற எதார்த்தமான ஆசை என்றாலும், மனிதனுக்கு பணத்தின்மீது உள்ள ஆசை அவ்வளவு எளிதில் அடங்கவே அடங்காது.

பொதுவாக, மனிதனின் எல்லா ஆசைகளும் மகிழ்ச்சிக்காகவே உள்ளது. உண்மையில் மகிழ்ச்சிக்காக மட்டுமே ஒவ்வொரு ஆசையின் குறிக்கோள் இருக்கும். இதிலே, எத்தனை விதமான ஆசைகள் வந்தாலும் அதன் இலக்கு என்ன என்பதை நாம் சரியாக அறிந்துக் கொண்டோம் என்றால், உண்மை புரியவரும், உண்மையில் அந்த இலக்கு மகிழ்ச்சி.

ஆனால், நாம் மகிழ்ச்சிதான் நம் இலக்கு என்பதை மறந்துவிட்டு, மற்ற விசயங்களைன் வாயிலாக அதே மகிழ்ச்சியை தேடுகின்றோம். அது பணத்தில் கிடைக்கும், பதவியில் கிடைக்கும் அல்லது உத்தியோகத்தில் கிடைக்கும் என்று கண்படி, மனம் போன போக்கில் அலைகின்றோம். இதில் எல்லாம் ஆசைகளும் நம்முடைய ஒரே இலக்கான மகிழ்ச்சியை நோக்கி மட்டுமே அழைத்துச் செல்லும் என்று எதிப்பார்க்கின்றோம்.

ஆனால், இதில் எந்த ஆசை நம்மை உண்மை இலக்காகிய மகிழ்ச்சியை நோக்கி அழைத்துச் செல்கின்றது? அத்தகைய ஆசையின் தன்மை என்ன? இதைப் பற்றி நாம் என்றாவது யோசித்திருக்கிறோமா?

இத்தகைய ஆசைகள் எல்லமே நாளை வரப்போகின்ற மகிழ்ச்சியை மட்டுமே குறிக்கிறது. உண்மையில், மகிழ்ச்சி என்பது நம்மிடம் இப்போது இல்லை. அதுதானே உண்மை. ஆகவே, நன்றாக யோசித்துப் பாருங்கள். இப்போது நாம் மகிழ்ச்சியாக இருக்கின்றோமா? என்றால், இல்லை.

ஆனால், நாம் அவ்வாறு வெளியே தேடும் மகிழ்ச்சி ஒருபோதும் நாளை வருவது இல்லை. அது இப்போதே இந்த விநாடியே இருக்க வேண்டும். அதாவது, எப்போதும் மகிழ்ச்சி இருக்க வேண்டும். அதுவே, உண்மையான மகிழ்ச்சி. அவ்வாறு மகிழ்ச்சியுடன் எப்போதும் இருக்கும் ஒருவனுக்கு எங்கிருந்து ஆசைகள் வரும்? ஆம்! **"ஆசைகள் இருந்தால் மகிழ்ச்சி இருக்காது. மகிழ்ச்சி இருந்தால் ஆசைகள் இருக்காது"** இந்த உண்மையை நாம் என்று உணர்கின்றோமோ? அப்போது மட்டும்தான் ஆசைகள் என்பது நம்மை ஏமாற்றும் **மாயை** என்பதும் புரியவரும்.

இந்த உண்மையை நன்கு உணர்ந்து வைத்துக்கொண்ட நசிகேதன், எமதர்மன் கொடுத்த அத்தனை செல்வத்தை அனுபவித்தாலும், அதன்விளைவு என்னமோ ஒன்றாகத்தான் இருக்கும். அதாவது, அதன் வாயிலாக அவன் எதிர்ப்பார்க்கும் உண்மையான மகிழ்ச்சி உண்டாகப்போவதில்லை. அதன் மூலம் அவனுக்கு திருப்தி கிடைக்கப் போவதில்லை. எனவே, அவ்வாறு மாயையாகிய மன மயக்கத்தை தருகின்ற அற்ப ஆசைகளைக் கொண்ட மகிழ்ச்சியை நாடிப் பலனில்லை.

அவரவர்கள் செய்த புண்ணிய, பாவங்களுக்கு ஏற்ப அவர்களது ஆயுளை நிர்ணயிப்பவன் எமதர்மன் என்றாலும், அவனே நசிகேதனைப் பார்த்து, உனக்கு வேண்டிய காலம் வரை உன் வாழ்க்கையை வாழ்வதற்கான வரத்தை கேள்! என்றும் கூறினான். ஆனால், நசிகேதன் புத்திசாலி என்பதினால், அவனது அந்த ஆயுட்காலம் எப்போது முடிந்தாலும், அதன் பிறகு, இறக்கத்தான் வேண்டும். ஆகவே, நீண்ட ஆயுளாலும் அவனுக்கு பலன் இல்லை. ஆகவே, அத்தகைய வரங்களினால் அவனுக்கு ஆகப்போவதும் ஒன்றுமில்லை. எனவே, தீர்மானமாக தனக்கு இந்த மரணத்தைப்பற்றி மட்டுமே, விடை தெரிந்தாக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கின்றான் நசிகேதன். உண்மையில், அது மட்டுமே அவனுக்கு வேண்டும் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

अजीर्यताममृतानामुपेत्य
जीर्यन्मर्त्यः क्वधःस्थः प्रजानन् ।
अभिध्यायन् वर्णरतिप्रमोदान्
अतिदीर्घे जीविते को रमेत ॥ २८॥

அஜீர்யதாமம்ருதானாமுபேத்ய
ஜீர்யன் மர்த்ய: க்வத ஸ்த: ப்ரஜானன் |
அபித்யாயன் வர்ணரதி ப்ரமோதான்
அதிதீர்கே ஜீவிதே கோ ரமேத || 28 ||

பொருள்:

மூப்பற்றவர்களும் மரணமற்றவர்களுமான தேவர்கள்கூட உங்களை அடைந்து உண்மையை அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில், நானோ மூப்பும், மரணமும் உள்ள கீழ் உலகில் வாழ்பவன். எனக்கு இந்த ஆடல், பாடல்கள், பொன், பொருள், பெண் என இவைகள் வாயிலாக உண்டாகும் உடல் சுகம் என்பது, மரணத்திற்கு பிறகு கிடைக்காது அல்லவா? ஆகவே, எனக்கு இதுப்போன்ற அழியக்கூடிய ஆசைகள் இல்லை.

ஆகவே, என்றுமே அழியாத இன்பம் மட்டுமே எனக்கு வேண்டும். ஆகவே, தாங்கள் என்னதான் எனக்கு நீண்ட ஆயுள் தந்தாளும், நான் அதில் ஆசை வைக்க மாட்டேன் என்று திடமாக நிற்கின்றான் நசிகேதன்.

வசிப்பவன்; பாடல், உடல்சுகம் முதலியவற்றால் உண்டாகும் இன்பம் என்ன என்பதைச் சிந்தித்து அறிந்தவன். எனவே எவ்வளவுதான் நீண்ட ஆயுள் தந்தாலும் அந்த வாழ்க்கையில் நான் ஆசை வைப்பேனா?

தேவர்கள் மூப்பற்றவர்கள், மரணமற்றவர்கள் என்று கூறப்படுகின்றனர். அதாவது நம்முடன் ஒப்பிடும்போது அவர்கள் இன்னும் நீண்ட காலம், மிக, மிக நீண்ட காலம் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களும் அந்தக் காலம் முடிந்ததும், மீண்டும் பிறப்பிற்கு உள்ளாகியே தீர வேண்டும். அந்த வகையிலே, நான் உங்களை அடைந்து உண்மையை அறிந்துகொண்டேன் என்று நசிகேதன் குறிப்பிடுவது இதைத்தான்.

தேவர்களே ஒருநாள் மரணத்தைத் தழுவ வேண்டுமானால், மனிதனின் ஆயுள் எவ்வளவு சிறியது. அதனை இந்த நிலையற்ற உலக இன்பங்களில் செலவிடுவேனா? என்பது நசிகேதனின் கேள்வி. ஆகவே, அவன் மரணத்திற்குப் பின்னால் என்ன உள்ளது என்பதை மட்டுமே அறிய விரும்புகிறான்.

यस्मिन्निदं विचिकित्सन्ति मृत्यो
यत्साम्पराये महति ब्रूहि नस्तत् ।
योऽयं वरो गूढमनुप्रविष्टो
नान्यं तस्मान्नचिकेता वृणीते ॥ २९॥

யஸ்மின்னிதம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ
யத்ஸாம்பராயே மஹதி ப்ரூஹி நஸ்தத் |
யோயம் வரோ கூடமனுப்ரவிஷ்ட்டோ
நான்யம் தஸ்மான்னசிகேதா வ்ருணீதே || 29 ||

பொருள்:

மரண தேவனே! எந்த விஷயத்தில் தேவர்கள் முதல் சாதாரண மனிதன் வரை சந்தேகம் உள்ளதோ? அந்த மறு உலக விசயத்தை மட்டுமே நான் அறிய ஆவலாக உள்ளேன். எதனை அறிந்தால், எல்லாம் அறிந்துக் கொண்ட பெரும் பயன் கிடைக்குமோ? மேலும், எந்த உண்மை எல்லோராலும் மிக, மிக ரகசியமாக வைக்கப்பட்டுள்ளதோ? அதை மட்டுமே நான் தெரிந்துக்கொள்ள வேண்டும். வேறு எந்த வரமும் எனக்கு வேண்டாம்.

॥ इति काठकोपनिषदि प्रथमाध्याये प्रथमा वल्ली ॥

**(இதி காடக உபநிஷதி ப்ரதம அத்யாயே ப்ரதமா வல்லீ)**

இவ்வாறு கட உபநிஷதத்தில் முதல் பகுதியின் **முதல் அத்தியாயம்** நிறைவுறுகிறது.

## முதல் அத்தியாயம்: ஒரு கண்ணோட்டம்

———————————————————————————

### நசிகேதன்

உயர் உண்மையை நாடுபவர்களுக்கு நசிகேதனின் கதை ஒரு கலங்கரை விளக்கம். அதாவது, உயர் உண்மையை நாடுபவர்களிடம் இருக்க வேண்டிய சில அடிப்படை குணங்கள் நசிகேதனிடம் இருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது.

முதலாவதாக, அவனிடமுள்ள **சிரத்தை**. அந்த நம்பிக்கை வெறும் வெற்று மூட நம்பிக்கை அல்ல. அவனிடமுள்ள அந்த நம்பிக்கை என்பது, சாஸ்திரத்தின் மீதும், சத்குருவின் மீதும் உள்ள விசுவாசத்துடன் கூடிய நம்பிக்கை. மேலும், அந்த நம்பிக்கையைச் சாதிக்கின்ற செயல்திறன்.

இரண்டாவது **சுய மதிப்பு**. தனது மதிப்பு நசிகேதனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அதாவது, தன்னைப்பற்றி அவன் நன்றாக அறிந்திருந்தான். சிரத்தை மிக்கவனான எனக்குச் சொல் என்று தெளிவாகவே அவன் சொல்வதிலிருந்து, அவனது சுயமதிப்பு மற்றும் சுய மரியாதை எப்படிப்பட்டது என்பதை நம்மால், நன்கு புரிந்துக்கொள்ள முடிகிறது.

உண்மையான சிரத்தை உள்ளவரிடம் சொன்னால், அது வீண் போகாது. ஏனெனில், அதை அவன் செயல்படுத்துவான். தன்னால் செயல்படுத்த முடிந்ததை மட்டுமே அவன் கேட்பான். அவ்வாறு, கேட்டதை கட்டாயம் நடைமுறையில் செயல் படுத்துவான். இவ்வாறு உயரிய பன்பு நலன்கள் தன்னிடம் இருப்பதை நன்றாகவே நசிகேதன் அறிந்து வைத்திருந்தான். ஆகவே, அதன்வாயிலாக, எமன் சொல்வதைக் கடைபிடிக்கின்ற திறமை தன்னிடம் இருப்பதை நசிகேதன் நன்றாக உணர்ந்திருந்தான். இதுவே, **சுய மதிப்பு** ஆகும்.

அது மட்டுமின்றி, செல்வம், பதவி, பெண் என்று எந்த ஒரு விஷயங்களைக் காட்டி. அவனை திசைதிருப்ப எமதர்மன் முயற்சித்தபோதும், அவன் இந்த இன்பம் என்ன என்பதை நன்றாக சிந்தித்து தெளிந்திருந்தான். ஆதலால் மட்டுமே, அவனால், அவ்வளவு திடமாகவும், தைரியமாகவும் எமதர்மனிடம் பேசமுடிந்தது.

ஆனால், பெருபாலானவர்களுக்கு தன்னுடைய சுயமதிப்பு என்ன என்பதே தெரியாது. அவர்கள் தங்களது சுயமதிப்பை கொண்டுபோய் தன்னைப் பற்றிய அகங்காரத்துடன் சேர்த்துக் குழப்பிக் கொள்வார்கள். அதாவது, தன்னிடம் இல்லாத திறமைகளை இருப்பதாகக்

காட்டிக் கொள்வார்கள். ஆக, இவர்களது பலவீனங்களை மறைப்பதற்காக போடுகின்ற முகமூடியே இவர்களிடம் அகங்காரமாக வெளிப்படும்.

அத்தகைய ஆணவம் எனும் அகங்காரம் கொண்டவர்கள் பிறரைக் கீழாகப் பார்க்கும் நிலையில் இருப்பர்கள். அதுவே, உண்மையான தன்னைப்பற்றிய சுய மதிப்பு உள்ளவர்கள் அனைவரையும் சமமாகப் பார்ப்பார்கள். இவர்கள் இருவருக்கும் உள்ள வித்தியாசமே சுயமதிப்பு எது? ஆணவம் எது? என்பதே ஆகும். எனவே, தன்னைப் பற்றிய தன்னறிவு, அதன் விளைவாக வருகின்ற சுய மதிப்பு ஆகிய இந்த இரண்டும் உயர் வாழ்க்கைக்கான **விழிப்புணர்வு** என்பதாகவே பார்க்க வேண்டும்.

அடுத்தது, உண்மையை ஏற்றுக்கொள்ளல் மிகவும் முக்கியம். தனது தந்தையான வாஜசிரவஸ் நசிகேதனை மரண தேவனிடம் அனுப்பத் துணிந்தபோதும்கூட, அவன் கோபமோ, ஆத்திரமோ அடையாமல், அதனை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆழ்ந்து சிந்திக்கிறான். அந்த வகையிலே, அந்தச் சூழ்நிலை கொண்டு வருபவற்றை, அவைகள் நல்லவையானாலும், கெட்டவையானாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவனாக நசிகேதன் இருந்தான் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இதிலிருந்து, உயர் உண்மையை நாடுபவன் ஒருபோதும், தன்னுடைய சூழ்நிலைகளை மாற்றியமைக்க முயற்சி செய்யக் கூடாது. எத்தகைய சூழ்நிலை வந்தாலும், உடனே மனத்தை உள்ளே திருப்பி அதனை அகவளர்ச்சிக்கான ஒரு படியாக மாற்றும் திறமையாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தது, அவனிடம் காணப்பட்ட துணிச்சல். எமனையே நேரில் சந்தித்துப் பேசுகின்ற துணிச்சலை நசிகேதனிடம் காண்கிறோம். நாம் செல்கின்ற உயர் பாதையில், நம்மிடம் மடியில் கனம் இல்லை! ஆகவே, பாதையில் பயம் இல்லை! என்பதினால், அவன் செல்லும் பாதையில் எத்தனை இடர்கள் வந்தாலும், அத்தனையையும் எதிர்கொண்டு, தன் இலட்சியத்தை மட்டுமே அடைவதற்கான, சாதிப்பதற்கான துணிச்சல் உள்ளவனாக நசிகேதன் இருப்பதையும் பார்க்க முடிகின்றது.

அடுத்து அவனிடம் இருந்த உயர் பண்பு ஆசையின்மை. உயர் உண்மையை நாடுபவனிடம் உலகைப்பற்றிய, அதன் சுகபோகங்களைப் பற்றிய தெளிவான கருத்து இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அவன் தனது உயர் இலட்சியத்தை அடைய முடியும்.

உலகம், அதன் சுகபோகங்கள் என்றால் என்ன? அவற்றிற்கு வாழ்க்கையில் எந்த அளவு இடம் கொடுக்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்று. உலகின் சுகங்கள்

என்று நம்மால் பார்க்கப்படுகின்ற அத்தனையையும் எமதர்மன் கொடுத்த பிறகும், நசிகேதன் அவற்றை உதறிவிட்டு, தனது இலட்சியத்திலேயே குறியாக இருப்பதைப் பார்க்கின்றோம்.

ஏனெனில், அத்தகைய சுகபோகங்களின் நிலையாமையை அவன் நன்கு சிந்தித்து அறிந்திருக்கிறான். எனவே, உண்மையை நாடுபவனுக்கு உலகின் கவர்ச்சிகள் எதனாலும் நிலைகுலையாத மனம் இருக்க வேண்டும் என்றும் பார்க்க முடிகின்றது.

## மூன்று வரங்கள்

நசிகேதன் எமனிடம் கேட்கின்ற மூன்று வரங்களில், அவனிடமுள்ள ஒரு தெளிவான, படிப்படியான இலட்சிய நாட்டத்தைக் காண முடிகின்றது. அதாவது, நாம் ஒவ்வொருவரும் உயர் வாழ்க்கையை, ஆன்மீக வாழ்க்கையை நாடுகிறோம் என்பதற்காக, இந்த உலகின் உண்மைத் தன்மை மற்றும் சமுதாய உறவுகள் ஆகியவற்றின்மீது உள்ள ஈஸ்வரத்தன்மையை உணர்ந்துக் கொண்டால் போதும், இவைகள் எதியுமே நாம் உதாசீனம் செய்து, தூக்கி எறிய வேண்டும் என்பதில்லை. நமக்கு அவைகளைப் பற்றிய புரிதல்கள் இருந்தால் மட்டும் போதும்.

நசிகேதனின் **முதல் வரம்** தந்தை தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது. இது குடும்பத்தில் ஒரு நல்ல உறவு நிலவ வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. பெற்றோருடனும், குடும்பத்தில் உள்ளவர்களிடமும் சரியான உறவு நிலவ வேண்டும் என்ற ஞானம் அவனிடம் இருப்பதைக் காட்டுகின்றது.

அடுத்து அவன் கேட்ட **இரண்டாம் வரம்** யாகம் பற்றியது. யாகங்களின் மூலம் இயற்கை சக்திகளுடன் நாம் தொடர்புகொள்கிறோம். நமக்கு வேண்டியவற்றை இயற்கை சக்திகளின்மூலம் சாதித்துக் கொள்கிறோம். அதாவது, இயற்கையைப் பேணுதல், சமுதாயத்துடனும் இயற்கையுடனும் இயைந்து வாழுதல் என எல்லாவற்றையும் நாம் கற்றிருக்க வேண்டும் என்பதையும் அவன் அறிந்து வைத்திருந்தான் என்று பார்க்க முடிகின்றது.

மேலும், அவன் கேட்ட **மூன்றாம் வரம்** உயர் உண்மையைப்பற்றியது. அதன் வாயிலாக அனைவருக்கும் ஆனந்தம் வேண்டும் என்பதை அவன் எதிர்ப்பார்க்கின்றான் என்பதினால், இவன் குடும்பத்துடனும், சமுதாயத்துடனும், இந்த இயற்கையுடனும் இணைந்த நல்ல உறவை வைத்துக்கொண்டே, உயர் ஆன்மீக உண்மைகளை அறிய வேண்டும், அவைகளை நாம் அடைய வேண்டும் என்பதை, அவன் கேட்ட இந்த மூன்று வரங்களும் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

# பகுதி –1 (அத்தியாயம் – 2)

## 1 – 2. பிரித்தறிந்து வாழ்!

மரணத்திற்குப் பிறகு மனிதனின் நிலை என்ன? என்று கேட்டான் நசிகேதன். பலவிதங்களில் சோதித்து அவனது தகுதியை அறிந்த பிறகு, எமதர்மன் சொல்லத் தொடங்குகிறான். மரணத்திற்குப் பின்னால் என்ன உள்ளது? என்பதைப் பற்றி அறிய வேண்டுமானால், மரணத்தை எதிர் கொள்ள வேண்டும்.

இறக்கின்ற ஒவ்வொருவரும் மரணத்தை எதிர் கொள்வதில்லையா?

இல்லை. பெரும்பாலோரும் மரணம் வருவதற்கு முன்பாக, பயத்திலேயே செத்து விடுகின்றனர். எனவே, அவர்கள் மரணத்தை எதிர்கொள்வதில்லை.

மரணத்தை எதிர்கொள்வது எப்படி?

வாழ்கையில் கவனம் செலுத்துவதன்மூலம். இந்த வாழ்க்கையைச் சிறப்பாக, உரிய முறையில் வாழ்பவனே இறைநிலையை அடைகிறான் (வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்) என்கிறார் தெய்வப் புலவர்.

வாழ்க்கை என்பது நம் முன் பல அனுபவங்களைக் கொண்டு வரும், பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கும், பலவிதமான வாய்ப்புகளைத் தரும். ஆனால், அத்தகைய சூழ்நிலைகளில் நமது லட்சியத்திற்கு முரணான விசய, சுகங்களில் பற்று வைக்காமல், நம்முடைய உண்மையான குறிக்கோளுக்கு சாதகமானவைகளை ஏற்றுக் கொண்டு, அதற்கு விரோதமான தடைகளை விலக்கி வாழ்வதற்கு அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு, நாம் வாழும் வாழ்க்கையை சரியாகப் பிரித்தறிந்து வாழ்வதையே **"அத்யாத்ம யோகம்"** அல்லது **'ஆத்மவித்யை'** என்று இந்த இரண்டாவது அத்தியாயத்தில் விளக்கப் போகின்றான் எமதர்மன். இவ்வாறு, ஆத்ம வித்யையை கற்றுக்கொண்டு வாழத் தெரிந்தவனால் மட்டுமே மரணத்தை எதிர்கொள்ள முடியும். மரணத்திற்கு அப்பால் உள்ளது என்ன? என்பதையும் அவனால் அறிய முடியும். எனவே, நாம் வாழும் இந்த வாழ்க்கையின் ஓர் அற்புதமான உன்னதத்தை விளக்கத் தொடங்குகிறான் எமதர்மன்.

**வாழ்க்கையின் இரண்டு கோணங்கள் (1–6)**
**————————————————————————————**

பொதுவாக, ஒருவனிடம் இருக்கின்ற செல்வத்தையும், அவனது படிப்பு, பதவி, உத்தியோகம் போன்றவைகளை வைத்தே அவனை எடைபோடுகிறோம். அதாவது, அவனிடமுள்ள வீடு, செல்வம், பதவி, அந்தஸ்து போன்ற புற வளர்ச்சிகளே அவனை நிர்ணயிக்கின்றன.

ஆனால், இதற்கு அப்பாற்பட்ட விசயம் ஒன்று நம் வாழ்க்கையில் உள்ளது. அதுதான் நாம் இந்த புறத்திலே உண்டாக்கி வைத்திருக்கும் வாழ்க்கை சூழல்களைப் போன்றே, நம்முடைய அகத்தில் ஒரு வாழ்க்கை சூழல் உள்ளது. அது நம் அகத்தில் நடக்க வேண்டிய அக வளர்ச்சி அல்லது உணர்வின் விரிவு என்று பார்க்கின்றோம்.

எந்த மனிதன் தன்னுடைய அகத்திலும் விரிந்து, வளர்கின்றானோ? அவனிடம் மட்டுமே **அன்பு, கருணை, விவேகம்** போன்ற பண்புகள் உண்டாகின்றன. அதாவது, இதுவரை தன் உடம்பு, தன் குடும்பம் என தன்னையும், தன்னை சார்ந்தவர்களை மட்டுமே நேசித்தவன், இனி தன் கிராமம், தன் நாடு, உலகம் என்ற இந்த பிரபஞ்சம் முழுவதையுமே தனதாகக் கண்டு, தானாகக் கண்டு நேசிக்கும் அளவிற்கு அவனது உணர்வு விரிகிறது.

இந்த அக வளர்ச்சிதான் உண்மையான வளர்ச்சி. புற வளர்ச்சிக்குக் காரணமாக அவனிடம் சேர்ந்தவைகள் எல்லாம் விலக நேர்ந்தால், அவன் பழையபடியே ஆகிவிட நேர்கிறது. ஆனால், அவன் அடைந்த அக வளர்ச்சியில் அவனுக்கு எதையும் இழக்க வேண்டிய அபாயம் இல்லை.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து**. – திருக்குறள்.

அதாவது, ஒருவன் இந்த ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது, அவனது இந்த பிறப்பிற்கு மட்டுமல்லாமல், அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது என்கின்றார். ஆக, நாம் கற்கும் கல்வியில் இப்படி ஒரு சிறப்பா என நாம் சிந்தித்துப் பார்த்தால், அது, இந்த உலகியல் கல்வியைப் பற்றி அவர் சொல்ல வரவில்லை. அது, நம்முடைய அகவளர்ச்சிக்கான கல்வியைப் பற்றி பேசுகின்றார். அதுதான் **ஆத்மவித்யா** அல்லது **ஆன்மவியல்** கல்வி என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

**அக, புற வளர்ச்சிகளுக்கான களம் உலகம்: 1–3**

**————————————————————————————**

அக வளர்ச்சி, புற வளர்ச்சி இரண்டிற்குமான களமாக உள்ளது உலகம். அதாவது, இந்த உலகம் இரண்டிற்கும் வாய்ப்பு தருகிறது.

अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेय-
स्ते उभे नानार्थे पुरुषँ सिनीतः ।
तयोः श्रेय आददानस्य साधु
भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥ १॥

அன்யச்ச்ரேயோ(அ)ன்ய துதைவ ப்ரேய
தே உபே நானார்த்தே புருஷம் ஸினீத: |
தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாது பவதி
ஹீயதே(அ)ர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே || 1 ||

பொருள்:

இங்கு மேலானது என்பது வேறு, சுகம் தருவது என்பது வேறு. அவைகள் இரண்டுக்கும் உள்ள வேறுபட்ட பலன்களைப் பற்றி அறிவதன் மூலம், மனிதன் அவைகளிடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டு, தன்னைப் பிணைக்கின்ற விசய, சுகங்களில் விவேகத்துடன் நடந்துக் கொள்ள வேண்டும். அதாவது, இதில், மேலானதை ஏற்றுக்கொள்பவனுக்கு நன்மைகள் உண்டாகிறது. சுகம் மட்டுமே தருவதை நாடுபவன் அவனது இலட்சியத்திலிருந்து வீழ்கிறான். உலகையும் அது தரும் சுகபோகங்களையுமே முடிவாகக் கொண்டு அவற்றைத் தேடுபவர்கள் பலர் உள்ளனர். ஆனால், அவைகள் தரும் சந்தோஷத்தை உண்மை என்று நம்பி ஏமாந்தவர்கள் மட்டுமே இவர்கள்.

ஆனால், தங்களது இலட்சிய பாதையில், சிலர் இவைகளைப் படிக்கற்கள் மட்டுமே என்று கண்டு, அவைகள் வாயிலாக உயர் லட்சியங்களை நாடுபவர்கள் நன்மையை அடைகின்றார்கள். சிலர் அறியாமையாயினால், ஆசை வயப்பட்டு, சுகம் என்று கருதும் சில விசய, சுகங்களின் வாயிலாக துயரத்தை அடைகின்றார்கள். ஆக, இவர்கள் இரு சாராரின் முன்னாலும் இந்த உலகம் உள்ளது. அதிலே, முன்னது புற வளர்ச்சிக்கு உதவுகிறது, மேலானது. பின்னது, உலகின் சுகங்கள், இவைகள் அனுபவிக்கின்ற அந்த நேரத்திற்கு அவனுக்கு இன்பத்தைத் தந்தாலும், அதன்முடிவில், அவனை துயரத்தில் ஆழ்த்துகின்றன.

அதுவே, ஆரம்பத்தில் உயர் இலட்சியங்கள் சிரமமாகவும், துன்பம் தருபவையாகவும் இருந்தாலும், அவைகள் முடிவில் அவனை பேரின்பத்தில் சேர்க்கின்றன. மேலோட்டமாக இன்பத்தை நாடுபவன் முடிவில் துன்பத்தில் ஆழ்கிறான் என்பதையே இந்த மந்திரம் கூறுகிறது. அவன் இலட்சியத்திலிருந்து வீழ்கிறான் என்றும் கூறுகிறது.

श्रेयश्च प्रेयश्च मनुष्यमेतः
तौ सम्परीत्य विविनक्ति धीरः ।
श्रेयो हि धीरोऽभि प्रेयसो वृणीते
प्रेयो मन्दो योगक्षेमाद्वृणीते ॥ २॥

ச்ரேயச்ச ப்ரேயச்ச மனுஷ்யமேத
தௌ ஸம்பரீத்ய விவினக்தி தீர: |
ச்ரேயோ ஹி தீரோபி ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயா மந்தோ யோகக்ஷமாத் வ்ருணீதே || 2 ||

பொருள்:

மேலான சுகம், சாதாரண சுகம் என இரண்டு விதமான சுகங்கள் மனிதனை அணுகுகின்றன. அறிவாளி அவைகள் இரண்டையும் ஆராய்ந்து, அவைகள் இரண்டையும் பாகுபடுத்திப் பார்த்து, இதிலே சாதாரண சுகம் தருவனவற்றை விட்டுவிட்டு மேலான சுகம் தருவனவற்றைத் தேர்ந்தெடுக்கிறான். ஆக, இவைகள் இரண்டும் நம் கையில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கே இரண்டு விசயங்கள் பார்க்கப்படுகின்றன. அவைகள் சிரேயஸ் மற்றும் பிரேயஸ் என்பனவாகும். இந்த சிரேயஸ் மற்றும் பிரேயஸ் என்பன இரண்டும், சுகம் தருகின்ற விஷயங்கள்தான் என்றாலும், இதிலே மேலான சுகம் என்றும், சாதாரண சுகம் என்றும் உள்ளது. அதாவது, ஒன்று 'புலனின்ப சுகம் தரும் விஷயங்கள். இவைகளை **'பிரேயஸ்'** என்கின்றோம். மற்றொன்று **'வாழ்வின் இறுதி நோக்கமான'** தன்னைப் பற்றிய உண்மையை உணருகின்ற நிலையைக் காட்டிக் கொடுக்கும் ஆத்மஞான விசயங்கள் இதை, **'சிரேயஸ்'** என்கின்றோம்.

இதிலே, **'பிரேயஸ்'** உடனடியான சுகம் தரும். இந்த சுகம் தற்காலிகமானதே. இருந்தாலும், இதுவே அநேகமாக எல்லோருக்கும் பிரியமான ஒன்றாகும். '**சிரேயஸ்**' என்ற சுகம் நீண்ட, கடின முயற்சிக்குப் பின் தான் பலன் தரும். இந்த சுகம் மட்டுமே நிரந்தரமானது என்றாலும், எல்லோருக்கும் இது அவ்வளவாகப் பிடிக்காது.

உதாரணமாக இளம் வயதில் பள்ளிக்குச் சென்று பாடங்களைப் படிக்காமல், ஊர் சுற்றி கொண்டிருக்கின்றவனுக்கு, இதிலே வருகின்ற தற்காலிகமான சுகம் **'பிரேயஸ்'** என்றாலும், அப்போதுக்கு அதனால், சுகம் உண்டானாலும், படிக்காத காரணத்தினால், பிற்காலத்தில் அவன் துன்பறுவான். ஆனால், இளமையில் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று கஷ்டப்பட்டு படிப்பவன் அப்போதைக்கு கஷ்டப்பட்டாலும், பிற்காலத்தில் சுகம் பெறுவான். இந்த சுகம் **'சிரேயஸ்'** என்பதினால், இதுவே மேலான சுகம். இதை நாம் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் ஒப்பிட்டு ஒரு கதையின் மூலமாகவே கண்டறியலாம்.

ஒரு மளிகைக் கடைக்கு நாய் ஒன்று வந்தது. அதைக் கண்ட அந்த கடைக்காரர் அதனை துறத்தியடித்தார். ஆனாலும், அந்த நாய் விடாமல், அவரது கடை முன்பகவே மீண்டும், மீண்டும் வந்து நின்றது. இது என்னடா பெரிய தொல்லையா போச்சுன்னு, அந்தக் கடைக்காரர் வெளிய வந்து பார்த்தால், அந்த நாய் வாயில ஒரு சீட்டும், பணமும் இருந்தது. கடைக்காரர் ஆச்சர்யமாகி அந்த சீட்டை எடுத்து அதில் உள்ள சாமான்களை போட்டு, அதற்கான பணத்தையும் எடுத்துக் கொண்டு, மீதி பணத்தையும் அதே பையில் நாய் கழுத்தில் மாட்டிவிட்டார்.

அதைப் பெற்றுக் கொண்ட நாய் திரும்பி நடக்க ஆரம்பித்தது. கடைக்காரருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. இது என்ன அதிசயம், இந்த நாய் சரியாக அவைகளை அவரகளிடம் கொண்டு சேர்க்கின்றதா? என்பதைக் காண ஆசைப்பட்டார். அதனால், அந்த கடைக்காரர் ஆச்சரியத்தினால், சுவாரசியமாகி நாய் பின்னாலே நடக்க ஆரம்பித்தார். அந்த நாய் தெருவை கடந்து மெயின் ரோட்டிற்கு வந்தது.
அப்போது ரெட் சிக்னல்.

அந்த நாய் ரோட்'டை கடக்காமல் நின்றது. அடுத்து, பச்சை லைட் விழுந்தவுடன் அந்த நாய் ரோட்டை கடந்தது. கடைக்காரருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை... அதன் பின்னாலேயே அதன் வீடு வரை செல்ல முடிவெடுத்தார். அந்த நாய் ஒரு பேருந்து நிறுத்தத்தில் நின்றது. ஒரு குறுப்பிட்ட பேருந்து வந்தவுடன் நாய் அந்த பேருந்தில் ஏறியது. கண்டக்டரும் நாய் வாயில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஒரு டிக்கெட் கொடுத்தார். இரண்டு நிறுத்தங்கள் கடந்து நாய் பேருந்தில் இருந்து இறங்கியது.

கடைகாரரும் அதன் பின்னாலேயே இறங்கினார். நாய் ஒரு தெருவை கடந்து ஒரு வீட்டின் முன் நின்று கதவை தட்டியது. கதவு திறந்து ஒரு ஆள் வந்தார்... நாயின் கழுத்தில் உள்ள பையை கழட்டி விட்டு நாயை அடித்தார். கடைக்காரர் ஓடி சென்று, ஐயா நிறுத்துங்க? ஏன் அடிக்கறீங்க?! அது எவ்வளவு பொறுப்பா கடைக்கு போயிட்டு, பொருட்களை எல்லாம் வாங்கிக் கொண்டு, சிக்னல் மதிச்சு, பஸ்ல டிக்கெட் எடுத்துகிட்டு வருது, அதைப் போய் அடிக்கறீங்களே? என்றார்.

அதற்கு, அந்த நாயின் எஜமானர் சொன்னார், இந்த நாய்க்கு கொஞ்சம் திமிறு கூடித்தான் விட்டது. கடைக்கு போகும்போதே வீட்டு சாவிய எடுத்துட்டு போகாம, இப்ப வந்து கதவ தட்டுது பாருங்க. இதற்கு நான் எஜமானனா? அல்லது இது எனக்கு எஜமானனா? என்று கடிந்துக்கொண்டு, எவ்வளவு திமிரு பாருங்க, இது என்னைப் போய் கதவை திறக்க வைக்குது பாருங்க! இந்த நாய்க்கு கொஞ்சம் கூட பொறுப்பே இல்லையென்று அவரிடமும் கடிந்துக் கொண்டார்.

**நீதி:** இந்த நாயைப் போன்றுதான் மனிதர்களாகிய நாமும், இந்த உலகத்தில் வேலை செய்யும் இடத்திலும், நம்முடைய வீட்டிலும் என, பெரும்பாலும் நம்முடைய வாழ்க்கையை இப்படித்தான் மற்றவர்களால் வழி நடத்தப்படுகின்றது. நாம் எவ்வளவுதான் இந்த சமுதாயத்திற்காக உழைத்தாலும், அவர்களுக்காகவே வாழ்ந்தாலும், அவர்களால் நாம் அங்கீகரிக்கப்பட முடியாதவர்களாகவே இருப்போம். எனவே, இந்த நிலையில் நாம் அந்த அற்ப மிருகம் போன்று இல்லாமல், நம்மிடம் உள்ள பகுத்தறிவைக் கொண்டு, நமக்கான வாழ்க்கையை, நாம் சரியாக வாழும்போது மட்டுமே, அதற்கான வாய்ப்பு திறக்கப்படுகின்றது.

ஆக, இந்த உலகம் எத்தனையோ வாய்ப்புகளை வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்கான அனைத்து சூழ்நிலைகளையும் உருவாக்குகிறது. ஆனால், நமது லட்சியம் என்ன? அந்த இலட்சியத்திற்கான பாதை எது? எத்தகைய சூழ்நிலையில் நான் எப்படி நடந்துகொண்டால், அது எனது இலட்சியத்தை அடைவதற்காகத் துணைப் புரியும் என்பதை மனத்தில் கொண்டு, நாம் இந்த ஆன்மீகப் பாதையில் பயணிக்க வேண்டும்.

ஆக, நமக்கு கொடுக்கப்பட்ட புத்தியினால், பகுத்தறிவினால், பிரித்தறிந்து வாழ்வது என்பது இதுவே ஆகும்.

स त्वं प्रियान्प्रियरूपांश्च कामान्
अभिध्यायन्नचिकेतोऽत्यस्राक्षीः ।
नैतां सृङ्कां वित्तमयीमवाप्तो
यस्यां मज्जन्ति बहवो मनुष्याः ॥ ३॥

ஸ த்வம் ப்ரியான் ப்ரியரூபாம்ச்ச காமான்
அபித்யாயன் நசிகேதோ த்யஸ்ராக்ஷீ |
ஸநதாம் ஸ்ருங்காம் வித்தமயீமவாப்தோ
யஸ்யாம் மஜ்ஜந்தி பஹவோ மனுஷ்யா || 3 ||

பொருள்:

நசிகேதா! நீயோ நன்றாகச் சிந்தித்து, செல்வங்களையும் அழகிய பெண்களையும் ஒதுக்கிவிட்டாய், எந்தப் பாதையில் பெரும்பாலான மனிதர்கள் உழல்கிறார்களோ? அது செல்வத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது. ஆனால், நீ அந்தப் பாதையை தேர்ந்தெடுக்கவில்லை.

**இறைநெறியும் உலகியலும்**

दूरमेते विपरीते विषूची
अविद्या या च विद्येति ज्ञाता ।
विद्याभीप्सिनं नचिकेतसं मन्ये
न त्वा कामा बहवोऽलोलुपन्त ॥ ४॥

தூரமேதே விபரீதே விஷூசீ
அவித்யா யா ச வித்யேதி ஜ்ஞாதா |
வித்யாபீப்ஸினம் நசிகேதஸம் மன்யே
ந த்வா காமா பஹவோலோகலுபந்த || 4 ||

பொருள்:

இறைநெறி வாழ்க்கை, இந்த உலகியல் வாழ்க்கை என இவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவைகள், ஒன்றுக்கொன்று நேர்மாறானவைகள், இவைகள் வேறுவேறான பாதைகளைப் பின்பற்றுபவைகள். இதில், புறவிசயங்களான உலக இன்பங்கள் உன்னை மேலான பாதையை நாடுவதிலிருந்து ஆசைகாட்டி விலக்கவில்லை. அவைகளைப் பற்றிய ஒரு அறிவைக் கொண்டவனாகவே நீ இருக்கின்றாய். ஆகவே, உன்னால் மட்டுமே, இவைகள் இரண்டையும் சரிப்பார்த்து, இந்த உலகியல் ஆசைகளில் பற்று வைக்காமல், பரமனை நாடும் இறைநெறியில் இனிதே இருப்பாய் என்று நான் கருதுகிறேன்.

அந்த வகையிலே, **வித்யை (இறை நெறி), அவித்யை (உலகியல் வாழ்க்கை)** இரண்டும் உள்ளன. அவைகளை, ப்ரவிருத்தி மற்றும் நிவிருத்தி என்றும் அழைக்கலாம். அதிலே அறியாமை எனும் அவித்யை நம்மை மோகத்தில் ஆழ்த்துகிறது. காமமும், பணத்தாசையும் அதிலிருந்தே உண்டாகிறது.

அது மனிதனை மேலும், மேலும் மோகத்தில் ஆழ்த்துகிறது. பக்தி, தயை, ஞானம், பிரேமை இவற்றைத் தோற்றுவிப்பது வித்யை. இது மட்டுமே இறைநெயில் நம்மை அழைத்துச் செல்கிறது. இங்கே இரண்டு சமஸ்கிருத வார்த்தைகள் உள்ளன. ஒன்று பிரவிருத்தி. அதாவது இந்த உலகத்தை நோக்கிச் சுழல்வது, மற்றொன்று நிவிருத்தி. அதாவது, இந்த உலகத்தின் நிலையாமையை உணர்ந்துக் கொண்டு, அதிலிருந்து விலகிச் செல்வது.

இதிலே, "நான் மற்றும் என்னுடையது" செல்வம், பணம், அதிகாரம், பெயர், அந்தஸ்து மற்றும் புகழால் **"என்னை"** எப்போதும் புலங்காங்கிதம் அடையவைத்து, வளப்படுத்திக் கொண்டு, எல்லாவற்றையும் ஒரே மையத்தில் எப்போதும் குவிக்க முனையும், அந்த மையம் **"நானே"** என்ற அஹங்காரம் கொண்டது. அதுதான் **பிரவிருத்தி**. இதுவே, இன்றைய ஒவ்வொரு மனிதனின் இயல்பான போக்கு.

அதுவே, எல்லா இடங்களிலிருந்தும் எல்லாவற்றையும் எடுத்து, ஒரு மையத்தைச் சுற்றிக் குவித்து, அந்த மையம் மனிதனின் சொந்த இனிமையான சுகமாக இருக்கிறது. இந்தப் போக்கு உடையத் தொடங்கும் போது, **"அதிலிருந்து விலகிச் செல்லும்"** போக்கு **நிவ்ருத்தி** எனப்படுகின்றது.

ஆக, பிரவிருத்தி மற்றும் நிவிருத்தி இரண்டும் ஒன்றுக் கொன்று எதிரெதிரானது என்றாலும், இவைகளைப் பற்றிய புரிதல் நமக்கு வரும்போது மட்டுமே, நம்மிடம் இது நல்லது, இது கெட்டது என்ற இருமைகள் இல்லாமல் இருக்க முடியும்.

அதாவது, பிரவிருத்தி எனும் முந்தையது தீயது என்றும் நிவிருத்தி எனும் பின்னது நல்லது என்றும் நம்மால் பார்க்க முடிகின்றது. ஆனால், அந்த பிரவிருத்தி வாழ்க்கையில், வாழும்போது எதன் மீதும் பற்று வைக்காமல், அனைத்தையும் ஈஸ்வரார்ப்பணம் செய்து வாழும் வழியைக் கண்டு கொண்டால், அதுவே, மிக உயரிய **கர்மயோகம்** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

இத்தகைய கர்மயோகத்தின் மூலமாக உண்டாகின்ற மனத்தூய்மையின் வாயிலாக, மனிதன் அடையும் நிவிருத்தி அவனை இரண்டையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏகத்துவ இறை நெறியில் இருத்திக் கொள்கின்றது.

**உலகியல் வழிச் செல்பவர்களின் கதி: 5–6**
**-----------------------------------------------**

अविद्यायामन्तरे वर्तमानाः
स्वयं धीराः पण्डितंमन्यमानाः ।
दन्द्रम्यमाणाः परियन्ति मूढा
अन्धेनैव नीयमाना यथान्धाः ॥ ५॥

அவித்யாயாமந்தரே வர்த்தமானா
ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா |
தந்த்ரம்யமாணா: பரியந்தி மூடா
அந்தேனைவ நீயமானா யதாந்தா || 5 ||

பொருள்:

உலகியலின் நடுவில் வாழ்கின்ற மூடர்கள் தங்களை அறிவாளிகள் என்றும் பண்டிதர்கள் என்றும் கருதி குறுக்கு வழிகளைப் பின்பற்றுகிறார்கள். குருடனால் வழிகாட்டப்பட்ட குருடனைப் போல் இவர்கள் மீண்டும்மீண்டும் பிறவிச் சுழலில் உழல்கிறார்கள். மேலானது என்று எமதர்மன் குறிப்பிடுகின்ற அகவளர்ச்சி அல்லது இறைநெறியில் குறுக்கு வழி எதுவும் கிடையாது.

உலகில் சுக போகங்களை அனுபவித்து அல்லது குருவருளாலோ இறையருளாலோ புரிந்துகொண்டு, இந்த உலகம் போதும், இனி இறைவன் ஆசைகளை வைத்துக்கொள்ளலாம், கொஞ்சம் இறைவனையும் தேடலாம் என்றெல்லாம் கூறுபவர்கள் உண்மையை அறியாதவர்கள்.

சுயநலங்களுக்காக பிறருக்கு தவறான வழிகாட்டுபவர்கள். அவர்கள் காட்டும் பாதைகள் ஆரம்பத்தில் இதம் தருபவையாகத் தோன்றும். ஆனால் இறுதியில் படுகுழியிலேயே ஒருவனை ஆழ்த்தும். அத்தகைய வழிகாட்டுபவன். பின்பற்றுபவன் இருவருமே படுகுழியில் வீழ்கிறார்கள்.

*குருட்டிகனை நீக்கும் குருவினைக் கொள்ளார்*
*குருட்டினை நீக்கா குருவினைக் கொள்வர்*
*குருடும் குருடும் குருட்டாட்டாம் ஆடி*
*குருடும் குருடும் குழிவிழுமாறே* – திருமந்திரம். என்று எச்சரிக்கிறார் திருமூலர்.

ஆக, அக வளர்ச்சி நோக்கமாகக் கொண்ட இறைநெறி என்பது ஆரம்பத்தில் கடினமாகத் தெரிகிறது. ஆனால் இறுதியில் பேரின்பத்தைத் தருகிறது. எனவே குறுக்கு வழிகளை நாடாமல், சிரமமாக இருந்தாலும், உண்மையான வழிகளை நாட வேண்டும் என்பது இந்த மந்திரத்தின் கருத்து.

न साम्परायः प्रतिभाति बालं
प्रमाद्यन्तं वित्तमोहेन मूढम् ।
अयं लोको नास्ति पर इति मानी
पुनः पुनर्वशमापद्यते मे ॥ ६॥

ந ஸாம்பராய: ப்ரதிபாதி பாலம்
ப்ரமாத்யந்தம் வித்தமோஹேன மூடம் |
அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ
புன: புனர்வசமாபத்யதே மே || 6 ||

பொருள்:

குறுக்குவழியில் செல்கின்ற, பணத்தாசையால் அறிவிழந்த, மனப்பக்குவமற்ற மூட மனிதர்கள் தங்களுடைய புறவளர்ச்சியில் காட்டும் ஆர்வம் காரணமாக, இந்த உலகம்தான் உண்மை என்பதாக எண்ணிக் கொள்கின்றார்கள், இவர்களுக்கு மறுவுலகம் புரிவதில்லை. அதிலும், குறிப்பாக அக உலக உண்மை இவர்களுக்குப் புரிவதில்லை. இதன் காரணமாக, இவர்கள் மீண்டும், மீண்டும் என்னையே (எமனை) அடைகிறார்கள்.

அதாவது, புற உலகில் குறுக்கு வழிகளை நாடுபவர்கள் மீண்டும், மீண்டும் மரண தேவனிடம் மட்டுமே செல்கிறார்கள், அதாவது, பிறப்பு – இறப்புச் சுழலில் உழல்கிறார்கள். அவர்கள் உயர்ந்த கதியை, மேலான வாழ்க்கையை அறிவதும் இல்லை, அடைவதும் இல்லை.

ஏன்?

ஏனெனில், அவர்களுக்கு அக உண்மை புரியவில்லை. புற உலகமும், அவைகள் தருகின்ற சுகங்களும்தான் எல்லாம் என்றும், அவைகளை அனுபவிப்பதே ஆனந்தம், அதுவே இலட்சியம் என்று இவர்கள் நினைக்கிறார்கள். அக வளர்ச்சி சம்பந்தமான, உயர் இலட்சியப் பாதை இருப்பதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

மரத்தால் செய்யப்பட்ட யானைச்சிலை ஒன்று உள்ளது. சிறு குழந்தை அதைப் பார்க்கும்போது, அதை யானை என்று பயப்படுகிறது. அங்கே, அது மரத்தைப் பார்க்கவில்லை, யானை மட்டுமே பார்க்கின்றது.

ஆனால், விவேகத்தினால் புத்திசக்தி விழிக்கப்பெற்றவன் ஒருவன் அந்த யானைக்கு ஆதாரமான மரம் மட்டுமே தெரிவதினால், அந்த யானை மரத்தினால் செய்யப்பட்டது என்பதை அறிந்துக் கொண்டு, அவனுக்கு அந்த யானையின்மீது பயம் வருவதில்லை. அதற்குக்காரணம், அங்கே அவன் யானையைப் பார்ப்பதில்லை. யானக்கு ஆதாரமான மரத்தை மட்டுமே பார்க்கின்றான்.

அதுப்போலத்தான் இந்த உலகத்தை மட்டும் பார்க்கின்றவனுக்கு பயம் வருகின்றது. அதுவே, இதுப்போன்ற ஆத்மவித்யா மூலம் விவேகத்தினால், விழித்துக் கொண்டவனுக்கு இந்த உலகம் தெரிவதில்லை. அதற்கு ஆதாரமான உண்மையான பரமனை மட்டுமே பார்க்கின்றான். அவனுக்கு எப்படி இந்த உலகத்தின்மீது பயம் வரமுடியும்? என்பதாகப் பார்க்க வேண்டும்.

இந்த உலகமும், உலக சுகபோகங்களும், காமமும், பணத்தாசையும் நம்மீது ஆதிக்கம் செலுத்தும் வரை, நம்முடைய உயர் லட்சியங்களோ? நம்மைப் பற்றிய அகவுலகமோ? எதுவும் நம் சிந்தனக்கு எட்டாத ஒன்று என்றுதான் பார்க்க வேண்டும். ஆகவே, அக வளர்ச்சி பெற்று உயர் லட்சியங்களை ஏற்றுக் கொண்டு, இறைநிலையை அடையும்வரை மனிதன் இந்த பிறவிச் சுழலிலிருந்து விடுபட முடியாது என்கிறது இந்த மந்திரம்.

**உண்மையான குருவும் சீடரும் அபூர்வம்: 7–10**
**———————————————————————**

श्रवणायापि बहुभिर्यो न लभ्यः
शृण्वन्तोऽपि बहवो यं न विद्युः ।
आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा
आश्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः ॥ ७॥

ச்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய:
ச்ருண்வந்தோபி பஹவோ யம் ந வித்யு: |
ஆச்சர்யோ வக்தா குசலோஸ்ய லப்தா
ஆச்சர்யோ ஜ்ஞாதா குசலானுசிஷ்ட்ட: || 7 ||

பொருள்:

எதைப்பற்றி பலரால் கேட்க முடியவில்லையோ? கேட்கும் பலராலும் எதனை அறிய முடியவில்லையோ? அந்த **ஆத்மாவைப்பற்றி உபதேசிப்பவரும் அபூர்வம், அதைப்பற்றி கேட்பவரும் அபூர்வம்.** அத்தகைய அபூர்வமான ஒருவரைப் பின்பற்றி, அதனை அறிபவரும் அபூர்வம் என்கின்றது இந்த மந்திரம்.

ஆத்மா, ஆன்மீகம், கடவுள், அக வளர்ச்சி, உணர்வு போன்ற உயர் உண்மைகளைப் பற்றி கேட்கும் வாய்ப்பு பெரும்பாலோருக்கும் கிடைப்பதில்லை என்பது உண்மை தான். ஆனால், நாம் உயர் உண்மைகளை உணர்வதற்கான தகுதி பெறும்போது, நமது மனம் அதற்கான பக்குவம் பெறும்போது, அந்த உண்மைகளை உபதேசிப்பவர் வந்து சேர்வார் என்பதும் உண்மை.

வயல் தயாரானதும், விதை வந்து சேர்ந்தேயாக வேண்டும் என்பது இயற்கையின் அறிய இயலாத நியதியாகும். நாம் ஆன்மீக இறை நெறியை எவ்வளவோ விரும்பியும், நமக்கு உண்மை இன்னும் கிடைக்கவில்லை என்று ஒவ்வொருவரும் அங்கலாய்த்துக் கொள்ளும் போது, நாம் செய்ய வேண்டிய நமது முதல் கடமை, நம்முடைய உள்ளத்தையே நாம் ஆராய்ந்து பார்த்து, உண்மையிலேயே நாம் அந்த இறை நெறியை அதன் உண்மையை விரும்புகிறோமோ? என்று கண்டுபிடிப்பது மட்டும்தான்.

பெரும்பாலோர் விஷயத்தில் அவர்கள் இன்னும் இதற்கானத் தகுதி பெறவில்லை. அவர்களுக்கு உண்மையான ஆன்மீகத் தாகம் இன்னும் உண்டாகவில்லை என்பதையே காணமுடிகின்றது. காரணம், ஆன்மீகம் என்பது எல்லோராலும் எப்படிப் பார்க்கப்படுகின்றது என்றால், நம்முடைய குறைகளைக் கொண்டு சென்று கொட்டுகின்ற ஒரு இடம். நம்முடைய மன வேதனைகளுக்கான வடிகால் வழங்குமிடம் என்றுதான் எல்லோரும் பார்க்கின்றோம். அதற்காகத்தான் பெரும்பாலானோர் கோவிலுக்குகூட போகின்றோம்.

அதுப்போலவே, ஆன்மிக்க குருமார்களை நாடுகின்ற பலரும் பலவிதமான பயிற்சிகளை வேண்டுவது எதனால் என்றால், அதன் வாயிலாக அவர்களது உடலும், உள்ளமும் உற்சாகம் அடைய வேண்டும். அதன் வாயிலாக இன்னும் இந்த உலகத்தில் புற வளர்ச்சிக்கான பாதைகளை விரிவுபடுத்த வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர்.

அதனால், ஒருவர் வந்து குருவிடம் உபதேசம் பெற்றாலும், அவரது உபதேசத்தின் வாயிலாக, இந்த உலகில் இன்னும் பொருளாதார நிலையிலும், பணம், பதவி, குழந்தைப் பேறு, வீடு, வாசல் என எதையாவது புற வளர்ச்சியில் எதிப்பார்த்துக் கொண்டுதான் எந்த ஒரு

ஆன்மீக குருவையும் நாடுகின்றார்களே தவிர, பெரும்பாலானவர்கள் தன் அகவளர்ச்சிக்கான உயர் உண்மைகளை அறியும் ஆர்வத்தில் குருவை நாடுவது என்பது கிடையவே கிடையாது.

அதிலே, ஒருசிலர் இதுப்போன்ற அகவளர்ச்சிக்கான ஆர்வம் வந்து, குருவை நாடி, அவர் கூறவருகின்ற அகவளர்ச்சிக்கானப் பாதையில் பயணிக்க விரும்பும்போது, புறத்தில் செய்வதற்கு பயிற்சிகள் என்ற ஒன்றுமில்லை, அகத்தில் நம் மனம் மாறுவதற்கான மாற்றம் மட்டுமே தேவை என்பதற்கான இதுப்போன்ற பண்டைய ரிஷிகளின் ஆத்மஞான உபதேசங்களை உரைக்கும்போதுகூட, அவர்களுக்கு அதில் முழுமையான நம்பிக்கை உண்டாகாமல், உயர் உண்மைகளை அறியும் விசயத்தில் அலட்சியமாகவே இருப்பதையும் பார்க்கின்றோம். இவர்கள் இத்தகைய அவநம்பிக்கையின் காரணமாக, ஆன்மஞான விசயங்களில் திடமாக இல்லாததினால், இதைப் பற்றி அறிந்துக் கொண்டும், இவர்களுக்கு அது வெறும் பரோக்ஷ ஞானமாக மட்டும் நின்றுவிடுகின்றது. படித்தும் பயன் இல்லாமல் போகின்றது.

பொதுவாக, நம் ஒவ்வொருவருக்கும் என்னால் உயர் உண்மைகளை அடைய முடியும் என்ற நம்பிக்கை முதலில் வர வேண்டும். அதுவே **சிரத்தை** எனப்படும். அதாவது, இந்த குருவினால் எனக்கு சரியாக வழி காட்ட முடியும். இவர் சாஸ்திர விசயங்களுக்கு விரோதம் இல்லாமல், வேதம் காட்டும் பாதையில் நம்மை பயணிக்க வைக்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கையும் அந்த குருவின்மீது இவர்களுக்கு வரவேண்டும். இவர் காட்டும் இந்த அத்மயோகம் ஒன்று மட்டுமே, என்னை என் உயர் இலட்சியத்திற்கு எடுத்துச் செல்லும் என்ற திட நம்பிக்கையும் உறுதியாக உண்டாகவேண்டும். இத்தகைய நம்பிக்கை சாஸ்திரத்தின் மீதும், சத்குருவின் மீதும் திடமாக உண்டாகாமல், எந்த ஒருவராலும், அந்தப ஆத்மஞானப் பாதையில் பயணிக்கவே முடியாது. ஆகவே, அவர்களது முன்னேற்றத்திற்கு அவர்களே தடையாக மாறி விடுவார்கள். அதாவது, அவர்களது தவறான எண்ணங்களே அவர்களை இதுப்போன்ற பாதையில் பயணிக்க முடியாமல் தடுத்துவிடும். எனவேதான் '**தகுதி வாய்ந்த குருவும் அபூர்வம், தகுதி வாய்ந்த சீடனும் அபூர்வம்**' என்று இந்த மந்திரம் கூறுகிறது.

ஆன்மீகத்தைப் பற்றிப் பேசுபவர் அற்புதமானவராக இருக்க வேண்டும். கேட்பவரும் அப்படியே அற்புதமானவராக இருக்கவேண்டும். இவர்கள் இருவரும் சிறப்பான, அசாதாரணமானவர்களாக இருக்கும்போது மட்டுமே, மிகச் சிறந்த ஆன்மீக வளர்ச்சி எனும் அகவளர்ச்சி அவர்களுள் ஏற்படுகிறது. இல்லாவிட்டால் அகவளர்ச்சி என்றுமே ஏற்படாது.

சீடனின் அறியாமைகளை சுட்டிக் காட்டி, அவைகளில் இருந்து அவனை விடுவித்து, அவனது புற வாழ்க்கைக்கு இடையூறு நேராதவாறு, இறை நெறி வாழ்க்கையையும், இந்த உலக வாழ்க்கையும் எப்படி சமமாகப் பார்க்க வேண்டும் என்பதை எளிதாகக் கற்றுக் கொடுப்பவரே உண்மையான குருமார்கள் ஆவார்கள். இவர்களை நாடி, இவர்களிடம் கற்றுக் கொள்பவர்களே உண்மையான சீடர்கள் என்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

ஆனால், இவர்களோடு ஒப்பிடும்போது, மற்றவர்கள் எல்லாம் இந்த ஆன்மீகத்தோடு விளையாடுகிறார்கள். விவேகம் இன்றி, விபரீதப் பயிற்சிகளை எல்லாம் பயிற்றுவித்து, சீடனின் சிறப்பான புத்தி சக்தியை முடக்கி, முடிவில் இவர்களுக்கு அடிமைகளாக உருவாக்குகின்றார்கள். இதன்வாயிலாக இவர்கள் இகபர சுகத்துடன் இன்பமாக வாழ்கின்றார்கள், ஆனால், பாவம் அறியாமைக் கொண்ட சீடர்கள் இவர்களிடம் சிக்கி சீரழிந்து, சிறுமதியால், சிறப்பான இந்த மனித வாழ்க்கையை மனம்போன போக்கிலே சென்று மடத்தனமாக முடித்துக் கொள்கின்றான். இவர்கள் இருவருமே கண்ணிருந்தும் குருடர்கள், காதிருந்தும் செவிடர்கள் என்பதாகவே இந்த சாஸ்திரம் இவர்களை சாடுகின்றது.

न नरेणावरेण प्रोक्त एष
सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः ।
अनन्यप्रोक्ते गतिरत्र नास्ति
अणीयान् ह्यतर्क्यमणुप्रमाणात् ॥ ८॥

ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ
ஸுவிஜ்ஞேயோ பஹுதா சிந்த்யமான: |
அனன்ய ப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி
அணீயான் ஹ்யதர்க்யம் அணுப்ரமாணத் || 8 ||

பொருள்:

உலகியல் மனிதர்கள் புற வளர்ச்சிக்கான கூறும் பல்வேறு வழிகளால் இந்த ஆத்மாவை அறிய முடியாது. ஏனெனில், அவரவர்களுக்குத் தோன்றுவதையெல்லாம் இதுதான் ஆன்மீகம் என்பதாக, பலவிதமாக பலவற்றையும் கூறுகின்றனர். உண்மையில், அனுபூதி பெற்றவனின் உபதேசங்களைப் பின்பற்றினால் மட்டுமே குழப்பம் இல்லை. இந்த ஆத்மா அணுவைவிட நுண்ணியது. எனவே, இது வாதங்களுக்கு அப்பாற்பட்டது.

ஆத்மா அனுபவித்திற்கு உரியது. ஆராய்ச்சிக்கோ, விதண்டா வாதங்களுக்கோ உரியது அல்ல. கடலை நேரில் காணாத ஒருவனுக்கு, எவ்வளவு விளக்கினாலும் அவனால் கடலைப் பற்றி புரிந்துக் கொள்ள முடியாது.

அதுப்போலவே, ஆத்மாவையும் விளக்கங்களால் புரிந்துக்கொள்ள முடியாது. ஆத்மா என்ற ஒன்று உண்டு. அது பெரியது, அது சிறியது என்றெல்லாம் பல விளக்கங்களை பல நூல்களின் மூலம் காண முடியும்.

அவற்றையெல்லாம் படித்துவிட்டு, ஆத்மாவை விளக்க முயன்றால், அது சரியான விளக்கமாக அமையாது. அந்த விளக்கத்தைக் கேட்டு, அதைப் பின்பற்ற முயற்சிப்பவனும் ஏற்கனவே பார்த்த மந்திரத்தில் கூறப்பட்டதுப் போல, படுகுழியிலேயே வீழ்வார்கள்.

ஆனால், ஆத்மாவை அனுபூதியில் அறிந்தவன் சரியான வழியைக் காட்டுவான். அந்த வழியில் செல்பவனும், ஆத்மாவை உணர்வான்.

**நசிகேதனின் மனவுறுதி: 9–11**

---

नैषा तर्केण मतिरापनेया
प्रोक्तान्येनैव सुज्ञानाय प्रेष्ठ ।
यां त्वमापः सत्यधृतिर्बतासि
त्वादृङ्नो भूयान्नचिकेतः प्रष्टा ॥ ९॥

நைஷா தர்க்கேண மதிராபனேயா
ப்ரோக்தான்யேனைவ ஸுஜ்ஞானாய ப்ரேஷ்ட்ட |
யாம் த்வமாப: ஸத்யத்ருதிர் பதாஸி
த்வாத்ருங் நோ பூயாந்நசிதேத: ப்ரஷ்ட்டா || 9 ||

பொருள்:

அன்பிற்குரியவனே! நீ அடைந்துள்ள இந்த அறிவு, மற்றவர்களின் அனாவசியமான வாதங்களினால் அடையக்கூடியது அல்ல. தன்னுள் அனுபூதி உண்மையை உணர்ந்த ஒருவர் உபதேசித்து, அதைப் பின்பற்றும்போது மட்டுமே, அது ஒருவனை மேலான ஞானத்திற்கு அழைத்துச் செல்கிறது. நசிகேதா! இந்த உண்மையை அடைவதில் நீ உறுதி

உடையவனாக இருக்கிறாய். உன்னைப்போன்ற மாணவர்கள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

ஒரு லட்சியத்தை எடுத்துக்கொண்டால், அதனை அடைவதற்கான உறுதி வேண்டும். அதற்கான பயணப்பாதையில் எத்தனை தடைகள் வந்தாலும், அவைகளை எல்லாம் தகர்த்தெறிந்து முன்னேறுகின்ற முயற்சி அவனிடத்தில் இருக்க வேண்டும். அத்தகைய ஆற்றல் உள்ள ஒருவனே இலட்சியத்தை அடைவான்.

நசிகேதன் மரணத்திற்கு அப்பாலுள்ள உண்மையை அறிய வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டான். அதிலிருந்து அவனை விலக்குவதற்காக, எமன் எத்தனையோ ஆசைகளைக் காட்டினான். அவைகள் அனைத்தையும் மறுத்துவிட்டு, உண்மையை மட்டுமே அடைய வேண்டும் என்ற ஒன்றிலேயே உறுதியாக இருந்தான் நசிகேதன். அத்தகைய மாணவர்கள் தனக்கு வேண்டும் என்று கூறி அவனைப் புகழ்கிறான் எமதர்மன்.

जानाम्यहं शेवधिरित्यनित्यं
न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत् ।
ततो मया नाचिकेतश्चितोऽग्निः
अनित्यैर्द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम् ॥ १० ॥

ஜானாம்யஹம் சேவதிரித்யநித்யம்
ந ஹ்யத்ருவை: ப்ராப்யதே ஹி த்ருவம் தத் |
ததோ மயா நசிகேதச் சிதோக்னி
அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம் || 10 ||

பொருள்:

நசிகேதா! நாம் செய்யும் செயல்கள் எதுவாக இருப்பினும், அத்தகைய செயல் விளைவுகளால் உண்டாகின்ற வினைப்பயன்கள் நிலையற்றவைகள் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய நிலையற்ற வினைப்பயன்கள் நல்லதாக இருப்பினும், கெட்டதாக இருப்பினும், அதனால், ஆத்மாவை அடைய முடியாது. ஆகவே, நாம் புறத்தில் செய்கின்ற யாக, யக்ஞங்களால், புறப்பொருட்களால் செய்கின்ற செயல் விளைவுக்குண்டான அத்தகைய நிலையற்ற புறப்பயிற்சியினால், கிடைத்த வினைப்பயன்கள் மூலம், எனக்கு எம பதவி கிடைத்திருந்தாலும், இது நித்யமானது கிடையாது. அதாவது, நாம் செய்கின்ற நல்லது மற்றும் தீயது எனும் செயல்களால் விளைபவைகள் எல்லாமே வினைப்பயன்கள்.

இவைகள் எவ்வளவு நல்ல செயலாக இருந்தாலும், அதன் விளைவாக எவ்வளவு உயர்ந்த பதவி கிடைத்தாலும், அது நிலையற்றதே. ஏனெனில், ஒருவருடைய புண்ணிய பலன்களால், அவாருக்கு சொர்கத்தில் அல்லது நரகத்தில் உயர் பதவி கிடைத்திருந்தாலும், அவர்களது புண்ணியம் நிறைவுற்றதும், மீண்டும் அவர்கள் பூமியில் பிறந்தேயாக வேண்டும். ஆகவே, ஆசைகளற்ற நிலையை அடையும்போது மட்டுமே பிறப்பு – இறப்பு என்னும் சுழலிலிருந்து விடுபட்டு நிலையான இறைவனை அடைய முடியும்.

இங்கே எமதர்மன் தன்னையே உதாரணமாகக் காட்டுகிறான்.

நசிகேத யாகத்தைச் செய்ததால், தனக்கு சொர்க்கத்தில் பதவி, அதாவது எம பதவி கிடைத்துள்ளது என்கிறான் அவன். அவனது புண்ணிய காலம் தீர்ந்ததும் இந்த எம பதவியும் போய்விடும். நிலையற்ற பொருட்களால் என்று எமன் இங்கே குறிப்பிடுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஹோம குண்டம், விறகு, நெய், போன்ற புறப்பொருட்களால் செய்த யாகத்தை எம தர்மன் இங்கே குறிப்பிடுகிறான். இது நிலையற்ற மேலுலகப் பதவியையே தரும்.

ஆனால், அதே புற யாகத்தை, ஓர் அக யாகமாக, ஆன்மீக சாதனையாக, இந்த நசிகேத வித்தையை அகத்தில் செய்யும்போது, அது நிலையான முக்திப்பேற்றைத் தருகிறது. அந்த சாதனையையே இனிவரும் 12 – ஆம் மந்திரம் விளக்குகிறது.

कामस्याप्तिं जगतः प्रतिष्ठां
क्रतोरानन्त्यमभयस्य पारम् ।
स्तोममहदुरुगायं प्रतिष्ठां दृष्ट्वा
धृत्या धीरो नचिकेतोऽत्यस्राक्षीः ॥ ११॥

காமஸ்யாப்திம் ஜகத: ப்ரதிஷ்ட்டாம்
க்ரதோரனந்த்யமபயஸ்ய பாரம் |
ஸ்தோமம் மஹதுருகாயம் ப்ரதிஷ்ட்டாம் த்ருஷ்ட்வா
த்ருத்யா தீரோ நசிகேதோ த்யஸ்ராக்ஷீ: || 11 ||

பொருள்:

நசிகேதா! சொர்க்கலோகம் ஆசைகளின் நிறைவிடம், உலகின் ஆதாரம், யாகங்களின் பலனாகக் கிடைக்கின்ற அளவற்ற இன்பங்களின் இருப்பிடம், பயமின்மையின்

உறைவிடம், போற்றத்தக்கது, மகிமை வாய்ந்தது, நீண்ட காலம் நிலைத்திருப்பது, மேலானது. புத்திசாலியான நீ (இந்த உண்மைகளை அறிந்தும், அது நிலையற்றது என்பதற்காக) அதனை உறுதியுடன் மறுத்துவிட்டாய்.

பூமியில் அனுபவிக்கின்ற சுகபோகங்கள் போதாமல், சொர்க்கத்தை நாடுகிறான் மனிதன். எனவே சொர்க்கம் என்பது அனைத்து ஆசைகளும் நிறைவேறுகின்ற இடமாகக் கருதப்படுகிறது. பிரபஞ்சத்தை இயக்குகின்ற பல்வேறு சக்திகள் தேவர்களாக உருவகிக்கப் பட்டிருப்பதை 1.1.1 விளக்கவுரையில் கண்டோம்.

யாகங்களின் மூலம் மனிதர்கள் தேவர்களைப் பேண வேண்டும், பதிலாக தேவர்கள் மழை, காற்று முதலானவற்றின் மூலம் மனித குலத்தை வளர்ப்பார்கள். இந்தச் சுழற்சியில் ஏற்றத் தாழ்வு ஏற்படும்போது, இயற்கை வளம் குன்றுகிறது. எனவேதான் சொர்க்கம் உலகிற்கு ஆதாரமாகக் கூறப்பட்டது.

**நசிகேத வித்யை (12 – 17)**
**———————————————————**

புற யாகத்தால் தனக்கு எம பதவி மட்டுமே கிடைத்தது (1.2.10) என்றும், இத்தகைய உலகங்களின் நிலையாமையை உணர்ந்த நசிகேதன் அவற்றை மறுத்து விட்டான் என்றும் (1.2.11) கூறிய எமதர்மன் அக யாகத்தைப் பற்றி, அதாவது நசிகேத வித்யையைப்பற்றி கூற ஆரம்பிக்கிறான். அந்த அக்கினி இதயக் குகையில் உள்ளது. (1.1.13) என்பது நசிகேத வித்யையின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. அந்த இதயக் குகை பற்றிய விளக்கம் ஆரம்பிக்கிறது.

**இதயக் குகை**

तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं
   गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं
   मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥ १२॥

தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்ட்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்ட்டம் புராணம் |
அத்யாத்ம யோகாதிகமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷ சோகௌ ஜஹாதி || 12 ||

பொருள்:

நீ கேட்ட ஆத்மா சிரமப்பட்டு அடைய வேண்டியது, மறைவான இடத்தில் இருப்பது, இதயக்குகையில் ஒளிர்வது, இருண்ட பகுதியில் உள்ளது, பழமையானது. புத்தி விழிப்புற்றவன் ஒளிமயமான அந்த ஆத்மாவை அத்யாத்ம யோகத்தால் தியானித்து இன்ப, துன்பங்களைக் கடக்கிறான்.

நம்முள்ளே இருக்கின்ற, நமக்கு ஆதாரமான ஆத்மா எளிதாக அறியத்தக்கது அல்ல. புறமுகமாக இயங்குகின்ற புலன்களை அகமுகமாக்கி ஆத்மாவைத் தேடுவது அவ்வளவு எளிய காரியமும் அல்ல. எனவேதான் அதனை சிரமப்பட்டு அடைய வேண்டியது என்று இந்த உபநிஷதம் குறிப்பிடுகிறது.

இதயக் குகையில் ஆத்மா இருப்பதாக ஏற்கனவே (1.1.14) கண்டோம். ஆனால், அவ்வாறு ஒரு இதயக் குகை என்ற ஒன்று நம்மிடம் இருப்பதாகவே, நாம் நடைமுறையில் அறிவதில்லையே, ஏன்?

இதனைச் சற்று விரிவாக அறிய வேண்டியது அவசியம். இந்த மந்திரம் இதயக் குகைபற்றி பேசுகின்றது. இது எந்த இதயம்? லப்டப் என்று துடித்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய உடலின் உள்ளே உள்ள பௌதீக இதயம் அல்ல. இது ஆன்மீக இதயம்.

**ஆன்மீக இதயம்.**

**"குருகுஹாய; அஜ்ஞான த்வாந்த ஸவித்ரே"**

'**த்வாந்தம்**' என்றால் இருட்டு. ஸவித்ரு, '**சவிதா**' என்றால் சூர்யன். இருட்டை இருந்த இடம் தெரியாமல் சூர்யன் விரட்டி அழித்து விடுகிற மாதிரி, அஜ்ஞான இருட்டை த்வம்ஸம் செய்யும் ஞான சூர்யன். அதாவது, இதய குகையில் இருக்கும் குரு, அஞ்ஞான இருள் நீக்கும் சூரியன். அதுவே ஆத்மா.

பொதுவாக, மலைக் குஹைகளில் வஸிப்பதால் குஹன் என்று அழைக்கப்படுவது நம் நடைமுறையில் இருக்கின்ற வழக்கம். அந்த வகையிலே, குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்ற பழமொழிக்கு ஏற்ப, முருகனை குஹன் என்றும் அழைப்பது நடைமுறையில் உள்ளது. ஆகவே, **குஹ** என்றால், **குகை** என்று பொருள்.

அதிலே, தத்வார்த்தமாகச் சொன்னால், ஹ்ருதய குஹையிலிருக்கும் ஆத்ம ஸ்வரூபம் என்றுதான் இறைவனைப் பார்க்க வேண்டும். ஆக, அந்த இறைவனே குருவாக வந்து உபதேசிக்கிறபோது **குருகுஹன்** ஆகின்றான்.

## ஹிருதயத்தின் இரகசியம்

உபநிடதங்களில் இதயம் ஒரு இரகசிய இடம் (குஹா), இதயத்தின் குகை என்று விவரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறிய இடைவெளி **தஹரா, ஆகாஷா** என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

தஹர வித்யா அல்லது தகர வித்தை என்பது, நம்முள்ளே ஒரு வெளி (தஹரம், ஆகாயம் – Space), அகவெளி உள்ளது. அதில் எழுந்தருளியிருக்கும் இறைவனை அகமுகமாக தேடுவதும், அடைவதுமே **தஹர வித்யா** அல்லது **தஹராகாச வித்தை** எனப்படும்.

இந்த தஹர வித்தை சாந்தோக்கிய உபநிடதத்தின் எட்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, நம்மிடம் ஒரு ஹிருதயம் உள்ளது. அந்த இதயம் ஒரு 'தாமரை மொட்டுப் போன்ற குவிந்து, நாற்புறங்களிலும் நாடிகளால் சூழப்பட்டு தொங்குகிறது'. அதன் உள்ளே நுண்ணிய ஆகாசம் உள்ளது. அனைத்தும் அதில் நிலை பெற்றுள்ளன. இந்த இதய வெளிக்குள்ளே உள்ள பொருளைத் தேட வேண்டும், அறிய விரும்ப வேண்டும். அதற்கான வித்யை தகர வித்யை எனப்படுகின்றது.

இதில்தான், இந்த முழு பிரபஞ்சமும் விதை வடிவத்தில் உள்ளது. அதை **அவ்யக்தம்** என்று சாஸ்திரம் சொல்வதால், அதை நாம் **'காரண சரீரம்'** என்றும் கூறலாம். இந்த காரண சரீரம் மூலம் வெளிப்பட்ட சூக்கும சரீரமாகிய மனம் மற்றும் ஸ்தூல சரீரமாகிய பரு உடல் ஆகிய இவைகளைக் கருவிகளாகக் கொண்டு, நாம் நம்முடைய விழிப்புணர்வை உணர்ந்துக் கொண்ட மறுவிநாடி, **நான், நீ, அது, அவன், அவள்** என எல்லாமே ஒன்றாகி விடுவோம். நாம் தனிமனிதனிலிருந்து, இந்த உலகளாவிய பிரபஞ்ச நிலைக்கு உயர்வோம். அதாவது, ஈஸ்வர நியதிக்குள் நுழைவோம். இந்த ஈஸ்வர நியதியில் இருக்கும் நிலையில் உள்ள, இந்த ஹிருதயத்தை **ஆகாசம்** என்பதாக மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர, அது இந்த பௌதீக உடலில், பௌதீக இதயத்திற்கு அருகில், வலது பக்கத்தில் மையம் கொண்டுள்ளது என்றெல்லாம் குழப்பம் அடையத்தேவையில்லை.

அதாவது, எல்லாம் எதிலிருந்து பிறந்து விளங்குகின்றனவோ? **அதுவே இருதயம்**. ஆழ்ந்த உறக்கத்திலும், எதிர்பாராத அளவுகடந்த சந்தோஷத்திலும், துக்கம், பயம் அல்லது திருப்தியிலும் நாம் இந்த இதயத்துள் அடங்குவதால்தான் **புற உணர்வு** அற்று விடுகிறது.

அதை, வெட்டவெளி தியானத்தின் மூலமாகவோ? அல்லது அத்யாத்ம வித்யை என்ற விசார மார்க்கத்தின் மூலமாகவோ? நம்மிடம் ஸ்புரணம் ஆகிக்கொண்டு, சதா **'நான், நான்'** என்று பிரகாசிக்கும் நம் இதயத்தைச் சென்றடைந்தால், நாம் அதுவேயாகிறோம்.

அதாவது, வந்த வழியே திரும்பிச் சென்று எண்ண அலைகள் ஓய்ந்தொடுங்கினால், அங்கு **'நான், நான்'** என்ற ஸ்புரண அதிர்வு உண்டாகிறது. இதுவே, சுத்த சைதன்ய பிரகாசத்தின் முன்னோடி. ஆக, சர்வ நினைவுகளும் எவ்விடத்து ஒடுங்குகின்றனவோ? அந் நிச்சலமான இடமே **ஆத்ம நிலை** எனப்படும். அதன் ஸ்வரூபத்தை உள்ளவாறு உணர்ந்து நிற்கும்போது, அது தேகத்திற்கு உள்ளேயோ, வெளியேயோ என்பதாகிய ஆராய்ச்சிகளுக்கு அங்கு இடமில்லை.

ஆகவே, **'நான், நான்'** என்ற இந்த ஸ்புரணம் உதிக்கும் இடத்தை இடைவிடாது கூர்ந்து நாடினால், எல்லையற்ற அத்வைத (இரண்டற்ற) உணர்வு தானாக, ஒன்றேயாக ஒளிரும். அதாவது, மூச்சை அடக்குவதும், மனதை அடக்கி உள்முகமாக திருப்புவதற்கும் ஒரு வழி என்பது, மனம் உள்ளே அகமுகமாக திரும்பிச் சென்று உள்ளுக்குள் மறையும் எண்ணங்கள் லீனமாகும் இடமே **ஹிருதயம்** எனப்படும்.

अधो निष्ठ्या वितस्त्यान्ते नाभ्याम् उपरि तिष्ठति ।
ज्वालामालाकुलं भाती विश्वस्यायतनं महत् ॥

அதோ நிஷ்டாய விதஸ்யாந்தே நாப்யாம் உபரி திஷ்டதி,
ஜ்வாலமாலாகுலம் பாதி விஸ்வஸ்யாயதனம் மஹத்.

– *நாராயண ஸூக்தம், தைத்திரீய ஆரண்யாகம், 4.10.13.7*

தொப்புளுக்கு மேலே ஒரு ஜான் இடைவெளி தூரத்தில், ஆகாசம் உள்ளது என்பதாக இந்த மந்திரம் கூறவருவதை வைத்துக் கொண்டு, இந்த அடையாளங்கள் பௌதீக இதயத்திற்குப் பொருந்தாது என்பதினால், இது பௌதீக இருதயத்திற்கு வலது பக்கத்தில் **நெச்சுக்குழி** என்பதாகப் பார்க்கின்றனர். அதனால், அதை **அனாகதம்** என்றும் கூறுகின்றனர்.

அதன் அடிப்படையில், பேசும்போது நெஞ்சுப்பகுதியை தொட்டுக் கொண்டு பேசுகின்றனர் என்றாலும், இந்த இடம் பஞ்சாக்ஷரம் என்ற எழுத்தின் **'சி'** என்பதினாலும், இதை அக்னி பூதம் என்பதினாலும், இது பொருந்தாது என்றே பார்க்கப்படுகின்றது. அதுவே, பஞ்சாக்ஷர எழுத்தின் **'ய'** என்பது, ஆகாயம் என்பதினால், அந்த ஆகாயம் என்ற வெற்றிடம் உண்மையில், விசுத்திக்கு மேலே புருவமையம் இடத்தில் உள்ளது.

புருவ மத்தி தன்னை உணரும் உணர்வு நிலை என்பதினால், அதன் வியாபகத்தை விவரிப்பது என்பது இயலாத ஒன்று. இருப்பினும், இந்த ஆன்மீக இதயம்தான் ஹிருதயக் குகை என்பது, நம்முடைய தலையில் இருக்கின்ற **தீ, இதயத் தாமரை, மூன்றாம் கண், ஞானக் கண்** என்றெல்லாம் சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. மிகப் பெரும்பாலோரிடம் இந்த ஆன்மீக இதயம் மலராமல் அரும்பாகவே உள்ளது. இதனால்தான் இது **குகை, இருண்ட பகுதி, மறைவான இடம்** என்றெல்லாம் கூறப்பட்டது. இதைத்தான் நம் பெரியவர்கள் நமக்கு சுட்டிக் காட்டும்போது, '**எண்சான் உடம்புக்கு, சிரசே பிரதானம்**' என்றனர்.

ஆகவே, ஆத்யாத்ம யோகத்தினால் மட்டுமே அந்த ஆன்மீக இதயத்தை மலரச் செய்ய முடியும். அதுவும், ஆத்மஞானம் வந்தால் மட்டுமே அந்த ஹிருதயம் மலரும் என்பதாகப் பார்க்கப்படுகின்றது. எனவே, இந்த இதயக் குகையை உணர்வதற்கான ஒரு வழியாக இந்த உபநிஷதம் கூறுவது அத்யாத்ம யோகம். ஆக, யோகம் என்றால், பொருந்துதல் அல்லது இணைதல். அத்யாத்ம யோகம் என்றால் ஆத்மாவுடன் இணைதல். புறப்பொருட்களை விட்டுவிட்டு அகத்தை நாடுந்தோறும் நாம் மேலும், மேலும் இதயக் குகையை உணர்வோம்.

यो वेद निहिथम् गुहयम् परमे व्योमन् ।
समश्नुते सर्वान् कामान् स: ॥

"யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் |
ஸமஸ்னுதே ஸர்வான் காமான் ஸ: || – *(தைத்திரீயோபநிஷதம் 2–1)*

பொருள்

*ஆசைகளைத் துறந்து*
அதன் பயன்களையும் துறந்து
இதயகுகையில் வீற்றிருக்கும்
அந்த ஆன்மாவின் சுயரூபத்தை
அந்த ஆகாச வெளியினைக்
கண்டு நம்மை நாமே அறியலாம்.

*"பரம ஆகாசமாகிய ஹ்ருதய குகையில் வீற்றிருக்கும் அந்த பிரம்மத்தை யார் ஒருவன் அறிகிறானோ? அவன் ஆசைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டவன்"* என்கின்றது.

பரவெளி, ஆகாசம், வெட்டவெளி என்பதெல்லாம், ஆத்ம ஒளிப்பிரகாசம் மனித மனதில் புத்தி சக்தியாகப் பிரகாசிப்பதைத்தான் இங்கு அறிதல், உணர்தல், உணர்ச்சி, அன்பு, பக்தி

என பல பெயர்களில் அழைக்கின்றோம். அத்தகைய அன்பினால் நிறைந்திருக்கின்ற மனதையே நெஞ்சம் என்கிறோம்.

**நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே**
**மஞ்சனநீர், பூசை கொள்ள வாராய் பராபரமே!**

ஆக, நெஞ்சம் என்பது, நம்முடைய பௌதீக நெஞ்சம் கிடையாது. அது நம்முடைய உணர்வு வெளி, அறிவு ஒளி என்பதாகவே பார்க்கப்படுகின்றது. அதற்கான இருப்பிடம் என்பது, இந்த பரு உடலில், மனம் என்ற அடிப்படைத் தன்மையில் இருந்து, விவேகத்தினால் விழித்துக் கொண்ட புத்தி சக்தியாக மட்டுமே பார்க்க வேண்டும். ஆக, நம்முடைய உடலில் அதற்காகப் பிரகாசிக்கப் பயன்படும் உறுப்புகள் என்பது, நமது தலையிலுள்ள **பிட்யூட்டரி, பீனியல் சுரப்பிகள்** வாயிலாக, புற அறிவாகப் பிரகாசிக்கின்றது என்ற உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஆகவே, அனாவசியமாக மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான புற விசய, சுகங்களில்லிருந்து நாம் விலக, விலக, புறவுலகால் பாதிக்கப்படாத அக உலகம் ஒன்று நம்முள் இருப்பதை நாம் உணர்வோம். நம்முள் உள்ள இந்த அக உலக அமைதிப் பிரதேசத்தை உணரத் தொடங்கிவிட்டது முதல், இந்தப் புற உலகம் நம்மைப் பாதிப்பது படிப்படியாகக் குறைத்து விடும். இதையே, இந்த மந்திரம் இன்ப, துன்பங்களைக் கடக்கிறான் என்று கூறுகிறது.

**அத்யாத்ம யோகப் பயிற்சி**

---

एतच्छ्रुत्वा सम्परिगृह्य मर्त्यः
प्रवृह्य धर्म्यमणुमेतमाप्य ।
स मोदते मोदनीयँ हि लब्ध्वा
विवृतँ सद्म नचिकेतसं मन्ये ॥ १३॥

ஏதச்ச்ருத்வா ஸம்பரிக்ருஹ்ய மர்த்ய:
ப்ரவ்ருஹ்ய தர்ம்யமணுமேதமாப்ய |
ஸ மோததே மோதனீயம் ஹி லப்த்வா
விவ்ருதம் ஸத்ம நசிகேதஸம் மன்யே || 13 ||

பொருள்:

இந்த உண்மையைத் தகுந்த குருவிடமிருந்து கேட்டு, ஆராய்ந்து அறிய வேண்டும். பிறகு, உடம்பிலிருந்து அதனைப் பிரித்து உணர வேண்டும். அணு போன்றதும், ஆனந்தம் நிறைந்ததுமான ஆத்மாவை இவ்வாறு பிரித்தறிபவன் ஆனந்தம் பெறுகிறான்.

நசிகேதா! உனக்கு அந்தப் பாதை திறந்திருப்பதாக நினைக்கிறேன்.

தலைவவி வந்தால் தலைவலி மாத்திரை சாப்பிடுகிறோம். இது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இது மட்டுமே நோயை நிரந்தரமாக குணப்படுத்துவதற்கான வழி அல்ல. அதற்கு டாக்டரை அணுக வேண்டும். தலைவலிக்கான காரணத்தை ஆராய்ந்து அதற்குரிய மருந்தைத் தர அவரால் மட்டுமே முடியும். அவரது ஆலோசனைப்படி சிகிச்சை செய்தால் தலைவலியை முற்றிலுமாக குணப்படுத்த முடியும்.

அதுபோல்தான் அகவுலக உண்மைகளும், ஆத்மா, கடவுள் போன்ற விஷயங்களும் பல நூல்களில் காணப்படலாம், பலர் சொல்லவும், கேட்கவும் செய்திருக்கலாம். ஆனால், இவற்றை அனுபவித்து அறிந்த, ஆத்மாவை அனுபூதியில் உணர்ந்த, இறைவனை தன்னுள் உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானிகளிடமிருந்து இந்த உண்மையை அறிந்தால் மட்டுமே அது நம்மைச் சரியான வழியில் அழைத்துச் செல்லும். அத்தகைய உண்மையைக் காட்டிக் கொடுப்பவரே **சத்குரு** எனப்படுகிறார்.

எனவே, உயர் வாழ்க்கை அல்லது ஆன்மீக வாழ்க்கைக்கு முதல் தேவை சரியான சத்குருவை அடைந்து, அவரிடமிருந்து, அவரடைந்த அனுபவ உண்மைகளை நேரடியாகக் கேட்டுப் பெற வேண்டும். அடுத்ததாக, அத்தகைய குருவிடமிருந்து பெற்ற உண்மையை உணர்ந்து, அதனை தனக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு மனத்தளவில் உடம்பு வேறு ஆத்மா வேறு என்று பிரித்தறிந்துப் பழக வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மனத்திற்குப் பயிற்சி அளிப்பது ஆரம்பகால அடிப்படைப் பயிற்சிகளுள் ஒன்றாகும்.

சாதாரணமாக நமது வாழ்வில் உடம்பே எல்லாமாக இருக்கிறது. உடம்பே எல்லாம், அதைத் தவிர எதுவுமில்லை என்பதை அடிப்படையாக வைத்தே நமது வாழ்க்கை செல்கிறது. ஆனால், உடம்பு ஒரு கருவி மட்டுமே, வாழ்க்கை என்னும் மாபெரும் பயணத்தில் நாம் அணிகின்ற ஒரு சட்டை போன்றது இந்த உடல் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். நாம் நடைமுறையில் எப்படி தினசரி உடைகளை மாற்றுகின்றோமோ? அதுப்போல, ஆத்மா உடல்களை மாற்றிக் கொள்கின்றது என்ற உண்மையையும் நாம்

உணர வேண்டும். ஆக உண்மையில், **"நான்"** இந்த உடம்பினுள் ஒளிர்கின்ற **'ஆத்மா'** என்பதை மனத்திற்குப் புரியவைக்க வேண்டும்.

நசிகேதனைப் பொறுத்தவரை இந்த மூன்று படிகளையும் கடந்து ஆன்மீகப் பாதையில் பயணம் செய்யத் தயாராக இருக்கிறான் என்பதை இங்கே எமதர்மராஜன் சுட்டிக் காட்டுகிறான்.

**நசிகேதனின் அடுத்த கேள்வி**

अन्यत्र धर्मादन्यत्राधर्मा-
दन्यत्रास्मात्कृताकृतात् ।
अन्यत्र भूताच्च भव्याच्च
यत्तत्पश्यसि तद्वद ॥ १४॥

அன்யத்ர தர்மாத் அன்யத்ராதர்மாத்
அன்யத்ராஸ்மாத் க்ருதாக்ருதாத் |
அன்யத்ர பூதாச்ச பவ்யாச்ச
யத்தத் பச்யஸி தத்வத || 14 ||

பொருள்:

தர்மம், அதர்மம் காரியம், காரணம், இறந்த காலம், எதிர் காலம் ஆகியவற்றிலிருந்து வேறு பட்டதாக நீங்கள் எதைக் காண்கிறீர்களோ அதை எனக்குச் சொல்லுங்கள்.

**பிரணவ தியானம்: 15–17**
—————————————————

அத்யாத்ம யோகத்தின் சாதனையாக ஓங்காரம் அல்லது பிரணவ மந்திரத்தை தியானிக்குமாறு கூறுகிறது இனு வரும் 3 மந்திரங்களில் இந்த உபநிஷதம். இது ஓங்காரம், சப்த பிரம்மம், நாத பிரம்மம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. உலகம் படைக்கப்பட்ட போது முதலில் எழுந்தது இந்த ஓங்கார த்வனி. இது எங்கும் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் யோகிகளால் இதனைக் கேட்க முடியும் என்றும் கூறப்படுகிறது. யாராலும் எழுப்பப்படாத ஓசை ஆதலால் இது அனாஹத த்வனி எனப்படுகிறது. ஓங்காரமும் அதன் உபாசனை முறையும் நமது உபநிஷதங்களில், குறிப்பாக மாண்டூக்யம் போன்றவற்றில், சிறப்பாக பேசப்படுகிறது.

பிரம்மம் என்ற அறுதி நிலையிலிருந்து எழுந்த முதல் நாதம் ஆதலால் இதனைப் பின்பற்றிச் செல்லும்போது இறைவனை அடையலாம்.

தொலைவிலிருந்து அலையோசையைக் கேட்கிறோம். அந்த ஓசையைப் பின்பற்றிச் சென்றால் கடலை அடைந்து விடலாம். அலையோசை இருந்தால் கடலும் இருக்கிறது. அதுபோல் அனாஹத த்வனியைப் பற்றியவாறே சென்றோமானால், அந்த த்வனி குறிப்பதான பிரம்மத்திடம் போய்ச் சேரலாம். அதுவே **பரமபதம்** எனப்படுகிறது.

பிரணவ மந்திரத்தின் மகிமையை இனிவருகின்ற மூன்று மந்திரங்கள் கூறுகின்றன.

सर्वे वेदा यत्पदमामनन्ति
तपाꣳसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति
तत्ते पदꣳ सङ्ग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥ १५॥

ஸர்வே வேதா யத்பதமாமனந்தி
தபாம்ஸி ஸர்வாணி ச யத் வதந்தி |
யதிச்சந்தோ ப்ரஹ்மசார்யம் சரந்தி
தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீமி ஓமித்யேதத் || 15 ||

பொருள்:

எல்லா வேதங்களும் எந்த உயர் இலட்சியத்தைப் பற்றி உபதேசிக்கின்றனவோ? எதற்காக எல்லா தவங்களும் செய்யப்படுகின்றனவோ? எல்லோரும் எதை விரும்பி பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ? அந்த உயர் இலட்சியத்தை அடைவதற்கான மந்திரத்தைச் சுருக்கமாக உனக்குச் சொல்கிறேன். அதுவே **ஓம்.**

एतद्ध्येवाक्षरं ब्रह्म एतद्ध्येवाक्षरं परम् ।
एतद्ध्येवाक्षरं ज्ञात्वा यो यदिच्छति तस्य तत् ॥ १६॥

ஏதத்த்யேவாக்ஷரம் ப்ரஹ்ம ஏதத்த்யேவாக்ஷரம் பரம் |
ஏதத்த்யேவாக்ஷரம் ஜ்ஞாத்வா யோ யதிச்சதி தஸ்ய தத் || 16 ||

பொருள்:

ஓம் என்ற இந்த மந்திரமே ப்ரஹ்மம். இந்த மந்திரம் மட்டுமே எல்லாவற்றிலும் மேலானது. இந்த மந்திரத்தை எவன் ஒருவன் எளிதாக அறிகின்றானோ? அவன் எதையெல்லாம் விரும்புகின்றானோ. அதையெல்லாம் அவன் பெறுவான்.

இந்த மந்திரத்தைப் பற்றி பக்கம், பக்கமாக, பல மணி நேரம் பேசிக் கொண்டே இருக்கலாம். ஏற்கனவே, பல முறை பல உபநிஷதங்கள் வாயிலாகப் பேசப்பட்டுள்ளது. ஆனால், பலரும் இதைப் பயன்படுத்துவதில்லை. அதற்குக் காரணம், அவர்களிடம் அதற்கான சிரத்தை என்ற அடிப்படை விசயமே அறியப்படவில்லை என்பதையும், நாம் நடைமுறையில் நன்றாகவே பார்க்கின்றோம்.

"ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொலி ஞானம் தோன்றும்,
ஓம் ஒலி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்,
ஒளியொளிர் உருவந்தானே ஆடலன் ஆடலன்றோ –(மய விஞ்ஞானம்)

"எவனொருவன் பரம்பொருளாகிய '**ஓம்**' என்ற ஒரெழுத்துச்சொல்லை எப்போதும் உச்சரித்துக்கொண்டு, சுய உணர்வாகிய என்னையே எப்போதும் உணர்ந்துக் கொண்டு, இப்பூத உடலை விட்டுப்புறப்படுகின்றனோ? அவன் எல்லாவற்றிற்கும் மேலான கதியை அடைகிறான்." – பகவத்கீதை.

ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவம்
ஓமெனு ஓங்காரத் துள்ளே பல பேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே – திருமந்திரம்.

"ஒடுக்கமடா ஓங்காரக் கம்பமாச்சு ஓகோகோ அகாரமங்கே பிறந்ததாச்சு" – சட்டைமுனி சித்தர்.

ஆதிசங்கரர் '**ஓம்**' எனும் மந்திரத்திற்கான விளக்கத்தை தான் எழுதிய '**உபதேச ஸாஹஸ்ரி**' எனும் நூலில் மிக அருமையாக விளக்கியுள்ளார். எது, ஞானவடிவத்தை உடையதோ, ஆகாயத்தைப் போன்று வடிவம் இல்லாததோ, எல்லாவற்றிற்கும் மேலானதோ, எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டு உள்ளதோ, பிறப்பற்றதோ, இரண்டில்லாமல் ஒன்றாகவே உள்ளதோ, அழிவற்றதோ, எதுனுடனும் சேர்க்கையற்றதோ, எங்கும் நிறைந்து உள்ளதோ, இரண்டற்றதோ, எப்பொழுதும் சுதந்திரமாக உள்ளதோ, அதுவே '**நான்**' நானே '**ஓம்**' என்று கூறப்பட்டுள்ளது.

एतदालम्बनँ श्रेष्ठमेतदालम्बनं परम् ।
एतदालम्बनं ज्ञात्वा ब्रह्मलोके महीयते ॥ १७॥

ஏததாலம்பனம் ச்ரேஷ்ட்டம் ஏததாலம்பனம் பரம் |
ஏததாலம்பனம் ஜ்ஞாத்வா ப்ரஹ்ம லோகே மஹீயதே || 17 ||

பொருள்:

இந்தப் பாதை மிகவும் சிறந்தது. இந்தப் பாதை மிகவும் மேலானது. இந்தப் பாதையை அறிந்து, அதன் வழிச் செல்பவன் பிரம்ம லோகத்தில் சிறப்பு பெறுகிறான்.

**குறிப்பு:–** ப்ரஹ்ம லோகம் என்பது, ஆத்மஞானத்தை உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானிகளாகிய பிரம்மா முதலான தேவர்களின் இருப்பிடம் என்பதினால், அந்த லோகத்தில் மட்டுமே, எப்போதும், அத்யாத்ம யோகத்திலேயே நிலைப்பெற்ற ஞானிகளை நாம் பார்க்கலாம். அந்த வகையிலே, இந்த பூ உலகிலே, இதுப்போன்ற அத்யாத்ம யோகமாகிய ஆத்ம வித்யாவைக் கற்றுக் கொடுக்கின்ற ஞானிகள் வழிக்கும் இடமே ப்ரஹ்ம லோகம் என்பதாகப் பார்க்க வேண்டும்.

**மரணம் யாருக்கு? (18 – 22)**
**————————————————————**

உடம்பு, உயிர், ஆத்மா என்ற மூன்றின் சேர்க்கையே மனிதன்.

நாம் பொதுவாக மரணம் என்று குறிப்பிடுவது உடம்பின் மரணத்தை மட்டுமே. பழைய சட்டையைக் களைந்துவிட்டு புதிய சட்டை அணிந்து கொள்வதுபோல, ஜீவன் ஓர் உடம்பைக் களைந்துவிட்டு புதிய உடம்பை எடுக்கிறது.

(வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோபராணி
ததாசரீராணி விஹாய ஜீர்ணானி
அன்யானி ஸம்பாதி நவானி தேஹீ) – பகவத்கீதை.

ஒருவன் பழைய ஆடைகளைக் களைந்துவிட்டு, புதிய ஆடைகளை அணிவதுப் போன்று, ஆத்மா பழைய உபயோகமற்ற உடலை களைந்துவிட்டு, புதிய உடலை தேர்ந்தெடுக்கின்றது என்பதே இங்கு கீதை கூறும் உண்மையுமாகும்.

ஆக, இந்த உடம்பைக் களைதலையே மரணம் என்கிறோம். ஆனால், நாம் உண்மையில் ஆத்மா, நமக்கு என்றுமே மரணமில்லை. இந்த உடம்பின் மரணத்திற்குப் பிறகும் நாம் வாழ்கிறோம். என்றென்றும் நாம் வாழ்கிறோம்.

அதாவது, நாம் என்றுமே அழியாத ஆத்மா. அந்த வகையிலே, இந்த எல்லையற்ற படைப்பில் அழியாத ஆத்மாவை அறிவது எப்படி?

இந்த பொருள் உலகம் அணுக்களால் ஆனது, மற்றும் அந்த அணுக் கருவில் உள்ள ஆற்றலால் அது இயக்கப்படுகிறது. ஆற்றல் மற்றும் பொருள் இரண்டையும் உருவாக்கவோ அழிக்கவோ முடியாது என்பது அறிவியல் உண்மை. அதாவது, குவாண்டம் இயற்பியலின் ஒரு ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால், அந்த ஆற்றல்படி அறியக்கூடிய வடிவங்களை எல்லாம் வேறு மாற்றத்திற்கு மட்டுமே உட்படுத்தப்படுகின்றன என்பதும் ஏற்க முடிகின்றது.

ஆகவே, படைப்பின் முதல் நாளிலிருந்து, படைக்கப்பட்டவைகள் எதையும் நம்மால் உருவாக்க முடியாது. மேலும் அவைகளை நம்மால் அழிக்கவும் முடியாது, அப்படியானால், என்ன நடக்கின்றது? அவைகள் ஒரு பரிமாணத்திலிருந்து, மற்றொரு பரிமாணத்திற்கு உட்படுத்தப்படுகின்றது.

அதாவது, இயற்கையில் எல்லாமே உண்மையானதாக கருதப்பட்டாலும், இவ்வாறு மாற்றத்திற்கு உட்படுகின்ற இவைகள் **"மாயை"** என்பதாகப் பார்க்கப்பட்டாலும், இவைகள் நம் கனவுகளைப் போலவே கற்பனையானவைகள்.

எப்படி?

நாம் அந்த பரிமாணத்தில் இருக்கும் வரை உண்மையானதாக உணர்கிறோம். அதாவது, கனவு நிலையில் இருக்கும்வரை, கனவில் நடப்பது எல்லாமே உண்மை என்பதாகவே பார்க்கின்றோம். அடுத்து, நாம் விழித்திருக்கும் இந்த பரிமாணத்திற்கு திரும்பும்போது கனவுப் பரிமாணம் மறைந்துவிடும். இதுவே மாயை. அவ்வாறே, நாம் இந்த விழிப்பு நிலை வாழ்க்கையை விட்டு, விட்டு, இந்த பூமியின் பரிமாணத்தை விட்டு

வெளியேறி, நம்முடைய உண்மை பரிமாணத்திற்கு வரும்போது, இதுவும் '**மாயை**' என்று உணரப்படும்.

ஆக, நம்முடைய எதார்த்தம், இயல்பு என்கின்ற ஆத்ம நிலை பரிமாணத்திற்கு நாம் வரும்போது, தனக்கு வேறாக எதுவும் இல்லை என்பதையே, அழியாத ஆத்மா என்பதாகப் பார்க்கப்படுகின்றது. அந்த நிலையிலே **வெறுமை – சூன்யம்** என்பதாக கூறினாலும், உண்மையில், "**நான் இருக்கிறேன்**" என்ற என்னுடைய அறிவு சுயத்தை, இருப்பை என்றுமே நாம் இழக்க முடியாது. அந்த நிலையில் நீடித்த அமைதி, நிலையான ஆனந்தம் என்பது உணரப்படும். அதுவே, "**சச்சிதானந்தம்**" என்று சாஸ்திரம் கூறுகின்றது.

**சத் –** இருப்பு

**சித் –** அறிவு

**ஆனந்தம் –** எல்லையற்ற மகிழ்ச்சி.

**<u>ஆத்மாவில் எந்த மாற்றங்களும் இல்லை: 18 – 19</u>**

न जायते म्रियते वा विपश्चि-
न्नायं कुतश्चिन्न बभूव कश्चित् ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥ १८॥

ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்
நாயம் குதச்சித் ந பபூவ கச்சித் |
அஜோ நித்ய: சாச்வதோயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே || 18 ||

பொருள்:

ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை, இது எதிலிருந்தும் உண்டானதும் இல்லை, எதுவும் இதிலிருந்தும் உண்டாவதும் இல்லை. இது பிறப்பற்றது, என்றென்றும் இருப்பது. நிலையானது, பழமையானது. உடம்பு அழிக்கப்பட்டாலும் ஆத்மா அழியாதது.

हन्ता चेन्मन्यते हन्तुँ हतश्चेन्मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायँ हन्ति न हन्यते ॥ १९॥

ஹந்தா சேன்மன்யதே ஹந்தும் ஹதச்சேன் மன்யதே ஹதம் |
உபௌ தௌ ந விஜானீதோ நாயம் ஹந்தி ந ஹன்யதே || 19 ||

பொருள்:

தான் அடிப்பதாக நினைப்பவன், தான் அடிபட்டதாக நினைப்பவன் இருவருமே உண்மையை அறியாதவர்கள். ஆத்மா அடிப்பதும் இல்லை, அடிபடுவதும் இல்லை.

**ஆத்மாவின் இயல்புகள்: 20 – 22**

------------------------------

அறிவு, உணர்ச்சி இரண்டும் வெவ்வேறானவை, நமது வாழ்க்கை, இரண்டுடனும் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. அன்பு, ஆசை, கோபம், பயம், வெறுப்பு என்று பொதுவாக நமது வாழ்க்கையில் உணர்ச்சிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன; அறிவின் செயல்பாடு மிகக் குறைவே.

அதிலும் ஆன்மீகம், கடவுள், ஆத்மா போன்ற உண்மைகளை அறிவினால் ஆராய்ந்து புரிந்துகொள்ள முடியாது, உணர மட்டுமே இயலும். ஆத்மா, கடவுள் போன்றவைபற்றி படிக்கும்போது இந்தக் கண்ணோட்டம் நமக்கு மிக முக்கியமானது.

அறிவுக்கு எட்டாதது என்பதை உணர்த்துவதற்கே நமது ரிஷிகள் முரண்பட்ட இயல்புகளால் அவற்றை விளக்க முயல்கின்றனர். தொடரும் மந்திரங்களை, சாதனைகள் செய்து உணர முடியுமே தவிர அறிவினால் விளக்கவோ அறியவோ முடியாது. அதற்கான ஒவ்வொரு முயற்சியும் நம்மை மேலும் குழப்பத்திலேயே ஆழ்த்தும்.

अणोरणीयान्महतो महीया-
नात्माऽस्य जन्तोर्निहितो गुहायाम् ।
तमक्रतुः पश्यति वीतशोको
धातुप्रसादान्महिमानमात्मनः ॥ २०॥

அணோரணீயன் மஹதோ மஹீயான்
ஆத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் |
தமக்ரது: பச்யதி வீதசோகோ
தாதுப்ரஸாதான் மஹிமானமாத்மன: || 20 ||

பொருள்:

அணுவைவிட அணுவானதும், பெரியதைவிடப் பெரியதுமான இந்த ஆத்மா உயிரினங்களின் இதயக் குகையில் இருக்கிறது. ஆசையற்றவன் அதனைக் காண்கிறான். மனத்தெளிவினால், ஆத்மாவின் மகிமையை உணர்கின்ற அவன் கவலைகளைக் கடந்து செல்கிறான்.

आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः ।
कस्तं मदामदं देवं मदन्यो ज्ञातुमर्हति ॥ २१॥

ஆஸீனோ தூரம் வ்ரஜதி சயானோ யாதி ஸர்வத: |
கஸ்தம் மதாமதம் தேவம் மதன்யோ ஜ்ஞாதுமர்ஹதி || 21 ||

பொருள்:

அந்த ஆத்மா உட்கார்ந்தபடி வெகுதூரம் செல்கிறது. படுத்துக்கொண்டே எல்லா இடங்களுக்கும் செல்கிறது. அது இன்ப வடிவானது. துன்ப வடிவானதும் அதுவே. அது ஒளி மயமானது என்னைத் தவிர வேறு யார் அதனை அறிவதற்குத் தகுதியானவன்?

என்னைத் தவிர யார் தகுதியானவன்? என்று மரணதேவன் கேட்கிறான். அதாவது மரண நிலையைப் போன்றதொரு நிலையிலேயே ஆத்மாவை உணர முடியும். இதன் பொருள் என்ன?

மரணத்தில் புலன்கள், மனம் எல்லாம் செயலிழக்கின்றன. அதுப்போல் புலன்களும், மனமும் செயலிழந்த, அதாவது புலன்களையும், மனத்தையும் கடந்த ஒரு நிலையில்தான் ஆத்மாவை உணர முடியுமே தவிர, புலன்களாலோ, மனத்தாலோ அதனை அறிய முடியாது என்பதை இங்கே குறிப்பால் உணர்த்துகிறான் எமதர்மன்.

अशरीरँ शरीरेष्वनवस्थेष्ववस्थितम् ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥ २२॥

அசரீரம் சரீரேஷு அனவஸ்தேஷு அவஸ்திதம் |
மஹாந்தம் விபுமாத்மானம் மத்வா தீரோ சோசதி || 22 ||

பொருள்:

ஆத்மா உடல்களில் உடலற்றது. நிலையற்ற பொருட்களில் நிலையானது. மிகவும் பெரியது. எங்கும் நிறைந்தது. புத்தி விழிப்புற்றவன் அதனை அறிந்து கவலைகள் நீங்கப் பெறுகிறான்.

ஆத்மா எல்லா உடல்களிலும் உறைகிறது. ஆனால் அதற்கென்று ஒரு தனியான உடலோ உருவமோ இல்லை. உடல்கள் உட்பட இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே நிலையற்றது, மாறுவது, தோன்றி மறைவது. ஆனால் இந்த மாற்றங்கள் எதுவுமே இல்லாமல் நிலைத்திருப்பது ஆத்மா.

நாளை உணவு கிடைக்காதோ என்ற எண்ணம் கவலையைத் தருகிறது. நாளை இறந்து விடுவோமோ என்ற பயம் கவலையைத் தருகிறது. அதாவது, வாழ்க்கையில் நிகழும் மாற்றங்களே கவலையையும் பயத்தையும் தருகின்றன. ஆத்மா இந்த மாற்றங்கள் அனைத்தையும் கடந்தது. ஆதலால் அந்த நிலையை அடைபவன் கவலைகள் நீங்கப் பெறுகிறான்.

**நான் ஆத்மா என்று யாரால் உணர முடியும்? 23-24**
**----------------------------------------**

नायमात्मा प्रवचनेन लभ्यो
न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यः
तस्यैष आत्मा विवृणुते तनूꣳ स्वाम् ॥ २३॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ச்ருதேன |
யமேவைஷ வ்ருணுதே தேன லப்யஸ்
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம் || 23 ||

பொருள்:

சொற்பொழிவுகளாலோ, புலமையாலோ, பலவற்றைக் கேட்பதாலோ இந்த ஆத்மாவை அனைவராலும் அறிய இயலாது. யார் அதன் உண்மைத்தன்மையை உணர்ந்துக் கொண்டு, அதுவேகவே ஆக, மன ஏக்கம் கொள்கிறானோ? அவன் மட்டுமே அந்த ஆத்மாவை உணர்கின்றான். அந்த நிலையில் அவனது சொந்த இயல்பில் அவன் இருக்கின்றான்.

ஆக, இதிலே மன ஏக்கம் என்பதை ஓர் ஆன்மீக சாதனைகான ஒரு தேடுதல் என்பதாகப் பார்க்கவேண்டும். அந்த தேடுதலின் ஆழத்தில் அவனது அனைத்து ஆசைகளையும் அவன் நிறைவேற்றிக் கொண்டு, தன் சொரூபத்தில் சுயமாக நின்று தன் சுவானுபூதியில் திளைக்க முடியும்.

இதற்கான மன ஏக்கம் ஒருவனுக்கு வந்து விட்டாலே, அவனது வாழ்க்கையில் அருணோதயம் ஆகிவிட்டது என்றே பார்க்கலாம். அதன்பிறகு, அந்த தூய அறிவன் எனும் அருணன் தன்னைக் காட்டியருள்வான். அதுவே, ஆத்ம தரிசனம், ஆத்ம அனுபூதி, ஆத்மானுபவம் ஆகும்.

தன்னையும், இந்த உலகத்தையும், இந்த இரண்டுக்கும் காரணமான இறைவனையும் அறியக்கூடிய தீவிரமான தேவை ஏற்படும்போது மட்டும்தான் ஒருவனுக்கு மன ஏக்கம் வருகிறது என்பதையும் நம்மால் காண முடிகின்றது.

**ஒருவனிடத்தில் தன்னைப்பற்றிய உள்ளார்ந்த ஏக்கமின்றி, வெறும் சொற்பொழிவுகளைக் கேட்பதினாலோ, அல்லது கேட்டவற்றை மற்றவர்களுக்கு கூறுவதினாலோ? ஒருவன் ஆத்மாவை அனுபவமாக உணர முடியாது.**

இதுப்போன்ற ஆத்யாத்மிக யோகம் என்கின்ற உயர் உண்மையை அடைய வேண்டும், அதன் வாயிலாக அந்த தூய அறிவை உணர வேண்டும். அத்தகைய ஆத்மீக தாகம் என்பது, நம்முடைய அன்றாட வாழ்வில் இருக்கின்ற உணவு, உடை, உத்தியோகம் போன்று, நமது தினசரி தேவைகளுள் ஒன்றாக வேண்டும். அப்போது மட்டுமே நம்மால், அந்த ஆத்மாவை அறிய முடியும், அதனை அனுபவமாக்கவும் முடியும்.

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥ २४॥

நாவிரதோ துச்சரிதாத் நாசாந்தோ நாஸமாஹித |
நாசாந்தமானஸோ வாபி ப்ரஜ்ஞானேன ஏனமாப்னுயாத் || 24 ||

பொருள்:

தீய பழக்கத்திலிருந்து விலகாதவன், புலனடக்கம் இல்லாதவன், மன ஒருமைப்பாடு இல்லாதவன், மனதில் பரபரப்பு அடங்கப் பெறாதவன் போன்ற இத்தகைய மனிதர்கள் எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தாலும், இவர்கள் ஆத்மாவை அறிவதும் இல்லை அனுபவிப்பதும் இல்லை.

இத்தகைய உயர் உண்மைகளை அடைவதற்கான சில அடிப்படைப் பண்புகள் இங்கே கூறப்படுகின்றன.

1. **நல்லொழுக்கம்:**
 ‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐‐

எந்த ஒன்றையும் செய்ய வேண்டுமானால் அதற்கு ஆற்றல் தேவை. பௌதீகமாக ஒன்றைச் செய்ய உடம்பின் ஆற்றல் வேண்டும். மனத்தால் ஒன்றைச் செய்ய வேண்டுமானால் மன ஆற்றல் வேண்டும்.

உயர் உண்மைகளை நாடி, இறைவனைத் தேடி செய்யப்படுகின்ற அனைத்தும் மனத்தின்மூலமே செய்யப்படுகின்றன. அதற்கு மன ஆற்றல் தேவை. இந்த ஆற்றல் ஒழுக்க வாழ்வின்மூலம் மட்டுமே அடையப்படுகிறது.

தூய்மையின் ஆற்றல் நிலையான ஆற்றல் ஆகும். மனத்திற்கு இந்த ஆற்றல் வரும்போது தான் அதனால் உயர்ந்த உண்மைகளைச் சந்திக்க முடிகிறது, அதற்கான வழியில் செல்ல முடிகிறது. இந்த ஆற்றலை தருவது நல்லொழுக்க வாழ்க்கை மட்டுமே.

2. புலனடக்கம்:
   ----------

புலன்கள் புற உலகை நாடுமாறே படைக்கப்பட்டுள்ளன என்று இதே உபநிஷதம் பின்னால் (2.1.1) கூறுகிறது.

எனினும் ஒரு லட்சியத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு ஏற்புடையவற்றை மட்டுமே நாடுமாறு அவற்றிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இது புலனடக்கம்.
தொடர்ந்த பயிற்சியால் இதனைச் சாதிக்க முடியும்.

3. மன ஒருமைப்பாடு:
   ---------------

பணம் சம்பாதிப்பதிலும் சரி, கடவுளை வழிபடுவதிலும் சரி, மற்ற எதைச் செய்வதிலும் சரி, மன ஒருமைப்பாடு ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்ற அளவுக்கு அந்த காரியத்தை நாம் நன்றாகச் செய்ய முடியும். இந்த ஒரு முயற்சியால் மட்டுமே, இந்த ஒரு சாவியால் மட்டுமே இயற்கையின் கதவுகளைத் திறக்க முடியும், அதன் ஒளியை வெளியே கொண்டுவர முடியும். இந்த ஒருமைப்பாட்டுச் சக்தியே அறிவுப் பொக்கிஷத்திற்கான ஒரே திறவுகோல். இதற்கான வாழ்வியல் முறை என்பது, எதிலும் பதட்டமில்லாமல் வாழ்வது ஆகும்.

4. பரபரப்பின்மை:
   ------------

எந்தப் பூவிலும் அமராமல் படபடத்தபடியே பறக்கின்ற வண்ணத்துப்பூச்சிபோல் மனம் சிலவேளைகளில் பரபரப்பதை அனைவரும் உணர முடியும். இந்த நேரங்களில் மனத்தால் எதிலும் ஆழ்ந்து ஈடுபட இயலாது; ஜபம் தியானம் போன்றவற்றில் கட்டாயமாக மனத்தைச் செலுத்த முடியாது. புலனடக்கம், மன ஒருமைப்பாடு, மனத்தின் பரபரப்பின்மை அனைத்தையும் ஒழுக்க வாழ்வின்மூலம் நாம் அடைய முடியும். அதைத் தவிர வேறு வழியில்லை.

அனைத்திற்கும் மூலமாக அமைவது நல்லொழுக்கம். ஆன்மீக வாழ்வில் ஈடுபட விரும்பும் ஒருவருக்குச் சிந்தையில், சொல்லில், செயலில் தூய்மை முற்றிலும் இன்றியமையாதது. ஒழுக்கவாழ்க்கை இல்லாமல் எவ்வளவு கற்றாலும் கேட்டாலும் முயற்சித்தாலும் ஆத்மாவை அடைய முடியாது என்பது இங்கே ஆணித்தரமாகக் கூறப்படுகிறது.

## ஆத்மாவின் மகிமை

यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः ।
मृत्युर्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः ॥ २५॥

யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதன: |
ம்ருத்யுர் யஸ்யோபஸேசனம் க இத்தா வேத யத்ர ஸ: || 25 ||

பொருள்:

வேத அத்யயனம் செய்து, புற அறிவின் ஆற்றலைப் பெற்ற பிராமணனாக இருந்தாலும், திடமான தோள் வலிமை கொண்ட சத்திரியனாக இருந்தாலும், இவர்களிடமிருந்து வெளிப்படுகின்ற திறமைகள் அனைத்தும் தனக்கே உரித்தானது என்ற ஆணவம் அவர்களை மரணத்தின் முன்னால் மண்டியிட வைத்துவிடும்.

ஆகவே, மரணம் என்பது யாருக்கு ஊறுகாய் போன்று, ஏற்றுக் கொள்ள முடிகின்றதோ? அவர்கள் மட்டுமே ஆத்மாவை உணர்வார்கள். மற்றபடி, மரணபயம் இருப்பவர்கள், வாழ்க்கைப்பற்றிய பயம் இருப்பவர்கள் இவர்கள் யாரும் ஆத்மாவை அனுபவமாக உணர முடியாது.

பொதுவாக, மரணதேவனிடம் இருந்து யாருமே தப்பிக்க முடியாது. மரணத்திற்கு முன்னால் ஒருவன் தன்னை அறிய வேண்டும். அதற்கு அவனிடம் தன்னைப் பற்றி அறிய வேண்டும் என்ற மன ஏக்கம், மற்றவர்களைப் பற்றி அறியக்கூடிய அன்பின் ஆற்றல் ஆகிய இவைகளை அடையும்போது மட்டுமே அவன் ஆத்மாவை உணர்கின்றான்.

## இந்த அத்தியாயதின் கண்ணோட்டம்

இந்த இரண்டாவது அத்தியாயத்தின் வாயிலாக, நம்முடைய வாழ்க்கையின் இரண்டு கோணங்களைப் பார்த்தோம். அவைகள் அகவளர்ச்சி மற்றும் புற வளர்ச்சி ஆகியன. நாம் ஒவ்வொருவரும் இந்த இரண்டையும் சமமாகக் கையாளத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று பார்த்தோம்.

அடுத்து, இறைநெறியும், உலகியலும் என்பதில், இந்த இறைவாழ்க்கை என்பது, அகவாழ்க்கை என்றும், உலகியல் வாழ்க்கை என்பது புறவாழ்க்கை என்றும் பார்த்தோம்.

இந்த இரண்டிலுமே, புற வாழ்க்கை வாழும்போதே, அக வாழ்க்கையைப் பற்றிய அறிவை அடைய வேண்டும். அதற்காக நம்மிடம் ஏற்றி வைக்கப்பட்ட அறியாமைகளை நீக்க வேண்டும் என்றும் பார்த்தோம்.

அதற்கடுத்ததாக, இதுப்போன்ற உயரிய அத்யாத்ம யோகத்தைக் கற்றுக் கொடுக்கின்ற குருவும் அபூர்வம், இதுபோன்ற ஆத்ம வித்யாவைக் கற்றுக் கொள்ள வருகின்ற மாணவர்களும் அபூர்வம் என்றும் பார்த்தோம். ஆக, நாம் இதிலே, எப்படிப்பட்ட குருவாக இருக்கின்றோம், அல்லது எப்படிப்பட்ட மாணவர்களாக இருக்கின்றோம் என்பதையும் நம்மை நாமே சுய விசாரம் செய்து உணர்ந்துக் கொள்ள வேண்டும். அதற்கான அத்யாத்ம யோகம் என்றால் என்ன? என்றும் பார்த்தோம்.

அடுத்து, இறைவன் உறையும் ஹிருதயக்குகை என்பது என்ன? அது எங்கே நம் உடலில் இருக்கின்றது என்பதையும் பார்த்தோம். அந்த வகையிலே, இறைவனின் இருப்பிடமாக நம்மிடம் இருக்கின்ற இருதயக்குகையில் இருக்கும் இறைவனை உணரவேண்டிய உயரிய ஆத்மசாதனை வெட்டவெளி தியானம், அத்யாத்ம யோகம் அல்லது சுய விசாரம் என இவைகள் வாயிலாக ஆத்மாவை அனுபவமாக உணரலாம் என்றும் பார்த்தோம்.

இறுதியாக, மரணம் யாருக்கு? ஆத்மாவின் இயல்புகள் மற்றும் ஆத்மாவை யாரால் உணர முடியும்? அதற்கான ஆத்ம சாத்கனின் பண்பு நலன்கள் என எல்லாவற்றையும் இந்த இரண்டாவது அத்தியாயத்டில் வாயிலாக நன்கு அறிந்துக் கொண்டோம். இனி அடுத்து முதல் பாகத்தின் மூன்றாவது அத்தியாயத்தைக் காணலாம்.

इति काठकोपनिषदि प्रथमाध्याये द्वितीया वल्ली ॥

**(இதி காடக உபநிஷதி ப்ரதம அத்யாயே த்விதீயா வல்லீ)**

இவ்வாறு கட உபநிஷதத்தில் முதல் பகுதியின் **இரண்டாம் அத்தியாயம்** நிறைவுறுகிறது.

## பகுதி – 1 (அத்தியாயம் – 3)

**மனிதன் என்றால் யார்?**
**-------------------------**

**1.3 விழித்தெழு!**

உடம்பின் மாற்றங்களாலோ மனத்தின் மாற்றங்களாலோ பாதிக்கப்படாத ஆத்மா என்ற ஒன்று இதயக்குகையில் உள்ளது. அதை அறிந்து தன்னுள் உணர வேண்டும். உடலியும், ஆத்மாவையும் பிரித்தறிந்து வாழ்தல், பிரணவ தியானம் போன்றவைகள் அதற்குரிய சாதனைகள் என்பதைச் சென்ற பகுதியில் கண்டோம்.

ஆனால், இந்தச் சாதனைகள் சிறப்பாக, சிறந்த பலனளிக்க வேண்டுமானால், **புத்தி** விழிப்புற்றிருக்க வேண்டும் என்பதை இந்தப் பகுதியில் வலியுறுத்தப்படுகிறது.

வாழ்க்கையை ஒரு தேர்ப் பயணத்துடன் ஒப்பிட்டுக் கூறுகின்ற எமதர்மன், தேரோட்டி விழித்திருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதைக் கூறுவதன்மூலம் புத்தியின் விழிப்பு எவ்வளவு முக்கியம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். மனிதன் என்றால் யார்? என்பது பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தையும் இங்கு நாம் காண்கிறோம்.

ऋतं पिबन्तौ सुकृतस्य लोके
गुहां प्रविष्टौ परमे परार्धे ।
छायातपौ ब्रह्मविदो वदन्ति
पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः ॥ १॥

ரிதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே
குஹாம் ப்ரவிஷ்ட்டௌ பரமே பரார்தே |
சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி
பஞ்சாக்னயோ யே ச த்ரிணாசிகேதா || 1 ||

பொருள்:

செயல்களின் பலனை அனுபவிக்கின்ற இருவர் இந்த உடம்பில் உள்ளனர். அவர்கள் நிழலும், வெயிலும் போல, இருட்டும், ஒளியும் போல ஒருவருக்கொருவர் மாறுபட்டவர்கள். இந்த உடம்பிலுள்ள நுண்ணியதான இதயக் குகையில் புகுந்தவர்கள் இவர்கள்.

இதைப்பற்றிய தெளிவை மிக உயரிய மகான்களும், ஐந்து அக்கினியை உடையவர்களும், மூன்று முறை நசிகேத யாகம் செய்தவர்களும் இவ்வாறு கூறுகின்றனர்.

இந்த உடம்பில் இருவர் இருப்பதாக சொல்லப்படுகிறது. இருவரும் செயல்களின் பலனை அனுபவிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நிழலும், வெயிலும் போல, ஒளியும், இருளும்போல ஒருவருக்கொருவர் மாறுபட்டவர்கள் என்று கூறுவதால், ஒருவர் செயல்களின் பலனை அனுபவிக்கிறார், மற்றவர் எதிலும் பங்கெடுக்காமல் சாட்சியாக இருக்கிறார் என்று புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதாக பகவான் ஸ்ரீசங்கரர் இந்த உபநிஷத பாஸ்யத்தில் விளக்குகிறார்.

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्न्यो अभिचाकशीति॥

**த்வா ஸுபர்ணா ஸ்யுஜா ஸகாய ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே |**
**தயோரண்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யநஸாந்நந்யோ அபிசாகசீதி |**

இந்த இருவரைப்பற்றி முண்டக உபநிஷதம் ஒரு கதையின் மூலமாகவே இந்தக் கருத்தை விளக்குகிறது.

ஒரு மரத்தில் இரண்டு பறவைகள் வாழ்கின்றன. ஒன்று அந்த மரத்திலுள்ள இனிப்பும் புளிப்பும், கசப்புமான பல்வேறு சுவைகளையுடைய பழங்களைத் தின்கின்றது. அதன் காரணமாக, அது இன்பம் மற்றும் துன்பங்களை மாறிமாறி அனுபவிக்கிறது. மற்றொரு பறவை எதையும் திண்ணாமல் அமைதியாக அனைத்தையும் பார்த்தவண்ணம் சும்மா வேடிக்கைப் பார்த்துவாறு அமர்ந்துக் கொண்டிருக்கிறது.

செயல்களின் ஈடுபட்டு, சுக, துக்க அனுபவங்களைப் பெற்று, அவற்றின் பலன்களை அனுபவிப்பது ஜீவன். இது மனம் மற்றும் பிராணனின் சேர்க்கை என்பதினால், எல்லாவற்றிலும் பங்கு கொண்டு, பரிதவித்து வாழ முற்படுகின்றது, ஆனால், இவைகள்

எதிலும் பங்கெடுக்காமல் அனைத்தையும் பார்த்து கொண்டு சாட்சியாக நிற்கின்ற ஒன்றே ஆத்மா.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் இதுப்போன்ற ஆத்யாத்ம யோகத்தைக் கற்றுணர்ந்து, ஆத்மாவுடன் நம்மை ஒன்றுபடுத்திக் காணக்காண நாம் இறைநிலையை, இறை அனுபூதியைப் பெறுவோம். இதுப்புரியாமல், இந்த உடலையும், மனதையும் அபின்மானித்து, ஜீவனுடன் நம்மை ஒன்றுபடுத்தி காணக்காண நாம் உலகியலில், குழப்பங்களில் அழுந்துவோம்.

மேலே கண்ட உண்மையை மகான்களிடமிருந்து கேள்விப்பட்டதாக உபநிஷத முனிவர் இங்கு கூறுகிறார். மேலும், மூன்று வகையான மகான்களைப்பற்றி அவர் கூறுகிறார்.

1. **மகான்கள்:**

   ---------

இறைவனை உணர்ந்தவர்கள் என்று பொருள்படுகின்ற **ப்ரஹ்மவித்** என்ற வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. **ஐந்து அக்கினி உடையவர்கள்:**

   --------------------------

சூரிய ஆற்றல் என்பது உயிரினங்களின் எந்த வகையான மாற்றத்திற்கும் ஆதாரமாக உள்ளது. அக்னி இந்த சூரிய சக்தியை உயிரினங்களில் பிரதிபலிக்கிறது. அக்னி தனது அமானுஷ்ய சக்தியால் பொருளை எந்த வடிவத்திலும் மாற்றும் திறன் கொண்டது. ஒரு நிலையில் உடலியல் செயல்பாடுகளை பராமரித்தல் அல்லது அக்னியின் இயல்பான நிலையைச் சார்ந்து குணப்படுத்துதல் எனவே மனித வாழ்வின் பராமரிப்பே அக்னியைச் சார்ந்தது. இது தோல் ஆற்றல் வேலை திறன் வலிமை ஊட்டச்சத்து செயல்முறை மற்றும் உடலின் வளர்ச்சியின் பளபளப்பு மற்றும் நிறம் காரணமாகும். உயிர் சக்திகளான பிராணன்கள் அக்னியைச் சார்ந்தது. அக்னி என்பது மனித உடலின் பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்கு உதவும் அடிப்படை கூறுகளில் ஒன்றாகும்.

பொது மொழியில் அக்னி என்றால் நெருப்பு என்று பொருள். ஆனால் உயிரினத்தின் சூழலில் இது செரிமானம் மற்றும் வளர்சிதை மாற்றத்திற்கு காரணமான சக்தி அல்லது வெப்பத்தை குறிக்கிறது. அக்னி பதின்மூன்று வகையாகும்.

**பூத அக்னி** (ஐந்து வகைகளில்) – **பிருத்வி**–பூதாக்னி, **ஜல**–பூதாக்னி, **தேஜ**–பூதாக்னி, **வாயு**–பூதாக்னி, **ஆகாஷ**–பூதாக்னி.

அடுத்து, அக்னிஹோத்ரம் என்பது வீட்டின் ஒரு பகுதியில், ஒரு சிறு அக்னி குண்டம் அமைத்து, அக்னி வளர்த்து அதனை அணையாமல் காத்து, நாள்தோறும் காலை மற்றும் மாலை வேளையில் (சூரியோதயம் மற்றும் சூரிய அஸ்தமனம்) இரு நேரங்களிலும் ஒரு இல்லறத்தான், காயத்ரி மந்திரம் செபித்து செய்யக்கூடிய வேதகால சிறு வேள்வியாகும். இவ்வேள்வியை யார் உதவியுமின்றி தனிமனிதன் செய்ய வேண்டியது.

அக்னி ஹோத்திரம் செய்ய வேண்டிய பொருட்கள்: சிறு அக்னி குண்டம், சாண வறாட்டிகள், பசு நெய் மற்றும் முனை உடையாத பச்சரிசி.

அக்னி ஹோத்திரம் வேள்வியை செய்பவருக்கு "**அக்னி ஹோத்திரி**" எனும் சிறப்பு பெயரிட்டு அழைக்கின்றனர். அவ்வாறு அன்றாடம் செய்துவந்த அக்னி ஹோத்திரி இறந்தபின்பு, அவன் அக்னி ஹோத்திரத்திற்காக வளர்த்த அக்னி குண்டத்திலிருந்து நெருப்பு எடுத்து அவனின் இறந்த சவ உடலை எரிப்பர். பின்னர் அவன் வளர்த்த அக்னி குண்டத்தின் நெருப்பு அணைக்கப்பட்டுவிடும்.

இது நம்முடைய பண்டையகால ரிஷிகள் கற்றுக்கொடுத்த இல்லறத்தான் கட்டாயம் செய்ய வேண்டிய நித்யகர்மா என்பதாகப் பார்க்கப்பட்டது. அதன் தாத்பர்யம் என்னவெனில், இந்த பூமியில் வளிமண்டலத்தில் உள்ள காற்று மாசுக்களின்றி, தூய்மையான பிராண வாயுவை பரவச்செய்து, மனிதன் சுவாசிக்கக்கூடிய பிராணனை வளர்த்துக் கொள்ளும் வழிபாட்டின் வாயிலாக வாழ்க்கையை ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதாகப் பார்க்கப்பட்டது.

இதில் இன்னும் சில வகைகள் உள்ளன.

கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம் என்பவை **ஐந்து** அக்கினிகள். இல்லறத்தான் இந்த ஐந்து அக்கினிகளையும் வீட்டில் நிறுவி வழிபட வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**கார்ஹபத்யம் –** குல தெய்வத்தின் வடிவமாகக் கருதப்படுவது. இல்லற தர்மத்தைப் பரிபாலிப்பது வரை இந்த அக்கினி எரிய வேண்டும்.

**ஆஹவனீயம் –** ஆஹுதி அளிப்பதற்கான அக்கினி

**தக்ஷிணாக்னி –** தக்ஷிணம் என்றால் மகிழ்ச்சி. மகிழ்ச்சியைத் தருகின்ற அக்கினி. இது தெற்கு மூலையில் நிறுவப்படுகிறது.

**ஸப்யம் –** சாட்சி ரூபமாக விளங்குகிறது. செயல்கள் அனைத்தையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்த்துகின்ற அக்கினி.

**ஆவஸத்யம் –** ஆவஸத்யம் என்றால் வீடு. வீட்டிற்கு மங்கலத்தைத் தருகின்ற அக்கினி.

இந்த ஐந்து அக்னியை உடையவர்கள் ரிஷிகள்.

3. **மூன்று முறை நசிகேத யாகம் செய்தவர்கள்:**
   **-----------------------------------------------------------**

நசிகேத யாகம் என்பதை மூன்று முறை செய்த முனிவர்கள் என்றும் இங்கு கூறப்படுகின்றது. அதைத்தான் கடந்த அத்தியாயங்களின் வாயிலாகப் பார்த்தோம். அந்த மூன்று முறைகள் என்னென்ன? என்றால், **மாதா, பிதா, குரு** இவர்கள் மூவரையும் கொண்டவன் **தவம், ஸ்வாத்யாயம், ஈசுவர ப்ரணிதானம்** என்ற முறையில் இந்த நசிகேத யாகம் செய்யத் தகுதியானவன் என்று பார்த்தோம். இதைப்பற்றி ஏற்கனவே (1.1.15–19) கண்டோம்.

## ஒரு சுயத் தூண்டுதல்

यः सेतुरीजानानामक्षरं ब्रह्म यत् परम् ।
अभयं तितीर्षतां पारं नाचिकेतँ शकेमहि ॥ २॥

**ய: ஸேதுரிஜானானாம் அக்ஷரம் ப்ரஹ்ம யத் பரம் |**
**அபயம் திதீட்ஷதாம் பாரம் நாசிகேதம் சகேமஹி || 2 ||**

பொருள்:

பின்பற்றுபவர்களுக்கு எந்த வித்யை பாலமாக அமைகிறதோ அந்த நசிகேத யாகத்தைச் செய்ய வல்லவர்கள் ஆவோம். பயமற்ற கரையை அடைய விரும்புபவர்களுக்கு

அழிவற்ற எந்த இறைவன் அடைக்கலமானவரோ அந்த இறைவனை அறிய வல்லவர்கள் ஆவோம்.

ஒரு லட்சியத்தை எடுத்துக்கொண்டு முன்னேறும் போது, சிலவேளைகளில் லட்சியத்தை மறந்து விடுவதுண்டு; அதுபோலவே சிலவேளைகளில் லட்சிய நாட்டம் நீர்த்துப்போவதும் உண்டு. எனவே, தினமும் அதனை நினைவூட்டிக் கொள்வது நல்லது. இது சுயத் தூண்டுதல் எனப்படுகிறது.

இத்தகைய மந்திரங்கள் நமது வேதங்களிலும் உபநிஷதங்களிலும் ஏராளம் உள்ளன. உபநிஷதங்களைப் படிக்கும்போது மட்டுமல்லாமல் இவற்றைப் பொருளுணர்ந்து அவ்வப்போது ஓதுவது நாம் நமது லட்சியத்தில் உறுதியாக இருக்க உதவும். அத்தகைய தொரு மந்திரம் இது.

**வாழ்கையும் தேர்ப் பயணமும் (3 – 9)**

——————————————————————

நமது வாழ்க்கையின் ஓர் அற்புதமான சித்திரம் இந்த ஏழு மந்திரங்களில் கூறப்படுகிறது.

आत्मानँ रथितं विद्धि शरीरँ रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥ ३॥

ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து |
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச || 3 ||

பொருள்:

ஆத்மா பயணம் செய்பவன், உடம்பு தேர், புத்தி தேரோட்டி, மனம் கடிவாளம்.

புலன்கள் குதிரைகள்; உலகப் பொருட்கள் அந்தக் குதிரைகள் செல்வதற்கான பாதைகள்; உடம்பு புலன்கள், மனம் ஆகியவற்றுடன்கூடிய ஜீவன் வாழ்க்கையை அனுபவிப்பவன் என்று மகான்கள் சொல்கின்றனர்.

इन्द्रियाणि हयानाहुर्विषयाँ स्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥ ४॥

இந்திரியாணி ஹயானாஹு: விஷயாம்ஸ் தேஷு கோசரான் |
ஆத்மேந்த்ரிய மனோயுக்தம் போக்தேத்யாஹுர் மனீஷிண: || 4 ||

பொருள்:

புலன்கள் குதிரைகள் ஆகும், இந்த உலகப் பொருட்கள் அந்தக் குதிரைகள் செல்வதற்கான பாதைகள். உடல், புலன்கள், மனம் ஆகியவற்றுடன் கூடிய ஜீவன் வாழ்க்கையை அனுபவிப்பவன் என்று மகான்கள் கூறுகின்றனர்.

यस्त्वविज्ञानवान्भवत्ययुक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाण्यवश्यानि दुष्टाश्वा इव सारथेः ॥ ५॥

யஸ்த்வவிஜ்ஞானவான் பவதயுக்தேன மனஸா ஸதா |
தஸ்யேந்த்ரியாணி அவச்யானி துஷ்ட்டாச்வா இவ ஸாரதே: || 5 ||

பொருள்:

யார் விழிப்புறாதவனோ, பிளவுபட்ட மனத்தை உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்காத குதிரைகள்போல் வசப்படாமல் போகின்றன.

यस्तु विज्ञानवान्भवति युक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाणि वश्यानि सदश्वा इव सारथेः ॥ ६॥

யஸ்து விஜ்ஞானவான் பவதி யுக்தேன மனஸா ஸதா |
தஸ்யேந்த்ரியாணி வச்யானி ஸதச்வா இவ ஸாரதே: || 6 ||

பொருள்:

யார் விழிப்புற்றவனோ, புத்தியில் பொருந்திய மனத்தை உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்கிய குதிரைகள்போல் வசப்படுகின்றன.

यस्त्वविज्ञानवान्भवत्यमनस्कः सदाऽशुचिः ।
न स तत्पदमाप्नोति संसारं चाधिगच्छति ॥ ७॥

யஸ்த்வவிஜ்ஞானவான் பவதி அமனஸ்க: ஸதாசுசி: |
ந ஸ தத் பதமாப்னோதி ஸம்ஸாரம் சாதிகச்சதி || 7 ||

பொருள்:

யார் விழிப்புறாதவனாக, அடங்காத மனத்தை உடையவனாக தூய்மை இல்லாதவனாக இருக்கிறானோ? அவன் இறைநிலையை அடைய மாட்டான். உலகியலிலும் ஆழ்கிறான்.

यस्तु विज्ञानवान्भवति समनस्कः सदा शुचिः ।
स तु तत्पदमाप्नोति यस्माद्भूयो न जायते ॥ ८॥

யஸ்து விஜ்ஞானவான் பவதி ஸமனஸ்க: ஸதா சுசி: |
ஸ து தத் பதமாப்னோதி யஸ்மாத் பூயோ ந ஜாயதே || 8 ||

பொருள்:

யார் விழிப்புற்றவனாக, அடங்கிய மனத்தை உடைவனாக, எப்போதும் தூயவனாக இருக்கிறானோ அவன், எங்கே சென்றால் மீண்டும் பிறப்பு இல்லையோ அந்த இறைநிலையை அடைகிறான்.

विज्ञानसारथिर्यस्तु मनः प्रग्रहवान्नरः ।
सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥ ९॥

விஜ்ஞானஸாரதிர் யஸ்து மன: ப்ரக்ரஹவான் நர: |
ஸோத்வன பாரமாப்னோதி தத் விஷ்ணோ: பரமம் பதம் || 9 ||

பொருள்:

யார் விழிப்புற்ற தேரோட்டியுடனும், கடிவாளமாகிய மனத்தைக் கைப்பற்றியவனாகவும் இருக்கிறானோ அவனே பாதையின் முடிவை அடைகிறான். அது இறைவனின் மேலான இருப்பிடம்.

## வாழ்க்கைப் பயணம்: ஒரு கண்ணோட்டம்

==========================================

3 முதல் 9 வரையுள்ள மந்திரங்களில் நமது வாழ்க்கைப் பயணம் ஒரு தேர்ப் பயணத்திற்கு ஒப்பிடப்படுகிறது. முதலில் உவமையைக் காண்போம், பிறகு அது தரும் செய்தியைப் பார்ப்போம்.

## தேர்ப் பயணமும் வாழ்க்கையும்

தேரில் ஒருவன் பயணம் செய்கிறான். தேரோட்டி ஒருவன் உள்ளான். அவன் கடிவாளத்தைப் பிடித்திருக்கிறான். ஐந்து குதிரைகள் தேரை இழுக்கின்றன. தேர் செல்லும் பாதை ஒன்று உள்ளது. இது தேர்ப் பயணம்.

நமது வாழ்க்கைக்கு உதாரணமாக இது கூறப்பட்டுள்ளது.

**ஆத்மா** – பயணம் செய்பவன்
**தேர்** – உடல்
**புத்தி –** தேரோட்டி
**மனம்** – கடிவாளம்
**புலன்கள்** – குதிரைகள்
**உலகப் பொருட்கள்** – பாதை

## தேர்ப் பயணம் தரும் செய்தி

1. பயணம் உலகப் பொருட்களாகிய சாலை வழியாகத்தான் சென்றாக வேண்டும். அதாவது உலகப் பொருட்களிலிருந்து, உலகிலிருந்து விலக முடியாது. நாம் எதைச் செய்ய வேண்டுமானாலும் உலகப் பொருட்களுடன் வாழ்ந்தபடியேதான் சாதிக்க வேண்டும்.

2. பயணத்தின் வேகமும் வெற்றியும், குதிரைகளைப் பொறுத்து அமைகிறது. குதிரையின் வேகம் கடிவாளத்தால் கட்டுப்படுகிறது. கடிவாளத்தின் இயக்கம் தேரோட்டியைப் பொறுத்தது. எனவே பயணத்தின் வெற்றியோ தோல்வியோ தேரோட்டியால் நிர்ணயிக்கப்படுகிறது.

குதிரைகளுடன் (புலன்களுடன்) போராடுவதாலோ கடிவாளத்தில் (மனதில்) மாற்றங்களைச் செய்வதாலோ எந்தப் பயனும் இல்லை. தேரோட்டி (புத்தி) திறமைசாலியாக இருந்தால் பயணம் எவ்விதத் தடங்கலுமின்று நடைபெறும்.

தேரோட்டி தூங்கிக்கொண்டிருந்தால் பயணம் என்னவாகும்?

இதுவே சாதாரணமாக நம் வாழ்க்கையில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. புலன்கள் தங்கள் போக்கில் போகின்றன. மனம் கட்டவிழ்ந்து பல திசைகளில் பரந்து கிடக்கிறது. ஏனெனில் புத்தி விழிப்புறவில்லை. இந்த நேரத்தில் தேரோட்டியாகிய புத்தியை எழுப்புவதே நாம் செய்ய வேண்டியது. அதை விட்டுவிட்டு மனத்துடனோ? புலன்களுடனோ? ஒருவன் போராடுவதினால் பெரிதாக எந்தப் பலனும் கிடைப்பதில்லை.

3. புத்தியை எழுப்புதல் அல்லது புத்தி விழிப்படைதல் என்றால் என்ன?

சாதாரணமாக அறிவு மூன்று நிலைகளில் செயல்படுகிறது –

1. **இயல்புணர்ச்சி, 2. அறிவு, 3. உள்ளுணர்வு.**

1. **இயல்புணர்ச்சி:**

------------

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இயல்பாக எழுகின்ற உணர்ச்சி, வாத்துக்குஞ்சு நீந்துவதும், குருவிகள் கூடுகட்டுவதும் யாரும் கற்றுக்கொடுத்ததல்ல. பிறவியிலிருந்தே இவை அவற்றிடம் இயல்பாக உள்ளன.

அதுப்போல ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகக் காணப்படுகின்ற இயற்கையான மனப்போக்குகளே இயல்புணர்ச்சி. இது ஆழ்மனத்திலிருந்து வருவதால் பொதுவாக தவறுவதில்லை. பொதுவாக, இதற்கேற்பவே ஒருவன் தனது வாழ்க்கைச் சூழ்நிலைகளை எதிர்கொள்கிறான். எனினும் இது நமது ஆதிக்கத்தின் கீழ் இல்லாததால் நாம் விரும்பிய விதத்தில் இதனைப் பயன்படுத்த முடிவதில்லை.

2. **அறிவு:**

-----

புற உலகிலிருந்தும், வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் பெறுகின்ற அறிவு, புற உலகைச் சார்ந்திருப்பதால் இந்த அறிவு தவறாக இருக்கவும் வாய்ப்பு உண்டு. எனவே இதனை முழுமையாக நம்பி நாம் செயல்பட முடியாது.

3. **உள்ளுணர்வு:**

------------

கற்றறிவு, கேட்டறிவு போன்ற எந்தப் புற உபகரணங்களின் துணையும் இன்றி உணர்வின் ஆழங்களிலிருந்து எழுகின்ற அறிவு இது. இது ஒரு போதும் பொய்ப்பதில்லை, இந்த உள்ளுணர்வு விழிக்கப் பெற்றவர்களே படைப்பாளிகளாக இருந்தார்கள்.

இது எல்லோரிடத்திலும் செயல்படத் தொடங்கவில்லை. கல்வி, விஞ்ஞானம், கலை, மதம் என்று எந்த துறையை எடுத்தாலும் அவற்றின் உன்னத சிகரங்களுக்கான வாசலாகத் திகழ்கிறது உள்ளுணர்வு. இது விழிப்பதே புத்தி விழிப்பது. இதை புத்தியோகம் என்று கீதை (2.49-58) கூறுகிறது.

இதயத் தூய்மையாலும், பிரார்த்தனையினாலும், காயத்ரி, பஞ்சாக்ஷரம் போன்ற மந்திர ஜபங்களினாலும் மட்டுமே புத்தி விழிப்படைகிறது.

**பயண லட்சியம் 10-11**

-----------------

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தின் லட்சியம் தூய அறிவாகிய இறைவன் மட்டுமே. அவரே அனைத்திலும் வலிமை வாய்ந்தவர். எனவே, பயணத்தின் வெற்றிக்கு அவரை நாடுவதே வழி என்பதைப் படிப்படியாக இனி வரும் இரண்டு மந்திரங்கள் விளக்குகின்றன.

इन्द्रियेभ्यः परा ह्यर्था अर्थेभ्यश्च परं मनः ।
मनसस्तु परा बुद्धिर्बुद्धेरात्मा महान्परः ॥ १० ॥

இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்த்தா: அர்த்தேப்யச்ச பரம் மன: |
மனஸஸ்து பரா புத்தி: புத்தேராத்மா மஹான் பர: || 10 ||

பொருள்:

புலன்களைவிட உலகப் பொருட்கள் வலிமை வாய்ந்தவை. உலகப் பொருட்களை விட மனம் வலிமை வாய்ந்தது. மனத்தை விட புத்தி வலிமை வாய்ந்தது. மகிமை வாய்ந்ததான ஆத்மா புத்தியை விட வலிமை வாய்ந்தது.

महतः परमव्यक्तमव्यक्तात्पुरुषः परः ।
पुरुषान्न परं किंचित्सा काष्ठा सा परा गतिः ॥ ११॥

மஹத: பரமவ்யக்தம் அவயக்தாத் புருஷ: பர |
புருஷான்ன பரம் கிஞ்சித் ஸா காஷ்ட்டா ஸா பராகதி || 11 ||

பொருள்:

ஹிரண்யகர்ப தத்துவத்தை காட்டிலும் மாயை மேலானது. மாயையை காட்டிலும் ஆத்மா வலிமை வாய்ந்தது. ஆத்மாவை விட வலிமை வாய்ந்தது எதுவும் இல்லை. ஆத்மாவே மேலான இலட்சியம். எந்த ஒன்றையும் வசப்படுத்த வேண்டுமானால், அதை விட உயர்ந்த ஒன்றை நாட வேண்டும்.

மேற்கிலிருந்து விலக வேண்டுமானால், கிழக்கு நோக்கி நடப்பதே ஆகும். அதுப்போல, எண்ணங்களால் எழுந்த மனதைக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதாலோ, அங்கே நின்ற போராடுவதாலோ பயனில்லை. செய்ய வேண்டியதெல்லாம் மனதை புத்தியை நோக்கித் திருப்ப வேண்டும். புத்தியின் விழிப்புணர்வுத் தன்மையால், நாம் மனதிலிருந்து விடுபடுவோம்.

அதுப்போலவே மனத்தை வசப்படுத்த, புலன்களை ஒரு கட்டுக்குள் கொண்டுவர அவற்றுடன் போராடுவதோ? அவற்றை அந்த நிலையிலேயே அடக்க முயற்சிப்பதோ? பயனற்றது.

இதையே கீதை, அடக்குவதால் என்ன பயன்?

**(நிக்ரஹ: கிம் கரிஷ்யதி?)** என்று கேட்கிறது. எனவே, கீழானதை வசப்படுத்த மேலானதைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

புலன்களாகிய கண், காது, மூக்கு, வாய், உடம்பு இவற்றின் மூலமே நாம் செயல்படுகிறோம். இவைகள் தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை. ஒன்றைப் பார்க்குமாறு தூண்டப்படும்போது மட்டுமே கண்கள் பார்க்கின்றன, ஒன்றை கேட்குமாறு தூண்டப்படும்போது மட்டுமே காதுகள் கேட்கின்றன.

இவ்வாறே ஒவ்வொரு புலனும் செயல்படுகிறது. புலன்களைத் தூண்டுபவைகள் இந்த உலகப் பொருட்கள். அவற்றின் மீதுள்ள அதீத கவர்ச்சியாலேயே நாம் உலகை அனுபவக்கிறோம். அதனால்தான் புலன்களைவிட உலகப் பொருட்கள் வலிமை வாய்ந்தவைகள் என்று கூறப்பட்டது.

புலன்களின் கவனத்தைக் கவரக்கூடிய பொருட்கள் வெளியில் இருந்தாலும், மனம் புலன்களுடன் ஒத்துழைக்கவில்லை என்றால், அந்தப் பொருட்கள் புலன்களைத் தூண்ட முடியாது.

உதாரணமாக, நமக்கு பிடித்தமான ஒரு திண்பண்டம் வீதியில் விற்றுக் கொண்டு ஒருவன் செல்கின்றான், அந்த வேளையில் நாம் அதைக் கவனிக்காது வேறு எதையாவது தீவிரமாக சிந்தனை செய்துக் கொண்டிருந்ததால், நாம் அந்த திண்பண்டத்தைப் பார்த்தும் பார்க்காததுப் போல வேறு சிந்தனையில் சிக்கிக் கொண்டிருந்தோம். சில நிமிடங்களுக்குப் பிறகு கேட்டால், நான் சரியாக கவனிக்கவில்லையே என்போம். சாதாரண வேளையில் நம் கண்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய நமக்கு மிகவும் பிடித்தமான திண்பண்டம் இப்போது நம் முன்னால் கொண்டுவரப்பட்டும், மனம் அதில் ஈடுபடாததால் நம் கண்களைக் கவர அந்த திண்பண்டத்தால் முடியவில்லை என்பதைப் பார்க்கின்றோம். எனவே, வெளிப்புறப் பொருட்களைவிட நம் மனம் மிகவும் வலிமை வாய்ந்தது. நமது வாழ்க்கைப் பயணத்தின் இந்த மூன்று பகுதிகளையும் நாம் நன்கு அறிவோம்.

புற உலகம் நமக்குத் தெரியும், புலன்களை நாம் அறிவோம் மனத்தை நாம் உணர்கிறோம். இதற்குமேல் உள்ளவை சாதாரணமாக நம்மால் உணரப்படாதவை. இவற்றுள் முதலில் வருவது புத்தி. இது விழிப்புறாத நிலையில் உள்ளது.

புத்தியைவிட வலிமை வாய்ந்தது ஆத்மா.

ஆத்மாவைவிட வலிமையானது ஒன்றுமில்லை, காரணம் ஒரே பரம்பொருளான பிரம்மம் ஒவ்வொரு ஜீவனிலும் **அந்தர்யாமியாக** ஆத்மனாக எங்கும் நிறைந்துள்ளது.

**புத்தி விழிப்புற வேண்டும்**

एष सर्वेषु भूतेषु गूढोऽऽत्मा न प्रकाशते ।
दृश्यते त्वग्र्यया बुद्ध्या सूक्ष्मया सूक्ष्मदर्शिभिः ॥ १२॥

ஏஷ ஸர்வேஷு புதேஷு கூடோத்மா ந ப்ரகாசதே |
த்ருச்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்ம தர்சிபி: || 12 ||

பொருள்:

இந்த ஆத்மா எல்லா உயிர்களிலும் மறைவாக உள்ளது. வெளிப்பட்டுத் தெரிவதில்லை. ஆனால் ஒருமைப்படுத்தப்பட்ட நுண்ணிய புத்தியால் மகான்கள் இந்த ஆத்மாவைக் காண்கின்றனர்.

எப்போதும் சஞ்சலப்படுவது மனம், ஒன்றை நிச்சயமாக முடிவு செய்வது புத்தி.

*(மனோ நாம ஸங்கல்ப விகல்பாத்மிக அந்த: கரண வ்ருத்தி புத்திர் நாம நிச்சயாத்மிக அந்த: கரண வ்ருத்தி வேதாந்த சாரம், 66, 65)*

ஆனால், இந்த புத்தியால் புற விஷயங்களை மட்டுமே முடிவு செய்ய இயலும்; அக உண்மைகளைக் காணும் ஆற்றல் இதற்கு இல்லை. ஏனெனில் இது விழிப்புறாத நிலையில் உள்ள புத்தி. அது விழிப்புறும்போது மட்டுமே நுண்மை பெறுகிறது. அந்த **நுண்ணிய புத்தியால்தான்** ஆத்மாவை உணர முடியும்.

புத்தி விழிப்புற என்ன செய்ய வேண்டும்?

यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेज्ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥ १३॥

யச்சேத்வாங்மனஸீ ப்ராஜ்ஞ தத் யச்சேத் ஜ்ஞான ஆத்மனி |
ஜ்ஞானமாத்மனி மஹதி நியச்சேத் தத் யச்சேத் சாந்த ஆத்மனி || 13 ||

பொருள்:

அக நாட்டம் உடையவன் பேச்சை மனத்தில் ஒடுக்க வேண்டும். மனத்தை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்க வேண்டும். புத்தியை ஸமஷ்டி புத்தியில் ஒடுக்க வேண்டும். ஸமஷ்டி புத்தியை மகிமை வாய்ந்த அமைதியின் இருப்பிடமான ஆத்மாவில் ஒடுக்க வேண்டும்.

சாதனைமுறை இங்கே கூறப்படுகிறது. சாதாரண படியிலிருந்து ஆரம்பிக்கிறது இந்த சாதனை.

பேச்சை மனத்தில் ஒடுக்க வேண்டும் – இது முதற்படி. உயர் வாழ்க்கைக்கு முதற்படி பேச்சுக் கட்டுப்பாடு. (யோகஸ்ய ப்ரதம த்வாரம் நிரோத) என்கிறார் ஸ்ரீசங்கரர்.

தேவையற்ற பேச்சு உயர் வாழ்க்கைக்கு என்றல்ல, சாதாரண வாழ்க்கைக்கும் பெரிய தடையாகும். நமது ஆற்றலில் முக்கியப் பகுதி பேச்சில் செலவழிகிறது. அதனைச் செலவிடாமல் சேமித்தால் அக வாழ்க்கை போன்ற உயர் தேவைகளுக்காக அதனைப் பயன்படுத்த முடியும்.

பேச்சு இரண்டு வகை – **புறப் பேச்சு, அகப் பேச்சு.**

அதாவது, வாய் பேசுவது மற்றும் எண்ணங்களின் கிளர்ச்சி. வாய் பேசாமல் இருந்தாலும் எண்ணங்கள் ஆர்ப்பரித்து எழும். இரண்டும் அடங்க வேண்டும். தேவையற்ற பேச்சைப் பயிற்சியின் மூலம் குறைக்கவோ தவிர்க்கவோ முடியும்.

ஆனால் எண்ணங்கள் எழுவதை எப்படித் தவிர்ப்பது?

ஒரு சாட்சியாக நின்று எண்ணங்கள் எழுந்து அடங்குவதைக் கவனிக்க வேண்டும். எழுகின்ற எண்ணங்களுடன் சேர்ந்து மிதக்காமல் தனித்து நின்று அவற்றைக் காண்பதற்குப் பழக வேண்டும். பேச்சு என்பது ஓர் உதாரணமாகக் கூறப்பட்டது.

இவ்வாறே அனைத்துப் புலன்களையும் வசப்படுத்த வேண்டும். அதாவது புலன்களின் போக்கில் போகாமல் சாட்சியாக நின்று பழக வேண்டும். இதுவே பேச்சை மனத்தில் ஒடுக்குவது என்ற முதற்படி. இந்தப் பயிற்சி மனத்திற்குப் பெரிய ஆற்றலையும் அமைதியையும் தருவதை நாம் உணர முடியும்.

தொடரும் படிகள் நாம் முன்னேற முன்னேற தாமாகவே நிகழ்வதை நாம் காணலாம். மனம் என்ற ஒன்றை நாம் அறிந்திருப்பதால் முதற்படி எளிதாக விளங்குகிறது. ஆனால் விழிப்புற்ற புத்தியோ, ஆத்மாவோ, நாம் அறியாதவை. எனவே சாதனை முறையின் இரண்டாவது படியான விழிப்புற்ற புத்தி அல்லது புத்தி விழிப்புறுவதை உணரும் போதுதான் மனத்தை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்குவது என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தொடரும் படிகள் அனைத்தும் இவ்வாறே. எனவே பேச்சைக் கட்டுப்படுத்தி பயிற்சியைத் தொடங்க வேண்டியதே முக்கியம். பேச்சைக் குறைத்து அமைதியைக் கடைப்பிடிப்பதன்மூலம் அமைதியின் உறை விடமான ஆத்மாவை அறிகிறோம்.

## குருவின் அவசியம்

उत्तिष्ठत जाग्रत
   प्राप्य वरान्निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया
   दुर्गं पथस्तत्कवयो वदन्ति ॥ १४॥

உத்திஷ்ட்டத ஜாக்ரத

ப்ராப்ய வரான் நிபோ**த**த |

க்ஷுப்ரஸ்ய தாரா நிசிதா **து**ரத்யயா

**து**ர்கம் பதஸ்தத்கவயோ வ**த**ந்தி || 14 ||

பொருள்:

**உத்திஷ்ட்டத** – எழுந்திருங்கள் (ஆத்ம ஞானத்தை அடைய வாருங்கள்)
**ஜாக்ரத** – விழித்துக்கொள்ளுங்கள் ( ஆத்மா ஒன்று இருப்பதை தெரியாமல் உறங்கிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து விழித்துக் கொள்ளுங்கள்)

ஆத்ம ஞானத்தை அடைய விழித்துக் கொள்ள இரண்டு படிகள் தாண்டி வர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அவைகள், இந்த உலகத்தை துறக்க வேண்டியதற்கு காரணம் தெரியவில்லை. நாம் அடையும் துயரத்திற்கும், சுகத்திற்கும் இந்த உலகம்தான் காரணம் என்று தவறாக எண்ணிக் கொண்டிருத்தல்.

என்னுடைய அறியாமைகள் மட்டும்தான் நான் அனுபவிக்கும் சுக–துக்கங்களுக்கு காரணம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இந்த அறியாமையிலிருந்து விடுபடுங்கள். இந்த அறியாமை என்னும் உறக்கத்திலிருந்து விழித்தெழுங்கள்.

தக்க சத்குருவை அடைந்து சரியான, நிச்சயமான அறிவை அடையுங்கள். இந்த ஞானத்தை அடையும் பாதையானது மிகக்கடினமானது, கூர்மையான கத்தியின் மீது நடந்து செல்வது போன்று கடினமானது என்று ஞானிகள், ரிஷிகள் கூறுகின்றனர்.

அத்தகைய அருமையான ஆத்மாவைப் பற்றிய பாடலை ஸ்ரீவில்லிப்புத்தூர் **ஸ்ரீ ஆண்டாள்** அருளியிருப்பதையும் பார்க்கின்றோம். அதன் ஆழமான அத்யாத்ம உட்பொருளை உணராமல் மார்கழி மாதத்தில் பாடுபவர்களையும் பார்க்கின்றோம்.

எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்.
'வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'
'எல்லோரும் போந்தாரோ?' 'போந்தார், போந்து எண்ணிக்கொள்'
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

ஆகவே, எழுந்து கொள்வீர்களாக, விழித்து கொள்வீர்களாக, தகுந்த குருவை அடைந்து ஆத்மாவை அறிவீர்களாக. கத்தியின் கூர்மையான முனைமீது நடப்பது எவ்வளவு கடினமானதோ? அதுப்போன்று ஞானத்தை அடைவதற்கான இந்த பாதை கடினமானது என்பதினால், தகுந்த ஒரு சத்குருவை அடைய வேண்டும். ஆனால், அதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய இரண்டு விஷயங்களை இந்த மந்திரம் தெரிவிக்கிறது.

முதலில் ஆன்மவை அறியும் ஆர்வம் எழ வேண்டும், பிறகு புத்தி விழிக்க வேண்டும். எழுந்து, விழித்து, தகுந்த சரியான சத்குருவை அடையும்போது, அவர் அனுபூதி நிலைக்கான வழியைக் காட்டுவார். இந்த மூன்று படிகளையும் **அப்யாரோஹ மந்திரம்** விளக்குகிறது.

நாம் வாழ்வதற்கும், பயிற்சி செய்து உயர் நிலை அனுபவங்களைப் பெறுவதற்குமான ஒரு களம் இந்த உலகம். இதிலே, இந்த புற உலகம் இருப்பதுப் போல, அக உலகம் என்ற

ஒன்றும் இருக்கின்றது. அது நம்முள்ளே நம் மனதை திருப்பிப் பார்க்க வேண்டிய அக உலகம் அது. ஆனால், நாம் பெரும்பாலும், இந்த புற உலகையே முதலும், முடிவுமாகக் கொண்டு வாழத் தலைப்படுகின்றோம். உண்மையற்ற இந்த அறியாமை நிலையிலிருந்து, மிக உயரிய அறிவு நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடிய ஒரு பிரார்த்தனை மந்திரமாக, இந்த அப்யாரோக மந்திரம் உள்ளது. இது பிருஹதாரண்யக உபநிஷதத்தில் வருகின்றது.

**ஓம் அஸதோ மா ஸத்கமய**
**தமஸோ மா ஜ்யோதிர் கமய**
**ம்ருத்யோர்மா அம்ருதம் கமய**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி:**

*உண்மையற்ற நிலையிலிருந்து என்னை*
*உண்மை நிலைக்கு அழைத்துச் செல்வாயாக!*

*அறியாமை இருளிலிருந்து என்னை*
*அறிவுப் பேரொளிக்கு அழைத்துச் செல்வாயாக!*

*மரணத்திலிருந்து என்னை*
*மரணமிலாப் பெருநிலைக்கு அழைத்துச் செல்வாயாக!*

என்று பிரார்த்திக்கிறது இந்த மந்திரம்.

எழுந்திருத்தல் என்றால், உண்மையற்றதிலிருந்து உண்மையைப் பிரித்தறிதல். விழித்தல் என்றால், அறியாமையிலிருந்து விடுபடல். மூன்றாவதாக மரணமிலாப் பெருநிலையாகிய அனுபூதியை அடைதல் என்பது, இறக்காமல் இருக்க வேண்டுமானால், பிறக்காமல் இருக்க வேண்டும். அது எப்படி? என்று ஆராய்வது மட்டுமே, மனிதப் பிறவியின் மகத்தான நோக்கம்.

பொதுவாக, உண்மையற்ற உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதில் உண்மையான இன்பத்தையோ, அமைதியையோ நம்மால் நிச்சயமாக அடைய முடியாது என்பதை உணர்வது முதற்படி.

இது வெறும் புத்தக அறிவாக இல்லாமல், **"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதாவது!"** என்பதுப்போல, அனுபவ உண்மையான நாம் ஆத்மாவை அனுபூதியில் உணர வேண்டும். அதற்கான ஆழமான உண்மைகளை அறிந்துக் கொண்ட ஆசிரியரை நாம் நாட வேண்டும். அவர் மட்டும்தான் நாம் அறியாமையில் மூழ்கியிருக்கிறோம் என்ற உண்மையை நமக்குச் சுட்டிக்காட்டுவார். நம்மிடம் உள்ள அறியாமைகள் நீக்கப்படும்போது மட்டுமே, நாம் அந்த ஒன்றேயான தூய அறிவாக பிரகாசிக்க முடியும்.

ஆக, நம்மிடம் தவறாக ஏற்றி வைக்கப்பட்ட உண்மையற்றதிலிருந்து, உண்மையைப் பிரித்தறியும் போது நமக்குத் தெரிவது என்ன? என்றால், நம்மிடமிருக்கும் அறியாமை தெரியவரும்.

இத்தகைய அறியாமையினால், புற வளர்ச்சியை உண்மையான வளர்ச்சி என்று நம்பி அகவளர்ச்சியில் நாட்டம் செலுத்தாமல் இருப்பதுதான் அது. ஆகவே, இந்த உண்மையைப் புரிந்துகொண்டு அக வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதுதான் விழித்தல் என்கின்ற இரண்டாம்படி.

அக வளர்ச்சியில் நாட்டம் செலுத்தும்போதுதான் குருவின் தேவையை உண்மையாக நாம் உணர்வோம். உண்மையான தேவையுடன் தகுந்த குருவை அடைந்து அவரால் வழிகாட்டப்படும்போது இறையனுபூதி வாய்க்கிறது.

**'குரு'** என்றால் **'கனமானது', 'பெரிது'** என்று அர்த்தம். அதாவது, பெருமை உடையவர், மகிமை பொருந்தியவர் என்று அர்த்தம். **'கு'** என்பது இருட்டு; **'ரு'** என்றால், போக்குவது. அதாவது, நம்மிடமுள்ள அறியாமை இருட்டைப் போக்கி, அறிவு வெளிச்சத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் மட்டுமே குரு எனப்படுவார்கள்.

ஆக, ஒருவன் ஒரு மஹானை குரு என்று நாடிப்போய் அவரின் சிஷ்யனாகி விட்டானேயானால், அவர் அவனுடைய உள் இருட்டைப் போக்கி ஞானம் தந்துவிடுவார்.

குருவின் தரிசனமே நம்மை முக்திக்கு அழைத்துச் செல்லும் என்பது நம்பிக்கை.

**"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"** என்று சொல்வார் தாயுமானசுவாமிகள்.

அதாவது, சில கோயில்களில் மூர்த்தி விசேஷம். அதேபோன்று தலமும் விசேஷமாக விளங்கும். அங்கு தீர்த்தமும் விசேஷமாக அமைந்துவிட்டால், அதன் மகிமை சொல்லவும்

வேண்டுமோ? அப்படி இந்த மூன்றையும் முறையாய் வழிபடத் தொடங்கியவர்களுக்கு, அத்தகைய அதன் உண்மைத் தன்மையை எடுத்துச் சொல்ல ஒரு சற்குருவும் வாய்ப்பார் என்கின்றார் தாயுமானவர்.

அதாவது, ஆலயங்களில் இறைதரிசனமே செய்துவிட்டபின்பும், ஒருவருக்கு குரு தேவையா? என்றால், தேவை என்று தான் சொல்கின்றன நம் ஞான மரபு. காரணம், அத்தகைய ஆலய வழிபாட்டின் அற்புதத்தை அழகாகக் காட்டிக் கொடுத்து, அதற்கான சரியான பாதையைக் காட்டிக் கொடுப்பவரே சற்குரு.

அவர் ஒருவரே எக்காலமும் நமக்குள் அஞ்ஞானம் நேராமல் பார்த்துக்கொள்பவர். அப்படிப்பட்டவர்களுக்குத் தான் இறைவனின் திருவடிப்பேறு வாய்க்கும் என்கின்றன ஞான நூல்கள்.

"தெளிவு குருவின் திருமேனி காணல்!
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்!
தெளிவு குருவின் திருநாமம் சொல்லல்!
தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே!"

குருவின் பெருமையை, முக்கியத்துவத்தை மேற்கூறிய திருமந்திரம் விளக்குகிறது.

அதாவது, குருவின் திருமேனி காணல் என்றால், உண்மையில் குரு என்பவர் எல்லையற்ற இந்த பிரபஞ்சமான ஈஸ்வரனாகவே இருக்கின்றார். அதுவே, அவரது திருமேனி. அத்தகைய குருவின் திருவார்த்தையை கேட்டால், கேட்பவர்களுக்கு தெளிவு பிறக்கும். குருவின் திருவார்த்தை என்பது, அவர் உன்னைப் பற்றியே உனக்கு சுட்டிக் காட்டுவார் மேலும், அத்தகைய குருவின் திருநாமம் என்பது, அவரது சுயம். அதாவது, அந்த '**தூய அறிவு**' என்பதே ஆகும். அத்தகைய குரு உரு என்பது, அவரை தன்னுள் பிரகாசிக்கும் சுய அறிவாய் உணர்ந்து, எப்போதும், அதிலேயே சிந்தனை செய்தல் என்பதே இந்த திருமந்திர விளக்கம்.

ஆக, குரு இன்றி எதுவும் சாத்தியமில்லை. குருவை சரணடைந்து, அவரது அனுக்கிரகிகத்தை முழுமையாகப் பெற்றவனே **ஆத்மஞானம்** பெறத் தகுதியுடையவன் எனக் கூறப்படுகிறது.

தன்னையும், தனக்கு ஆதாரத் தலைவனையும் காட்டிக் கொடுப்பவரே குரு ஆவார். உலகில், குரு என்பவர் அந்த தூய அறிவாகிய பரமனின் பிரதிநிதியாக விளங்குகிறார். அத்தகைய குருவின் போதனைகளை பின்பற்றி நடப்பதுவே உண்மையான வழிபாடாகும்.

இது குறித்து உபநிஷத்தில் கூறியுள்ளது என்னவென்றால், – *"எவருக்கு தெய்வத்திடம் பக்தி இருப்பதுப்போல, குருவிடமும் இருக்கிறதோ? அவருக்கு இந்த உபநிஷதங்களில் சொல்லப்பட்டிருக்கும் உண்மைகள் எல்லாம் தானாகவே அநுபவமாகும்"* என்பதாகும்.

ஆக, குருபக்தி ஒன்றே ஆத்மாவை தன்னுள் உணரதற்கான சாத்தியமாகும். குரு தத்துவத்தை அறியாதவனிடம், **ஜபம், தவம், விரதம், யாகம், தானம்** போன்றவைகள் இருந்தும், அவைகள் அவனுக்கு பலனளிக்காது. ஆகவே, புத்திமான்கள் குருவை சரணாகதி அடைய முயற்சிக்க வேண்டுமென்று சிவபெருமான், குரு கீதையில் பார்வதி தேவியிடம் உபதேசிப்பதிலிருந்து குருவின் மகிமையும் புரியும்.

## இறையனுபூதியின் மகிமை

अशब्दमस्पर्शमरूपमव्ययं
तथाऽरसं नित्यमगन्धवच्च यत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं
निचाय्य तन्मृत्युमुखात् प्रमुच्यते ॥ १५॥

அசப்தமஸ்பர்சமரூபமவ்யயம்
ததாரஸம் நித்யமகந்தவச்ச யத் |
அனாத்யனந்தம் மஹத: பரம் த்ருவம்
நிசாய்ய தன்ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே || 15 ||

பொருள்:

ஒலி, தொடு உணர்ச்சி, காட்சி, சுவை, மணம் என்று புலன்களால் உணரக்கூடிய அனைத்தையும் கடந்த, அழிவற்ற, என்றென்றும் உள்ள, ஆரம்பம் இல்லாத, முடிவற்ற, புத்தியைவிட மேலான, நிலையான தூய அறிவாகிய ஆத்மாவை அனுபூதியில் உணர்பவன் மரணத்தின் பிடியிலிருந்து விடுபடுகிறான்.

மரணத்திற்கான அந்த விநாடி, அந்த க்ஷணம் யாருக்கும் நிச்சயிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு விநாடியும் மரணத்தை நோக்கி நம்மை கொண்டு செல்கின்ற நேரம்தான். இந்த உண்மை தெரிந்தாலும், மனிதன் மரணமில்லா பெருவாழ்வை தேடுவதில்லை.

தனக்குள்ளே பரமன் இருப்பதை மரணம் வரும் தருவாயிலும் மனிதன் அறிந்து கொள்வது என்றுமே இயலாது. ஏனெனில், அவன் மனதில் அப்போது வலியும், துயரமும், நிறைவேறாத ஆசைகளும் நிரம்பி இருக்கும். அந்த வலியும், வேதனையும் கூடிய மரணத் தருவாயில், அவன் பரமனை எங்கே சிந்திப்பான். அது முடியாத ஒன்று.

எப்படி? தன்னுடைய உடலிலிருந்து வரும் நறுமண வாசனையை வேறு எங்கோ இருந்து வருகிறது! என நினைத்து, அறியாமையால் வெளியே தேடி அலையும் கஸ்தூரி மான் போல, இந்த மனிதனும் அவனுக்குள் இருக்கும் பரமனை அறியாமல், புறத்திலேயே நாட்டம் கொண்டுள்ளான் என்பதாகவே பார்க்கப்படுகின்றது.

மனதுக்குள் அமைதியாகச் சலனமின்றி வீற்றிருக்கும் தெய்வீகத்தை அவன் எட்டி கூடப் பார்ப்பதில்லை. தேடுதல் என்று சொன்னாலே வெளியே என்று எண்ணுகிறான் உள்ளே என்று என்றுமே உணர்வதில்லை. இதுவே, மனிதனின் அறியாமை என்பதாகவும் பார்க்கப்படுகின்றது. இந்த அறியாமை நீங்கப் பெற்றவன் தூய அறிவாகிய ஆத்மாவை அனுபூதியில் தன்னுள் உணர்ந்து, மரணத்தின் பிடியிலிருந்து விடுபடுகிறான் என்கின்றது இந்த மந்திரம்.

**உபநிஷத மகிமை 16–17**

**--------------------**

பொதுவாக ஒரு நூலின் முடிவில்தான் உபநிஷத மகிமை சொல்லப்படும். தொடரும் இரண்டு மந்திரங்களுடன் கட உபநிஷதத்தின் முதல் பகுதி நிறைவுறுவதால் இங்கும் கூறப்படுகிறது.

नाचिकेतमुपाख्यानं मृत्युप्रोक्तँ सनातनम् ।
उक्त्वा श्रुत्वा च मेधावी ब्रह्मलोके महीयते ॥ १६॥

நாசிகேதமுபாக்யானம் ம்ருத்யு ப்ரோக்தம் ஸனாதனம் |
உக்த்வா ச்ருத்வா மேதாவீ ப்ரஹ்ம லோகே மஹீயதே || 16 ||

பொருள்:

நசிகேதனுக்கு எமதர்மன் கூறிய இந்தப் பழமையான விஷயத்தை விழிப்புணர்வு பெற்ற ஒருவன் சொல்லவும், கேட்கவும் செய்தால் உயர் உலகங்களில் போற்றப்படுகிறான்.

य इमं परमं गुह्यं श्रावयेद् ब्रह्मसंसदि ।
प्रयतः श्राद्धकाले वा तदानन्त्याय कल्पते ।
तदानन्त्याय कल्पत इति ॥ १७॥

ய இமம் பரமம் குஹ்யம் ச்ராவயேத் ப்ரஹ்ம ஸம்ஸதி |
ப்ரயத: ச்ராத்தகாலே வா ததானந்த்யாய கல்பதே
ததானந்த்யாய கல்பத இதி || 17 ||

பொருள்:

மிகவும் மேலானதும், இரகசியமானதுமான இந்த உபநிஷதத்தைச் சான்றோர்களின் சபையிலோ? அல்லது இதைக் கற்றுக் கொள்ளாமல் மரணத்தை தழுவிய மனிதனின் சிரார்த்த காலத்தில், இந்த சாஸ்திரத்தை மற்றவர்களாவது படிக்க வைத்து கேட்டாலோ? இந்த வையகத்தில் வாழுகின்ற அவனது ஆயுட்காலம்வரை, அது அவனுக்கு எல்லையற்ற ஆனந்தம் என்கின்ற பலனைத் தருகிறது.

பொதுவாக உபநிஷதங்கள் போன்றவற்றைப் படிப்பது ஒரு புண்ணிய செயலாகக் கருதப்படுகிறது. ஆனால் அதன் முழுப் பலனையும் பெற வேண்டுமானால் **புத்தி விழிக்கப் பெற்ற தூயவனாக இருத்தல் அவசியம்** என்பதை இந்த 16 மற்றும் 17 ஆம் மந்திரங்கள் கூறுகின்றன. புத்தி விழிக்கப்பட்டவர்களால்தான் உபநிஷங்களின் உட்பொருளை உணர்ந்துக் கொள்ளவும் முடியும். அதற்கேற்ப செயல்படவும் முடியும் என்பதே இதன் கருத்து. பாடுபடுபவர்களுக்கே பலன், வெறுமனே கிளிப்பிள்ளை போல, சொன்னவற்றையே திருப்பிச் சொல்கின்ற சம்பிராதய சாஸ்திர பாண்டித்தியமெல்லாம் உயர்ந்த பலனைக் கொடுக்காது என்பதாகவே இங்கு பார்க்கப்படுகின்றது. இதுவே, அந்த தூய அறிவாகிய ஆத்மாவை அறிவதற்கான அடிப்படை நிபந்தனைகள் ஆகும்.

इति काठकोपनिषदि प्रथमाध्याये तृतीया वल्ली ॥

இத்துடன் கடோபநிஷதத்தின் **முதல் பகுதியின் மூன்றாவது அத்தியாயம்** நிறைவடைந்தது. இனிவருவது இந்த உபநிஷதத்தின் இரண்டாம் பகுதி ஆகும்.

## இந்த அத்தியாயதின் கண்ணோட்டம்

இந்த அத்தியாயத்தில் இதுவரை நம்மில் இருவர் இருக்கின்றார்கள் என்று பார்த்தோம். அவர்களில் ஒருவன் ஜீவன் மற்றொருவர் ஆத்மா. அதாவது, இவர்களை மனம் மற்றும் அறிவு என்பதாகப் பார்த்தோம்.

அடுத்து, நம்மை நாம் அறிவதற்கான சுய தூண்டல் என்ன? என்பதைப் பார்க்கும்போது, ஒரு இலட்சியத்தை அடைவதற்கான நோக்கமாகக் கொண்டு, நாம் முன்னேறும்போது, இலட்சிய நாட்டம் நீர்த்துப் போவதை நாம் உணராமல் இருக்கின்றோம். அதை உணர்வதற்க்கு நாம் கடந்து வந்த பாதையை நினைவூட்டிப் பார்க்கும்போது, நம்முடைய இலட்சியம் நம் நினைவுக்கு வரலாம்.

மேலும், வழ்க்கையும், தேர்ப்பயணமும் என்ற தலைப்பிலே, மிக உயரிய விசயத்தை விவேகத்தினால் மட்டுமே மனிதன் அடைய முடியும் என்பதாக, தேர் காட்டும் பாதை என்ன? என்றும், அந்த தேர் பயணத்தின் இறுதி இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், தேரோட்டியாக இருக்கும் புத்தி விழித்துக் கொள்ள வேண்டும் என்று பார்த்தோம்.

அடுத்து, இத்தகைய பயணத்தின் இலட்சியம் என்ன? என்று பார்க்குபோது, அது இறைவனாகிய அந்த தூய அறிவை நம்முள் உணர்வதே என்றும் பார்த்தோம். அதற்கு அடுத்து, இதற்காக நம்முடைய புத்தி விழிப்புற வேண்டும், அதற்காக என்ன செய்ய வேண்டும்? என்றும் பார்த்தோம்.

அத்தகைய புத்தி விழிப்புறுவது என்பது, நம்முடைய தனித்த புத்தியாகிய வியஸ்டி புத்தி மட்டுமல்ல, நம்முடைய ஒட்டு மொத்த புத்தி சக்தியாக சமஸ்டி புத்தி எனும் ஈஸ்வர புத்தியை உணர்ந்து, நாம் அந்த புத்தியிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும் என்றும் பார்த்தோம்.

இதனை அடுத்து, இதற்கான அத்தனை முயற்சிகளும் நல்லவிதமாக முடிய வேண்டுமானால், அதற்கு சத்குரு அவசியம் என்றும் பார்த்தோம். இறுதியாக, இறையனுபூதியின் மகிமை மற்றும் இந்த சாஸ்திரத்தின் மகிமை என எல்லாவற்றின் மூலமாக ஒரு தெளிந்த அறிவை அடைந்தோம்.

************

## பகுதி – 2 (அத்தியாயம் – 1)

# இரண்டாம் பகுதி

### 2 – 1. அதுவே நீ

கட உபநிஷதத்தின் இரண்டாம் பகுதி ஆரம்பிக்கிறது. உயர் வாழ்விற்கான அடிப்படைகள் சிலவற்றை முதற் பகுதியில் கண்டோம். சிரத்தை, ஆசையின்மை போன்ற அடிப்படைப் பண்புகளுடன் புத்தியின் விழிப்பு மிகவும் அவசியம் என்பது அங்கே விளக்கப்பட்டது. விழிப்புற்ற புத்தியில் எவ்வாறு ஆன்ம தரிசனம் உண்டாகிறது, இறையனுபூதி என்றால் என்ன? போன்றவற்றை இனி வருகின்ற இந்த இரண்டாம் பகுதி கூறப்போகின்றது.

கட உபநிஷதம் கூறுகின்ற வித்யைகளுள் மற்றொன்றான **"அங்குஷ்ட்டமாத்ர வித்யை"** இந்தப் பகுதியில் வருகிறது.

மரணத்திற்குப் பின்னால் என்ன நிகழ்கிறது? என்பது நசிகேதனின் கேள்வி. மரணம் என்பது உடம்புக்கு மட்டுமே, மரணத்தால் பாதிக்கப்படாத ஒன்று இந்த உடம்பினுள் உள்ளது. **அதுவே நீ** என்று அவனுக்கு இங்கே உபதேசிக்கிறான் எமதர்மன்.

அது எனப்படுகின்ற அந்த ஆத்மா இனி வரும் மூன்று அத்தியாயங்களிலுமாக 10 கோணங்களில் விளக்கப்படுகிறது. ஆழ்ந்த சிந்தனைக்கு, தியானத்திற்கு உரியது இனி வரும் அத்தியாயயங்கள்.

எதை நினைக்கிறோமோ? அதுவாகவே ஆகிறோம். நான் உடம்பல்ல, உயிரல்ல. அனைத்தையும் கடந்த ஆத்மா என்பதைத் திரும்பத்திரும்ப பல்வேறு கோணங்களில் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுகிறது. **'அதுவே நீ'** என்ற இந்த உபதேசப் பகுதி.

**'அதுவே நான்'** என்ற இந்த உயர்நிலை தியானத்தின் மூலம் நாம் ஆத்மா என்பதை உணர்கிறோம், ஆத்மா ஆகிறோம். ஆத்மாவை அறிவதற்கான அடிப்படை நிபந்தனையுடன் இந்த இரண்டாவது பகுதியின் முதல் அத்தியாயம் தொடங்குகிறது.

**புலன்களை உள்ளே திருப்புதல்: 1 – 2**
**------------------------------**

परञ्चि खानि व्यतृणत् स्वयम्भू-
स्तस्मात्पराङ्पश्यति नान्तरात्मन् ।
कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्ष-
दावृत्तचक्षुरमृतत्वमिच्छन् ॥ १॥

பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ
தஸ்மாத் பராங் பச்யதி நாந்தராத்மன் |
கச்சித்தீர: ப்ரத்யகாத்மானமைக்ஷத்
ஆவ்ருத்த சக்ஷுப்ரம்ருதத்வமிச்சன் || 1 ||

பொருள்:

புலன்களைப் புற நோக்குடன் இறைவன் அமைத்துள்ளார். அதனால் அவைகள் எப்போதும் வெளியில் பார்க்கின்றன. அவைகள் அகத்திலுள்ள ஆத்மாவைப் பார்ப்பதில்லை. மரண மற்ற நிலையை விரும்புகின்ற யாரோ ஒரு விவேகி மட்டுமே, அக நோக்கு உடையவனாய் ஆத்மாவைப் பார்க்கிறான்.

தொலை நோக்கியால் தூரத்திலுள்ள பொருட்களைப் பார்க்க முடியும். அருகிலுள்ள ஒன்றைப் பார்க்க முடியாது. தூரத்தில் உள்ளவற்றைப் பார்ப்பதற்காகவே தொலைநோக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

அதுப்போலவே, புலன்கள் வெளியுலகை அனுபவிப்பதற்காக மட்டுமே உள்ளவைகள். அவைகளை உள்ளே திருப்புவது என்றால், அவற்றின் புற நாட்டத்தைத் தடுப்பது மட்டுமே நாம் செய்ய வேண்டியது, அதற்கான விவேகம் மட்டும்தான் நம்மிடம் வேண்டும்.

புலன்கள் புறமுகமாகச் செயல்படாமல் இருக்குமானால், அக வளர்ச்சியும் அக மாற்றங்களும் இயல்பாகவே நிகழும். இது சொல்வதற்கு எளிது, செய்வதற்கு மிகமிகக் கடினமானது. அதனால்தான் யாரோ ஒரு விவேகி மட்டுமே அக வளர்ச்சியை நாடுகின்றான் என்று இந்த மந்திரம் கூறுகிறது.

சரி! நாம் எப்படி அந்த விவேகியாக மாறுவது?

அகமுகமாம் பீடம் ஆதாரம் ஆகும்
சகமுகமாம் சத்தி ஆதனம் ஆகும்
செகமுகமாம் தெய்வமே சிவம் ஆகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே – திருமந்திரம்.

அகமுகத்திற்கான ஆத்மாவின் ஆதார இருப்பிடம் அல்லது பீடம் என்பது உள்ளம் எனும் நமது இருதயக்குகை ஆகும். அத்தகைய ஆதாரத் தலைவன்எங்கும், எதிலும் நிறைந்திருப்பதினாலே, அவனது ஆற்றல் என்பது நம் அனவைரிடமும் இருக்கின்ற ஆஸ்தி எனும் சொத்து ஆகும். அத்தகைய அரிதான சொத்து இந்த உலகமாகவே, ஈஸ்வரனாகவே இருக்கின்றது. அதுவே, சிவம் ஆகும். இதெல்லாம் உண்மையில் அகமுகமாக ஆராய்ந்த அறிவாளிகளுக்கே தெரியும் என்பதாக இந்த திருமந்திரம் கூறுகின்றது.

நம் பாரத் தேசத்தின் பண்டைய ரிஷிகள் தொன்று தொட்டு மனிதகுலத்தின் மகத்துவம் முழுவதையும் கவனமாக ஆய்வுகள் பல செய்து, மக்களுக்கு மனித வாழ்வின் உன்னதத் திறன்களை எப்படிச் செயல் வடிவமாக்குவது என்பதை ஏராளமான அறிவுரைகளாகக் கூறினார்கள். அவைகளே **உபநிஷதங்கள், பகவத்கீதை, ப்ரம்ம சூத்திரம்** போன்ற உயரிய நூல்கள் உளவியல் ரீதியாக **நான் யார்?** என்பதைக் கற்பிக்கிறது.

அதன் நெறிமுறைகள் நாம் எப்படி இருக்க வேண்டும்? என்பதையே எடுத்துக் கூறுகின்றன. பண்டைய முனிவர்கள் **மனம், அறிவு** (ஆன்மா) ஆகிய இவற்றின் மலர்ச்சிக்கான நம்முடைய அக வளர்ச்சிக்கான அரிதான ஆன்மீக உண்மையை அனைவருக்கும் எடுத்துரைத்தனர்.

நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அனுதினமும் நம்மை நாம் கண்ணாடியில் நம் முகத்தையும், உடலையும் கவனிக்கத்தான் செய்கின்றோம். ஏனென்றால், நம் முகம் மற்றவர்கள் முன்னால் வசீகரமாக இருக்க வேண்டும். பார்ப்பதற்கு நாம் அழகாகவும், சிறப்பாகவும் தோன்ற வேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றோம். அதற்காகத்தான் கண்ணாடியையும் பார்க்கின்றோம்.

இத்தகைய வெளிப்புறத் தோற்றத்தின் பின் உள்ள விஷயத்தின் முறையான தோற்றத்தை எவ்வாறு நமக்கு புறத்தில் உள்ள கண்ணாடியில் கண்டு, அதை உறுதிப்படுத்துகின்றோமோ? அவ்வாறே, நம் **சுய–ஆய்வு** எனும் அகமுகநோக்குக் கண்ணாடியில் நம்மை தினசரி பார்த்துக் கொள்வது இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது, இல்லையா?

புறக்கவர்ச்சி அனைத்தும் உள்ளுறையும் ஆன்மாவின் தெய்வீகத்திலிருந்து வருகிறது. அதாவது, '**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்!**' என்பார்கள் நம் முன்னோர்கள். அத்தகைய முகத்தில் இருக்கும் ஒரு சிறிய பருவோ அல்லது வடுவோ அதன் அழகைக் கெடுப்பதைப் போல, நம்முடைய அகத்தில் சினம், அச்சம், வெறுப்பு, பொறாமை, கவலை போன்றவைகள் நம் அகத்தைக் கெடுக்கின்றன.

ஆம்!, இவைகள் அனைத்தும் நம் உளவியல் உருச்சிதைவுகள் எனும் தார்மீக இருப்பின் ஐயப்பாடுகளிலிருந்து வருபவைகள் ஆகும். அவைகள் அந்த தூய அறிவாகிய ஆத்மாவின் பிரதிபலிப்பைச் சிதைக்கின்றன.

நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் நம்முடைய இத்தகைய அக உருவை சிதைக்கும் அற்பமான விஷயங்களிலிருந்து விடுவித்துக் கொண்டாலே போதும், நம் அக இருப்பின் அழகு மிளிரும்.

பண்டைய ரிஷிகளின் ஆய்வின் மூலம் மனித இன்னல்கள் மூவடுக்கு கொண்டது என்றும் அறிய முடிகின்றது. அவைகள் மனிதனை துயரத்திற்கு உட்படுத்துகின்றது. அவைகள், 1. மனித உடலைத் துன்புறுத்துபவைகள், 2. மனத்தைத் தாக்குபவைகள், 3. ஆன்மாவை அறிவதைத் தடை செய்பவைகள் என இம்மூன்றும் மனிதன் தன்னை அறிவதற்கான இன்னல்கள் என்றே பார்க்கப்படுகின்றது.

அதாவது, பல்வேறு நோய்கள், முதுமை, மரணம் ஆகியவைகள் உடலின் துன்பங்கள். அவ்வாறே, மனித மனதில் உருவாகும் உளவியல் பிரச்சனைகளான வருத்தம், அச்சம், சினம், நிறைவேறாத ஆசைகள், மனநிறைவின்மை, வெறுப்பு போன்றவைகள் மனதை தாக்குபவைகள். மற்றும் இவைகள் எல்லாவற்றிலும் மிகவும் அதிகத் தீங்கு விளைவிக்கும் ஒன்று நம்மிடையே காணப்படும் அறியாமைகள் ஆகும்.

நம்மிடம் உள்ள ஒரே உண்மையான விடுதலை ஆத்மாவின் உணர்வுநிலையில் நம்மை நாம் உணர்வதில் மட்டுமே இருக்கிறது. உங்களை நீங்களே ஆய்வுகள் பல செய்து உங்களுடைய உணர்வுநிலை எந்த அளவிற்கு அறியாமைகள் எனும் வேர்களால் ஆழமாக வேறுன்றி இருக்கின்றன என்பதை நிதானமாக நிர்ணயித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய உண்மையான விடுதலை என்பது, அந்த அறியாமை வேர்கள் அகற்றப்படும்போது மட்டுமே சாத்தியமாகின்றது.

ஆகவே, சீராக சிந்தித்து உங்கள் வாழ்க்கையைத் திட்டமிடுங்கள். சிறப்பான இத்தகைய வகுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அதன்பிறகு, நீங்கள் எப்படி மாறுவீர்கள்? என்பதை உங்கள் உள்ளேயே உணருங்கள்.

தினசரி காலை வேளையை ஆத்யாத்ம யோகத்தில், ஆத்மாவைப் பற்றிய ஆழ்நிலை தியானத்திலும் தொடங்குங்கள். மனதை அந்த தூய அறிவாகிய பரமனிடம் ஒப்படைத்து சரணடையுங்கள். உங்கள் செயல்கள் ஏதுமில்லை, எல்லாம் அவன் செயலே! என்று கொடுக்கப்பட்ட கடமைகளைச் சரியான முறையில் இன்னும் சிறப்பாகச் செய்யுங்கள். நீங்கள் காலையில் தொடங்கி, இரவு உறங்கப் போகும்வரை எல்லா நேரங்களிலும் தூய அறிவாகிய இறைவனைப் பற்றி எண்ணியவாறு, எல்லாம் அந்த தூய அறிவின் அதிர்ஷ்டானத்தில் நடைப்பெறுகின்றது என்பதாகவே எல்லாவற்றையும் செய்யுங்கள், அதில் உங்கள் அமைதியைத் தக்க வைத்துக்கொள்வதில் கவனமாக இருங்கள். இதைச் சரியாகச் செய்தாலே, நீங்கள் அக வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நன்கு அறிவீர்கள். மேலும், நீங்கள் விவேகியாக மாறிவிட்டீர்கள் என்பதையும் உணர்வீர்கள்.

पराचः कामाननुयन्ति बाला-
 स्ते मृत्योर्यन्ति विततस्य पाशम् ।
अथ धीरा अमृतत्वं विदित्वा
 ध्रुवमध्रुवेष्विह न प्रार्थयन्ते ॥ २॥

பராச: காமானனுயந்தி பாலா
தே ம்ருத்யோர்யந்தி விததஸ்ய பாசம் |
அத தீரா அம்ருதத்வம் விதித்வா
த்ருவமத்ருவேஷ்விஹ ந ப்ரார்த்தயந்தே || 2 ||

பொருள்:

மனப்பக்குவம் இல்லாதவர்கள் புறத்திலுள்ள சுகபோகப் பொருட்களையே எப்போதும் நாடுகின்றனர். எங்கும் இருக்கின்ற மரண வலையில் அவர்கள் அறியாமையினால் வீழ்கின்றனர். ஆனால், இந்த நிலையற்ற உலகில், நிலையான, என்றும் அழிவற்ற அனைத்தையும் அறியும் அறிவாகிய ஆத்மா என்ற ஒன்று இருப்பதை விவேகிகள் மட்டுமே அறிகின்றனர். எனவே, அவர்கள் அற்பமான இந்த சுகபோகப் பொருட்களை ஒரு நாளும் விரும்புவதில்லை.

இத்தகைய சுகபோகப் பொருட்கள் புலன்களின் ஆற்றலை அழித்துவிடுகின்றன என்று ஏற்கனவே (1.1.26) கண்டோம். எனவே, சுகபோகங்களை நாடுபவர்கள் விரைவில் மரணத்தின் பிடியில் சிக்குகிறார்கள் என்பதை, இங்கே குறிப்பால் எமதர்மராஜன் உணர்த்துகின்றார். இதிலே, மரணம் எங்கும் நிறைந்ததாகக் கூறப்படுவதைக் கருத்தில்

கொள்ள வேண்டும். உண்மையில் இந்த உலகம் மரணத்தின் நிழல் படிந்தது. தோன்றிய அனைத்தும் மரணம் என்ற மாபெரும் அழிவை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன.

இதிலே, புலன்களின் வசப்பட்டு, அவற்றின் போக்கிலேயே மனிதன் சென்று கொண்டிருந்தால், அந்த மனிதன் மரண வலையில் சிக்குவதை யாராலும் தடுக்க முடியாது. அதுவே, அவன் விவேகத்தினால் விழித்துக் கொண்டு, இந்த நிலையற்ற உலகினுள்ளே, அதன் ஆதாரமான அழிவற்ற ஆத்மாவாகிய இறைவன் நிலையாக உள்ளார். அவரை நாடும்போது மட்டுமே உண்மையான சுகம் உண்டாகும் என்பதை உணர்வான். அவன் மட்டுமே அற்ப சுகபோகப் பொருட்களிலிருந்து விலகி, விழித்துக் கொண்ட விவேகத்தினால் மரணத்திலிருந்து விடுபடுகின்றான்.

ஆகவே, விவேகி சுகபோகப் பொருட்களை நாடாமல் இருக்கிறான், புலன்களின் போக்கைத் தடுத்து, புற வளர்ச்சியை விரும்பாமல், அக வளர்ச்சியில் மட்டுமே நாட்டம் கொள்கின்றான். அவன் மட்டுமே மரணத்தை வெல்கிறான் என்பதாக இந்த மந்திரத்தின் வாயிலாகப் பார்க்க முடிகின்றது.

**அதுவே நீ (3 – 9)**

---------------

அதுவே நீ! என்ற இந்தப் பகுதி ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாகும்.

ஆழ்ந்த சிந்தனையின் மூலம் இந்த உணர்வு, அதாவது உடம்பையும், மனத்தையும் கடந்த **'ஆத்மா நான்'** என்ற உணர்வு நம்மிடம் வலுப்படுகிறது. புறத்திலே அலைகின்ற புலன்களை வசப்படுத்துவதில் இது மிகவும் பயன் அளிக்கின்றது. நம்முடைய புலன்கள் வசப்படும்போது மட்டுமே அக வளர்ச்சி உண்டாகிறது. அத்தகைய அக வளர்ச்சி இறுதியாக ஆன்ம அனுபூதியில் நிறைவுறுகிறது.

**சாட்சிப் பொருள் நீ: 3 – 4**

----------------------

புலன்களின் புற நாட்டத்தைத் தடுக்க வேண்டும். எப்படி?

அவற்றிற்கு உண்மையை உணர்த்த வேண்டும். உலகின் அனுபவங்களில் உள்ளீடு எதுவும் இல்லை என்பதை அவைகளுக்கு புரியுமாறு செய்ய வேண்டும். அதற்கான பயிற்சியை இந்த மந்திரங்கள் தெரிவிக்கின்றன.

வாழ்வில் எவ்வளவோ நிகழ்கின்றன. உடம்பிற்கு எத்தனையோ அனுபவங்கள் வருகின்றன. எத்தனையோ விஷயங்கள் மனத்தைக் கடந்து செல்கின்றன. அவற்றுடன் இணைந்து நாமும் துயரப்படுகிறோம், சுகத்தை அனுபவிக்கிறோம், வெறுக்கிறோம், விரும்புகிறோம், அழுகிறோம், சிரிக்கிறோம்.

ஆனால், இவைகள் எதிலும் பங்கெடுக்காமல், தன்னில் தானாய், தனித்துவமாய் நம்முள் ஒன்று இருப்பதாக ஏற்கனவே (1.3.1) கண்டோம். அதுவே ஆத்மா என்பதையும் அறிந்துக் கொண்டோம். அதனுடன் நம்மை நாம் உணர்வு ரீதியாக ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டும்.

येन रूपं रसं गन्धं शब्दान् स्पर्शांꣳश्च मैथुनान् ।
एतेनैव विजानाति किमत्र परिशिष्यते । एतद्वै तत् ॥ ३॥

யேன ரூபம் ரஸம் சப்தான் ஸ்பர்சாம்ச்ச மைதுனான் |
ஏதேனைவ விஜானாதி கிமத்ர பரிசிஷ்யதே ஏதத்வை தத் || 3 ||

பொருள்:

காட்சி, சுவை, மணம், ஒலி, தொடு உணர்ச்சி, உடலின்பம் முதலியவற்றை எதனால் ஒருவன் உணர்கிறானோ? இந்த அனுபவங்களில் என்ன எஞ்சியிருக்கிறது என்பதையும் எதனால் தெரிந்துகொள்கிறானோ? அதுவே நீ கேட்ட பொருள்.

அழகிய பூவை இரசிக்கிறோம். நம்முள்ளே உணர்வுப் பொருளாகிய ஆத்மா இருப்பதால்தான் அதனை நம்மால் இரசிக்க முடிகிறது என்பதை அறியாமல் இருக்கின்றோம். இறைந்து கிடைக்கின்ற உயிரற்ற உடலின் முன்னால், எத்தகைய அழகோ, நறுமணமோ, சுவையோ என எதுவுமே அந்த உடலினால் உணரப்பட முடியாத நிலையில், அந்த உடலுக்கு எந்த விதமான விளைவையும் ஏற்படுத்த முடியாமல் இருப்பதை எல்லோரும் நன்கு அறிவோம்.

ஆகவே, நாம் அறிந்துக் கொண்ட இந்த அத்யாத்ம யோகத்தின் விளைவாக, நம்முள் இருக்கின்ற இருவருள் ஒருவர் அனைத்து அனுபவங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். ஆனால், அவரோ அழியக்கூடிய அற்ப மனமாக இருந்துக் கொண்டு, இந்த உடலின் வாயிலாக எல்லாவற்றையும் அனுபவிக்கிறார். ஆனால், மற்றொருவர் என்றும் அழியாத ஆத்மாவாக இருந்துக் கொண்டு, எல்லாவற்றிற்கும் சாட்சியாக நின்று அவற்றைக் கவனிக்கிறார். இதிலே, உண்மையில் நாம் யார்? என்று மரணமடைந்த உடலைப் பார்த்தாவது புரிந்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

பொதுவாக, அறியாமையினால், அனுபவங்களைப் பெறும் மனம் மற்றும் உடலுடன் நம்மை நாம் ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது, மேலும், மேலும் செயல்களில் ஈடுபட்டு தளைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம். அதுவே, அதற்கு மாறாக, அனுபவங்களை அடையாமல், வெறும் சாட்சியாக நிற்கின்ற ஆத்மாவுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு, அவைகளை எல்லாம் விலகி நின்று, வேடிக்கைப் பார்க்கும் பழக்கத்தினால் மட்டுமே, நமக்கு வரும் அனுபவங்களின் ஆதிக்கமற்ற தன்மை நமக்கு மரணமில்லாப் பெருவாழ்வை தரும். அதனால்தான், அவசியம் நாம் அனைத்திற்கும் சாட்சியாக மட்டுமே நின்று பழக வேண்டும்.

புலன் அனுபவங்கள் அழியக்கூடிய அற்ப உடலுக்கும், மனதிற்கும் மட்டுமே உரித்தானது என்ற கருத்து நம்முள் ஆழ்மாகப் பதியும்போது, அந்த புலன்கள் புறவுலகை நாடுவதை இயல்பாகவே விட்டுவிடுகின்றன. அதன்பிறகு, அக நோக்கு என்பது தானாகவே நிகழ்கிறது. எனவே, சாட்சியாக இருந்து பழகுவது என்பது புலன்களை வசப்படுத்துவதற்கான ஒரு சிறந்த பயிற்சி என்பதாகவும் பார்க்கப்படுகின்றது.

நான் அந்த தூய அறிவாகிய ஆத்மா என்ற உணர்வு இந்தப் பயிற்சியின் மூலம் ஆழமாக நம்முள் வலுப்பெறுகிறது. எனவே சுகதுக்க அனுபவங்கள் நம்மை அணுகும்போது, அவற்றுடன் நம்மை இணைத்துக் கொள்ளாமல் விலகி நின்று, விழித்துக் கொண்ட விவேகத்தினால், நாம் சாட்சியாக மட்டுமே அனைத்தையும் பார்க்கப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

स्वप्नान्तं जागरितान्तं चोभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥ ४॥

ஸ்வப்னாந்தம் ஜாகரிதாந்தம் சோபௌ யேனானுபச்யதி |
மஹாந்தம் விபுமாத்மானம் மத்வா தீரோ ந சோசதி || 4 ||

பொருள்:

கனவு, விழிப்பு ஆகிய இரண்டு நிலைகளையும் எதனால் ஒருவன் உணர்கிறானோ? **அதுவே ஆத்மா**. அது மகிமை வாய்ந்தது. அது எங்கும் நிறைந்தது. அதனை அனுபூதியில் உணர்கின்ற விவேகி மட்டும்தான் கவலைகளிலிருந்து விடுபடுகிறான்.

நாம் உண்மையில் ஆத்மா என்றும், அனைத்துக்கும் வெறும் சாட்சி மாத்திரமாகவே இருக்க வேண்டும் என்பதை இங்கே மற்றொரு கோணத்திலிருந்து விளக்க முற்படுகிறார் எமதர்மராஜன்.

கனவு, விழிப்பு, ஆழ்ந்த தூக்கம் ஆகிய இந்த மூன்று நிலைகளின் வழியாக நாம் தொடர்ந்து அனுதினமும் அனுபவம் அடைகின்றோம். ஒவ்வொரு அனுபவத்திலும், மற்றொரு அனுபவத்தை இழக்கின்றோம். அதுப்போலவே, நம்மை நாம் ஆத்மா என்று உணரும் நிலையில் மற்ற அனுபவங்களும் நமக்கு இருக்காது என்பதையும் நாம் நன்கு அறிய வேண்டும். அதாவது, நாம் நம் சொரூபத்தில் திளைத்திருக்கும்வரை, இந்த உலகம் உண்மையில் இல்லை. அது எப்படி? என்பது ஏற்கனவே விளக்கப்பட்டது.

அதாவது, கனவு காணும்போது, இந்த புற உலகை விட்டுவிடுகின்றோம். அவ்வாறே, ஆழ்ந்த உறக்க நிலைக்கு போகும்போது, இந்த புற உலகம் மற்றும் கனவு உலகம் என இவைகள் இரண்டையும் விட்டு விடுகின்றோம். அதுப்போலவே, நாம் நம்மை ஆத்மா என்று உணரும் நிலையில் நம்மிடம் இந்த மூன்று நிலை அனுபவங்களும் இருக்காது. நாம் தன்னில் தானாய் தனித்துவமாய் தன்மயமாய் இருந்துக் கொண்டிருப்போம். அதையே ஆத்மானுபூதி, ஆத்ம அனுபவம் என்கின்றனர் ஆன்றோர்கள். அந்த நிலையில் நீடித்து இருக்க முடியாமல் இந்த உடல் இருப்பதின் காரணமாக மீண்டும் நாம் இந்த உலகியல் வாழ்க்கைக்கு வந்து, வந்து போக வேண்டியது இருக்கும். இருப்பினும், அவ்வாறு இந்த மூன்று அவஸ்தைகளில் நாம் வருகின்றபோதும், இவைகளை உண்மை என்று பார்க்காமல், அந்த நிலைகளுக்கு சாட்சி மாத்திரமாகவே இருக்க வேண்டும் என்கின்றார் எமதர்மராஜன். அவனே விவேகி என்றும் உணர்த்துகின்றார்.

அதாவது, எப்படி? ஒரு மணி மாலையிலுள்ள நூல் பல மணிகளை எல்லாம் கோர்த்துக் கொண்டு, அவற்றிற்கிடையே இடைவெளி இல்லாத ஒரு தொடர்பை உண்டாக்குவதுப்போல, நம்மிடையே அன்றாடம் நடைப்பெறுகின்ற **விழிப்பு, கனவு** மற்றும் **ஆழ் உறக்கம்** என்ற இந்த மூன்று பரிமாண நிலைகளையும் தொடர்பு படுத்திக்கொண்டு, அவைகளுக்கு வெறும் சாட்சி மாத்திரமாக நிற்கின்ற பொருளே அந்த தூய அறிவாகிய ஆத்மா.

मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय |
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव || 7||

மத்தஹ் பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி **த**னஞ்சய
மயி சர்வமி**த**ம் ப்ரோதம் சூத்ரே மனி**க**னா இவ ‖ 7 ‖ – (பகவத்கீதை 7.7).

இங்கே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இந்த பிரபஞ்சத்திலுள்ள ஈஸ்வரனின் ஆதிக்கம் மற்றும் அவரது உயரிய உன்னத நிலையைப் பற்றி விளக்குகின்றார். அவரே ஈஸ்வரனாக தன்னை பறைசாற்றுகின்றார். படைப்பவன், பராமரிப்பவன், அழிப்பவன் ஆகிய அனைத்தும் நானே. ஒரு நூலில் கட்டப்பட்ட மணிகளைப் போலவே, அனைத்தும் என்னிலேயே இருக்கின்றன. அந்த நூலிலே இருக்கின்ற மணி எப்படி தனித்தனியாக இருந்தாலும், அவைகள் எல்லாம் ஒன்றாக அந்த நூலினால் கட்டப்பட்டுள்ளனவோ? அவ்வாறே, இங்கு தன்னை தனித்தனி ஜீவன் என்று கூறிக்கொள்ளும் அனைத்தும் என்னுள்ளேயே இருக்கின்றன என்கின்றார். அவ்வாறே, அந்த மணிகள் ஒன்றாக கோர்க்கப்பட்டிருந்தாலும், அவைகள் ஒன்றுக்கொன்று சுதந்திரமாக அந்த நூலில் சுற்றவும் செய்கின்றன. அதுப்போல, தன்னை தனித்தனி ஜீவர்களாக வாழக்கூடிய சுதந்திரத்தையும் நானே அளித்துள்ளேன் என்கின்றார். இருப்பினும், அவைகளின் இருப்பு என்பது எனக்கு கட்டுப்பட்டது என்றே கூறுகின்றார்.

ஆக, நாம் இங்கே விழித்துக் கொண்டு, நம்மை தனித்தனி ஜீவனாகப் பாவித்துக் கொண்டு, தன்னைப் பற்றிய தன்னுணர்வு நிலையை உணர்ந்து, இவைகளுக்கு ஆதாரமான பேருணர்வு நிலையை வெளிக்கொண்டு வர வேண்டும்.

அந்த வகையிலே, நம் அன்றாட வாழ்வில் நிகழும் மூன்று அனுபவங்களில், கனவு காணுகின்ற கனவுலகம் என்பது வேறு, நனவு உலகில் நாம் வாழ்கின்ற இந்த புற உலகம் என்பது வேறு, அவ்வாறே, ஆழ்ந்த உறக்கத்தை நாம் அனுபவிக்கின்ற உலகம் என்பதும் வேறு என்பதை உணர்ந்துக் கொண்டு, இந்த மூன்றிலும் **"நான்"** என்ற தன்னுணர்வு மட்டுமே எப்போதும் இருந்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான், **'நான் கனவு கண்டேன்', 'நான் விழித்திருக்கிறேன்', 'நான் நன்கு தூங்கினேன்'** என்று நம்மால் சொல்லவும் முடிகின்றது என்பதையும் ஏற்கும்போது, கனவில் நனவுலகம் மறைகிறது, ஆழ்ந்த தூக்கத்தில் இந்த இரண்டு உலகங்களுமே மறைகின்றன. இவ்வாறு, தோன்றி மறைகின்ற எதுவும் உண்மையாக இருக்க முடியாது.

எனவே, இந்த மூன்று நிலைகளும் உண்மை அல்ல. இந்த மூன்று நிலைகளுடனும் சம்பந்தப்படாமல், இந்த மூன்று நிலைகளும் தன்னைக் கடந்து செல்வதை, ஒரு சாட்சியாக

மட்டுமே நின்று எது பார்த்துக் கொண்டுள்ளதோ? அதுவே, அந்த தூய அறிவாகிய ஆத்மா. அதுவே '**நான்**' என்று உணர வேண்டும் என்பதாக எமதர்மராஜனும் கூறுகின்றார்.

ஆகவே, அத்தகைய ஆத்மாவை அறிபவன் மட்டுமே **அறிவாளி** என்பதாக இந்த உப நிஷதத்தின் வாயிலாக எமதர்மராஜன் சொல்ல வருகின்றார்.

**காலத்தின் தலைவன் நீ!**

நமது உள்ளுணர்வைப் பிரபஞ்சம் முழுவதுமாக விரிப்பதற்கான ஒரு முயற்சியை இந்த மந்திரத்திலிருந்து காண்கிறோம். உடம்பினும் இதயக் குகையினுள் உள்ள ஆத்மா நான் என்ற கருத்தும் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள பொருளே நான் என்ற கருத்தும் ஒவ்வொரு மந்திரத்திலும் வருகிறது. உணர்வை விரிப்பதற்கான சாதனை இது.

य इमं मध्वदं वेद आत्मानं जीवमन्तिकात् ।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप्सते । एतद्वै तत् ॥ ५॥

ய இமம் மத்வதம் வேத ஆத்மானம் ஜீவமந்திகாத் |
ஈசானம் பூத பவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே | ஏதத்வை தத் || 5 ||

பொருள்:

கர்ம பலன்களை அனுபவிக்கின்ற உயிருக்கு ஆதாரமான இந்த ஆத்மா இருப்பதாகவும், இறந்தகாலம் மற்றும் எதிர்காலத்திற்குத் தலைவனாகவுமறிபவன் யாரையும் வெறுப்பதில்லை. அதுவே நீ கேட்ட பொருள். நம்முள் உள்ள இருவரில் (1.3.1) ஒருவர் அனுபவங்களைப் பெறுகிறார். மற்றொருவர் அந்த அனுபவங்களைப் பெறுவதற்கு ஆதாரமாக இருக்கிறார். அதுவே ஆத்மா. அதுவே நாம்.

நம்முள் உள்ள ஆத்மாவே நாம் என்று கூறிவிட்டு, அடுத்த வரியிலேயே, காலத்தின் தலைவன் நாம் என்று நமது உணர்வை விரிக்கிறது இந்த உபநிஷதம்.

காலத்தின் தலைவன் ஆவது என்றால் என்ன?

பொதுவாக நாம் கடந்த காலத்தை அசைப்போட்டுக் கொண்டிருப்போம், அல்லது எதிர்காலக் கற்பனைகளில் மிதந்து கொண்டிருப்போம். அதாவது நமது வாழ்க்கை இறந்த மற்றும் எதிர்காலங்களில் மட்டுமே உழன்று கொண்டிருக்கிறது.

உண்மையில், **நாம் நிகழ்காலத்தில் வாழ்வதே இல்லை**. காலத்தின் தலைவனாக இருப்பது என்றால், இறந்த மற்றும் எதிர்காலங்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதுதான் அது. அப்படி எவன் ஒருவன் இதிலிருந்து விடுபடுகின்றானோ? அவனே காலத்தின் தலைவன் எனப்பார்க்கின்றோம்.

நிகழ்காலத்தில் வாழ்வது என்றால் என்ன?

இப்போதுள்ள மனிதர்களுக்கு நிகழ்காலம் என்றால் என்னவென்றே தெரியவில்லை அவர்கள் கடந்தகால எண்ணங்களில் சிக்கிக் கொள்கிறார்கள் அல்லது எதிர்கால திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், நிகழ்காலம் என்பது இந்த வினாடி என்று கூறினாலும், அதில் நம்மால் வாழ இயலாது. பெரும்பாலும் நம் மன எண்ணங்கள் தடுக்கும் நிகழ்காலத்தில் மனிதன் வாழ தெரிந்துவிட்டால், அவனது மனம் அவனுக்கு கட்டுப்படும்.

பெரும்பாலும், மனிதன் தூக்கத்தில் கனவு காண்பதுப் போலவே, இந்த கண்களைத் திறந்துக் கொண்டும் கனவு காண்கிறான். உண்மையில், தன்னை சுற்றி என்ன நடக்கிறது? என்பதைக்கூட அவன் அறியவில்லை. ஏனென்றால், அவன் நிகழ்காலத்தில் இருப்பதில்லை.

தனக்கு என்ன கெட்டது நிகழ்ந்தாலும் அதை மற்றவர்கள்மீது அல்லது கடவுள் மீது பழி போடுகிறான். அதை ஏற்பதற்கு அவனுக்கு மனமில்லை தன் தவறுகளை ஒப்புக் கொள்ள அவனுக்கு மனமில்லை. அதுவே, சரியாக நடந்துவிட்டாலோ, அதை தன்னுடைய சாதனையாகப் பார்க்கின்றான்.

நிகழ்காலத்தில் உன்னத நிலையை மனிதன் உணரவேயில்லை. எதிர்காலத்தில் வாழ்வதற்கான திட்டமிடல், அல்லது கடந்த காலத்தைப் பற்றிய கலந்துரையாடல், அன்றைக்கெல்லாம் நான் அப்படி இருந்தேன், இப்படி இருந்தேன் என்று பெருமை கொள்ளும் மன நிலையில் மட்டுமே மனிதன் உள்ளான். இவ்வாறு, கடந்த அல்லது எதிர்கால சிந்தனையிலேயே தன் காலங்களை கழிக்கிறான்.

ஆனால், உண்மையில் நிகழ்காலத்தில் வாழ்வது என்பது கடந்தகாலத்தை மறப்பதும், எதிர்காலத்தை பற்றி எண்ணாமல் இருப்பதற்குமான பயிற்சிகள் மேற்கொள்வது அல்ல.

தற்போது, தனக்கு என்ன நேர்ந்தாலும், அதை அப்படியே ஈஸ்வர சித்தமாக ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை வாழ்வது மட்டுமே.

மனிதர்கள் தங்களுக்குள்ளேயே பல உலகங்களை கற்பனை செய்து கொண்டு வாழ்கிறார்கள் உலகம் ஒன்று தான் உள்ளது என்று மறந்துவிடுகிறார்கள். தனது ஆசைகள் எனும் ஏராளமான எண்ணங்களின் கட்டுமானங்களை கட்டிக்கொண்டே செல்கிறார்கள்.

அது ஒரு கடற்கரை மணல் கோட்டைப் போல, ஒன்று அதை நாமே இடித்து விட வேண்டும். அல்லது அப்படியே அதை விட்டுவிட்டு வரவேண்டும். ஆனால், அதில் நாம் வாழ முயற்சிப்பது முட்டாள்தனமான ஒன்று.

அதுப்போல, மனக்கோட்டை கட்டாமல், மகத்தான மனித வாழ்க்கையை அந்த நொடியில், அப்போதே அனுபவித்து, இரசித்து, ருஷித்து வாழ வேண்டும். இந்த நிமிடம் நீ எங்கு இருக்கிறாயோ? அதிலேயே உன் மனதை நிலைத்திருக்கச் செய்வதே உண்மையான வாழ்க்கைக்கான வழி.

இப்படி நிகழ்வது சரியா? அல்லது அப்படி செய்தால் சரியா? என்று கணக்குத் தீட்டுவது, நம்முடைய வேலை அல்ல. நாம் செய்தது நமக்குத் தவறு என்று தோன்றினால், அதிலிருந்து அனுபவத்தை கற்றுக்கொண்டு, அதற்கான குற்றவுணர்ச்சியை கைவிட்டு, விட்டு கட்டாயம் அந்த தவறை மீண்டும் செய்யாமல் தவிற்பது மட்டுமே நாம் செய்ய வேண்டியது ஆகும்.

பொதுவாக, நம் மனதில் தோன்றும் எண்ணங்களின் பின்னே நாம் ஓடிக்கொண்டே இருக்கக் கூடாது. ஏனென்றால், நாம் நம்முடைய வாழ்நாள் முழுவதும் ஓடினாலும், அந்த எண்ணங்களின் எல்லையை அடைய முடியாது. என்றுமே எண்ணங்களுக்கு ஓய்வில்லை.

ஆகவே, கலங்கிய நீர் நிலையை எதுவும் செய்யாமல் சில நாட்கள் சும்மா விட்டாலே, அந்த நீர் நிலை சுத்தமாகத் தெளிந்துவிடும். அதுப்போல, எழுகின்ற எண்ணங்களை எதுவும் செய்யாமல் சும்மா சாட்சியாக வேடிக்கை மட்டுமே பார்த்தாலே போதும், எழுந்த அந்த எண்ணங்கள் தானாகவே அடங்கி, ஒடுங்கிவிடும்.

இந்த நிலையில்லா இவ்வாழ்வில், நிலையில்லாததைத் தேடிக் காலத்தைக் கடத்தாமல், நமக்குக் கொடுக்கப்பட்ட வாழ்வை அது சுகமோ? துக்கமோ? கிடைத்ததைக் கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கையின் புரிதல். உண்மையில், நாம் வாழும் வாழ்வென்பது மிகச் சொற்ப காலங்கள் மட்டும்தான். எப்படி ஒரு சிறு குழந்தை எந்த சலனமும் இல்லாமல் வானில் தெரியும் ஆகாய விமானத்தைப் பார்த்துக் கையசைத்து மகிழுமோ? அந்தக் குழந்தையைப் போல, அந்தந்த கணத்தில் வாழ்ந்து விட வேண்டும். அதுதான் வாழ்க்கை.

உண்மையில், நிகழ்காலத்தில் வாழ்வதைப் போல, ஒரு சவாலான காரியம் எதுவுமில்லை. நாளொன்றுக்கு சில மணித்துளிகள் நிகழ்காலத்தில் வாழ்வதற்குச் சாத்தியமானால் கூட அது மிகப்பெரிய சாதனை என்றுதான் பார்க்க வேண்டும்.

தேநீர் தியானம் என்ற ஒன்று உண்டு. ஒரு தேநீரை அருந்தினால் அதன் ஒவ்வொரு துளியையும் நாக்கின் சுவை அரும்புகள் உணரும் வண்ணம் இரசித்து, ருஷித்துப் பருக வேண்டும். அவ்வாறே, சமையலில் ஈடுபட்டால்கூட அதனில் ஆழமாக ஈடுபட்டு ஆர்வமாகச் செய்ய வேண்டும். எந்தவொரு காரியத்தை செய்யும்போதும், சாப்பிடும்போதும், நீர் அருந்தும் போதும், இசையை இரசிக்கும்போதும், வாகனம் ஒட்டும்போதும் என எதனைச் செய்வதாக இருந்தாலும் சரி, அதனை அணுஅணுவாக இரசித்துச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால், நிகழ்காலத்தில் வாழ்வது என்பது அவ்வப்போது சில மணித்துளிகள் சாத்தியப்படும்.

அக தியானத்தில் கால இடைவெளி மறைகிறது. அன்பு செய்வது பக்தி செய்வது என்றால், நிரந்தர நிகழ்காலத்தின் சன்னதியில் இருப்பது. அங்கே கடந்த காலத்திற்கோ, எதிர் காலத்திற்கோ எந்தத் தொடர்பும் இல்லை என்று விளக்குகிறார் எமதர்மராஜன்.

எனவே காலத்தை வெல்வது என்றால், கடந்த மற்றும் எதிர்காலங்களில் பிடியிலிருந்து விடுபட்டு நிகழ்காலத்தில் வாழ்வது என்றாகிறது.

இதை எப்படிச் செய்வது?

கடந்த மற்றும் எதிர்காலங்கள் நம்மீது எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றன?

எண்ணங்களின்மூலம்.

எனவே, மனத்தில் எண்ணங்களே எழாமல் தடுப்பது நாம் நிகழ்காலத்தில் வாழ்வதற்கான வழிகளுள் ஒன்றாகும். ஓர் எண்ணம் எழுந்து மறைந்தபிறகு அடுத்த எண்ணம் எழுகிறது. இந்த இரண்டு எண்ணங்களுக்கு இடையேயுள்ள இடைவெளியை அதிகப்படுத்தும்போது மனம் எண்ணங்களின் ஆதிக்கம் ஏதுமின்றி சும்மா இருக்கும் சுகத்தை அடையும்.

அதை எப்படி செய்யலாம்?

(இங்கு ஒரு விஷயத்தைக் கவனத்தில்கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சிகள் மனக்கட்டுபாடு உடைய, நல்லொழுக்க வாழ்வில் நிலைபெற்ற உயர்நிலை சாதகர்களுக்கு உரியவை. அதுவும், தகுந்த சத்குருவின் வழிகாட்டுதலுடன் செய்யப்பட வேண்டியவை. முதற்பகுதியில் நல்லொழுக்கம் போன்ற அடிப்படை பண்புகளைக் கூறிய பிறகு இரண்டாம் பகுதியில் இவை கூறப்படுவதைக் கொண்டு, **சாதன சதுஷ்டயம்** என்பதை கவனத்தில், நம் கருத்தில் கொள்ள வேண்டும்.)

இரண்டு எண்ணங்கள் அல்லது வார்த்தைகளுக்கு
இடையில் எப்போதும் ஒரு இடைவெளி உண்டு.

இடைவெளியில் மாத்திரம் கவனம் வையுங்கள்.
எண்ணங்களை அலட்சியப் படுத்துங்கள்.

உங்கள் கவனத்தை மாற்றிப் பாருங்கள்.
இதற்கு ஒரு பரிசோதனையை செய்து பாருங்கள்.

ஒரு பேச்சுக்கும், எண்ணத்திற்கும் இடையே தோன்றும்
இடைவெளியை மட்டும் கவனியுங்கள்.
இப்படி இடைவெளிகளின் மீது மட்டும்
கவனத்தை வைத்து வெறுமனே சாட்சியாகப் பாருங்கள்.

இப்போது நீங்கள் அனேக இடைவெளிகளை
மட்டும் பார்ப்பதால் தோன்றுகின்ற எண்ணங்கள் மறைந்து
ஒன்றுமே இல்லாத பின்புலம் மட்டுமே தெரியும்.

கவனத்தை எண்ணத்திலிருந்து மாற்றி அதற்கான
பின்புலத்தின் மீது மட்டுமே கவனம் வையுங்கள்.

எண்ணங்களே உருவங்கள். பிரக்ஞை தன்மை மட்டும்தான் அதன் பின்புலம்.

மனம் எண்ணங்களாகிய உருவங்களைக் கொண்டது. எண்ணங்களற்ற மனமற்ற நிலையில், நம் உள்ளுணர்வாகிய ப்ரக்ஞையே அதன் பின்புலம். ஆகவே, அந்த பின்புலமாகிய அந்த வெட்டவெளித் தன்மையில் இருக்கின்ற உணர்வு வெளியின் இடைவெளிகளை மட்டுமே பார்க்க முயற்சியுங்கள். அதில் அதிக ஆழமாகச் செல்லுங்கள்.

அவற்றில்தான் உண்மையான இரகசியங்கள் அடங்கியுள்ளன. புரியாத புதிர்கள் அதில்தான் மறைந்துள்ளன. அந்த பிரக்ஞை தன்மையைத் தொடர்ந்து கவனியுங்கள். அது எல்லையில்லாதது.

**அதுதான் உங்கள் இருப்பு நிலை.**

இதைப் புரிந்துக் கொண்டு, எப்போதும் நிகழ்காலத்தின் நிகழ்வில் மட்டுமே பயணிக்க வேண்டும். இதற்கான எளிய **வெட்டவெளி தியானம்** ஏற்கனவே உங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. எப்போதெல்லாம் முடியுமோ? அப்போதெல்லாம் அதை செய்யப் பாருங்கள்.

**முதலில் தோன்றியவன் நீ**

**——————————————————**

यः पूर्वं तपसो जातमद्भ्यः पूर्वमजायत ।
गुहां प्रविश्य तिष्ठन्तं यो भूतेभिर्व्यपश्यत । एतद्वै तत् ॥ ६॥

ய பூர்வம் தபஸோ ஜாதமத்ப்ய: பூர்வமஜாயத |
**கு**ஹாம் ப்ரவிச்ய திஷ்ட்டந்தம் யோ **பூ**தே **பி**ர்வ்ய பச்யத | ஏதத்வை தத் || 6 ||

பொருள்:

யார் தண்ணீர் முதலான பஞ்ச பூதங்களுக்கும் முன்னால், தவத்தினால் தோன்றியவரோ? யார் அனைத்து உயிர்களின் இதயக் குகையில் உறைபவரோ? அவரே அனைத்தையும் காண்கிறார். அதுவே நீ கேட்ட பொருள்.

பிரபஞ்சத்திற்கு ஆதாரமான பேருணர்வுப் பொருள்தான் நம்முள் ஆத்மாவாக உறைகிறது என்ற உண்மை இங்கே மற்றொரு கோணத்தில் விளக்குகின்றார்.

**பூமி, தண்ணீர், அக்கினி, காற்று, ஆகாசம்** (வெளி) ஆகிய ஐந்தும் பஞ்சபூதங்கள். அதாவது, இந்த ஐந்து அடிப்படைப் பொருட்களின் சேர்க்கையாலேயே உலகமும், உயிர்களும் உண்டாகியுள்ளன. இதை பகவத்கீதையும் கூறுகின்றது.

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च।
अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ 7.4 ॥

**பூ**மிராபோ அனலோ வாயு: கம் மனோ **புத்**திரேவ ச
அஹங்**கா**ர இதியம் மே **பி**ன்னா பிரகிருதி ரஷ்ட**தா.** (ஸ்ரீமத் பகவத்கீதை (7.4).

**பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்** ஆகிய பஞ்சபூதங்களும், அத்துடன் **மனம், புத்தி** மற்றும் **அகங்காரம்** ஆகிய இவைகள் எனது ஆற்றலின் எட்டு கூறுகள் என்கின்றார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர். ஆக, அவற்றிற்கு முன்பே தோன்றியவர் இறைவன். அந்த இறைவன்தான் நம்மில் ஆத்மாவாக நமது இதயக் குகையில் விளங்குகிறார்.

இறைவன் தவத்தினால் உணரப்படுபவர் என்பதினால், அவரது அம்சமான ஆத்மாவை நம்முள் உணர வேண்டுமானால், அதற்கு தவம் வேண்டும் என்பது, இங்கு குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

**தவம் என்றால் என்ன? அதன் பயன் யாது?**

**உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு –** குறள்.

அறியாமை எனும் பிறவி நோய் போக்கக்கூடிய நிலைலே, நமக்கான துயரங்கள் எத்தனை வந்தாலும், அவைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு, மற்ற உயிர்களுக்கு துன்பங்களை கொடுக்காமல் வாழ்வதே இங்கு உண்மையில் தவம் என்பதாகவும் பார்க்கப்படுகின்றது.

(**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றிலின்,**
**ஆற்றல் தலைப்பட்டவர்க்கு –** குறள்.

எத்தனை துயரங்கள் வந்தாலும், அவைகளை தவத்தால் வரும் வலிமையைக் கொண்டு வென்றவர்களுக்கு எமனையும் வெல்லக்கூடிய நிலை உண்டாகும் என்பதை இந்த குறள் வலியுறுத்துகின்றது.

தவம் என்பது ஆன்மீக முன்னேற்றத்திற்காக உடலாலும், வாக்காலும், மனதாலும் செய்யப்படுகின்ற அனைத்துவிதமான சாத்விகமான சாதனைகளும் தவம் எனப்படுவதால், இதைப்பற்றி பகவத் கீதையின் 17–வது அத்தியாயமான, **சிரத்தா திரய விபாக யோகம்** என்பதில், பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ஆத்ம ஞானத்தை அடையத் தேவையான தகுதிகளில்

ஒன்றான தவத்தை, **சாத்விக தவம், இராஜஸ தவம்** மற்றும் **தாமஸ தவம்** என மூன்றாக பிரித்து, சாத்வீக தவத்தை மட்டுமே மேற்கொள்ளுமாறு அருச்சுனனுக்கு கூறுகிறார்.

**சாத்வீக தவம் –** ஆன்மீக முன்னேற்றத்திற்கு மட்டுமே செய்வது சாத்வீக தவமாகும். (எடுத்துகாட்டு: ஆத்ம ஞானத்திற்காக செய்யப்படும் தவம்).

**இராஜஸ தவம் –** தனது நன்மைக்கு மட்டுமே செய்வது இராஜஸ தவமாகும். (தனது தேவைக்காக குழந்தை அல்லது செல்வம் வேண்டி செய்யப்படும் தவம்).

**தாமஸ தவம் –** பிறரைத் துன்புறுத்தும் நோக்கத்திற்காகச் செய்யும் தவமே தாமஸ தவமாகும்.

ஆக, எப்போதும் உணவு, உடை, சுகபோகப் பொருட்கள் போன்றவைகளுக்காக புறமுகமாக செலவிடப்படுகின்ற ஆற்றலைச் சுருக்கி, அந்த ஆற்றலை உயர்ந்த இலட்சியங்களுக்காக அகமுகமாகப் பயன்படுத்துவதையே **தவம்** என்பதாகவும், அதுவே ஆன்மீக முன்னேற்றத்தில் மரணமற்ற பெருவாழ்வைக் காட்டி கொடுக்கும் என்றும் மிகவும் எளிமையாக கீதையும் எடுத்துரைக்கின்றது.

**பிரபஞ்சத்தை இயக்கும் சக்தி நீ**

या प्राणेन संभवत्यदितिर्देवतामयी ।
गुहां प्रविश्य तिष्ठन्तीं या भूतेभिर्व्यजायत । एतद्वै तत् ॥ ७॥

யா ப்ராணேன ஸம்பவதியதிதிர் தேவதாமயீ |
குஹாம் ப்ரவிச்ய திஷ்ட்டந்தீம் யா **பூ**தே**பி**ர் வ்யஜாயத | ஏதத்வை தத் || 7 ||

பொருள்:

பிராண வடிவானவளும், எல்லா தெய்வங்களின் வடிவானவளும், பஞ்ச பூதங்களுடன் தோன்றியவளுமாகிய எந்த தேவி எல்லா உயிர்களின் இதயக் குகையில் புகுந்து உறைகிறாளோ? அந்த தேவியின் வடிவாக இருப்பதே நீ கேட்ட பொருள்.

யோக தத்துவத்தில், பிராண சக்தி என்பது, அனைத்து உடல் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தும் ஆதி அண்ட ஆற்றல் ஆகும். பிராணன் என்பது உயிர் சக்தி மற்றும் படைப்பு ஆற்றலுடன் தொடர்புடையது.

பிராண சக்தி என்பது உடல், மனம் மற்றும் ஆன்மாவை உற்சாகப்படுத்தும் தெய்வீக சக்தியின் மிக முக்கிய ஒன்றாகும். இந்த பிராண சக்திக்கு பலரும் பல பெயர்களைக் கொடுத்து அழைகின்றனர்.

நவீன அறிவியல் ஆய்வாளர்களால் Odic Force, Vital Energy, or Bio Plasmic Energy என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. அதாவது, அதை ஓடிக் விசை, அல்லது பயோபிளாஸ்மிக் ஆற்றல் என்பதாக நவீன விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

ஆனால், பண்டைய இந்தியாவின் யோகிகள் இந்த சக்தியை **பிராணன்** என்று அழைத்தனர். மேலும், நமது பழங்கால சாஸ்திரங்களில் அதைப் பற்றிய குறிப்புகளுடன் ஏராளமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, **சதபத பிராமணம்** எனும் சாஸ்திரம் கூறும்போது, **"பிராணன் என்பது உடலுக்கான மிக உயர்ந்த உணர்வு."** என்பதாகவே கூறுகின்றது.

பிராணன் என்பது, உடலில் வெவ்வேறு நிலை உணர்வுகளுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதினால், உணர்வும், உடலும் ஒன்றுக்கொன்று சார்ந்துள்ளன என்பதால், பிராணன் உடலுக்கான உயிராகவே உள்ளது. மேலும், உடலுக்கும், உணர்வுக்கும் இடையிலான உறவின் காரணமாக, பிராணனை ஆற்றலுடன்தான் ஒப்பிடுகின்றோம்.

பிராணன் என்றால் வெறும் மூச்சு மாத்திரம் அல்ல. வெறும் பிராண வாயு மட்டுமல்ல. பொதுவாக, பிராணாயாமம் என்றால் மூச்சைக் கட்டுப்படுத்துவது என்பதாகவே பலரும் சொல்வார்கள். ஆனால், பிராணன் என்றால் மூச்சு மட்டும் அல்ல. அது, வெறும் பிராணவாயு மட்டுமல்ல. அதாவது, பிராண வாயுவின் மூலம் பெறக் கூடிய பரமனின் மகா சக்தி அது. அதுவே, உயிர்களின் சுவாசத்தைத் தூண்டுவதும், அந்த சுவாசத்திற்குள் பிராண சக்தியாக விளங்குவதுமாக உள்ளது.

பொதுவாக, எது செயல்களின் மூலம் தோற்றத்திற்கு வருகிறதோ? அதை சக்தி என்போம். ஆனால், பிராணனோ செயலாக பரிணமிக்காமல், அடிப்படை மூலசக்தியாகத் திகழ்கிறது. இந்த மனித உடலில் மட்டுமல்ல, உலகில் கணப்படுபவைகள் எல்லாம், இயங்குகிற எல்லாம், இந்த பிராணனின் சக்தியாலேயே இயங்குகின்றன.

எனவே, பிராணன் என்பது பிரபஞ்சத்தில் உள்ள ஆதாரசக்தியின் பொதுப் பெயர். பிரபஞ்சத்தில் உள்ள ஆற்றல்களின் ஒரு தொகுப்பு பிராணன் எனப்படுகிறது. பிரளய காலத்தில் இது ஒடுங்கியிருக்கிறது. சிருஷ்டியின்போது இந்த பிராணன் மீண்டும் இயக்கத்துக்கு வருகிறது. உயிர்களின் நாடி, நரம்புகளிலெல்லாம் செயலாகத் திகழ்வது இந்த பிராணனே. எண்ணமாக வடிவெடுப்பதுவும் இதே பிராணனே. அப்படியானால், இதுவே ஆதார சக்தியாக இருக்கும்போது, இது எதில் போய் ஒடுங்குகிறது? என்றால், அதன் பிறப்பிடமான ப்ரம்மத்தில் போய் ஒடுங்குகிறது என்பதையும் நாம் அறிய வேண்டும்.

இதிலிருந்து நாம் அறிய வேண்டிய அரிய உண்மை என்னவெனில், எந்த ஒரு செயலை தொடங்கி, அதை முடிவுக்கு கொண்டு வரும் நிலை வரை அதற்கான ஒரு இயக்கம் இருந்தாலும், இந்த இயக்கம் இயங்குவதற்கு முன்னும், இயங்கியதற்கு பின்னும் உள்ள ஒரு இயங்காத நிலையை நாம் மறந்து விடுகின்றோம். அதுவே **பரமன்.** அதுவே **ப்ரஹ்மம்**. அதுவே **ஆத்மா** என்பதாக அறிய வேண்டும் என்பதாக இந்த மந்திரம் கூறுகின்றது.

ஆகவே, நம்முடைய நடைமுறையில் மின்சாரத்தின் ஆற்றலால் விளக்குகள் எரிவதைக் காண்கிறோம். விசிறிகள் சுழல்வதைக் காண்கிறோம். இன்னும் எத்தனையோ இயக்கங்களைக் காண்கிறோம். ஆனால், மின்சாரத்தைக் கண்களால் காண முடிவதில்லை. அதாவது, நம்மிடமுள்ள புலன்களால் அறிய முடிவதில்லை.

அதுபோலவே, இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ இயக்கங்களைக் காண்கிறோம். பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உயிரினங்கள் தோன்றுகின்றன, மறைகின்றன, தீ எரிகிறது, தண்ணீர் ஓடுகிறது, சூரியன் உதிக்கிறது. இவ்வாறு எத்தனையோ செயல்களைக் காண்கிறோம். இதற்குக் காரணமான சக்தியை நாம் காண்பதில்லை.

அதுவே பிராண சக்தி.

இந்தியத் தத்துவ ஞானிகள் கொள்கைப்படி பிரபஞ்சம் இரண்டு பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று ஆகாசம். இது எங்கும் வியாபித்து அனைத்தையும் ஊடுருவியுள்ளது.

உருவம் உள்ள அனைத்தும், சேர்க்கையால் விளைந்த அனைத்தும் ஆகாசத்திலிருந்தே வெளிப்பட்டுள்ளன. ஆகாசமே காற்றாகவும், திரவப் பொருட்களாகவும், திடப் பொருட்களாகவும் ஆகியுள்ளது. சூரியனாக, சந்திரனாக, பூமியாக, நட்சத்திரங்களாக, வால் நட்சத்திரங்களாக ஆகியுள்ளதும் ஆகாசமே.

மனித உடல், பிராணி உடல், தாவரங்கள் அனைத்தும், நாம் காண்கின்ற, நாம் உணர்கின்ற அனைத்தும், இருப்பவை அனைத்துமாக இருப்பதும் ஆகாசமே...

எந்தச் சக்தியால் இந்த ஆகாசம் பிரபஞ்சமாகிறது?

பிராண சக்தியால்தான்...

இந்தப் பிராணனிலிருந்தே நாம் ஆற்றல் என்று அழைக்கின்ற, நாம் சக்தி என்று அழைக்கின்ற அனைத்தும் வெளிப்படுகின்றன. இதுவே நம்முடைய **உயிராற்றல்** ஆகும். புவியீர்ப்பாக, காந்த சக்தியாக வெளிப்படுவதும் பிராணனே. உடல் இயக்கங்களாக, நாடி ஓட்டங்களாக, எண்ணச் சக்தியாக வெளிப்படுவதும் பிராணனே. எண்ணம் முதல் மிகச் சாதாரண சக்திவரை எல்லாம் பிராணனின் சக்தியடா என்று பாடினார் பாரதியார்.

எங்கும் நிறைந்துள்ள இறைவன் நம்முள் ஆத்மாவாக விளங்குவதுப்போல, இந்த பிரபஞ்சத்தை இயக்குகின்ற இந்தப் பிராண சக்தியே நம்முள் நமது உடம்பையும், மனத்தையும் இயக்குகின்ற பிராணனாகச் செயல்படுகிறது. பிரபஞ்ச நிலையில் அந்தப் பிராணன் எல்லா தெய்வங்களின் வடிவாக, அதாவது அனைத்து ஆற்றல்களின் உறைவிடமாக, பஞ்ச பூதங்களுடன் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

## ஆன்ம அக்கினி நீ

अरण्योर्निहितो जातवेदा गर्भ इव सुभृतो गर्भिणीभिः ।
दिवे दिवे ईड्यो जागृवद्भिर्हविष्मद्भिर्मनुष्येभिरग्निः । एतद्वै तत् ॥ ८॥

அரண்யோர்நிஹிதோ ஜாதவே**தா கர்ப** இவ ஸுப்ருதோ **கர்பிணீபி**: |
**தி**வே **தி**வ ஈட்யோ ஜாக்ருவத்**பி** ஹவிஷ்மத்**பிர்** மனுஷ்யே**பிரக்**னி: | ஏதத்வை தத் || 8 ||

பொருள்:

கருவுற்ற பெண்கள் கருவை எச்சரிக்கையாகக் காப்பதுபோல் அரணிக்கட்டைகளில் அக்கினி பாதுகாக்கப்படுகிறது. விழிப்புணர்ச்சி பெற்ற யோகிகள் ஆன்ம அக்கினியை

அதுப்போல் கவனமாக நாள்தோறும் வழிபடுகின்றனர். அந்த ஆன்ம அக்கினியே நீ கேட்ட பொருள்.

யாக குண்டங்களில் வளர்க்கப்படுகின்ற அக்கினி ஏற்கனவே எரிகின்ற தீயால் ஏற்றப்படுவதில்லை. யாக அக்கினி அவ்வளவு புனிதமாகக் கருதப்படுகின்றது. யாகத்திற்குத் தீ மூட்ட அரணிக்கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். மேலொன்றும் கீழொன்றுமாக உள்ள இரண்டு கட்டைகள் அவைகள். அவற்றை உரசுவதால் ஏற்படுகின்ற தீப்பொறியால் யாக அக்கினியை வளர்க்கின்றனர்.

அரணிக்கட்டைகளில் மறைந்துள்ள அந்த அக்கினி கருவிற்கு ஒப்பிடப்படுகிறது. கருப்பைக்குள் கரு எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது என்பது பிரமிப்பூட்டுகின்ற ஒரு விஷயமாகும். இயற்கையின் மகிமைகளின் ஒன்றாகக் கருதப்பட வேண்டியது அது. எவ்வாறு கரு வெளியில் தெரிவதில்லையோ? அதுப்போல அரணிக்கட்டைகளில் மறைந்துள்ள அக்கினியும் வெளியில் தெரிவதில்லை.

நமது ஆத்மா அந்த அக்கினிபோல் வெளியில் தெரியாததாக, கருப்பைக்குள் கரு பாதுகாக்கப்படுவது போல இதயக் குகைக்குள் விளங்குகிறது. அரணிக்கட்டைகளை உரசும்போது எவ்வாறு அக்கினி வெளிப்படுகிறதோ? அதுப்போல, அறியாமையை நீக்கும் புத்தி என்னும் **தீ** நம்முடைய இதயத்திற்கு அருகே பிரகாசித்துக் கொண்டுள்ளது. அந்த புத்தி சக்தி விழித்துக் கொண்ட யோகிகள் அந்த ஆத்மாவைக் காண்கின்றனர் என்பதாக இந்த மந்திரம் கூற வருகின்ற ஆழமான உண்மையை நாம் அறிய வேண்டும்.

## ஆணையிடுபவன் நீ

यतश्चोदेति सूर्योऽस्तं यत्र च गच्छति ।
तं देवाः सर्वेऽर्पितास्तदु नात्येति कश्चन । एतद्वै तत् ॥ ९॥

யதச்சோதேதி ஸூர்யோ அஸ்தம் யத்ர ச **க**ச்சதி |
தம் தேவா: ஸர்வே அர்ப்பிதாஸ்தது நாத்யேதி கச்சன | ஏதத் வை தத் || ௯ ||

பொருள்:

யாரிலிருந்து சூரியன் உதிக்கிறானோ, எங்கே மறைகிறானோ, அந்த இறைவனை எல்லா தெய்வங்களும் போற்றுகின்றனர். அவரை மீறி யாரும் நடப்பதில்லை. நீ கேட்ட பொருள் அந்த இறைவனே.

பிராண சக்தி நம்மை இயக்குகிறது, பிரபஞ்சத்தை இயக்குகிறது, தெய்வமாகப் போற்றப்படுகிறது என்று 7 – ஆம் மந்திரத்தில் கண்டோம்.

பல்வேறு விதமாகச் செயல்படுகின்ற பிராண சக்தி பல்வேறு தெய்வங்களாகக் கொண்டாடப்படுகிறது. அந்த தெய்வங்கள் அனைத்தும், அதாவது பிராண சக்தி முழுவதும் முழுமுதற்பொருளாகிய இறைவனுக்கு அடங்கியதே.

அவரது ஆணையால்தான் இந்தப் பிரபஞ்சம் இயங்குகிறது. அந்த இறைவனே நம்முள் ஆத்மாவாக விளங்குகிறார், அந்த ஆத்மாவை நீ என்று நசிகேதனுக்கு எமதர்மன் அறிவுறுத்துகிறான்.

## இங்கே இருப்பதே அங்கேயும் உள்ளது

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥ १०॥

யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ |
ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நானேவ பச்யதி || 10 ||

பொருள்:

இங்கே எது இருக்கிறதோ? அதுவே அங்கே இருக்கிறது. அங்கே எது இருக்கிறதோ? அதுவே இங்கும் இருக்கிறது. இந்த உலகில் வேறுபாடுகள் இருப்பதுப்போல எவன் காண்கிறானோ? அவன் மரணத்திலிருந்து மீண்டும் மரணத்தை அடைகிறான். அதேசமயம், இறைவனை எங்கும், எதிலும் காணுகின்றவன் அதே இறைவனை தன்னுள்ளேயும் காணுகின்றான். அவன் மட்டுமே மரணமில்லாப்பெரு நிலையை அடைகின்றான்.

இறைவனை வெளியே எங்கும் தேடி கிடைக்காமல், கடைசியில் தன்னுள்ளே எவன் காணுகின்றானோ? அவனே மரணமில்லாப்பெரு நிலையை அடைகின்றான் என்பதாகவே இந்த மந்திரம் கூற வருகின்றது.

இதை ஒரு சிறு கதையின் வாயிலாக நாம் புரிந்துக் கொள்ளலாம். ஒரு நாள் ஒரு மகான் தமது சீடர்களுடன் காசியிலிருந்து ராமேஸ்வரம் புறப்பட்டார். அப்படிப் புறப்பட்டவர் காசியில் ஓடுகின்ற கங்கை நீரை ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காக எடுத்து வைத்துக் கொண்டார்.

அன்றைக்கெல்லாம் கால் நடையாகவும், சில இடங்களில் கிடைக்கும் மாட்டு வண்டிகள் மூலமாகவும் மட்டுமே பயணத்தைத் தொடங்க முடியும். அவ்வாறு போகும் வழியில் அந்த மகான் ஒரு கழுதையைக் கண்டார். அது கடுமையான வெயிலில் தண்ணீர் தாகத்தில் தவித்துக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டார்.

உடனே, அவரது மனம் பதைப்பதைத்து, உடனடியாக தன்னிடம் எடுத்துக் கொண்டு வந்த அந்த கங்கா தீர்த்தத்தை அந்தக் கழுதையின் வாயில் ஊற்றினார். அந்த கழுதையும் அந்த நீரை அருந்தி ஆனந்தம் அடைந்ததைக் கண்டார்.

இதைக் கண்ட சீடர்கள் என்ன சுவாமி, இப்படி செய்துவிட்டீர்களே! ராமேஸ்வரத்தில் ஸ்ரீ ராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்றுதானே இந்த கங்கை நீரைக் கொண்டு வந்தீர்கள். இப்போது, இந்த கழுதைக்கு உற்றி விட்டீர்களே? என்று கேட்டனர்.

அதற்கு அந்த மகான் சீடர்களே! உண்மையில் அந்த ராமநாத சுவாமிக்குத்தான் தீர்த்தத்தை ஊற்றினேன் என்றார். நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதுப் போன்று ஏதோ ஒரு ஜடமான கல்லில் அந்த தீர்த்தத்தை ஊற்றவில்லை என்பதாகக் கூறீனார்.

இதன் வாயிலாக, சீடர்களுக்கு ஒரு உண்மை உணரப்பட்டது. அது, எங்கும் எதிலும் இருக்கின்ற இறைவன் இந்த கழுதையின் வடிவில் கங்கை நீரைப் பெற்றுக்கொண்டார். உண்மையில், கல்லிலே கடவுளைப் பார்க்கின்ற நாம் இந்த உயிர்களிடமும் கடவுளைக் காண வேண்டும் என்ற உயரிய உண்மையை அன்றே உணர்ந்துக் கொண்டனர்.

ஆக, இந்த மந்திரம் கூறவருகின்ற ஆழமான உண்மை என்னவெனில், இங்கே எது இருக்கிறதோ? அதுவே அங்கே இருக்கிறது. அங்கே எது இருக்கிறதோ? அதுவே இங்கும்

இருக்கிறது. இந்த உலகில் வேறுபாடுகள் இருப்பதுப்போல யார் காண்கிறானோ? அவன் மரணத்திலிருந்து மீண்டும் மரணத்தை அடைகிறான்.

அதேசமயம். இறைவனை எங்கும், எதிலும் பார்க்கின்றவன் கடைசியில் அதே இறைவனை தன்னுள்ளேயும் காணுகின்றான். அவனே மரணமில்லாப்பெரு நிலையை அடைகின்றான்.

ஆக, இந்த சமுதாயத்தை நாம் அணுகுவதற்கான ஒரு முக்கிய அடிப்படைக் கருத்தை இங்கே காண்கிறோம். நம் ஒவ்வொருவருள்ளும் இருப்பது ஒரே இறைவனின் அம்சம் என்றால் நம்மில் வேறுபாடுகள் இல்லை என்றாகிறது. எனவே, விருப்பு, வெறுப்பு, கோபம் போன்ற எதிர்மறை பண்புகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. எல்லோரிலும், எல்லா இடங்களிலும் இறைவன் இருக்கின்றார் என்ற கருத்து நல்லொழுக்கத்திற்கு ஒரு சிறந்த அடிப்படை பண்பாகவும் அமைகின்றது.

இதிலே, நான் ஏன் அடுத்த உயிர்களை துன்புறுத்தக் கூடாது? போன்ற கேள்விகளுக்கு இறைவன் நம்மைத் தண்டிப்பார் என்பதல்ல.

பதில், நான் இறைவனின் அம்சம், நல்லவனாக இருப்பது என் இயல்பு. மேலும், நானே எல்லாவற்றிலும் அந்தர்யாமியாக, ஆத்மாவாக இருக்கின்றேன் என்பதே இதற்கான பதில்.

நான் எதற்காக என்னைச் சுற்றியிருப்பவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும்? ஏன் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்? இவ்வாறு என்னைக் கட்டாயப்படுத்துவது எது? என்று கவனித்துப் பார்த்தாலும், அதுதான் இரக்கம் அல்லது அன்பு எனும் நம்முடைய உண்மை இயல்பு. ஆக, எங்கும், எல்லாவற்றிலும் ஒரே பொருள்தான் உள்ளது என்ற உணர்ச்சிப் பெருக்கு என்னிடம் இருப்பதுப்போலத்தான் எல்லாவற்றிலும் இருக்கின்றது எனும்போது, நம்மிடம் உண்டாவது அன்பு மட்டும்தான் என்றும் கூறலாம்.

இவ்வாறு எல்லோரிலும் இறையம்சத்தைக் கண்டு அனைவரையும், அனைத்தையும் தன்னுள் கண்டு நேசிக்காதவன் மீண்டும், மீண்டும் பிறவிக்கு உள்ளாகிறான். எங்கும் ஒரே பேருணர்வு மட்டுமே நிலவுவதைக் காண்கின்றவன் மட்டுமே பிறவிச் சுழலிலிருந்து விடுபடுகிறான் என்பதாக இங்கு பார்க்கின்றோம்.

## உண்மையை அறிய மனமே கருவி

मनसैवेदमाप्तव्यं नेह नानाऽस्ति किंचन ।
मृत्योः स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥ ११॥

மனஸைவேதமாப்தவ்யம் நேஹ நானாஸ்தி கிஞ்சன |
ம்ருத்யோ ஸ ம்ருத்யும் கச்சதி ய இஹ நானேவ பச்யதி || 11 ||

பொருள்:

இந்த உண்மை மனத்தினால் உணரப்படுகிறது. இந்த உலகில் வேறுபாடு எதுவும் இல்லை. இங்கே வேறுபாடு இருப்பதுபோல் யார் காண்கிறோனோ அவன் மரணத்திலிருந்து மரணத்திற்குச் செல்கிறான்.

எங்கும் இறைவன் இருக்கிறார், நம் ஒவ்வொருவருள்ளும் இறைவனின் அம்சமே நிலவுகிறது என்ற உண்மையை அறிவதற்கு நம்மிடமுள்ள ஒரே கருவி **மனம்.**

இந்த மனம் தூயதாகும்போது, ஆத்மாவுடன் ஒன்றாகும்போது அது இந்த உண்மையை அறிவதற்கான தகுதி பெறுகிறது.

தூய மனம் என்றால் என்ன?

எண்ணங்களே எழாத ஒருங்கிணைந்த மனமே தூய மனம், அந்த மனமே உண்மையைக் காட்ட வல்லது, சற்று விளக்கமாகக் காண்போம். தண்ணீர் தூய்மையாக இருக்கும்போது அதில் நாம் முகம் பார்க்க முடியும். அதில் எதைக் கலந்தாலும் அதன் தூய்மை கெடுகிறது. கலப்பது பாலாக இருந்தாலும், விஷமாக இருந்தாலும் விளைவு ஒன்றுதான். நமது முகம் அதில் பிரதிபலிக்காது.

அதுப்போல மனமும் ஆத்மாவைப் பிரதிபலிக்க வேண்டுமானால், அதில் எண்ணங்களே இருக்கக் கூடாது. முதலில் நல்ல எண்ணங்களை மனத்தில் நிரப்புவதன் மூலம் தீய எண்ணங்களை விரட்ட வேண்டும்.

பிறகு நல்ல எண்ணங்களையும் விட்டுவிட வேண்டும். காலில் முள் ஒன்று தைத்தால் மற்றொரு முள்ளைக் கொண்டுவர வேண்டும். காலிலிருந்து முள்ளை எடுத்தபிறது இரண்டு முட்களையும் எறிந்துவிடுகிறோம். அதுப்போல, அஞ்ஞான முள்ளை எடுப்பதற்கு ஞான முள்ளைத் தேட வேண்டியிருக்கிறது. அஞ்ஞானம் அழிந்ததும், ஞானம் அஞ்ஞானம் இரண்டையும் எறிந்துவிட வேண்டும் என்று இதனை விளக்குகிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அதுப்போலவே, மனத்தை உன்னிப்பாகக் கவனிக்கின்ற யாருக்கும் ஓர் உண்மை புரிய வரும். மனம் பல்வேறாகப் பிரிந்து கிடப்பதுதான் அது. ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொன்றை நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருப்பதை நாம் உணர முடியும்.

ஒரு தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் செல்ல முற்படுமானால் அதில் பயணம் செய்பவனின் கதி என்னவாகும்?

மனம் பிளவுபட்டுக் கிடக்கின்ற ஒருவனின் கதியும் அதுதான். அவனால் எதையும் ஒழுங்காகச் செய்ய முடியாது. புற விஷயங்களையே செய்ய முடியாத அவனால் அக வாழ்க்கை என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாது. ஒருங்கிணைந்த மனம்தான் தூய மனம். தூய மனம் என்று கூறும்போது இந்த கீழ்கண்ட இரண்டு கருத்துக்களையும் மனத்தில்கொள்ள வேண்டும்.

## அங்குஷ்ட்ட மாத்ர வித்யை: 12 – 13

இங்கே, **அங்குஷ்ட்ட மாத்ர வித்யை** கூறப்படுகிறது. அங்குஷ்ட்டம் என்றால், கட்டைவிரல் என்று பொருள். இதிலே, இறைவன் பெருவிரல் அளவினராக இதயக் குகையில் உறைகிறார் என்பதாக இனி வரும் இரண்டு மந்திரங்கள் கூறவருகின்றது.

अङ्गुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति ।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप्सते । एतद्वै तत् ॥ १२॥

அங்குஷ்ட்ட மாத்ர: புருஷோ மத்ய ஆத்மனி திஷ்ட்டதி |
ஈசானம் **பூ**த**ப**வ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே | ஏதத் வை தத் || 12 ||

பொருள்:

எங்கும் நிறைந்தவரும், இறந்த மற்றும் எதிர் காலங்களுக்குத் தலைவரும் ஆன இறைவன் தலையின் நடுவில் இதயக் குகையில் பெருவிரல் அளவில் இருக்கிறார். அவரை அறிந்தவன் யாரையும் வெறுப்பதில்லை. நீ கேட்ட பொருள் அவரே.

பொதுவாக ஆத்மாவைத் தேடுவது என்பது, பல்வேறு வகையான மத நம்பிக்கைகளால் வழிநடத்தப்படுகிறது, இது ஆத்மா ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்கிறது மற்றும் நம் உடலில் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே உள்ளது என்று நம்முடைய புரிதலுக்காக இவ்வாறு கூறப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானவை மதங்களின் நம்பிக்கைகள் மட்டுமே ஆகும். அதாவது, ஒருவர் ஆத்மாவை அடைய விரும்பும் அவரது ஆன்மீக வளர்ச்சியின் அடிப்படையில், அவரவர்களின் புரிதலுக்கு ஏற்றவாறு குருமார்கள் ஆத்மாவைப் புரிய வைக்க முயற்சிப்பார்கள். அந்த வகையிலே, அடிப்படையில் எங்கும் வியாபித்துள்ள எல்லையற்ற ஆத்மாவை எப்படி? இங்கு வெறும் கட்டைவிரல் அளவு மாத்திரமாக கண்டுகொள்ள முடியும் என்பதாக கேள்வியும் எழுகின்றது. அதாவது, ஆத்மாவை அறிய ஆர்வமுடன், ஆன்மீக வளர்ச்சிப் பாதையில் முன்னேறத் தயாராக இருக்கும் ஒரு நபரின் மனதை அமைதிப்படுத்தவும், அவரது இதயத்தை தெய்வீக இதயமாக மலரச் செய்யவும் உதவும் ஒரு முன்னோக்குடன் கூடிய, இந்த நம்பிக்கைகள் உணர்வுபூர்வமாக புகுத்தப்பட்டுள்ளன.

எனவே, இந்த நம்பிக்கைகளைத் தொடரும்போது, ஒரு உண்மையான ஆத்ம சாதகன் அதற்கான அறுதி உண்மை இன்னும் அறியப்பட வேண்டும் என்பதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

வாமனன் என்ற விஷ்ணுவின் அவதார கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அந்தோ பரிதாபம் அந்தக் கதை புராணத்தில் கட்டுக்கதையாக மக்களுக்கு கற்பிக்கப்பட்டு விட்டது. அந்தக் கதை கூறும் உண்மை என்ன? திருமால் வாமன அவதாரத்தில் வருகின்றார். மகாபலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் மட்டும் கேட்கின்றார் அதற்கு மகாபலி சக்ரவர்த்தியும் தருகின்றேன் என்று வாக்களித்தார். அதன்படி வாமனன் முதலில் இந்த பூமியை முழுவதும் ஒரு அடியில் அளந்தார். அடுத்து, இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சத்தையே அளந்தார். அடுத்து மூன்றாவது அடி எங்கே வைக்கட்டும் என்று வாமனன் கேட்கின்றார். அதற்க்கு பகாபலி ஐயனே! இதற்குமேல் என்னிடம் ஏது இடம்? ஆகவே, தங்கள் மூன்றாவது அடையை என் தலையில் வையுங்கள் என்று கூறுகின்றான். பகவான் வாமனரும் அந்த மூன்றாவது அடியை அவனது தலைமீது வைக்கின்றார் என்பதாகக் கதைக் கூறப்பட்டிருக்கும்.

இதன் தாத்பரியம் என்னவெனில், எல்லையற்ற ஆத்மாவை எதனுள்ளும் அடக்க முடியாது என்பதையே இந்த வாமன அவதாரம் கதைக் காட்டுகின்றது.

ஆக, உண்மையில், எல்லையற்ற ஆத்மா மனித உடலின் உள்ளே அடங்க முடியுமா? என்றால், எப்படி முடியும்? அந்த எல்லையற்ற ஆத்மாவின் உள்ளே இந்த மனித உடல் உள்ளது என்றால், அது சரியாக இருக்கும்.

எல்லா உடல்களுக்குள்ளும் வசிப்பவன் என்பதை வேதம் கூறும்போது, **"மத்யே வாமன வாசினம்", "வித்தி த்வமேதம் நிஹிதம் குஹாயம்", "ஈஷானோ பூத பவ்யஸ்ய", "பரமாப்னோதி தத் விஷ்ணோ பரமம் பதம்"** என்று அந்த ஆத்மா எல்லாவற்றிலும் மேன்மையானது என்பதாகவே பார்க்கப்படுகின்றது.

இதை எப்படி எளிதாகப் புரிந்துக் கொள்ளலாம் என்றால், எல்லை தெரியாத மிக பிரமாண்ட கடல் நீர் உள்ளது. அந்த நீரை நாம் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு, அந்த கடல் நீர் இந்த பாத்திரத்திற்குள் வந்துவிட்டது என்று எப்படி கூறுகின்றோமோ? அப்படித்தான் எல்லையற்ற வெட்டவெளி எனும் **தூய அறிவு வெளி** இந்த மனித உடலுக்குள் வந்துவிட்டது என்று ஒரு புரிதலுக்காகக் கூறுகின்றோம்.

உண்மையில், அந்த பாத்திரத்தை கடலுக்குள் மூழ்கடித்து நாம் நீரை எடுக்கும்போது, அந்த கடல் நீருக்குள்தான் அந்த பாத்திரம் இருக்கின்றதே தவிர, பாத்திரத்துக்குள் கடல் நீர் இல்லை. இந்த உண்மையை நாம் ஆத்மாவுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆக இந்த மந்திரம் கூறவருகின்ற விசயம் எங்கும் நிறைந்தவரும், இறந்த மற்றும் எதிர் காலங்களுக்குத் தலைவரும் ஆன இறைவன் தலையின் நடுவில் இதயக் குகையில் பெருவிரல் அளவில் வாமனனாக இருக்கிறார். ஆனால், அவரை அவ்வாறு குறைத்து எவைப்போட்டு விடாதே? உண்மையில் எல்லையற்றவராக எங்கும் நிறைந்தவராக இருக்கின்றார் என்ற உண்மையை தன்னுள் உணருகின்ற உண்மை சாதகன் யாரையும் வெறுப்பதில்லை. அவரே நீ கேட்ட பொருள் என்பதாக இங்கு பார்க்கப்படுகின்றது.

अङ्गुष्ठमात्रः पुरुषो ज्योतिरिवाधूमकः ।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः । एतद्वै तत् ॥ १३॥

அங்குஷ்ட்டமாத்ர புருஷோ ஜ்யோதிரிவாதூமக: |
ஈசானோ பூதபவ்யஸ்ய ஏவாத்ய ஸ உ ச்வ: | ஏதத் வை தத் || 13 ||

பொருள்:

எங்கும் நிறைந்தவரும், இறந்த மற்றும் எதிர் காலங்களுக்குத் தலைவருமான இறைவன் புகையற்ற ஒளிபோல் பெருவிரல் அளவினராக உள்ளார். இப்போது இருப்பவர் அவரே, என்றென்றும் நிலைத்திருப்பவரும் அவரே நீ கேட்ட பொருள் அவரே.

இறைவன் நம் இதயத்தில் ஆத்மாவாக விளங்குகின்ற நிலையில் அவருக்கு இங்கே ஒரு பரிமாணம் கூறப்படுகிறது. அதாவது, அந்த ஆத்மா பெருவிரல் அளவு மட்டுமே இருப்பதாக இந்த மந்திரங்கள் கூறுகின்றன.

இதை நாம் எப்படி புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான உவமானம் ஏற்கனவே கூறப்பட்டது. அதை மீண்டும் ஞாபகம் செய்துக் கொள்ள வேண்டும். அதாவது, உருவில் ஆறடி இருக்கின்ற மனிதன் ஒரு தொலைகாட்சிப் பெட்டியில் தெரியும்போது, ஒரு அடி அளவு உள்ளவனாகவே தெரிகின்றான். அதாவது, அவனது உண்மை வடிவத்தை அந்த தொலைக்காட்சிப் பெட்டி தன்னுடைய அளவுக்கு ஏற்றவாறு சிறிது படுத்திக் காட்டுகின்றது என்று ஏற்கனவே பார்த்தோம். அதுப்போலவே, அதே ஆறடி அளவு உள்ள மனிதன் திரையரங்கில் உள்ள 70 MM திரையில் தெரியும்போது, அந்த திரையின் அளவுக்கு ஏற்றவாறு 50 அடி உயரத்தில் பிரமாண்ட அளவில் தெரிகின்றான்.

ஆக, இதன் உண்மை என்னவெனில், இயற்கையான ஒன்று செயற்கையான ஒன்றில் வெளிப்படும்போது, அந்த செயற்கை தன்மைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்கின்றது என்ற உண்மை நமக்கு நன்கு விளங்குகின்றது.

அதுப்போல், எல்லையற்ற ஆத்மாவை மனிதன் தன்னுடைய ஹிருதயக் குகையில் தியானிக்கும்போது, அதன் சிறிய உருவத்தையே தியானிக்க முடியும் என்பதற்காக நமக்கு கொடுக்கப்பட்ட வித்யை இந்த அங்குஷ்ட மாத்ர வித்யா என்பதாகப் புரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது, நம்முடைய தியானத்திற்கு வசதியாக இருப்பதைக் குறிப்பிடுவதற்காக பெருவிரல் அளவு என்று கூறப்பட்டுள்ளது. உண்மையில், அளவில் சிறியதாக அதை நினைப்பதால், மனிதர்கள் அது ஜீவாத்மா என்றும் எதற்கு வேறாக வெளியே பெரிதாக இருப்பதால் பரமாத்மா என்றும் தவறாக இருமைகளில் புரிந்துக் கொண்டார்கள் என்பதையே இங்கு நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்து, இதே மந்திரத்தில் ஆத்மாவை புகையற்ற ஒளி என்று கூறுகின்றார் எமதர்மராஜன். அதாவது, நாம் அந்தக் காலத்தில் நடைமுறையில் உபயோகித்துவந்த மண்ணெணை தீபத்தில், அல்லது விறகு அடுப்பில் புகையுடன் கூடிய சுடரொளி வெளிப்படும்.

அதுப்போல, ஆத்மாவை அந்த தீப ஒளியுடனோ, மற்ற ஒளிகளுடனோ தொடர்பு படுத்திப் பார்க்கக் கூடாது. ஆத்ம ஒளி என்பது அதுப்போன்ற புகைகின்ற சாதாரண ஒளியல்ல, அது புகையற்ற தூய அறிவு ஒளி என்பதாகவே நாம் பார்க்க வேண்டும். ஆக, அந்த **ஆத்ம ஒளி** என்பது **அறிவு ஒளி** என்பதையும் இங்கு எமதர்மராஜன் பூடகமாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆக, அந்த பரமனின் பரம பவித்ரமான எல்லையற்ற தூய அறிவு ஒளி நம்மில் ஒரு சிறிய புத்தி சக்தியாகவே பிரகாசித்துக் கொண்டுள்ளது. என்பதை உணர்ந்துக் கொண்டு, அந்த சிறிய வாமனன் உண்மையில் எல்லையற்ற விஷ்வன் என்பதை உணர்ந்தவன் மட்டுமே மரணத்தை வெல்கிறான் என்பதாக நசிகேதனுக்கு எமதர்மன் உணர்த்துகிறான்.

## உண்மையை அறியாதனும் அறிந்தவனும்: 14–15

यथोदकं दुर्गे वृष्टं पर्वतेषु विधावति ।
एवं धर्मान् पृथक् पश्यंस्तानेवानुविधावति ॥ १४॥

யதோதகம் துர்கே வ்ருஷ்ட்டம் பர்வதேஷு வி**தா**வதி |
ஏவம் **த**ர்மான் ப்ருதக் பச்யன் ஸ்தானேவானு விதாவதி || 14 ||

பொருள்:

மலைகளின் மிக உயர்ந்த பகுதிகளில் பெய்த மழை நீரானது எவ்வாறு தாழ்ந்த பகுதிகளுக்கு தானாகவே ஓடிவருகின்றதோ? அவ்வாறே, மிக உயர்ந்த தர்மம் என்கின்ற இந்த அத்யாத்ம யோகம் தானாகவே கீழிறங்கி மனிதர்களுக்காக ஓடி வருகின்றது. அதை தன்னுள் உணர்ந்துக் கொள்ள முயற்சிக்கின்றவன் அவனது அறியாமையின் காரணமாக, அது அளவற்ற பேரறிவின் பெருமிதமான வெளிப்பாடு என்பதை உணராமல் உதாசீனப்படுத்துகின்றான். அதுவே, அதை தன்னுள் உண்மையாக உணர்ந்துக் கொண்டவன் அந்த அளவற்ற பேருணர்வு நிலையில் பெருமிதம் கொள்கின்றான்.

இதிலிருந்து, நாம் அறிய வேண்டியது என்னவெனில், இறைவன் ஆத்மாவாக நம்மில் உறைகிறார் என்று கண்டோம். எல்லோரிலும் அவர் ஹிருதயக் குகையில் உறைந்துள்ளார் என்பதையும் கண்டோம்.

அவரது அத்தகைய தெய்வீக மகிமையை, அவரது அதீத வைபவத்தை அறியாமையினால், குறைத்து மதிப்பிட்டு அவரை வேறுபாடுகளுடன் காண்கின்றவன் அந்த உண்மையை அறியவில்லை. அந்த உண்மையை உணராததால் அவன் மீண்டும் மீண்டும் பிறப்புக்கு உள்ளாகிறான். அதுவே, அவ்வாறு இறங்கி வந்த பேருணர்வை தன்னுள் உள்ளுணர்வாக உணர்ந்துக் கொண்டவன் பிறவாப் பெருநிலையை அடைகின்றான் என்பதாகவே இந்த மந்திரம் கூறவருகின்றது.

यथोदकं शुद्धे शुद्धमासिक्तं तादृगेव भवति ।
एवं मुनेर्विजानत आत्मा भवति गौतम ॥ १५॥

யதோதகம் சுத்தே சுத்தம் ஆஸிக்தம் தாத்ருகேவ பவதி |
ஏவம் முனேர் விஜானத ஆத்மா பவதி கௌதம || 15 ||

பொருள்:

நசிகேதா தெளிந்த நீருற்றில் விடப்பட்ட கலங்கிய நீர் எவ்வாறு அதுவாகவே ஆகிறதோ? அவ்வாறு, ஆத்மாவின் உண்மையை உணர்கின்ற உத்தமன் அந்த ஆத்ம வடிவாகவே ஆகிறான் என்பதாக இந்த மந்திரத்தில் கூறுகின்றார்.

அதாவது, குளவியை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்ற புழு கடைசியில் அந்த குளவியாகவே மாறிவிடுவதுப்போல, ஆத்மாவாகவே தன்னை உணர்கின்றவன் அந்த ஆத்மாவாகவே ஆகிவிடுகின்றான் என்ற உண்மை இங்கு உணரப்படுகின்றது.

इति काठकोपनिषदि द्वितीयाध्याये प्रथमा वल्ली ॥

இத்துடன் கடோபநிஷதத்தின் இரண்டாம் பகுதியின் முதல் அத்தியாயம் நிறைவடைந்தது.

# பகுதி – 2 (அத்தியாயம் – 2)

**மரணத்திற்குப் பின்னால்**

மரணத்திற்குப் பின்னால்... என்ன நடக்கிறது? என்பதை இனிவரும் இந்த இரண்டாவது அத்தியாயம் கூறப்போகிறது.

நம்மில் இருவர் இருப்பதாக ஏற்கனவே (1.3.1) கண்டோம். ஒன்று மனம் எனும் ஜீவன். இது இன்ப துன்பங்களை அனுபவிப்பது. மற்றொன்று, எதிலும் கலந்து கொள்ளாமல் சாட்சியாக நிற்கின்ற அறிவு எனும் ஆத்மா.

இந்த உடல் வீழ்ந்தபிறகு, மனம், பிராணன் மற்றும் உயிர் என பலவாறாக அழைக்கப்பட்ட ஜீவன் தனது பயணத்தைத் தொடர்கிறது. அது இந்த பூமியில் வாழும்போது செய்த செயல்களுக்கும், பெற்ற அனுபவங்களுக்கும் ஏற்ப அடுத்த பிறவியில் மனிதனாகவோ அல்லது மற்ற உயிரினங்களாகவோ பிறக்கிறது. ஜீவனின் இத்தகைய மாற்றங்களால் ஆத்மா என்றும் பாதிக்கப்படுவதில்லை. **அதுவே நீ!** என்ற உயர்நிலை தியானப் பகுதி இந்த அத்தியாயத்திலும் மூன்று கோணங்களில் (1, 4, 8) ஆராயப்படுகின்றது.

ஆன்ம அனுபூதி பற்றிய சிறந்த விளக்கம் ஒன்றையும் இப்பகுதியில் காண்கிறோம்.

**உடம்பென்னும் நகரம்**
–––––––––––––––––––

पुरमेकादशद्वारमजस्यावक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते । एतद्वै तत् ॥ १॥

புரமே ஏகாதச த்வாரம் அஜஸ்யாவக்ர சேதஸ: |
அனுஷ்ட்டாய ந சோசதி விமுக்தச்ச விமுச்யதே | ஏதத் வை தத் || 1 ||

பொருள்:

பதினொரு வாசல்களை உடையதான இந்த உடம்பு, பிறப்பற்ற, மாறுபாடற்ற உணர்வை உடைய ஆத்மாவின் கருவியாகும். பதினொரு துளைகளைக் கொண்ட அதிசயமான இந்த உடலிலே அரசனான ஆத்மா மூச்சு நிற்கும் பொழுது இந்த உடலிலிருந்து விலகும். அப்பொழுது ஐம்புலன்களும் அதற்கான ஐந்துணர்வுகளும் அழியும். இந்த உண்மையை அறிபவன் அவனது மூச்சு நிற்கும் முன்னரே தனது சொல்லிலும், செயலிலும் ஒரு ஒழுங்கை உண்டாக்கிக்கொண்டு, தன்னிடமுள்ள குற்றங்களை எல்லாம் கலைந்து, அந்த தூய அறிவாகிய ஆத்மாவை தன்னுள் தியானித்து அனைத்து கவலைகளிலிருந்தும் விடுபடுகிறான். இவன் மட்டுமே பிறவிகளிலிருந்து விடுபடுகிறான். நீ கேட்ட பொருள் இந்த ஆத்மாவே என்று அறிவாயாக.

பொதுவாக, **'உடலுக்கு ஒன்பது வாசல், மனதுக்கு எண்பது வாசல்'** என்ற பழமொழிகூட ஒன்றுண்டு. ஆனால், இங்கு உடலிலுள்ள வாசல்கள் ஒன்பதுக்கு மேலே வருகின்றதே என்ற சந்தேகம் சிலருக்கு வரலாம்.

முதலில், அந்த பதினோரு வாசல்கள் (ஓட்டைகள்) என்னென்ன? என்பதைப் பார்க்கலாம். இந்த உடம்பு பதினொரு வாசல்களை உடைய ஒரு நகரம் (புரம்) என்பதாக இந்த மந்திரத்தில் கூறப்படுகிறது.

அதாவது, அவைகள் இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசி துவாரங்கள், வாய், தொப்புள், குறி, குதம் மற்றும் உச்சந்தலையிலுள்ள பிரம்மரந்திரம் (பிரம்ம ரந்திரம் என்பது உச்சந்தலையில் உள்ள ஒரு நுண்ணிய துவாரம். சாதாரண கண்களுக்கு புலப்படாதது. யோகிகள் மரண வேளையில் இதன் வழியாக தங்கள் பிராணனை (உயிரை) விடுவார்கள் என்று கூறப்படுகிறது. ஆக, இவைகள் பதினோரு வாசல்கள் ஆகும்.

இதிலே, உச்சந்தலை என்பது தற்போது மூடப்பட்டிருந்தாலும், நாம் பிறக்கும்போது, அந்த உச்சிக்குழி திறந்த ஓட்டையாகவே இருந்தது. அவ்வாறே, தொப்புள் என்பதும் பிறக்கும்போது, தாயின் வாயிலாக உடலுக்கான சத்துக்களைப் பெற்ற தொப்புள்கொடி என்பதும் ஒரு துவாரமாகவே இருந்தது. அந்த வகையிலே, இங்கு பதினோரு வாசல்கள் என்பதாக இந்த மந்திரம் விளக்குகின்றது.

மேலும், இந்த மந்திரம் உடம்பை ஒரு நகரமாகக் கூறுவது எண்ணிப் பார்க்கத்தக்கது. ஒரு நகரத்தில் நடைபெறுகின்ற அத்தனை செயல்பாடுகளும், இந்த உடம்பில் நிகழ்வதை நாம் நன்றாக அறிய முடிகின்றது.

காயமே இது பொய்யடா– வெறும்
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண் பாண்டம் ஓடடா. – சித்தர் பாடல்.

**காயம்** – இந்த உடல் நிரந்தரமானது என்று நினைத்து, இந்த நிலையற்ற உடலை வளர்க்க என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆடை– அணிகலன்கள், வாசனை திரவியங்கள், ஆடம்பர அலங்காரங்கள், அத்துடன் இந்த உடலைக் காப்பாற்றிக் கொள்ள காயகல்ப லேகியங்கள் என இப்படியெல்லாம் இந்த உடலுக்காக கவனம் செலுத்தி, அன்றாடம் நிலையற்ற இவ்வுடலை வளர்த்து பாதுகாக்கிறோம்.

மகாபாரதத்தில் **"யக்ஷப்ரஸ்னம்'** என்பது மிக மிக முக்கியமான **கேள்வி – பதில்** பகுதியாகக் காணப்படுகின்றது. இது மிக உயர்ந்த தத்துவங்களின் விதைகளைக் கொண்ட ஒரு பெட்டகம் என்றால் அது மிகையாகாது. அதில் யமதர்மராஜா ஒரு யக்ஷன் உருவில் வந்து யுதிஷ்டிரர் எனும் தருமபுத்திரரிடம் கேள்விகள் பல கேட்டு, இந்த லௌகீக உலகில் காணப்படும் விபரீதங்களை – ஆச்சரியங்களை– தார்மீக நெறிமுறைகளையெல்லாம் வெளிப்படுத்துகிறார்.

உலகில் நடக்கும் அனைத்து விதமான அநியாய அவலங்களையும், அத்துடன் அனைவரிடமும் காணப்படுகின்ற தார்மீக அத்துமீறல்களையும் சுட்டிக்காட்டி, அதன் நெறி மீறிய நடப்புகளையெல்லாம் நிதர்சனப்படுத்தும் விவாதமே யக்ஷப்ரச்னம்.

அதில் யமதர்மன் தர்மரிடம் ஒரு கேள்வி கேட்கிறார்.

"தருமபுத்திரரே! இந்த உலகில் மிகவும் வியப்பான மற்றும் ஆச்சரியமான விஷயம் எது?"

அதற்கு யுதிஷ்டிரர், பின்வருமாறு பதிலளிக்கின்றார்.

"மனிதன் அன்றாடம் தன்னைச் சுற்றி நடக்கின்ற பல்வேறு விதமான இறப்புகளைப் பார்க்கிறான். ஆனாலும் தான் மட்டும் நிலையாக இருக்கப்போகிறவன் என்று நினைத்துக் கொள்கின்றான். இதைவிட ஆச்சரியமான விஷயம் ஏது?" என்று பதில் சொல்கிறார்.

அது கேட்டு யமதர்மன் திருப்திப்படுகிறார்.

அதே சமயம் இந்த நிலையற்ற அழியக்கூடிய உடலைக் கொண்டுதான் ஆத்மாவை அறிவதற்கான அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆகவே, புத்தி சக்தி விழித்துக் கொண்டவன், இந்த உடலைப் பேணுவதின் உயரிய நோக்கம் அந்த ஆத்மாவை தன்னுள் உணர்வதில்தான் இருக்கின்றது என்ற உண்மையை உணர்வான்.

இப்படி இந்த உடலைக் கொண்டு, தன்னுள் அந்த ஆத்மாவை உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானியான திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

**"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்புக்குள்ளே உரு பொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யான் இருந்தோம்புகின்றேனே"** என்கிறார் திருமூலர்.

இதுவரை, இந்த உடம்பை ஒரு தடையாக நினைத்திருந்தேன். ஆனால் உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டிருக்கிறான் என்பதைக் கண்டபிறகு, அதனை ஒரு கோயிலாக எண்ணி கவனமாகக் கையாளுகின்றேன் என்பதாகவே இங்கு பார்க்கப்படுகின்றது.

ஆக, உபநிஷதம் உடம்பை ஆத்மாவின் கருவியாகக் கூறுகிறது.

அவ்வாறே, அவ்வைப்பிராட்டியும் கூறும்போது,

**உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்**
**உடம்பினுக்குள்ளே உத்தமனைக் காண்.** என்கின்றார்.

ஆக, உடம்பை எப்படிப் பேண வேண்டும் என்பதற்கு இந்த மகான்கள் நமக்கு வழிகாட்டுகின்றனர். உடம்பை ஒருபோதும் வெறுக்கவோ, ஒரு தடையாகக் கருதவோ கூடாது. ஆத்மாவை உணர்வதற்காக இறைவன் நமக்குக் கொடுத்துள்ள ஒரு உன்னதமான கருவியே இந்த உடம்பு என்ற எண்ணம் வர வேண்டும். அத்தகைய அரிய உடம்பைக் கொண்டு, ஆத்மாவை நம்முள் உணர வேண்டும். அதுதான் மிகவும் முக்கியம்.

சமுதாய வாழ்க்கை, கல்வி, கோயில், போக்குவரத்து, நதிகள், உணவு, உற்பத்தி, சுத்திகரிப்பு, கழிவை வெளியேற்றுதல், தற்காப்பு எனும் காவல் என்று ஒன்றுவிடாமல் எல்லா துறைகளும் இந்த உடம்பினுள் உள்ளன.

ஆக, புறத்தில் நம்மால் உண்டாக்கப்பட்ட சமுதாயக் கட்டமைப்பை நமது முனிவர்கள் விஞ்ஞானத்தின் துணையின்றி, இந்த உடலைக் கொண்டே உண்டாக்கி இருக்கின்றார்கள் என்பதையும் நம்மால் நன்கு உணர முடிகின்றது.

சாந்தோக்ய உபநிஷதம் உடம்பை வெறும் நகரம் என்று கூறாமல், இறைவன் வாழும் நகரம் (**பிரஹ்ம புரம் – சாந்தோக்ய உபநிஷதம், 8.1.1.**) என்றும் கூறுகிறது.

**அதுவே நீ!** என்ற தியானப் பகுதி இது என்பதாகவே ஏற்கனவே பார்த்தோம்.

ஆத்மா வாழும் வீடு இந்த உடம்பு. அதாவது, உள்ளே உறைகின்ற ஆத்மா என்பது ஒரு கட்டைவிரல் அளவு இருந்துக் கொண்டு, இந்த உடம்பை இயக்கிக் கொண்டுள்ளது. இந்த உண்மையை ஆழ்ந்து சிந்தித்து, அந்த ஆத்மாவை தன்னுள் உணர்ந்து, அதை தனக்கு உரித்தாக்கிக் கொள்பவன், அந்த தூய உணர்விலேயே வாழ முடிந்தவன், பிறவாப் பெருநிலையாகிய **வீடுபேறு** என்ற விடுதலையை அடைகின்றான். அவன் மட்டுமே பூரண சுதந்திரமானவனாக ஆகிறான்.

அதாவது உடம்பு, மனம் போன்ற கருவிகள் தன்னைக் கட்டுப்படுத்துவதிலிருந்து அவன் மட்டுமே விடுபடுகிறான். அவனுக்கு மட்டுமே இந்த உடம்பும், மனமும் தன்னிலிருந்து வேறானவைகள் என்றும், அவைகள் தன்னைக் கட்டுப்படுத்துவதில்லை என்றும் நன்கு உணர்ந்துக் கொண்டு, மரணத்திலிருந்து விடுபடுகின்றான். ஏனெனில், மரணம் என்பது அழியக்கூடிய உடம்பிற்கு மட்டுமே. சுருக்கமாகச் சொல்வதானால், அவன் மரணத்தை வெல்கிறான். உடம்பு வீழ்ந்தபிறகு, மீண்டும் பிறவாத நிலையை அடைகிறான். பிறந்தால்தானே இறக்க வேண்டும்? ஆக அவன் இனி பிறக்கவே மாட்டான். அவனே யோகி, அவனே ஞானி என்பதாக பார்க்க முடிகின்றது.

हँसः शुचिषद्वसुरन्तरिक्षसद्-
होता वेदिषदतिथिर्दुरोणसत् ।
नृषद्वरसदृतसद्व्योमसद् अब्जा
गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥ २॥

ஹம்ஸ சுசிஷத்வஸுரந்தரிக்ஷ ஸத்
ஹோதா வேதிஷ**த்தி**திர் **து**ரோணஸத் |
ந்ருஷவரஸ**த்** தஸ்ரிதயோமஸதப்ஜா
கோஜா க்ருதஜா அத்ரிஜா ரிதம் ப்ருஹத் || 2 ||

பொருள்:

அந்த ஆத்மா எங்கும் செல்வது, தூய ஆகாயத்தில் சூரியனாக இருப்பது. அனைத்திற்கும் ஆதாரமானது, வெளியில் காற்றாக இருப்பது. அக்கினியாக பூமியில் இருப்பது, விருந்தினனாக வீட்டில் இருப்பது, மனிதனில் உறைவது, தேவனில் உறைவது, சத்தியத்தில் உறைவது, ஆகாயத்தில் உறைவது, நீரில் தோன்றுவது, பூமியில் தோன்றுவது, யாகத்தில் தோன்றுவது, மலையில் தோன்றுவது, பிரபஞ்ச நியதியாக விளங்குவது, மிகவும் பெரியது.

இவ்வாறு, ஆத்மாவின் எங்கும் நிறைந்த தன்மைக்கான ஒரு பரந்த விளக்கத்தை இங்கே காண்கிறோம்.

எங்கும் நிறைந்ததாக இருப்பதால், அது செல்ல முடியாத இடம் என்ற ஒன்று இல்லை. எனவே, அது எங்கும் செல்வது. சங்கு, சிப்பி, முத்து, மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள் நீரில் தோன்றுபவைகள். தானியங்கள் முதலானவைகள் பூமியில் தோன்றுபவைகள் என எல்லாவற்றிலும் ஒன்றுவிடாமல் அந்த ஆத்மா மட்டுமே உள்ளது.

பிரபஞ்சத்தில் பல்வேறு சக்திகள் செயல்படுவதையும், அந்த சக்திகளே பிரபஞ்சத்தை இயக்குவதையும் கண்ட வேத கால ரிஷிகள் மனித வாழ்வின் வளத்திற்கும், நலத்திற்கும் அந்த பஞ்சபூதங்களான தேவர்களை நாடினார்கள்.

யாகங்களின்மூலம் அந்த பஞ்சபூதங்களை தொடர்பு கொண்டார்கள். எனவே, யாகம் என்பது பொதுவாக வேத சாஸ்திரத்தில் பஞ்சபூத சக்திகளின் சின்னமாகவே உள்ளது. அந்த பஞ்சபூத சக்திகளாகவும் ஆத்மாவே இருக்கிறது. ஆக, அந்த யாகத்தின் உயரிய நோக்கம் மனிதன் மகத்தான அந்த ஆத்மாவை அறியக்கூடிய மனத்தூய்மைக்கான ஒரு வேள்வி என்பதாகவே அன்றைய காலங்களில் பார்க்கப்பட்டது.

ஆக அனைத்தும் ஆத்மா என்பதினால், மலைகளிலிருந்து தோன்றுகின்ற நதிகள் முதலானவையாகவும் ஆத்மா என்பதாகவே எல்லோராலும் அறியப்பட்டது. ஆக, நாம் சற்றே அமைதியாக நின்று, இந்த உலகையும், அதன் செயல்பாடுகளையும் ஒருமுறை பார்க்கத் தெரிந்த யாருக்கும், இந்த உலகின் இயக்கம் ஒரு மாறாத நியதிக்குக் கட்டுப்பட்டு ஒரு ஒழுங்கு நியதில் ரிதம் மாறாமல் நடைபெறுவது நன்கு தெரியவரும்.

சூரிய உதயம், காற்றின் இயக்கம், பூக்களின் மலர்ச்சி, நட்சத்திரங்களின் பயணம், உயிரினங்களின் செயல்பாடுகள் என்று எல்லாவற்றிலும் ஒரு நியதி, ஓர் ஒழுங்கு நிலவுகிறது. இந்த ஒழுங்காகவும், நியதியாகவும் தூய அறிவாகிய அந்த ஆத்மாவே உள்ளது.

**உடம்பின் தலைவன்: ஜீவன்**
**————————————————**

ऊर्ध्वं प्राणमुन्नयत्यपानं प्रत्यगस्यति ।
मध्ये वामनमासीनं विश्वे देवा उपासते ॥ ३॥

ஊர்த்வம் ப்ராணமுன்னயதி அபானம் ப்ரத்யகஸ்யதி |
மத்யே வாமனமாஸீனம் விச்வே தேவா உபாஸதே || 3 ||

பொருள்:

பிராணனை மேலே இயக்குவதும். அபானனைக் கீழே தள்ளுவதுமான ஒரு இயற்கை செயல்முறையில் இருக்கும் அந்த ஆத்மா தலையின் நடுவே வாமனனாக இருப்புக் கொண்டுள்ள வெளி எனும் சிறிய ஆகாசமாகிய உள்ளுணர்வை, மிகப் பெரிய விஸ்வனாக இந்த வெட்டவெளித் தன்மையில், மிக உயரிய பேருணர்வு நிலைக்கு விரிக்கக்கூடிய வகையில் அதை தியானிக்க வேண்டும்.

இந்திய ரிஷிகளின் மாபெரும் கண்டுபிடிப்புகளுள் ஒன்று பிராணன். இந்த பிராணன் என்பதும் அந்த ஆத்மாவின் அதிசய சக்தி என்றே பார்த்தோம். அத்தகைய பிராண சக்தி நம்முடைய உடலில் தச வாயுக்களாகவும் இயங்குகின்றன என்பதை ரிஷிகள் நமக்கு விளக்கியுள்ளார்கள்.

அவைகள்,

**பிராணன்** – மேல் நோக்கிய இயக்கம்
**அபானன்** – கீழ் நோக்கிய இயக்கம்
**வியானன்** – எல்லாப் பக்க இயக்கம்
**உதானன்** – மரண வேளையில் ஜீவன் வெளியேற உதவுதல்
**ஸமானன்** – உணவு ஜீரணம், உணவை ரத்தம் போன்றவையாக மாற்றுதல்

**நாகன்** – வாந்தி, ஏப்பம்

**கூர்மன்** – கண் இமைகளின் இயக்கம்

**க்ருகலன்** – பசி

**தேவதத்தன்** – கொட்டாவி

**தனஞ்ஜயன் –** உடம்பிற்கு ஆரோக்கியம் அளித்தல். ஆக, இவைகள் அனைத்தும் மொத்தமாக **பிராணன்** என்பதாகவே அழைக்கப்படுகின்றன.

ஆக, இந்தப் பிராணனை இந்த உடலை இயக்கும் உயிராகவே பார்க்கின்றது இந்த மந்திரம். ஆக, அந்த ஆத்மாவே இந்த உடலில் உயிராக இருக்கின்றது என்ற உண்மையையும் நாம் இங்கு நன்கு உணர முடிகின்றது. அத்தகைய உயிரைத்தான் நாம் **ஜீவன்** என்று அழைக்கின்றோம். ஆக, அந்த ஜீவன் இந்தப் பிராணனின் மூலமாக உடம்பையும், மனத்தையும் கட்டுப்படுத்தி அவற்றின் வாயிலாக சுகதுக்க அனுபவங்களைப் பெறுகிறது.

இந்த ஜீவனே உடம்பிற்கும், மனத்திற்கும் தலைவனாக உள்ளது.

**மரணத்திற்குப் பின்னால்: 4–11**

**————————————————————**

மனிதன் ஐந்தின் தொகுதியால் சூழப்பட்டவன். அதாவது, ஐந்து கோஷங்களால் சூழப்பட்டவன் என்பதையும் அறிய முடிகின்றது. அவைகள், உடம்பு, மனம், பிராணன், விஞ்ஞானம் (புத்தி), ஆனந்தம், இந்த ஐந்தும் ஆத்மாவின் உறைகளாக, சட்டைகளாகக் கருதப்படுகின்றன.

இவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான வாழ்க்கை இருக்கிறது. **தைத்திரீய உபநிஷதம்** இவைகள் ஒவ்வொன்றையும் ஆத்மா என்றே அழைப்பதையும் இங்கு கருத்தில் கொள்ளதவேண்டும்.

இதில், இந்த உடலைத்தவிர, மற்ற நான்கையும் சேர்த்தே பொதுவாக நாம் **உயிர்** என்று அழைக்கிறோம். அந்த வகையிலே, துவைதிகள் இந்த உடம்பினுள் இரண்டு ஆத்மா இருப்பதாகவும் ஒன்று அனுபவங்களைப் பெறுவதாகவும், மற்றொன்று சாட்சியாக இருப்பதாகவும் கூறுகின்றார். ஆனால், ஆத்மா ஒன்றே. அதைவிடுத்து, ஆத்மாவின்

அம்சங்களான மனம், புத்தி, பிராணன் போன்றவைகளை ஆத்மா என்பதாக அத்வைத வழியில் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆக, அனைத்தையும் அனுபவிப்பது என்பது நம்மைப் பொருத்தவரை, கண்களுக்குப் புலப்படாத சூக்கும மனம், கண்களுக்குப் புலப்படக்கூடிய ஸ்தூல உடலில் அனுபவங்களைப் பெறுகின்றது என்பதே அத்வைத சித்தாந்தத்தின் ஆழமான புரிதல்.

அந்த மனம் அழியக்கூடிய உடலில் ஒரு நிலையில், இந்த உடம்பு என்ற கருவியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போகும்போது, மனம், பிராணம், புத்தி எனும் நுண்ணிய உடலை பிரித்துக் கொள்கின்றது. இதனைத்தான் நாம் உயிர் பிரிதல் என்று கூறுகின்றோம். இதனையே நாம் மரணம் என்கிறோம்.

எனவே மரணம் என்பது, அழியக்கூடிய உடம்பிற்கு மட்டுமே. ஆனால், மனம், பிராணன் போன்ற தொகுதிகளின் சேர்க்கையாகிய உயிரின் பயணம் மீண்டும் தொடர்கிறது. ஆகவே, அழியக்கூடிய இந்த உடம்பைக் கொண்டு, என்றும் அழியாத ஆத்மாவை உணர நமக்குக் கொடுக்கப்பட்ட மனம், புத்தி, பிராணன் போன்றவைகள் கருவிகள் என்பதாகவே பார்க்க வேண்டும். இவைகள் அனைத்திற்கும் அந்த ஆத்மா சாட்சியாக நிற்கிறது என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

**மரணத்திற்குப் பின்னால் என்ன எஞ்சும்?**

अस्य विस्रंसमानस्य शरीरस्थस्य देहिनः ।
देहाद्विमुच्यमानस्य किमत्र परिशिष्यते । एतद्वै तत् ॥ ४॥

அஸ்ய விஸ்ரம்ஸமானஸ்ய சரீரஸ்தஸ்ய தேஹின |
தேஹாத் விமுச்யமானஸ்ய கிமத்ர பரிசிஷ்யதே ஏதத் வை தத் || 4 ||

பொருள்:

உடம்பில் இருக்கின்ற இந்த உயிர் உடம்பிலிருந்து விடுபட்டு வெளியேறிவிட்டால் இங்கே என்ன எஞ்சும்? அதுவே நீ கேட்ட பொருள்.

உடம்பு வீழ்ந்துவிட்டது, உயிர் வெளியேறி விட்டது. எஞ்சுவது எதாவது உண்டா?

அதாவது, இந்த இரண்டின் மாற்றங்களால் பாதிக்கப்படாத ஏதாவது நம்மில் உள்ளதா? என்பது இங்கு கேள்வி.

உள்ளது. **அதுவே ஆத்மா.**

**"அதுவே நீ"** தியானத்தின் ஒரு முக்கியமான பகுதி இது. மரணத்தையே தியானிக்கத் தூண்டுகிறது இந்தப் பகுதி.

சுவாமி விவேகானந்தரின் உரையாடலில் வருகின்ற ஓர் அற்புதமான பகுதியை இந்த இடத்தில் சிந்திப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

**சுவாமிஜி:**

வாழ்வில் மிக மேலான உண்மை எது வென்று சொல்லுங்கள், பார்க்கலாம்.

**(யாரும் பதில் சொல்லாதது கண்ட சுவாமிஜி தொடர்ந்தார்)**

இதோ பாருங்கள், நாம் அனைவரும் இறந்துவிடுவோம் இந்த உண்மையை எப்போதும் உங்கள் மனத்தில் கொள்ளுங்கள். அப்போது மட்டுமே உங்கள் மனத்திலிருந்து அற்பத்தனம் விலகும், செயல்திறன் உருவாகும், உடலும், உள்ளமும் புத்தெழுச்சி பெறும்! உங்களுடன் தொடர்பு கொள்பவர்களும் தாங்கள் நன்மை அடைந்ததாகக் கருதுவார்கள்.

**ஒருவர்:**

ஆனால் சுவாமிஜி, மரணத்தைப்பற்றி நினைப்பதால் மனம் உடைந்து சோகம் உண்டாகாதா?

**சுவாமிஜி:**

உண்டாகும். முதலில் மனமுடைந்து சோகமும் துயர எண்ணங்களும் எழத்தான் செய்யும். சில நாட்கள் அப்படியே கழியட்டும். பின்னர் இதயத்தில் புதிய வலிமை புகுவதைக் காண்பீர்கள். எப்போதும் மரணத்தைப்பற்றி நினைப்பது உங்களுக்கு ஒரு புதிய வாழ்வைத் தந்து உங்களை மேன்மேலும் சிந்திக்கத் தூண்டுகிறது.

வெறுமை, வெறுமை அனைத்தும் வெறுமை என்பதன் உண்மையை உங்கள் கண்முன் ஒவ்வொரு கணமும் கொண்டுவருகிறது. நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் கடந்து செல்லட்டும். உங்கள் ஆத்மா சிங்கத்தின் வலிமையுடன் விழித்தெழுவதைக் காண்பீர்கள். உள்ளேயிருந்த சிறிய ஆற்றல், பேராற்றலாக மாறுவதை உணர்வீர்கள். ஆகவே, எப்போதும் மரணத்தை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் தயாரகவே இருங்கள் என்கின்றார்.

நாம் ஏற்கனவே பார்த்ததை மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும். பெரும்பாலானவர்கள் மரணம் வரும் முன்பாகவே மரணித்து விடுகின்றார்கள். காரணம் பயம். மரணத்தைப் பற்றிய பயம். அதாவது, அந்த மரணம் தனக்கு வருவதாக எண்ணிக் கொண்டு பயப்படுகின்றார்கள். ஆனால், உண்மையில் என்றும் அழியாத ஆத்மாவாகிய நமக்கு மரணம் என்பது ஏது? அது அறியாமையினால், நம்மால் உண்டாக்கிக் கொள்ளப்பட்ட உடலுக்கு வருகின்ற மரணம். இதை உணர்ந்துக் கொண்டால், மரண பயம் நீங்கிவிடும் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

**மாற்றங்களால் ஆத்மா ஏன் பாதிக்கப்படுவதில்லை?**

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ॥ ५॥

ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கச்சன |
இதரேண து ஜீவந்தி யஸ்மின் ஏதாவுபாச்ரிதௌ || 5 ||

பொருள்:

எந்த மனிதனும் பிராணனாலோ, அபானனாலோ வாழ்வதில்லை. எதனை ஆதாரமாகக்கொண்டு இந்தப் பிராணனும், அபானனும் இயங்குகின்றனவோ? அதனை ஆதாரமாகக் கொண்டே படைக்கப்பட்டவைகள் அனைத்தும் வாழ்கின்றன.

பிராணனும், அபானனும் முறையே இந்த உடல் இயங்குவதற்கான உள்மூச்சு மற்றும் வெளிமூச்சு என்ற உடலின் ஜீவிதத்திற்கான சக்தி என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். எனவே, இங்கு மூச்சு விடுவது என்ற செயல் எப்போதும் நம்முள்ளே நடைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு செயல். அது இங்கே உணர்த்தப்படுகிறது.

இது உண்மையில் '**சோஹம்**' என்பதாகவே பண்டைய ரிஷிகளால் பார்க்கப்பட்டது. அதாவது. மூச்சு '**அதுவே நான்**' என்பதாகவே நம்முள் இயங்குகின்றது என்பதை நம்முடைய பண்டைய ரிஷிகள் பலவகைகளில் விளக்கியுள்ளனர்.

அவர்கள் கூறவருகின்ற இந்த சோஹம் என்ற சமஸ்க்ருத வார்த்தையிம் பொருள் அஹ என்றால், '**நான்**' சஹ என்றால் '**அவன்**' என்பதாகவே பொருள் உள்ளது. அந்த வகையிலே, சஹ அஹ என்ற வார்த்தையின் ஒட்டு மொத்த வடிவமே **சோஹம்** என்பதினால், "**நானே அவன்**" என்றே இதற்கு பொருள் கூறியுள்ளனர்.

மேலும், இதை **அஜபா ஜபம்** என்றே போற்றுகின்றனர். அதாவது ஜெபிக்காத மந்திரம் என்பதாகவே இது பார்க்கப்படுகின்றது.

ஜப் மரே அஜபா மரே, அன்ஹாத் பி மெர் ஜெயே.
சூர்த்தி சமனி ஷாபாத் மே, உஸ்கோ கல் நா கயே. – கபீர்.

ஜபம் என்றால் ஜெபித்தல் என்று பொருள். ஆனால், **அஜபா** (अजपा) என்றால் ஜெபிக்காதது என்று பொருள். அஜபம் ஒருவரை கால புருஷனின் வாய்க்கு தான் எடுத்து செல்லும் என்றும், அறியாமையால் இதை ஜெபிக்கின்றவர்கள் மன மாயையில் இருந்து விடுதலை பெறாமல், கால தேவனிடம் கட்டாயம் மாட்டுவார்கள் என்பதாகவே கபீர்தாஸர் கூறுகின்றார்.

ஆனால், சத்தமில்லாத ஒலியில், பரம சத்தியத்தை அறிந்த சத்குரு அருளும் நாமத்தை உணர்ந்துக் கொண்டன் காலனின் பிடியில் இருந்து தப்பிப்பார் என்கின்றார். (பகீ 8.18–21)

அப்படியானால், சத்குரு உபதேசிக்கின்ற மந்திரம் எது?

அதுவே, "**ஸோஹம்**" ஆகும். அதாவது, 'நானே அவன்' என்ற இந்த தாரக மந்திரத்தை தன்னை ஒருவன் தன்னுள் உணரும்போது, அவன் **மரணமில்லா பெருநிலையை** அடைகின்றான் என்பதாகவே எல்லா மகான்களும் அறிவிக்கின்றார்கள்.

அதுவே, வேதத்தின் மகா வாக்கியம் '**தத்வமஸி**' (நீ அதுவாகவே இருக்கின்றாய்!) என்பதாகும்.

ஆக, மூச்சு விடுவதால் மட்டும் மனிதன் உயிர்வாழ்ந்து விடுவதில்லை. ஏனெனில், அந்த மூச்சுக்கு ஆதாரமான வேறு ஏதோ ஒன்று நம்முள் இருப்பதால்தான் நம்மால் மூச்சு விடுவதே நடை பெறுகிறது என்கிறது இந்த மந்திரம்.

பொதுவாக, நாம் புறத்தில் இயங்கும் மின்விளக்கு, மின்விசிறி போன்ற மின்சாதனங்கள் தானாகவே இயங்காது. உண்மையில் அவைகள் மின்சாரத்தால் மட்டுமே இயங்குகின்றன. ஆனால், அந்த மின் விசிறி, மின் விளக்கு நம் கண்களுக்குப் புலப்படுவதைப் போல, நம் கண்களுக்கு மின்சாரம் புலப்படுவதில்லை. ஆதலால், அவைகள் இயங்க, அவைகளுக்கு ஆதாரமாக மின்சாரம் இருப்பதுப்போல, இந்த உடல் இயங்க இந்த உடலுக்கு ஆதாரமாக ஆத்மா இருக்கின்றது என்ற உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

மேலும், மின் விளக்கை நிறுத்துவதோ அல்லது அந்த மின் விளக்கு இருந்த இடத்தில் மின்விசிறியை மாற்றிப் பொருத்துவதாலோ? மின்சாரத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. அதுப்போல, இங்கு உடல்கள் மாறினாலும், உண்மையில் ஆத்மாவில் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதையும் நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆக, ஆத்மா எதையும் சார்ந்திருக்கவில்லை. எனவே, உடல் உயிரில் நடக்கும் மாற்றங்கள் அந்த ஆத்மாவை பாதிப்பதில்லை.

**மரணத்திற்குப் பின்னால் உயிரின் நிலை: 6–7**
**------------------------------------------------**

हन्त त इदं प्रवक्ष्यामि गुह्यं ब्रह्म सनातनम् ।
यथा च मरणं प्राप्य आत्मा भवति गौतम ॥ ६॥

ஹந்த த இதம் ப்ரவக்ஷ்யாமி குஹ்யம் ப்ரஹ்ம ஸனாதனம் |
யதா ச மரணம் ப்ராப்ய ஆத்மா பவதி கௌதம || 6 ||

பொருள்:

நசிகேதா! மரணத்திற்குப் பின்னால் உயிர் என்ன ஆகும்? என்பது பற்றியும், ரகசியமானதும், அழிவற்றதும், நித்யமானதுமான ஆத்மா பற்றியும் உனக்கு இப்போது விளக்கமாகச் சொல்கிறேன்.

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम् ॥ ७॥

யோனிமன்யே ப்ரபத்யந்தே சரீரத்வாய தேஹின: |
ஸ்தாணுமன்யே னுஸம்யந்தி யதா கர்ம யதா ச்ருதம் || 7 ||

பொருள்:

மரணத்திற்குப்பிறகு சில உயிர்கள் மறுஜென்மம் என்பதாக, மனித உடம்பைப் பெறுகின்றனர். இன்னும் சில உயிர்கள் தாவரம், மிருகம் போன்ற கீழான நிலைகளை அடைகின்றனர். அவர்களது வினைப்பயனும், பெற்ற அனுபவமும் எப்படியோ? அப்படியே அவர்களது அடுத்த பிறவி அமையும். இவ்வாறு, உயிர்கள் பல்வேறு பிறவிகளை எடுத்து கடைசியில் ஏதாவது ஒரு பிறவியில் நிறைநிலையை அடைகின்றன என்பது மறுபிறவிக் கோட்பாடு. ஆகவே, நாம் வாழும் காலத்தில் எத்தகைய செயல்களைச் செய்கிறோமோ? என்னென்ன அனபவங்களைப் பெறுகிறோமோ? அதற்கேற்ப அடுத்த பிறவி வாய்க்கிறது.

சாதாரணமாக, சாராசரி மனிதனாக வாழ்கின்ற ஒருவன் மீண்டும் அதே மனிதப் பிறவியைப் பெறுகின்றான். ஏராளமாக நற்செயல்கள் செய்பவன் அதிக புண்ணியங்களின் காரணமாக, தெய்வீக வாழ்க்கைக்கான தேவலோகம் போன்ற சாஸ்திரங்களைக் கற்றறிந்த சாஸ்தாக்கள் நிறைந்த இடத்தில் வாழ்கிறான். அதிகம் தீமைகள் செய்பவன் மிருகங்களாகவும், தாவரங்களாகவும் பிறக்கிறான்.

எனவே, எதைச் செய்கிறோம் என்பதில், நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக, எத்தகைய எண்ணங்களை நம் மனத்தில் நினைக்கிறோம் என்பதிலும், அதற்கான செயல் விளைவுகள் நம்மை எங்கே கொண்டு செல்கின்றன? என்பதிலும், நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், எண்ணங்களே செயல்களாக உருவெடுக்கின்றன. ஆகவே, நம் ஒவ்வொருவரின் செயல்களும், அனுபவங்களும் மட்டுமே நமக்கான அடுத்த பிறவியையும் தீர்மானிக்கின்றன.

**ஆத்மா பாதிக்கப்படுவதில்லை**

य एष सुप्तेषु जागर्ति कामं कामं पुरुषो निर्मिमाणः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिँल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन । एतद्वै तत् ॥ ८॥

ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண: |
ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம ததேவாம்ருத முச்யதே |
தஸ்மிம்லோகா: க்ஷ்ரிதா: சர்வே தது நாத்யேதி கச்சன | ஏதத் வை தத் || 8 ||

பொருள்:

நம்முடைய புலன்கள் மற்றும் மனம் தூங்கும்போதும், எது விழித்துக் கொண்டிருக்கின்றதோ? அதுவே பரம புருஷனாகிய பகவான் என்பதினால், அவரே தனக்கு விருப்பமானவற்றை உருவாக்குகின்றார். அதுவே சுக்கிரன், அதுவே ப்ரஹ்மம். அதுவே அமிர்தம். எல்லா உலகங்களும் அவருள்ளேயே அடங்கியுள்ளன. அதுவே தூய மரணமற்ற ஆத்மா என்பதை அறிவாயாக. எல்லா உலகங்களும் அதனையே சார்ந்திருக்கின்றன. அதனைத் தாண்டியவனாக யாரும் இல்லை.

நம்முடைய ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் எத்தனையோ புரியாத புதிர்களுடன் கூடிய நனவு, கனவு மற்றும் ஆழ் உறக்கம் போன்றவைகள் அனுதினமும் இடம்பெறுகின்றன. நாம் பிறந்தது முதல் இன்றுவரை இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நம்மிடம் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இங்கே, இந்த மந்திரம் கனவுபற்றி கூறுகிறது.

உடம்பும், மனமும் கருவிகள். அவற்றிற்கு ஓய்வு தேவை. உடம்பு ஓய்வெடுப்பது தூக்கம் எனப்படுகிறது. அப்போதும் மனம் தொடர்ந்து செயல்படுகிறது. அதுவே கனவு.

அங்கே தேரில்லை, இழுக்க மிருகங்கள் இல்லை, சாலைகள் இல்லை, அங்கே இன்பம் இல்லை, களிப்பு இல்லை, ஆனந்தம் இல்லை, அங்கே குளம் இல்லை, ஏரி இல்லை, நதிகளும் இல்லை, அவன் அனைத்தையும் உருவாக்குகிறான். ஏனெனில், அவனே அனைத்தையும் உருவாக்குபவன் என்று கனவுலகத்தைப்பற்றி **பிருஹதாரண்யக உபநிஷதம்** கூறுகிறது.

உடம்பு ஓய்வெடுக்கும்போது மனம் செயல்படுகின்ற நிலை இது. விழிப்புநிலையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளின் அடிப்படையில் இதுப்போன்ற கனவுகள் தொடர்ச்சியாக அமையலாம். சிலவேளைகளில், அவைகள் மனதின் ஆசைகளின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். இன்னும் சிலவேளைகளில் எதிர்காலத்தைப்பற்றி அறிவிப்பாகவும் இருக்கலாம். மனம் இங்கே தனக்கென்று ஓர் உலகை உருவாக்கி இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது.

அதுவே, இன்னும் ஆழ்ந்த உறக்க நிலையில் மனமும் ஓய்வெடுக்கிறது.

அது ஆழ்ந்த தூக்கம். ஆழ்ந்த தூக்கத்தின் போதும் நம்மில் யாரோ ஒருவர் விழித்திருந்து நாம் ஆழ்ந்து தூங்குவதைக் கவனிக்கிறார். அதனால்தான் விழித்ததும், நான் நன்றாகத் தூங்கினேன் என்று நம்மால் சொல்ல முடிகிறது.

ஆழ்ந்த தூக்கத்திலும் சரி, கனவிலும் சரி, விழிப்பு நிலையிலும் சரி அந்த ஒருவர் விழித்திருப்பதால்தான் அனைத்தையும் நாம் உணர முடிகிறது. அந்த ஒருவரே ஆத்மா. **அதுவே நீ!** என்று எமதர்மன் கூறுகிறான்.

ஆக, ஆத்மா இருப்பதால்தான் நாம் மூன்று நிலைகளிலும் மாறிமாறி சஞ்சரிக்க முடிகிறது. இந்த நிலைகளில் மூலமாகத் தான் நாம் பல்வேறு உலகங்களையும் பல்வேறு விதமாக அனுபவிக்கவும் முடிகிறது. அதனால்தான் எல்லா உலகங்களும் ஆத்மாவைச் சார்ந்திருப்பதாகக் கூறப்பட்டது. இவ்வாறு மூன்று நிலைகளிலும் சாட்சியாக நிற்கின்ற பொருளே நாம் என்பதை உணரும்போது, நம்முடைய உடம்பின் மாற்றங்களோ, மனத்தின் செயல்பாடுகளோ நம்மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை. உடம்பின் மாற்றமாகிய மரணமும் நம்மைப் பாதிக்காத நிலையை நாம் அடைந்து விடுகிறோம்.

**"அதுவே நீ"** எனும் தியானப் பகுதி இது.

**ஆத்மாவின் பாதிக்கப்படாத தன்மை மூன்று உவமைகள்: 9–11**

**———————————————————————————————————————**

மரணத்திற்குப் பின்னால் உடம்பு வீழ்கிறது. உயிர் தனது பயணத்தைத் தொடர்கிறது. ஆத்மா எந்தப் பாதிப்புமின்றி அனைத்து மாற்றங்களுக்கும் சாட்சியாக எப்போதும்போல இருக்கிறது. இனி தொடரும் மூன்று மந்திரங்களில் இதைப்பற்றி மூன்று உவமைகள் மூலம் விளக்கப்படுகிறது.

अग्निर्यथैको भुवनं प्रविष्टो
रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा
रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ ९॥

அக்னிர்யதைகோ புவனம் ப்ரவிஷ்ட்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ |
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்ராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிச்ச || ௯ ||

பொருள்:

அக்கினி எனும் நெருப்பில் காய்ச்சப்படும்போது, அந்த உலோகம் அந்த அக்னியின் அம்சமாக மாறி நிற்பதை நம்மால் காண முடிகின்றது. அதாவது, அக்னியில் போடப்பட்ட இரும்பு குண்டு எப்படி இருக்கின்றதோ? அதே வடிவத்திற்கு அக்னியும் வந்துவிடுகின்றது. அவ்வாறே, எல்லா உயிர்களிலும் இருக்கின்ற ஆத்மா ஒன்றாகவே இருந்தாலும், பல்வேறு உயிரினங்களில் உடல்களில் அந்தந்த வடிவத்தில் விளங்குகிறது. அதே வேளையில், அந்த வடிவங்களுக்கு வெளியிலும் ஆத்மா இருக்கின்றது.

பஞ்ச பூதங்களாகிய பூமி, தண்ணீர், அக்கினி, காற்று, ஆகாசம் என்ற ஐந்து அடிப்படைப் பொருட்களின் சேர்க்கையால் ஆகியது இந்த உலகம். இந்த ஐந்தும் உலகின் ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வோர் இடத்திலும் நிறைந்துள்ளது. அவ்வாறு அக்கினியும் எல்லா இடங்களிலும் உள்ளது.

ஆனால் கட்டை, விறகு போன்ற எரிப்பொருட்களில் அது அதிகமாக வெளிப்படுகிறது. ஒரு கட்டையில் எந்த இடத்தைப் பற்ற வைத்தாலும் பற்றிக்கொள்கிறது. அதாவது, அக்கினி அந்தக் கட்டை முழுவதிலும் வியாபித்துள்ளது. அந்தப் பொருள் முழுவதும் வியாபிக்கின்ற தன்மையே இங்கு அந்தந்த வடிவத்தில் அக்னி விளங்குகிறது என்று கூறப்பட்டது.

அக்கினி ஒரு விறகில் இருக்கின்ற அதே வேளையில் எங்கும் நிறைந்ததாகவும் உள்ளது. எனவே விறகிலோ, கட்டையிலோ ஏற்படும் மாற்றங்கள் அக்கினியைப் பாதிப்பதில்லை. அதுபோலவே ஆத்மாவும் எதனாலும் பாதிப்பதில்லை.

அடுத்த உவமையில் இது இன்னும் தெளிவாக விளங்கும்.

वायुर्यथैको भुवनं प्रविष्टो
रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा
रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ १०॥

வாயுர்யதைகோ புவனம் ப்ரவிஷ்ட்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ |
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிச்ச || 10 ||

பொருள்:

காற்று உலகில் வந்து எவ்வாறு பல்வேறு பொருட்களில் அந்தந்த வடிவத்தில் விளங்குகிறதோ? அவ்வாறே எல்லா உயிர்களிலும் இருக்கின்ற ஆத்மா ஒன்றாக இருந்தாலும், பல்வேறு உயிரினங்களில் அந்தந்த வடிவத்தில் விளங்குகிறது. அதேவேளையில் அந்த வடிவங்களுக்கு வெளியிலும் இருக்கின்றது.

ஒரு குடம் உள்ளது. அந்த குடத்திற்கு உள்ளேயும் காற்று உள்ளது. வெளியிலும் காற்று உள்ளது. குடத்திற்கு உள்ளே உள்ள காற்று குடத்தின் வடிவத்தைப் பெறுகிறது. குடத்தின் வடிவங்களும் அளவுகளும் மாறுபடுவதற்கு ஏற்ப உள்ளே உள்ள காற்றின் வடிவமும், அளவும் மாறுபடுகிறது. அதுவே, அந்த குடத்தை உடைத்துவிட்டால் காற்றுக்கு குடத்தின் வடிவம் போய்விடுகிறது. அது எங்கும் நிறைந்த தன்மையை அடைந்துவிடுகிறது.

அதுப்போல, ஆத்மாவும் எங்கும் நிறைந்தது. அதேவேளையில் ஒவ்வோர் உயிரினங்களிலும் அந்தந்த வடிவத்தைப் பெற்று விளங்குகிறது, எவ்வாறு காற்று குடத்தால் பாதிக்கப் படுவதில்லையோ? அவ்வாறே ஆத்மாவும் உடம்பால் பாதிக்கப்படுவதில்லை.

ஆக, ஆத்மா உடலுக்குள் உள்ளதை நாம் எவ்வாறு எளிதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்றால், சர்க்கரையினால் செய்யப்பட்ட மிட்டாய்களின் வடிவம் மாறமால், ஆனால், அதன் சுவை என்பது, அந்த வடிவங்களில் எல்லா இடங்களிலும் கலந்துதான் இருக்கும். அதாவது, எங்கு சுவைத்தாலும் இனிக்கும். அதுப்போல, படைக்கப்பட்ட உடல்களின் வடிவங்கள் மாறலாம், ஆனால், அவைகளுக்கு உள்ளே உள்ள ஆத்மா இனிப்பின் சுவைப்போல, எங்கும், எதிலும் ஊடுறுவி நிற்கும்.

அதாவது, ஒவ்வோர் உடம்பிலும், ஆத்மா ஒவ்வொரு வடிவத்தில் இருப்பதாகக் கூறும்போது, அதனை ஓர் ஒளியாக உணர்ந்துக் கொண்டால், ஒரு அறையில் உள்ள ஒளிபோல எங்கும், எதிலும் வெளிச்சம் பரவியிருப்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக, ஆத்மா ஓர் மனித வடிவிலோ, தாவர வடிவிலோ இருப்பதாக கற்பனை செய்துக் கொள்ளக்கூடாது.

सूर्यो यथा सर्वलोकस्य चक्षुः
 न लिप्यते चाक्षुषैर्बाह्यदोषैः ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा
 न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥ ११॥

ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷு:
ந லிப்யதே சாக்ஷுஷைர் பாஹ்யதோஷை: |
ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா
ந லிப்யதே லோகது: கேன பாஹ்ய: || 11 ||

பொருள்:

சூரியன் இந்த முழு உலகத்திற்கும் கண்களைப் போன்றவன். அவனது சுயம்பிரகாச வெளிச்சத்தினால், இந்த உலகில் உள்ள எல்லாவற்றையும் அவன் காண்கின்றான் என்பதுப்போல, ஆத்மா சுயம்பிரகாச அறிவு ஒளி என்பதினால், அதன் அறிவு ஒளி வெளிச்சத்தினால் எல்லாவற்றையும் உண்டாக்கிக் காண்கின்றது என்பதாகவே இங்கு பார்க்கப்படுகின்றது.

அதாவது, எல்லோருடைய காட்சிக்கும் ஆதாரமாக இருப்பவன் சூரியன். ஆனால், நம்மிடமுள்ள பார்வைக் கோளாறுகளோ மற்ற புறக் குறைபாடுகளோ? அந்த சூரியனைப் பாதிப்பதில்லை. அதுப்போல, ஒன்றேயான ஆத்மா நம் எல்லோரிலும் இருந்தாலும், அவரவர்களின் துக்கங்களால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை.

இங்கே சூரியன் என்பது ஒளியின் சின்னமாகக் கூறப்படுகிறது. எதைக் காண வேண்டுமானாலும் ஒளி வேண்டும். ஒளியின்றி எதையும் காண முடியாது. காண்பவன் இருந்தாலும், பொருள் இருந்தாலும், ஒளி இல்லாவிட்டால் பார்க்க முடியாது. அதனால்தான் சூரியன் காட்சிக்கு ஆதாரமானவனாகக் கூறப்படுகிறான்.

ஒவ்வொரு கண்ணின் பார்வைக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சூரியன் என்றாலும், நம்முடைய கண்களில் உள்ள குற்றம் சூரியனை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. காமாலை நோயாளி எல்லாவற்றையும் மஞ்சள் நிறமாகக் காண்கிறேன். அவனது பார்வைக்கும் ஆதாரம் சூரியன்தான். ஆனால் இந்தக் குறை சூரியனைப் பாதிப்பதில்லை என்பதுப்போல, நம்முடைய குறைபாடுகள் ஆத்மாவைப் பாதிப்பதில்லை.

**ஆன்ம அனுபூதி (12–15)**

---------------------

மரணத்தால் பாதிக்கப்படாததாக உள்ளது ஆத்மா. அந்த ஆத்மா **'நான்'** என்ற தன் உண்மையை உணர முடியுமானால், அதுதான் மிகப்பெரிய விஷயம். தவத்தாலும் ஆன்மீக சாதனைகள்மூலம் இந்த அனுபூதியைப் பெற முடியும்.

**ஆன்ம அனுபூதியின் மகிமை: 12–13**

------------------------------

एको वशी सर्वभूतान्तरात्मा
एकं रूपं बहुधा यः करोति ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः
तेषां सुखं शाश्वतं नेतरेषाम् ॥ १२॥

ஏகோ வசீ ஸர்வபூதாந்தராத்மா
ஏகம் ரூபம் பஹுதா ய: கரோதி |
தமாத்மஸ்தம் யேனுபச்யந்தி தீரா
தேஷாம் ஸுகம் சாச்வதம் நேதரேஷாம் || 12 ||

பொருள்:

ஒன்றேயானதும், அனைத்தையும் ஆள்வதும், எல்லோரிலும் இருப்பதும், இதயத்தில் உறைவதும், ஒன்றாக இருந்தும் பலவாகத் தோன்றுவதுமான ஆத்மாவை அனுபூதியில் அறியும் விவேகிகளுக்கே நிலைத்த இன்பம் உரித்தாகும். மற்றவர்களுக்கு இல்லை.

இறைவனின் சக்தியை **மாயை** எனப்படுகிறது. அவைகளை ஆவரணம் – விக்ஷேபம் என அழைக்கின்றோம். இதற்கு இரண்டு பண்புகளையும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஒன்று இருப்பதை மறைப்பது, இரண்டு, இல்லாததை இருப்பதாகக் காட்டுவது (வேதாந்த சாரம், 51–54).

உலகம், உயிர்கள் என்று அனைத்திலும் நிலவுவது ஒரே ஆத்மா. ஒரே உணர்வுப் பொருள். இந்த உண்மை மறைக்கப்பட்டு, உலகையும் மனிதர்களையும் உயிரினங்களையும் வெவ்வேறாக நாம் காண்கிறோம். இப்படி நமக்குக் காட்டுவது இறைவனின் சக்தியாகிய மாயை.

அந்த இறைவனே ஆத்மாவாக நம் உடம்பில் உறைகிறார்.

ஆத்மாவை அனுபூதியில் உணர்பவன் நிலைத்த இன்பத்தைப் பெறுகிறான். மற்றவர்கள் பெறுவதில்லை. வேறுபாட்டு உணர்வு இருக்கும்போது அவர்களுக்கு பயம் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால், ஒருமை உணர்வில் பயமோ துன்பமோ என்றுமே இல்லை.

ஏனெனில், ஒருமை உணர்வில் யார் யாரைக் கண்டு பயப்படுவது? யார் யாருக்குத் துன்பம் செய்வது?

இருப்பது ஒன்றே அல்லவா! எனவே, இந்த உண்மையை தன்னுள் உணர்ந்தவன் எப்போதும் இன்பத்தில் திளைத்திருக்கிறான். உணராதவனுக்கு அந்த வாய்ப்பு என்றுமே கிடையாது.

**விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே –** திருநாவுக்கரசர்.

விறகிலே தீ ஒழிந்துக்கொண்டிருப்பதைப் போல, பாலில் பசு நெய் ஒழிந்துக் கொண்டிருப்பதைப் போல, அந்த அறிவு ஒளியாகிய பரமன் நம் உடலில் ஒழிந்துக் கொண்டுள்ளான். அவனை உணர்வு எனும் உறவுகொண்டு, எப்படி பாலிலிருந்து வெண்ணெய் எடுக்க மத்தைக் கொண்டு கயிற்றினால் முறுக்கி நன்கு கடைகின்றோமோ? அதுப்போல, பரமனை தன்னுணர்வு மூலம் சதா தன்னுள் கடைந்துக் கொண்டிருப்பவன் கட்டாயம் அந்த பேருணர்வு நிலையில் பரமானுபூதியை அடைவான் என்கின்றார்.

नित्योऽनित्यानां चेतनश्चेतनानाम्
   एको बहूनां यो विदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः
   तेषां शान्तिः शाश्वती नेतरेषाम् ॥ १३॥

நித்யோநித்யானாம் சேதனச் சேதனானாம்
ஏகோ பஹுனாம் யோ விததாதி காமான் |
தமாத்மஸ்தம் யேனுபச்யந்தி தீரா
தேஷாம் சாந்தி சாச்வதீ நேதரேஷாம் || 13 ||

பொருள்:

நிலையற்றவற்றில் நிலையானவரும், உயிரினங்களில் உணர்வாக விளங்குபவரும், பன்மையில் ஒருமையானவரும், ஆசைகளை நிறைவேற்றுபவருமான இறைவனை எந்த விவேகிகள் இதயத்தில் ஆத்மாவாக உறைபவராக அனுபூதியில் உணர்கிறார்களோ அவர்களுக்கே நிலைத்த அமைதி உரித்தாகும். மற்றவர்களுக்கு இல்லை.

**ஆன்ம அனுபூதி என்பது என்ன? : 14–15**
**——————————————————————————**

**ஆன்ம அனுபூதி, இறையனுபூதி, இறைக்காட்சி** என்றெல்லாம் பொதுவாக நாம் கேள்விப்படுகிறோம், அதைப்பற்றி அதிகமாகப் படிக்கிறோம். உண்மையில் அது என்ன? என்பதுபற்றி யாருமே அவ்வளவு எளிதாக உணரவில்லை.

ஏனெனில், அது ஆராய்ச்சிக்கோ? விளக்கத்திற்கோ? உரியது அல்ல. அது அனுபவத்திற்கு உரியது. இருப்பினும் ஆராய்ச்சி முயற்சிகள் தொடரவே செய்கின்றன. அதுப்போல, இனிவரும் மந்திரத்தில் நசிகேதனும் அதுபற்றி கேட்கிறான். அதற்கான சிறந்ததொரு பதிலை எமதர்மராஜனும் கொடுக்கிறான். அதையும் காண்போம்.

तदेतदिति मन्यन्तेऽनिर्देश्यं परमं सुखम् ।
कथं नु तद्विजानीयां किमु भाति विभाति वा ॥ १४॥

ததேததிதி மன்யந்தே நிர்தேச்யம் பரமம் ஸுகம் |
கதம் நு தத் விஜானீயாம் கிமு பாதி விபாதி வா || 14 ||

பொருள்:

குறிப்பிட்டுச் சொல்ல முடியாததும் மேலானதுமான அந்த அனுபூதி இன்பத்தை பலரும் நேரடியாக அனுபவிக்கின்றனர். அந்த அனுபவம் தானாக ஒளிர்கிறதா? அல்லது வேறொன்றால் ஒளிரச் செய்யப்படுகிறதா?

இதுபற்றி நான் அறிய விரும்புகிறேன்.

ஆன்ம அனுபூதி பெற்றதாகவும், இறைவனைக் கண்டதாகவும் மகான்கள் பலரும் கூறியுள்ளனர். அது அகத்தே உணரப்பட்ட ஓர் அனுபவமா அல்லது புறப் பொருட்களைப் காண்பதுபோல ஒரு புறக் காட்சியா என்பது நசிகேதனின் கேள்வி.

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥ १५॥

ந தத்ர ஸூர்யோ பா**தி** ந சந்த்ர தாரகம்
நேமா வி**த்**யுதோ பாந்தி: குதோயமக்னி: |
தமேவ **பா**ந்தமனு**பா**தி ஸர்வம்
தஸ்ய **பா**ஸா ஸர்வமிதம் வி**பா**தி || 15 ||

பொருள்:

அங்கே சூரியன் ஒளிர்வதில்லை, சந்திரனும், நட்சத்திரங்களும் ஒளிர்வதில்லை, மின்னல் கூட ஒளிர்வதில்லை. அப்படியிருக்க, அக்கினி மட்டும் எப்படி ஒளிர முடியும்?

இவ்வாறு ஒளிர்கின்ற அனைத்தும் அந்த தூய அறிவாகிய ஆத்மாவை அனுசரித்தே ஒளிர்கின்றன. அதாவது, இங்கு ஒளிர்வது அல்லது பிரகாசிப்பது என்பது நம்முடைய பார்வைக்கு புற ஒளிப்போன்று காணப்பட்டாலும், உண்மையில் அவைகள் எல்லாம் நம் அக அறிவாகிய சுய அறிவின் மூலமே ஒளிர்கின்றன என்ற ஆழமான உண்மையை இங்கு

காண்கின்றோம். ஆக, **ஆத்ம அனுபூதி** என்பது ஒரு புறக்காட்சி அல்ல. அது நம்முள் உணரக்கூடிய ஒரு அக அனுபவம் என்பதாகவே இங்கே கூறப்படுகிறது.

அதாவது, பொதுவாக ஒளி என்று எதைப் பார்த்தாலும் அவைகளுக்கு என்ற சுய ஒளி எதுவுமே கிடையாது, அவைகள் எல்லாமே நித்யமான பரமனின் இருப்பினாலேயே பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அதாவது, தூய அறிவாகிய ஆத்மாவின் ஒளியினாலேயே அவைகள் உண்மையில் பிரகாசிக்கின்றன. அவைகளின் பிரகாசத்தைப் பார்ப்பவனும், அந்த பிரகாசத்துக்கு காரணமானவனும் அந்த தூய அறிவு ஒளியாகிய பரமனே என்பதாக இங்கு பார்க்கப்படுகின்றது.

பொதுவாக, புறத்திலுள்ள அனைத்தையும் காண ஒரு விளக்கு தேவை. ஆனால், சூரியனைக் காண விளக்கு தேவையா?

தேவையில்லை.

ஏனெனில், சூரியனின் தன்னுடைய சுய ஒளியால்தான் அனைத்தும் ஒளிர்விக்கின்றன. அதுப்போல, ஆன்ம ஒளியால்தான் நாம் அனைத்தையும் காண்கிறோம். ஆகவே, உலகப்பொருட்களைக் காண்பதற்கு உதவுகின்ற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தும் பிரகாசிப்பது தூய அறிவாகிய ஆத்ம ஒளியால்தான்.

அந்த ஆத்ம ஒளி என்பது உண்மையில் நம்முடைய சுய அறிவே ஆகும். அதாவது, தன்னை தான் அறிந்துக் கொண்ட சுய அறிவு எனலாம். இதுவே **ஆத்மா,** இதுவே **ப்ரஹ்மம்**, இதுவே **இருப்பு**. இதுவே **உணர்வு.** அத்தகைய இந்த சுய அறிவு ஒளியில்தான் நாம் அனைத்தையும் அறிகின்றோம். அதாவது, முதலில், இந்த **"நான்"** என்ற தன்னிருப்பை தான் அறிவதே சுய அறிவு. நான் என்பது ஒரு வார்த்தை அல்ல. அது அனைத்து வார்த்தைகளும் உண்டாகும் முன்பு இருந்த அமைதி உணர்வு. அதுவே **உணர்வு வெளி** எனும் வெட்டவெளி.

அதாவது, **'நான்'** எனும் சுய உணர்வு அல்லது சுய அறிவு இந்த உடலைக் கொண்டு உண்டாக்கிக் கொண்ட **புலன்கள், மனம், புத்தி** போன்றவைகளைக் கொண்டு எல்லாவற்றையும் அறிகின்றது. ஆக, அதுவே, "**அனைத்தையும் அறியும் அறிவு**" என்பதாகவும் இருக்கின்றது. உண்மையில் அந்த சுய அறிவோ அசைவற்ற அமைதியின் வடிவாகவே எதிலும் சம்பந்தப்படாமல் வெறும் சாட்சி மாத்திரமாகவே உள்ளது.

ஆனால், அந்த நித்யத்தின் இருப்பு இருப்பதை அறியும் ஆவலில், அதற்காக தனது சுய அறிவில் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் வாயிலாக இந்த மனதும்,

புலன்களும் அசைவதைக் கொண்டு, நாம் அந்த அறிவு அசைவதாக தவறாக எண்ணிக் கொள்கின்றோம். ஆனால், அந்த சுய அறிவோ, தன்னில் படைக்கப்பட்ட, அனுபவிக்கப்பட்டு அழிந்துபோகின்ற அனைத்துக்கும் சாட்சியாக மட்டுமே இருக்கின்றது.

இதை எப்படி அனுபவமாக உணர்வது? என்பதே பெரும்பாலானவர்கள் கேள்வி.

இங்கு ஒரு ஆழமான உண்மையை அனைவரும் நன்கு உணர்ந்துக் கொள்ள வேண்டும். அதாவது, தக்க சத்குரு மூலம் இந்த **அத்யாத்ம யோகம்** எனும் ஆத்மவித்யா கல்வி கற்கப்பட்டவுடன், அந்த சாஸ்திரமும், சத்குருவும் உபதேசிக்கின்ற மகா மந்திரமாகிய மகா வாக்கிய உபதேசம் **"தத்வமஸி"** என்பதை ஏற்றுக் கொண்ட உண்மையான ஆத்ம சாதகன் மட்டுமே, சாஸ்திரத்தின் மீதும், சத்குருவின் மீதும் சந்தேகம் கொள்ளாமல், அவரது உபதேச வார்த்தையை அப்படியே நடைமுறைப்படுத்த தொடங்குவான்.

அந்த வகையிலே, அவன் தன்னை **"அஹம் ப்ரஹ்மாஸ்மி"** என்ற தன்னுடைய சொரூப அனுபவத்தில் வந்துவிட வேண்டும்.

அது எப்படி?

அதாவது, தன்னை ப்ரஹ்மம் என்று அறிந்தவன் முதலில் அந்த ப்ரஹ்மத்தின் உண்மைத்தன்மையை தன்னிடமுள்ள தூய உணர்வாகவே உணர்வான். அதைக் கொண்டு **"நான் இருக்கின்றேன்"** என்ற தன் சுய அறிவில் நின்றுக் கொண்டு, இங்கு படைக்கப்பட்டவைகள் எல்லாம் என் சுய அறிவின் இருப்பினாலேயே இருக்கின்றன என்பதை நன்கு உணர்வான்.

அதாவது, நித்தியம் எனும் **இருப்பு** மட்டுமே எப்போதும் இருக்கிறது. அந்த நித்தியத்தில் சுய அறிவு (Consciousness) தோன்றி மறைகிறது. அந்த சுய அறிவானது நித்தியத்தை சார்ந்துள்ளது. அத்தகைய சுய அறிவு தன்னிலேயே அனைத்து வடிவங்களையும் படைத்து, தன்னிருப்பை தான் உண்டாக்கிக் கொண்ட வடிவங்களின் வழியாக தானே அறிகிறது.

இந்த சுய அறிவானது படைக்கப்பட்ட இந்த வடிவங்களுக்கு முன்பாகவே இருப்பினும், தன்னிருப்பை தான் படைத்துக் கொண்ட வடிவத்தின் வழியாக அறிவதால், **'தான்'** இந்த வடிவமே என தன்னுடைய உண்மை சொரூபத்தை மறந்து, அறியாமையினால் தன்னை **'இன்னார்'** என்பதாக அடையாளம் கொள்கிறது. இந்த வடிவமே தான், **'நான்'** என அடையாளம் கொள்வதால், தான் பிறந்தது நிஜம் எனவும், தான் இறக்கப்போவது நிஜம்

எனவும் அறியாமையினால் ஒப்புக்கொள்கிறது. அதுவே, இதுப்போன்ற அத்யாத்மயோகத்தின் வாயிலாக சரியான சத்குருவின் வழிகாட்டுதலுடன் தன்னை அறியும் அறிவைக் கண்டவுடன், அது தான் இந்த வடிவமல்ல! அந்த சுய அறிவே நான் என அறிகிறது. பின்னர், அது அந்த சுய அறிவிலேயே நிலை கொண்டு தன் உன்னத பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்ட சலனமற்ற அமைதியில் நிலைத்து நின்று நித்தியத்தை உணர்கின்றது. தன் ஆதார தளத்தில் இருப்பு கொள்கின்றது.

அதாவது, தன்னுடைய சுய அறிவில் உணரப்படுகின்ற இந்த உடல், புலன்கள் மற்றும் மனதினால் அறியும் அனைத்துமே தன்னுடைய இருப்பினால்தான் அறியப்படுகின்றது என்ற ஆழமான உண்மையை உணரப்படும்போது, அவைகள் அனைத்தும் தூய அறிவாகிய ஆத்மா எனும் எனது சொந்த அனுபவமேயன்றி, அவைகள் எனக்கு வேறாக இல்லை என்பதினால், இருமைகள் இன்றி இவைகள் எல்லாவற்றிலும் தன்னையே காண்கின்றான். இவ்வாறு தன்னிடமிருந்து அறியப்படுகின்ற அத்தனை அறிவும், அனுபவங்களும் ஆத்மாவாகிய தன்னுடைய சுய அறிவில் பிரகாசிக்கும் தன்னுடைய **சுயானுபவம்** அல்லது **சுவானுபூதி** என்கின்ற என்னுடைய **வைபவம்** என்பதாகவே பார்க்க வேண்டும்.

அதுவே, **ஆத்ம அனுபூதி, இறையனுபூதி** என்பதாக அறியவேண்டும். அதாவது என்னுடைய இருப்பினாலேயே இங்கு எல்லாம் இருக்கின்றன. மேலும், என்னுடைய படைப்பினாலேயே அவைகள் என்னால் அனுபவிக்கப்படுகின்றன. ஆனால், அந்த அனுபவங்களில் சம்பந்தப்படாமல், அவைகளுக்கு சாட்சியாக மட்டுமே நான் இருப்பதினால், அவைகளை என்னால் அழிக்கவும் முடிகின்றன. அதாவது, **நான்** என்ற என்னுடைய **தன்னிருப்பு** அல்லது **தன்னுணர்வு** அழியாமல், அவைகளை என்னால் அழிக்கவும் முடிகின்றன என்ற ஆழமான உண்மை நன்கு விளங்கும். ஆக, **ஆத்ம அனுபூதி, இறையனுபூதி** என்பது ஓர் அனுபவம். அது, நம்முள் உணர வேண்டியது. அதை உணர அதற்கு ஆதாரமான நம் சொரூபத்தை நாம் சுய அறிவாக உணர வேண்டும். அதாவது, அந்த ஆத்மாவை ஒரு புற அறிவாகக் காணாமல், தன்னுடைய அக அறிவில் அது இருப்பு கொண்டுள்ளது என்பதை உணர வேண்டும்.

அதாவது, **அன்பு, கருணை, ஆனந்தம்** போன்றவற்றை யாரும் புறத்திலே அனுபவகாகக் காண முடியாது. அவைகளை நம்முள் உணர மட்டும்தான் முடியும். அதுப்போல, உணருகின்ற ஒரு அனுபவமே ஆத்ம அனுபவம் என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

इति काठकोपनिषदि द्वितीयाध्याये द्वितीया वल्ली ॥

இத்துடன் கடோபநிஷதத்தின் இரண்டாம் பகுதியின் இரண்டாம் அத்தியாயம் நிறைவடைந்தது.

# பகுதி – 2 (அத்தியாயம் – 3)

## மரண பயத்தை வெல்!

-------------------

மரணத்தைவிட கொடியது மரண பயம். மரணம் ஒரு முறைதான் மனிதனைக் கொல்கிறது. ஆனால் மரண பயம் ஒவ்வொரு க்ஷணமும் அவனைக் கொன்று கொண்டிருக்கிறது.

எனவே, மரண பயத்தை விடுமாறு இந்தக் கடைசி அத்தியாயத்தில் எமதர்மன் அறிவுரை கூறுகிறான். ஆன்ம அனுபூதி, இறையனுபூதி என்று அனைத்து உயர் அனுபவங்களுக்கும் இது முதற்படியாக அமைவது இங்கே விளக்கப்படுகிறது.

மரணத்திற்குப் பின்னால் என்ன உள்ளது என்பது நசிகேதனின் கேள்வி.

அதற்கு, மரணத்திற்குப் பின்னால் ஆத்மா மட்டுமே இருக்கிறது. உண்மையில் நீ ஆத்மா. மரணம் என்பது உனது உடம்பிற்கு மட்டுமே. உனக்கு மரணம் இல்லை! என்று பல கோணங்களில் இதுவரை எமதர்மன் கூறியதைக் கண்டோம். நமக்கு மரணம் இல்லாததால் நாம் தைரியமாக மரணத்தை எதிர்கொள்ளலாம் அதற்கு ஒரு படியாக வாழும்போதே மரண பயத்தை விலக்கி வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

எப்படி கற்றுக்கொள்வது?

அதற்கு மூன்று அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்ளுமாறு கூறுகிறார் எமதர்மன்.

**மூன்று உண்மைகள் (1–4)**
**———————————————**

**வாழ்க்கை ஒரு பிரதிபிம்பம்**

ऊर्ध्वमूलोऽवाक्शाख एषोऽश्वत्थः सनातनः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिँल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन । एतद्वै तत् ॥ १॥

ஊர்த்வமூலோ வாக்சாக ஏஷோசவத்த: ஸனாதன: |
ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே |
தஸ்மின் லோகா: ச்ரிதா ஸர்வே தது நாத்யேதி கச்சன | ஏதத்வை தத் || 1 ||

**பொருள்:**

இந்த அரச மரம் பழமையானது, மேலே வேரும் கீழே கிளைகளும் உடையது. அதுவே தூயது. அதுவே இறைவன். அது அழிவற்றது. எல்லா உலகங்களும் அதையே சார்ந்திருக்கின்றன. அதை யாரும் கடந்து செல்ல முடியாது. நீ கேட்ட உண்மை அதுவே.

தலைகீழாக நிற்கின்ற ஓர் அரச மரத்திற்கு வாழ்க்கை ஒப்பிடப்படுகிறது.

(இத்தகைய உவமை பகவத்கீதையிலும் (15.1.3) வருகிறது. அங்கே இன்னும் இதைப்பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.)

பொதுவாக எல்லா மரங்களிலும் வேர்கள் கீழ்நோக்கியும் கிளைகள் மேல்நோக்கியும் இருக்கும். ஆனால் அஸ்வத்த மரத்திற்கு இந்த தலைகீழ் இருப்பதாக கூறப்படுகிறது. கிருஷ்ணரால் குறிப்பிடப்படும் மரம் ஒரு பௌதிக மரம் அல்ல, வேறு ஏதோ ஒன்று என்பதைத் தெளிவாகக் கூறும் முக்கிய கூற்று இதுவே. அதன் வேர்கள் மேல்நோக்கியும் கிளைகள் கீழ்நோக்கியும் இருப்பது ஏன்? இதை அறிய, வேர்கள் மற்றும் கிளைகளை அவற்றின் செயல்பாட்டு அம்சங்களில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக, கிளைகள் தெரியும்போது வேர்கள் கண்ணுக்கு தெரியாதவை. வேர்கள் ஆழமாக மற்றும் மரத்தின் இருப்புக்கான மண்ணிற்கு அடிப்பகுதியில் மறைந்திருக்கும் நிலையில், நாம் பொதுவாக வேர்களைப் பார்க்க முடியாது.

ஆனால், இங்கு வேர்கள் **"மேல்நோக்கி"** என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது? நாம் மேலே பார்க்கும்போது, பகல்/இரவு பொருட்படுத்தாமல் ஆகாயம் இருப்பதைப் பார்க்கின்றோம். அதாவது, ஆழமான பரந்த வெளி, மேல்நோக்கி உள்ளது. உருவாக்கப்பட்ட நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்கள் எங்கிருந்து உருவாகின்றன? நமக்கு மேலே இருக்கும் அதே ஆழமான இடத்திலிருந்து அல்லவா? (அதுவும் நம்மைச் சூழ்ந்துள்ளது, ஆனால் நமது அடிவானத்திற்கு மேலே பார்ப்பதன் மூலமும், அதனால் **"மேல்நோக்கி"** என்ற சூழலின் மூலமும் மட்டுமே நாம் அதை உணர்கிறோம்) அங்கு என்ன இருக்கிறது? அனைத்து படைப்புகளின் ஆதாரம் – அதுவே வெளி எனும் வெட்டவெளி.

ஆக, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையின் 15 வது அத்தியாயத்தில் கூறவருகின்ற **அஸ்வத்த மரம்** அதன் வேர்கள் என்பது இந்த வெட்டவெளியின் அனைத்து படைப்புகளும் ஆகும். எனவே, வேர்கள் படைப்பின் முதன்மைக் காரணத்துடன் தொடர்புபடுத்தப்படலாம்.

ஆக, இங்கு கூறவருகின்ற தலைகீழான மரம் என்பது மனித வாழ்வின் உளவியல் உண்மையை விளக்குவதாக உள்ளது.

எப்போது ஒரு பொருள் தலைகீழாகத் தெரியும்?

பிரதிபலிக்கும்போது. ஆற்றின் கரையில் நிற்கின்ற மரத்தின் பிரதி பிம்பத்தைத் தண்ணீரில் பார்க்கும்போது மரம் தலைகீழாக நிற்பதுபோல் தோன்றும். அதன் வேர்ப் பகுதி மேலேயும், கிளைகள் கீழேயும் இருப்பதாகத் தெரியும். பிரதிபிம்பம் உண்மையல்ல.

இங்கே, மனிதனின் வாழ்க்கை ஒரு தலைகீழான மரத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

அதாவது, வாழ்க்கை ஒரு பிரதிபிம்பம் போன்றது. எனவே, இது உண்மையல்ல. அதாவது, வாழ்க்கையில் காண்பது எதுவும் உண்மையல்ல, அவைகள் தலைகீழ்த் தோற்றம்.

இதன் பொருள் என்ன?

வாழ்க்கையில் நாம் இன்பமாகக் காண்பவைகள் உண்மையில் இன்பங்கள் அல்ல. அதுப்போலவே துன்பமாகக் காண்பவைகளும் துன்பங்கள் அல்ல. பிறப்பை நாம் இன்பமாகக் காண்கிறோம், மரணத்தை துன்பமாகக் கண்டு நடுங்குகிறோம்.

ஆனால், உண்மையை உணர்ந்த மகான்கள் பிறப்பு வேண்டாம் என்கிறார்கள், மரணத்தைக் கண்டு சிரிக்கிறார்கள். மரணத்தை நேசிக்க வேண்டும் என்கிறார்கள்.

துறவு என்பது மரணத்தை நேசித்தல். சாதாரண மனிதர்கள் வாழ்வை நேசிக்கிறார்கள். துறவி மரணத்தை நேசிக்க வேண்டும். அதுப்போலவே, உலகம், அதன் உறவுகள், அவைகள் தரும் சுகங்கள் எல்லாவற்றையும் உண்மை, அவைகள் நிலையானவை என்று நம்புகிறோம். ஆனால், உண்மை அதுவல்ல.

அப்படியானால் உண்மை என்ன?

ஆற்று நீரில் மரம் தலைகீழாக தெரிகிறது. அதன் உண்மையை உணர வேண்டுமானால், அந்தப் பிரதிபிம்பத்தை விட்டுவிட்டு, அந்தப் பிரதிபிம்பத்திற்கு ஆதாரமான நிஜமான மரத்தைப் பார்க்க வேண்டும். அதுவே உண்மை.

அதுப்போலவே வாழ்க்கையின் உண்மையை அறிய வேண்டுமானால், இந்த படைப்புக்கு ஆதாரமான பரமனைப் பார்க்க வேண்டும். அத்தகைய பரமன் என்பவன் உணர்வு வெளி எனும் வெட்டவெளியாக பரந்து விரிந்துள்ளான்.

அந்த வகையிலே, வேத, உபநிஷதக் கண்ணோட்டத்தின் அடிப்படையை இங்கே காண்கிறோம். ஒருமை உணர்வு என்பது வேத ரிஷிகளின் அனுபூதியாக இருந்தது. அவர்கள் எங்கும் ஒரே உணர்வுப் பொருளையே கண்டனர்.

ஆக, இங்கு நாம் வாழும் வாழ்க்கை என்பது இறைவனிலிருந்து வேறுபட்டது அல்ல. ஆனால், நாம் உண்மை வாழ்க்கைக்கான **ஆத்மா, கடவுள் அனுபூதி** என்று எது வேண்டுமானாலும் இருக்கட்டும் அதைப் பற்றிய ஆழமான புரிதலை உண்டாக்கிக் கொள்ளாமல், அழியக்கூடிய அற்ப வாழ்க்கைக்கான அனாவசியமான பொருளியல் சார்ந்த வாழ்க்கையையே வாழ விரும்புகின்றோம். அதாவது, நிஜத்தை விட்டுவிட்டு, நிழலைப் பற்றிக் கொண்டுள்ளோம். இந்த வாழ்க்கையிலிருந்து விலகி ஓடுவதால் பயனில்லை. இந்த எல்லா நிலைகளும் வாழ்க்கையைச் சார்ந்துள்ளன என்பதையே எல்லா உலகங்களும் அதையே சார்ந்திருக்கின்றன என்று இந்த மந்திரம் கூறுகிறது. **"அதுவே நீ"** தியானப் பகுதி இது.

**இறைவனே தலைவர்**

**-------------------**

यदिदं किं च जगत् सर्वं प्राण एजति निःसृतम् ।
महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥ २॥

யதிதம் கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நி ஸ்ருதம் |
மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி ‖ 2 ‖

பொருள்:

இந்த உலகங்கள் அனைத்தும் பிராணன் எனும் உயிர் சக்தியினால் வெளிப்படுகின்றன. உயிராற்றலால் இயங்குகின்றன. இடி, மின்னல் போன்ற இயற்கையின் அம்சங்கள் அனைத்துமே இறைவன் இருக்கின்றான் என்ற பயம் காரணமாகவே அவனுக்கு கட்டுப்பட்டு இயங்குகின்றன. இறைவனின் இந்த இயற்கையின் நியதியை அறியாதவர்கள் பயத்தினாலேயே மரணத்தை அடைகின்றனர். இதனை அறிபவர்கள் மரணமற்றவர்கள் ஆகின்றனர்.

பிராணனால்தான் அனைத்தும் இயங்குகின்றன என்பது பற்றி ஏற்கனவே 2.1.7 விளக்கவுரையில் விரிவாகக் கண்டோம்.

இறைவனின் சக்தியாகிய அந்தப் பிராணன் எவ்வாறு இயங்குகிறது?

இறைவனிடம் உள்ள பயத்தால் என்கிறது இந்த மந்திரம்.

வஜ்ராயுதம் என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று, இடி, மற்றொன்று மின்னல் ஆகிய இந்த இரண்டு சக்திகளைக் குறிக்கின்றது. இது இந்திரனுக்கு ஆயுதம் என்பதாகவும் புராணத்தில் கூறப்படுகின்றது. இவைகள் இரண்டும் இயற்கையின் பேராற்றலின் சின்னங்கள். அந்த இறைவனோ அந்த பேராற்றலின் வடிவமாகவே உள்ளார் என்பது இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது.

வாழ்க்கையின் உண்மையை அறிய வேண்டுமானால், இறைவனை நாட வேண்டும் என்று கண்டோம் (1). அந்த இறைவன் பேராற்றலின் உறைவிடம், அனைத்திற்கும் தலைவர் என்பதை இந்த மந்திரம் கூறுகிறது.

**பயம் ஓர் அடிப்படை உணர்ச்சி**
**——————————————————**

भयादस्याग्निस्तपति भयात्तपति सूर्यः ।
भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥ ३॥

பயாதஸ்யாக்னிஸ்தபதி பயாத் தபதி ஸூர்ய |
பயாதிந்த்ரச்ச வாயுச்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம ‖ 3 ‖

பொருள்:

இறைவன் மீதுள்ள பயத்தினால் அக்கினி எரிக்கிறது. சூரியன் சுடுகிறது. இந்திரனும் வாயுதேவனும் தத்தம் வேலைகளைச் சரியாகச் செய்வதற்குக் காரணம் இறைவன் மீதுள்ள பயம் என்பதாகவே இங்கு பார்க்கப்படுகின்றது. ஐந்தாவதான மரண தேவனும் அந்த பயத்தினால்தான் தன் தொழிலைச் சரியாகச் செய்கின்றான்.

எனக்கு மேல் ஒருவன் இருக்கிறான். அவனுக்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டவன் என்ற உணர்ச்சி இருக்கும்போது மட்டுமே ஒருவன் கண்ணும் கருத்துமாக வேலை செய்வான். அதுப்போலத்தான் இந்த இயற்கை எனும் பஞ்சபூத சக்திகளும் இறைவனுக்கு கட்டுப்பட்டே தங்கள் கடமைகளை செய்கின்றன.

அதாவது, ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பார்த்துக் கொள்ள சூப்பர்வைசர் என்ற ஒருவர் இருப்பார். அவர் அனைவரும் சரியாக வேலை செய்கின்றனரா? என்பதைக் கண்காணித்துக் கொண்டே இருப்பார். யாராவது சரியாக வேலை செய்யாமல், வெட்டியாக அரட்டை அடித்துக் கொண்டிருந்தால், அந்த சூப்பர்வைசர் அவரைக் கண்டிப்பார்.

அதுப்போல, இங்கும் இயறகையின் காவலனாக அந்த கடவுளே இருக்கின்றார் என்பதினால், இந்த இயற்கை சக்திகள் பயத்துடன் அவருக்கு கட்டுப்பட்டு கடமையாற்றுகின்றன என்பதையும் நாம் பார்க்க முடிகின்றது.

பொதுவாக இறைவனை அன்பு, இனிமை, மென்மை, கருணை போன்ற அமைதியான குணங்களின் இருப்பிடமாகத்தான் கருதுகிறோம்.

ஆனால் வாழ்க்கைக்கு மறுபக்கம் ஒன்று உள்ளது.

பயங்கரம், கொடுமை, கவலை போன்ற பண்புகள் உலகில் நிலவுவதை யாரும் மறுக்க முடியாது. அவையும் இறைவனிலிருந்தே வந்திருக்க வேண்டும். இல்லையென்றால், இறைவனின் ஆதிக்கம் இல்லாத சில இடங்களும் இருப்பதாக ஆகிவிடும். எனவே பயங்கரம், கொடூரம், கோரம் போன்ற பண்புகளையும் சேர்த்து இறைவனைக் காணும்போதுதான் இருமைகள் இல்லாத வாழ்க்கையை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்கள் ஆவோம்.

அதன் அடிப்படையில்தான் இந்து மதத்தில் இறைவனை படுபயங்கரத்தின் அடையாளமாக **காளி, நரசிம்ம மூர்த்தி, ருத்திரன்** போன்ற பல்வேறு வடிவில் தெய்வத்தை வழிபடுவதன் உண்மையும் ஆகும்.

எனவே, மரணபயம் முதலான அனைத்து எதிர்மறை உணர்ச்சிகளையும் மனிதன் தன்னுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு, வாழ்க்கையை முழுமையாக இறைவனை நோக்கித் திருப்புமாறு இந்த மந்திரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**இந்த உண்மைகள் உணர்வதன் விளைவு**

———————————————————

इह चेदशकद्बोद्धुं प्राक्षरीरस्य विस्रसः ।
ततः सर्गेषु लोकेषु शरीरत्वाय कल्पते ॥ ४॥

இஹ சேதசகத்போத்தும் ப்ராக்சரீரஸ்ய விஸ்ரஸ: |
தத: ஸர்**கே**ஷு லோகேஷு சரீரத்வாய கல்பதே || 4 ||

பொருள்:

இங்கே உடம்பு வீழ்வதற்கு முன்பு இந்த உண்மைகளை உணர முடியாமானால், அவனுக்கு அகக் காட்சி வாய்க்கிறது. உணர முடியாவிட்டால் உலகில் மீண்டும், மீண்டும் அவன் பிறக்க நேர்கிறது.

**அகக் காட்சியின் படிகள்**

**——————————————**

வாழ்க்கையை புறவளர்ச்சி மற்றும் அகவளர்ச்சி என்ற இரண்டிலும் வாழ்வதற்காக முயற்சித்து, அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்போது, அவனுக்கு **அகக் காட்சி** தெளிவு பிறக்கின்றது. அந்த வகையிலே, ஆன்ம அனுபூதியை நாடி ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்பவர்கள் முதலில் சந்திப்பது அவர்களிடம் இருக்கும் அறியாமை எனும் இருளையே ஆகும். அதாவது, இவர்களது அறியாமை என்ற குழப்பத்தையே இங்கு இருள் என்பதாகவும் பார்க்கின்றோம். அந்த இருளில் இருந்து ஒளிக்கு வரவேண்டும் என்றால், ஒளி உள்ள இடத்திற்கு நாம் வர வேண்டும். அந்த வகையிலே, அறிவுள்ள ஆன்றோர்களின், சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த சான்றோர்களின் தொடர்புகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

அத்தகைய சரியான சத்குரு ஒருவரின் சரியான வழிகாட்டுதலுடன் தொடர்ந்து சாதகன் சாதனைகளில் ஈடுபடும்போது மட்டுமே, அவனிடமுள்ள அறியாமை என்ற இருள் கலைந்து அறிவு ஒளி பிறக்கும். அதாவது, அவனிடமுள்ள மனக்குழப்பங்கள் விலகுகின்றன. அத்தகைய மனப்பக்குவம் பெறப்பெற அந்த சாதகனுக்கு அகவுலகக் காட்சி தெளிவாகிறது. ஆக, ஒருவன் புறவளர்ச்சிக்கான வாழ்க்கையை மட்டும் வாழாமல், அகவளர்ச்சிக்கான பாதையையும் நாடவேண்டும். இதுவே ஒருவனின் வாழ்க்கை முழுமையடைந்ததாகப் பார்க்கப்படுகின்றது. அவனிடம் புறவுலகை விட அகவுலகம் உண்மையானதாகத் தெரியத் தொடங்குகிறது. இவ்வாறு அகக் காட்சி தெளிவு பெறுவதை இந்த மந்திரம் நான்கு படிகளாகக் கூறுகிறது.

यथाऽऽदर्शे तथाऽऽत्मनि यथा स्वप्ने तथा पितृलोके ।
यथाऽप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके
छायातपयोरिव ब्रह्मलोके ॥ ५॥

யதாதர்சே ததாத்மனி யதா ஸ்வப்னே ததா பித்ருலோகே |
யதாப்ஸு பரீவ தத்ருசே ததா கந்தர்வலோகே
சாயாதபயோரிவ ப்ரஹ்ம லோகே || 5 ||

பொருள்:

புத்தியில் கண்ணாடி போலவும், பித்ரு லோகத்தில் கனவு போலவும், கந்தர்வ லோகத்தில் தண்ணீர்போல தெளிவற்றும், பிரம்ம லோகத்தில் நிழலும், வெயிலும் போல இரண்டும் கலந்த தெளிவாகவும் அகக் காட்சி வாய்க்கிறது.

1. **கந்தர்வ லோகம்:**

பொதுவாக, இதுப்போன்ற உலகங்கள் போகங்களுக்கு உரியவைகள் என்று ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம். மேலும், இவைகள் உண்மையில் நம் மனதினால் உண்டாக்கப்பட்டு நம்மால் அனுபவிக்கப்படுகின்ற உலகங்கள் என்பதினால், இதுவும் நாம் வாழுகின்ற இந்த பூமியிலேயே அதற்கான சூழ்நிலைகளுடன் வாழமுடியும். அதாவது, இதே பூமியில் ஏராளமான நல்ல காரியங்களைச் செய்தவர்கள் இதுப்போன்ற நல்ல சூழ்நிலையில், அவர்களது புண்ணிய பலனை அனுபவித்து இத்தகைய வாழ்க்கையை வாழ்வார்கள் என்பதாகவே பார்க்க வேண்டும்.

ஒருவன் சாதாரணமாக பலவிதமான நல்ல காரியங்களை செய்தாலும், அவன் அத்தகைய சுகபோக நாட்டங்களிலிருந்து விடுபடாத நிலையில், அவனுக்கு இதுப்போன்ற இந்த உலகங்கள் வாழுகின்ற வாழ்விடமாக உதாரணமாகக் கூறப்பட்டுள்ளன.

பொதுவாக, மனித மனம் சுகபோகங்களை நாடுகின்ற நிலையில், அவனுக்கு ஆத்மா பற்றி உண்மைகள் தெளிவற்றதாக உள்ளன. அதாவது, நீரில் தெரிகின்ற பிம்பம் ஒரு சிறிய அலை எழுந்தாலும் எவ்வாறு தெளிவற்றுப் போய்விடுகிறதோ? அவ்வாறே, இதுப்போன்ற சுக,போகங்களில் நாட்டம் கொண்டவனுடைய விவேகம் மற்றும் அவனது இலட்சிய நாட்டம் எல்லாமே வீழலுக்கு இறைத்த நீரைப் போன்று வீணாகவே போகின்றன என்பதாகவே இங்கு பார்க்கப்படுகின்றது.

2. **பித்ரு லோகம்:**

இறந்தவர்கள் வாழும் உலகம் பித்ரு லோகம் என்பதாகக் கூறப்படுகின்றது. இது மனித உடம்பு வீழ்ந்த பிறகு உள்ள நிலை என்பதினால், அவனது சூக்கும உடலாகிய மனம் மற்றும் பிராணன் எனும் உயிர் அந்த உடம்பிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு, அடுத்த உடம்பு எடுக்கும்வரை வாழ்கின்ற ஒரு நிலை என்பதாகவே இதைப் பார்க்கப்படுகின்றது. இதை ஆவிகள் உலகம் என்று சிலர் கூறுகின்றார்கள். இன்னும் சிலர் இந்த ஆவிகளுடன் பேசுகின்றேன் என்றெல்லாம் கூறுகின்றார்கள்.

அதாவது, இவர்கள் அந்த முன்னோர்களாகிய பித்ருக்களை தொடர்பு கொண்டு, அவர்களுடன் பேச ஆசைப்படுகின்றனர். அதாவது, ஆதிகாலந்தொட்டே ஆவிகளுடன் உரையாடுவதில் ஒரு அலாதியான பிரியம் அனைவருக்குமே இருந்துவருகிறது. இது ஆரம்பகாலத்தில், ஆவிகளுடன் தொடர்புகொள்ள மந்திரவாதிகள் (Wizards), சூனியக்காரிகள் (Witches) போன்ற நபர்களை நாடுவதென்பது விட்டலாச்சாரியார் திரைப்படம் பாணியில் பலரும் முயற்சித்து, அந்தக்காலந்தொட்டு, இன்றையகால **ஹாரி பாட்டர்** திரைப்படம் வரை இன்னும் தொடர்கிறது.

அதற்கான கருவிகள் என கிறிஸ்டல் பந்து (Crystal Gazing), ஒய்ஜா பலகை (Ouija Board), பிளான்ச்செட் Planchette, தானியங்கி எழுதும் முறை (Automatic Writing) என பல முறைகள் ஆவிகளுடன் பேசுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. அதிலே, பாண்டிச்சேரி ஆரோவில் தொடங்கிய யோகி ஸ்ரீஅரவிந்தர் அவர்களும் இதுப்போன்ற ஆவிகளின் வழிகாட்டுதல்மூலம் '**ஆட்டோமேடிக்ரைட்டிங்**' முறையில் '**யோக சாதனை**' என்ற நூலை எழுதினார். பின்னர், அவரே அந்த நூலை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார். காரணம், இதுப்போன்ற ஆய்வுகள் மூலம் உண்மையாக ஆத்மாவை உணர்கின்ற சாதகர்களுக்கு எந்தப் பயனும் விளைவிக்காது என்று கருதியவர். இதுப்போன்ற விசயங்களை அவரும் ஊக்குவிக்கவில்லை.

பொதுவாக, இதுப்போன்ற ஆவிகளின் நம்பிக்கை என்பது மேற்கத்திய நாட்டினரின் மத நம்பிக்கைகள். அவர்கள் எவ்வாறு ஏசு உயிர் நீத்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று நம்புகின்றார்களோ? அதுப்போல, அவர்கள் ஆவிகளையும் நம்புகின்றனர். அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள், எடுக்கப்பட்ட திரைப்படங்கள் ஏராளம் உள்ளன. நம் நாட்டவர்கள் ஆங்கில மொழி மோகத்தால், இதுப்போன்ற புத்தகங்களையும், திரைப்படங்களையும் படித்துவிட்டு, இவர்களும் இதுப்போன்று ஆவிகளை நம்புகின்றனர்.

உண்மையில், இவைகளெல்லாம் மனதின் கற்பனை என்பது யாருக்கு புரியும் என்றால், ஆன்மவியல் கல்வி கற்றுக் கொண்ட சாதகர்களுக்கு மட்டுமே இவைகள் உண்மையில்லை என்பது புரியும். அவர்கள் மட்டுமே, **ப்ரஹ்மம் சத்தியம்! ஜகத் மித்யா!** என்பதில் திடமாக இருப்பார்கள்.

இங்கே, ஆத்மா பற்றிய உண்மைகளும் பலருக்கு கனவுக் காட்சிகள் போலத்தான் உள்ளன. கனவுக் காட்சிகள் கனவு காணுகின்ற அந்த நேரத்திற்கு மட்டும் முற்றிலும் உண்மைப்போல தோன்றும். அவர்கள் விழித்தபிறகு அந்த கனவு உண்மையற்றவை என்பதும் புரியும்.

அதுப்போல, உடம்பு வேறு, தான் வேறு என்பதை அனுபவரீதியாக உணராதவன் சில நேரங்களில் அக உலகத்திற்கும் சில நேரங்களில் புற உலகத்திற்குமாக ஊசலாடுகிறான். இரண்டும் அந்தந்த நேரங்களுக்கு அவனைப் பொருத்தவரை உண்மைப்போலவே தெரிகின்றன.

### 3. புத்தி:

புத்தி பற்றியும் அதன் விழிப்பு பற்றியும் ஏற்கனவே (1.3.3.9) விரிவாகக் கண்டோம். புத்தி விழிப்புற்ற நிலையில் அவனுக்கு அக உண்மைகள் அழுக்கற்ற கண்ணாடியில் தெரிகின்ற பிம்பம்போல் தெளிவாக உள்ளன.

இருந்தாலும் கவனமில்லாமல் இருந்தால் கண்ணாடி அழுக்குற வாயப்பு உள்ளது. எனவே, புத்தி விழிப்புற்ற நிலையில் இருப்பவனும் கவனமாக இருக்க வேண்டும்.

### 4. பிரம்ம லோகம்:

பிரம்ம லோகம், கைலாசம், வைகுண்டம் போன்றவைகள் உயர்நிலை வாழ்க்கை வாழுகின்ற தெய்வீக நிலைக்கு உயர்ந்தவர்களின் உறைவிடங்களாக பார்க்கப்படுகின்றது.

மனிதன் மனிதப்பிறவியின் மகத்துவம் உணர்ந்து, அதற்கான சரியான சாதனைகள்மூலம் இறைநிலை பெற்றவர்களுக்கு உவமையாக இந்த லோகங்கள் இங்கே கூறப்பட்டுள்ளது. இதிலே, கூறப்பட்டுள்ள நிழலும், வெயிலும் என்ற உவமை என்பது மனித மனம் இருமைகளைக் கடந்து அந்த இறை நிலையில் இவைகள் இரண்டையும் புரிந்துக் கொண்டு வாழ்வது என்பதாகவே இங்குப் பார்க்க வேண்டும்.

பொதுவாக, நிழலும், வெயிலும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவைகள். நிழல் இருப்பதால் வெயிலும், வெயில் இருப்பதால் நிழலும் தெளிவு பெறுகின்றன. அதாவது, நிழலின் அருமை வெயிலில் தெரியும். வெயிலின் அருமை குளிரில் தெரியும் என்பதுப்போன்ற இருமைகளைப் பற்றிய ஒரு தெளிவு இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன. அவ்வாறு, இருமைகள் பற்றிய புரிதலோடு, துல்லியமாக தெளிவாக ஆன்மக் காட்சி கிடைப்பதாக இங்கே கூறப்படுகிறது.

**சாதனை முறை: 6–8**
**-------------------------**

அகக்காட்சி தெளிவுற்று, மனம் குழப்பங்களிலிருந்து விடுபட்ட பிறகுதான் உண்மையான ஆன்மீக சாதனை ஆரம்பிக்கிறது.

இந்த மூன்று மந்திரங்கள் சாதனை பற்றி கூறுகின்றன. புலன்களைபற்றிய உண்மையை அறிவதிலிருந்து சாதனை தொடங்குகிறது.

इन्द्रियाणां पृथग्भावमुदयास्तमयौ च यत् ।
पृथगुत्पद्यमानानां मत्वा धीरो न शोचति ॥ ६॥

இந்த்ரியாணாம் ப்ருதக் பாவம் உதயாஸ்தமயௌ ச யத் |
ப்ருதக் உத்பத்யமானானாம் மத்வா தீரோ சோசதி || 6 ||

பொருள்:

புலன்களின் தனித்தன்மை, அவற்றின் எழுச்சி மற்றும் ஒடுக்கம், தனித்தனியான உற்பத்தி ஆகியவற்றைப் பகுத்தறிகின்ற விவேகி கவலையிலிருந்து விடுபடுகிறான். ஐந்து புலன்களும், பஞ்சபூதங்களின் தன்மைகளை அடிப்படையாகப் பெற்றுள்ளன. பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பண்பு உள்ளது.

காது – **ஆகாசம்** – ஒலி
மூக்கு – **வாயு** – மணம்
கண் – **அக்கினி** – ஒளி
நாக்கு – **தண்ணீர்** – சுவை
தோல் – **பூமி** – ஸ்பரிசம்

இவ்வாறு ஒவ்வொரு புலன்களும், பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் தனித்தனியாகத் தோன்றின. அவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி செயல்களைச் செய்கின்றன. விழிப்புநிலையில் எல்லா புலன்களும் செயல்படுகின்றன. கனவிலும், தூக்கத்திலும் அவைகள் ஒடுங்கிவிடுகின்றன. புலன்களின் ஆரம்பமும் சரி, செயல்படுகின்ற நேரமும் சரி, ஒடுக்கமும் சரி எல்லாம் மனம் மற்றும் பிராணனுடன் கூடிய ஜீவனுடன் சம்பந்தப்பட்டவை.

ஆனால், அவைகள் நேரடியாக ஆத்மாவுடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவைகள். அதாவது புலன்களின் செயல்பாட்டிற்கும், ஆத்மாவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதே இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது.

இந்த உண்மையை அறிபவன் புலன்களின் செயல்பாட்டால் கலங்குவதில்லை. தான் ஆத்மா என்பதில் நிலைபெற்று நிற்கிறான் அவன்.

इन्द्रियेभ्यः परं मनो मनसः सत्त्वमुत्तमम् ।
सत्त्वादधि महानात्मा महतोऽव्यक्तमुत्तमम् ॥ ७॥

இந்த்ரியேப்ய பரம் மனோ மனஸ ஸத்வமுத்தமம் |
ஸத்வாததி மஹானாத்மா மஹதோ வ்யக்தமுத்தமம் || 7 ||

பொருள்:

புலன்களைவிட மனம் உயர்வானது. மனத்தை விட புத்தி உயர்வானது. அந்த புத்தியில் பிரகாசிக்கும் சத்துவத்திற்கு மேலானது பரமாத்மா எனும் தூய அறிவு. ஆகவே, அனைத்துக்கும் மேலானதாக ஆத்மா மட்டுமே உள்ளது.

अव्यक्तात्तु परः पुरुषो व्यापकोऽलिङ्ग एव च ।
यं ज्ञात्वा मुच्यते जन्तुरमृतत्वं च गच्छति ॥ ८॥

அவ்யக்தாத்து பர: புருஷோ வ்யாபகோலிங்க ஏவ ச |
யம் ஜ்ஞாத்வா முச்யதே ஜந்து அம்ருதத்வம் ச கச்சதி || 8 ||

பொருள்:

அவ்யக்தம் என்ற வெளிப்படாததைத் தாண்டி, பரம புருஷர் எங்கும் நிறைந்தவர், தெய்வீகமானவர். அவரை அறிந்தால், மனிதன் மரணமில்லாப் பெருவாழ்வை அடைகின்றான்.

அதாவது, அவ்யக்தத்தைவிட இறைவன் மேலானவர். அவர் எங்கும் நிறைந்தவர். இவர்தான் என்று சுட்டிக்காட்டுவதற்கு அவருக்கு என்று எந்த அடையாளமும் இல்லாதவர். அவரை ஆத்ம அனுபூதியில் உணர்வதால், மனிதன் அனைத்து அறியாமைத் தளைகளிலிருந்தும் விடுபடுகிறான். பிறவாப் பெருநிலையையும் அடைகிறான்.

புலன்களின் செயல்பாடுகள் தனியானவை. அவற்றுடன் ஆத்மாவிற்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை உணர்ந்து, மனம் ஆத்மாவில் நிலைபெறும்போது புலன்கள் இயல்பாகவே தங்கள் வேகத்தை இழக்கின்றன.

**இறையனுபூதி: (9–16)**

**——————————————**

இறைவனை உணர்ந்தால் மனிதன் மரணமிலாத நிலையை அடைகிறான். அந்த நிலையைப்பற்றிய சில விளக்கங்கள் இங்கே தரப்படுகின்றன. இந்த சாதாரண கண்களால் இறைவனைக் காண முடியாது.

न संदृशे तिष्ठति रूपमस्य
   न चक्षुषा पश्यति कश्चनैनम् ।
हृदा मनीषा मनसाऽभिक्लृप्तो
   य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥ ९॥

ந ஸந்த்ருசே திஷ்ட்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுப்ஷா பச்யதி கச்சனைனம் |
ஹ்ருதா மனீஷா மனஸா பிக்ல்ருப்தோ
ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி || 9 ||

பொருள்:

இறைவனுடைய உருவம் புறத்தில் காணக் கூடியதாக இல்லை. யாரும் அவரைக் கண்களால் காண்பதில்லை. இதயக் குகையிலுள்ள ஆத்மாவால், விழிப்புற்ற புத்தியில், மனத்தின் தொடர்ந்த முயற்சியால் மட்டுமே அவர் உணரப்படுகிறார். அவரை அறிபவர்கள் மரணமற்றவர்களாக ஆகின்றனர்.

மிகவும் பொருள் பொதிந்த மந்திரம் இது. இறையனுபூதி என்பதன் ஒரு தெளிவான விளக்கத்தை இங்கு நாம் காண்கிறோம்.

இறையனுபூதிக்கு இங்கே ஐந்து விளக்கங்கள் தரப்படுகின்றன.

1. புறத்தில் காணக்கூடியதல்ல.

2. கண்களால் காண்பதில்லை.

இந்தக் கருத்துக்களை ஏற்கனவே (2.2.14–15) கண்டோம்.

**3. ஆத்மாவால் காணப்படுகிறது.**

உடம்பிலுள்ள சாதாரணக் கண்கள் இறைவனைக் காண்பதில்லை என்றால் அவரைக் காண்பது, உணர்வது யார்?

இதயக் குகையிலுள்ள ஆத்மா. இதயக் குகை பற்றியும் ஆத்மா பற்றியும் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம்.

இறைவன் ஒரு பேரொளி என்றால், ஆத்மா ஒரு சுடர், ஒரு பொறி. ஒவ்வொருவரிலும் அந்தப் பொறி உள்ளது. அந்தப் பொறிதான் இறைவனை அறிகிறது.

**4. புத்தி தெளிய வேண்டும்.**

ஆத்மா இறைவனை எங்கே காண்கிறது?

விழிப்புற்ற புத்தியில். இதுபற்றியும் ஏற்கனவே (1.3.6–9) விரிவாகக் கண்டுள்ளோம்.

**5. மனத்தின் தொடர்ந்த முயற்சி வேண்டும்:**

ஆத்மா, இதயக் குகை, புத்தி என்றெல்லாம் கூறியதால், அவைகள் ஏதோ நம்மை மீறிய விஷயங்கள் என்று எண்ணி விடாமல், நமது கருவியாகிய மனத்தைத் தொடர்ந்து சாதனைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

அதாவது, இந்த அத்யாத்ம யோகத்தை நமது பாதையாகத் தேர்ந்தெடுத்து முழுமூச்சுடன் அதில் ஸ்ரவண, மனன, நித்தித்யாஸ நிலையில் முன்னேற வேண்டும். அதிலே, கூறப்பட்ட அரிய விசயங்களை ஆராய்ந்து, மனதில் தெளிவு பெறவேண்டும். விழிப்புற்ற புத்தியால் ஆத்மாவின் உண்மை தன்மையை நம்முள் உணர வேண்டும். இவ்வாறு, மனத்தின் விசாரம் மற்றும் புத்தியின் தெளிவு என படிப்படியாக முன்னேற வேண்டுமானால், தொடர்ந்த முயற்சியால் மட்டுமே பயன் அளிக்கும். அந்த வகையிலே, ஒருவன் புத்தி தெளிகிறது. அத்தகைய தெளிந்த புத்தியால் தன்னை ஆத்மாவுடன் ஒன்றுபடுத்திக் காணவும் அவனால் முடிகிறது.

நம்மில் உள்ள இருவரில் (1.3.1) நாம் ஜீவன் என்ற நிலை மாறி, நாம் அந்த தூய அறிவாகிய ஆத்மா என்ற நிலை உருவாகிறது. இந்த ஆத்மா நிலையில் அனைத்திலும் தன்னைக் காண்கின்ற இறைக் காட்சி கிடைக்கிறது.

**இறையனுபூதி ஓர் ஓய்வுநிலை**

------------------------

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह ।
बुद्धिश्च न विचेष्टते तामाहुः परमां गतिम् ॥ १०॥

யதா பஞ்சாவதிஷ்ட்டந்தே ஜ்ஞானானி மனஸா ஸஹ |
புத்திச்ச ந விசேஷ்ட்டதி தாமாஹு பரமாம் கதிம் || 10 ||

பொருள்:

எப்போது ஐந்து புலன்களும், மனமும் ஓய்வு நிலையில் இருக்கின்றனவோ? புத்தி முயற்சியற்று இருக்கிறதோ? அதுவே, மிகவும் மேலான நிலை என்று சொல்லப்படுகிறது. எந்தச் செயலுமற்ற நிலை மிக மேலான நிலையாகச் சொல்லப்படுகிறது. இதனைச் சரியாகப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். அதாவது செயலற்று சும்மா சோம்பிக் கிடப்பதையும், தூக்கத்தையும் இதனுடன் ஒப்பிட்டு, செயலற்ற நிலை என குழப்பிக் கொள்ளக்கூடாது. இதனை நன்றாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சாதாரண மனிதர்களிடம் புத்தி விழிப்புறவில்லை என்பதை ஏற்கனவே பல இடங்களில் கூறியுள்ளோம் எனவே, புத்தி முதலில் விழிப்புற வேண்டும். அதன் விளைவாக அதன் அஹங்காரம் அழியும். அது இதுவரை எல்லாம் என்னுடைய ஆற்றல் என்பதாக நினைத்துக் கொண்டு விவகாரத்தில் ஈடுபட்ட நிலை மாறி, எல்லாம் பரமனின் ஆற்றல்

என்பதாக உணர்ந்துக் கொண்டு, ஆணவமற்ற நிலையிலே பரமனின் வைபவத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு எல்லாவற்றையும் அணுக ஆரம்பிக்கும்.

அப்போது மட்டும்தான் உண்மையில் புலன்களும், மனமும் ஓய்வு பெற்ற நிலையை அடைந்ததாக அர்த்தம். அதாவது, அவைகளுக்குப் பின்னால், அந்த ஆத்மா உள்ளதினால்தான் அவைகள் எல்லாம் செயலாற்றுகின்றன என்ற புரிதல் அவைகளுக்கு சும்மா இருக்கின்ற உண்மையை உணர்த்தும். அதன் பிறகு செயலற்ற நிலை என்பது என்ன என்று புரியும்.

அக விழிப்புணர்வு ஏற்பட்டு, மனமும், புலன்களும் நமக்கு வசப்பட்ட பிறகே இந்த நிலைபற்றி யோசிக்க வேண்டும். அதற்கு முன்னால் செயலற்ற நிலைக்காக வேலைகள் எதுவும் செய்யாமல் சும்மா இருக்க முயற்சிப்பது தவறான முயற்சியாகும்.

**தன்னுணர்வு நிலை**
**-----------------**

तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रियधारणाम् ।
अप्रमत्तस्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ॥ ११॥

தாம் யோகமிதி மன்யந்தே ஸ்திராமிந்த்ரிய தாரணாம் |
அப்ர மத்தஸ்த**தா பவ**தி யோ**கோ** ஹி ப்ரப வாப்யயௌ || 11 ||

பொருள்:

புலன்கள் நம்முடைய வசப்பட்டு, நம்முடைய கட்டுப்பாட்டில் நிலையாக நிற்கின்ற அந்த நிலையைத்தான் யோகம் என்று கருதப்படுகிறது. அந்த நிலையை அடைந்தவன் தன்னுணர்வு விழிக்கப்பெற்று பேருணர்வு நிலையை உணர்ந்தவனாக அதனோடு ஒன்றாகின்றான் என்பதினாலேயே இந்த இணைதலை யோகம் என்பதாக இங்கு பார்க்கப்படுகின்றது. அந்த நிலையில், அந்த சாதகன் தன் தனித்துவ அடையாளத்தை இழக்கின்றான். எல்லாம் பரமனின் பேராற்றல் என்பதை உணர்கின்றான். அதுவே, **இணைதல்** என்ற யோக வளர்ச்சிக்கு ஆதாரமாக மாறி, மனம், புத்தி போன்றவைகள் அந்த தூய அறிவாகிய ஆத்மாவுடன் இணைந்து அவனது ஆற்றலாக இருக்க வழிவகுக்குகின்றது.

தன்னுணர்வு என்றால் என்ன?

இதனை **சத்வ நிலை** என்று கீதை விளக்குகிறது (ஸ்ரீ மத் பகவத்கீதை, 14.11) புலன்கள் எதுவும் தங்கள் பாதையில் திரியாமல், அதே வேளையில் தூக்கத்திலும் ஆழ்ந்துவிடாமல் சுற்றி நடக்கின்ற அனைத்தையும் அறிந்த வண்ணம் உணர்வு பூர்வமாக நிற்கின்ற அமைதி நிலை இது.

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते |
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत ‖ 14. 11 ‖

**சர்வ துவாரேசூ தேகேஸ்மின் பிரகாஸ உபஜாயதே |**
**த்யானம் யதா ததா வித்யா திவிவ்ருதம் சத்வம் இத்யுத ‖**

**இந்த உடலில் உள்ள புலன்கள் எனும் வாசல்கள் வழியாகத்தான் ஒளி ஊடுறுவி அனைத்தையும் அனுபவமாக்குகின்றது. அதாவது, அந்த வாசல்கள் வழியாக தூய அறிவு பிரகாசித்து, அனைத்தும் உணரப்பட்டு, அறியாமை இருள் அகன்றால் அதுவே சத்வகுணம் எனப்படுகின்றது.**

புலன்கள் என்பவை மனத்தின் வாசல்கள். இவ்வாறு, அறிவு ஒளி வருகின்ற வாசல்கள் அடையாளம் காணப்பட்டு, அவைகளைக் கொண்டு மனதை பக்குவமாக எங்கு செலுத்தவேண்டும், எப்படி செலுத்தக்கூடாது என்பதை ஆழமாக அறியும்போது, அவனது அகவளர்ச்சி மற்றும் புறவளர்ச்சி என்ற இரண்டையும் எளிதாகக் கையாள முடிகின்றது.

அந்த வகையிலே ஒருவன் புற வளர்ச்சிக்கான படிப்பு, பட்டம், உத்தியோகம், ஆராய்ச்சி என்ற உலகியல் சார்ந்த வாழ்க்கையிலும், ஆத்மா, உலகம், நான் என்ற தன்னை அறிகின்ற அத்யாத்ம யோக சாதனைகள் கொண்ட அக வளர்ச்சிக்கான வாழ்க்கையிலும் முழுமையான வெற்றி பெற முடியும்.

இந்த நிலையை சுவாமி விவேகானந்தர் மிகவும் புகழ்ந்து கூறுகிறார். உறங்கும் ஆத்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆத்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடுமானால், அதீத சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும், எவைகளெல்லாம் மேலானதோ? அவைகள் அத்தனையும் வரும் என்கிறார் அவர்.

புத்தி விழித்தெழுந்து, அந்த நிலையில் மனத்தை எதில் செலுத்தினாலும், அதில் பல அரிய விஷயங்களைச் சாதிக்க முடியும். விஞ்ஞானம், கலை என்று எந்தத் துறையை எடுத்தாலும், அதில் மிக உயரிய உன்னதங்களைக் காண முடியும். அதேபோல, ஆன்மீகத்தில் சாதிக்க வேண்டுமானால், புத்தியும், மனமும் அறிவு ஒளிப் பிரகாசத்தினால், அறியாமைகளை அகற்றிக் கொண்டு, தன் சுயத்தை உணர்ந்து, அந்த பேருணர்வு நிலையில் தன்னை ஒப்படைத்து, சரணடைந்திருக்க வேண்டும் என்பதை நன்கு அறிய வேண்டும்.

இதுப்போன்ற அத்யாத்ம யோக நிலையை அடைந்து, அதன்பிறகு நாம் எந்தத் துறையை மேற்கொண்டாலும், அதில் வெற்றி நிச்சயம். அந்த ஆத்மாவின் அதிர்ஷ்டானத்தில் இந்த புலன்களும், மனமும், புத்தியும் உள்ளன என்பதை உணர்ந்துக் கொண்ட சாதகன் தன் செயலாவது ஏதுமில்லை எல்லாம் அந்த தூய அறிவாகியா ஆத்மா இருப்பதினாலே, அதன் ஆற்றல் வெளிப்படுவதற்கான கருவிகளாக இந்த உடலும், மனமும் உள்ளது என்ற உண்மையை உணர்வான். அவன் மட்டுமே ஆணவம் ஏதுமின்றி எல்லாம் அந்த ஆத்மாவின் ஆற்றல் என்பதாகப் பார்ப்பான். அவனே ஜீவன் முக்தன் என்பதாகவும் பார்க்கின்றோம்.

**விளக்க முடியாத நிலை: 12-13**

**-------------------------**

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा ।
अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ॥ १२॥

நைவ வாசா ந மனஸா ப்ராப்தும் சக்யோ ந சக்ஷுப்ஷா |
அஸ்தீதி ப்ருவதோன்யத்ர கதம் ததுபலப்யதே || 12 ||

பொருள்:

அதை வார்த்தைகளாலோ, மனத்தாலோ, கண்களாலோ அடைய முடியாது. அது மட்டுமே இருப்பதாகச் சொல்லும் அவனைத்தவிர வேறு யார் அதனை உணர முடியும்?

இங்கு ஆத்மாவின் இருப்பு என்பது தன்னிருப்பு என்பதை ஒருவன் தன்னுள் உணர வேண்டும் என்ற ஆழமான உண்மை உபதேசிக்கப்படுகின்றது. அன்பு, பாசம், கருணை போன்றவற்றை அனுபவிக்காத மனிதர்களே இருக்க முடியாது. ஆனால், அந்த அனுபவத்தை

அவர்கள் வார்த்தைகளால் விளக்க முடியாது. அது ஒவ்வொருவரும் உணரவேண்டிய அனுபவம் மட்டுமே ஆகும்.

அதாவது, நம்முடைய நடைமுறை விவகாரத்தில் அது இப்படித்தான் இருக்கும் என்று யாரும் அதைப்பற்றி எடுத்துக்கூற முடியாது. காரணம், அன்பு என்பது இதயத்தின் நாதம். அது அவரவர்களே உணரக்கூடிய உன்னதம். அதுப்போலவே இறைவன், ஆத்மா போன்ற அனுபவமும் நம்முள் நாம் உணர வேண்டிய விசயம். அதைப் புறத்திலுள்ள புலன்களால் காணவே முடியாது.

கடவுள் ஒருவர் இருக்கிறார் ஆத்மா என்ற ஒன்று இருக்கிறது, என்பதையெல்லாம் ஆன்மவியல் போன்ற இத்தகைய அத்யாத்ம யோகம் என்ற நூலறிவு நமக்கு காட்டிக் கொடுத்தாலும், அவைகள் நாம் அடைய வேண்டிய இலட்சியத்திற்கான பாதையைக் காட்டிக் கொடுக்கும் வழிகாட்டிகள் என்பதினால், அதிலேயே சிக்கிக் கொள்ளாமல், ஆத்மாவை நம்முள் அனுபவமாக உணரக்கூடிய விசயம் என்னவெனில், இதுவரைக் கேட்ட இதுப்போன்ற வகுப்புகளின் பாடங்களை மீண்டும், மீண்டும் கேட்டு, அவைகளை விசாரணை செய்து, விழித்துக் கொண்ட விவேகத்தினால், நம்முள் இறைவனை உணர வேண்டும்.

अस्तीत्येवोपलब्धव्यस्तत्त्वभावेन चोभयोः ।
अस्तीत्येवोपलब्धस्य तत्त्वभावः प्रसीदति ॥ १३॥

அஸ்தீத்யேவ உபலப்தவ்ய தத்வபாவேன சோபயோ: |
அஸ்தீத்யேவ உபலப்தவ்ய தத்வபாவேன ப்ரஸீததி || 13 ||

பொருள்:

அந்த உண்மை ஒன்று இருக்கிறது என்பதை முதலில் அறிய வேண்டும். அதன்பிறகு அந்த இருப்பின் உண்மைத் தன்மையை நம்முள் உணர்வதற்கான முயற்சியில் எப்போதும் இருக்க வேண்டும். அதாவது, அது ஒன்று மட்டுமே இருக்கிறது என்ற நிலையில், அதற்கான அத்தனை முயற்சிகளும், பயிற்சிகளும் அதன் அதிர்ஷ்டானத்தின், அதன் வைபவத்தில் வெளிப்பட்டு பிரகாசிக்கின்றது என்ற உண்மையை நாம் ஆழமாக உணரும்போது, அதுவே ஆத்மாவின் அனுபூதி இயல்பாக நமக்கு வாய்க்கிறது.

அதாவது, ஓர் உண்மையை அடைய வேண்டுமானால், அதனைப் பற்றிய புரிதலை மீண்டும், மீண்டும் சிந்திக்க வேண்டும். அடிக்கடி அதைப்பற்றி கேட்க வேண்டும். மனம் எப்போதும், அந்த ஆத்மாவைப் பற்றியே தியானிக்க வேண்டும்.

(**ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யோ மைத்ரேயி ஆத்மனி கலு** – பிருஹதாரண்யக உபநிஷதம், 2.4.5, 4.5.6)

யாஜ்ஞவல்கிய முனிவர் தன் அன்பான மனைவியிடம், *'அன்பே, நீ என்றும் என் அன்பிற்குரியவளாக இருந்து வருகிறாய்; இப்போது [உன்னிடம் என் அன்பு] நிச்சயமாக அதிகரித்துள்ளது. அன்பே, நீ விரும்பினால் நான் அறிந்ததை உனக்கு உபதேசிக்கிறேன். நான் விளக்குவதை சிந்தனை செய்.'* என்றார்.

ஸ ஹோவாச ந வா அரே பத்யு:

காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி ।

ந வா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா பவதி ஆத்மனஸ்து காமாய ஜாயா ப்ரியா பவதி ।

ந வா அரே புத்ராணாம் காமாய புத்ரா: ப்ரியா பவந்தி ஆத்மனஸ்து காமாய புத்ரா: ப்ரியா பவந்தி ।

ந வா அரே வித்தஸ்ய காமாய வித்தம் ப்ரியம் பவதி ஆத்மனஸ்து காமாய வித்தம் ப்ரியம் பவதி ।

ந வா அரே பசூனாம் காமாய பசவ: ப்ரியா பவந்தி ஆத்மனஸ்து காமாய பசவ: ப்ரியா பவந்தி ।

ந வா அரே ப்ரஹ்மண: காமாய ப்ரஹ்ம ப்ரியம் பவதி ।

ந வா அரே க்ஷத்ரஸ்ய காமாய க்ஷத்ரம் ப்ரியம் பவதி ஆத்மனஸ்து காமாய க்ஷத்ரம் ப்ரியம்

பவதி ।

ந வா அரே லோகானாம் காமாய லோகா: ப்ரியா பவந்தி ஆத்மனஸ்து காமாய லோகா: ப்ரியா பவந்தி ।

ந வா அரே தேவானாம் காமாய தேவா: ப்ரியா பவந்தி ஆத்மனஸ்து காமாய தேவா: ப்ரியா

பவந்தி ।

ந வா அரே வேதானாம் காமாய வேதா: ப்ரியா பவந்தி ஆத்மனஸ்து காமாய வேதா: ப்ரியா பவந்தி ।

ந வா அரே பூதானாம் காமாய பூதானி ப்ரியாணி பவந்தி காமாய பூதானி ப்ரியாணி பவந்தி ।

ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ।

**ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யோ மைத்ரேயி ஆத்மனி கலு**

அரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாத இதம் ஸர்வம் விதிதம் ॥ 6 ॥

**பொருள்:**

யாஜ்ஞவல்கியர் மேலும் கூறினார்: 'அன்பே, கணவனுக்காகக் கணவன் நேசிக்கபபடுவதில்லை; ஆன்மாவிற்காகவே மனைவி கணவனை நேசிக்கிறாள். அன்பே, மனைவிக்காக மனைவி நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே கணவன் மனைவியை நேசிக்கிறான். அன்பே, பிள்ளைகளுக்காக பிள்ளைகள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே பெற்றோர் பிள்ளைகளை நேசிக்கிறார்கள். அன்பே, செல்வத்திற்காக செல்வம் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே செல்வம் நேசிக்கப்படுகிறது. அன்பே, விலங்குகளுக்காக விலங்குகள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே விலங்குகள் நேசிக்கப்படுகின்றன. அன்பே, பிராமணனுக்காக பிராமணன் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே பிராமணன் நேசிக்கப்படுகிறான். அன்பே, க்ஷத்ரியனுக்காக க்ஷத்ரியன் நேசிக்கப்படுவதிலை; ஆன்மாவிற்காகவே க்ஷத்ரியன் நேசிக்கப்படுகிறான். அன்பே, உலகங்களுக்காக உலகங்கள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே உலகங்கள் நேசிக்கபடுகின்றன. அன்பே, தேவர்களுக்காகத் தேவர்கள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே தேவர்கள் நேசிக்கப்படுகிறார்கள். அன்பே வேதங்களுக்காக வேதங்கள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே வேதங்கள் நேசிக்கபடுகின்றன. அன்பே, உயிரினங்களுக்காக உயிரினங்கள் நேசிக்கப்படுவதில்லை; ஆன்மாவிற்காகவே உயிரினங்கள் நேசிக்கப்படுகின்றன. அன்பே, எதற்காகவும் எதுவும் நேசிக்கப்படுவதில்லை; ஆனால் ஆன்மாவிற்காகவே அனைத்தும் நேசிக்கப்படுகின்றன. என் அன்பே, மைத்ரேயி, ஆன்மாவே தரிசிக்கப்பட வேண்டும்; கேட்கப்பட வேண்டும்; சிந்திக்கப்பட வேண்டும்; [நம்மையே] நிறைத்துக் கொள்ள வேண்டும். ஆக, அந்த அந்த தூய அறிவாகிய ஆத்மாவைப் பற்றி கேட்பதாலும், சிந்திப்பதாலும் அடைந்த ஞானத்தால் மட்டுமே அனைத்தும் அறியப்படுகின்றன.

**மரணமிலாப் பெருநிலை: 14–15**
**-----------------------------------**

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः ।
अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते ॥ १४॥

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய ஹ்ருதி ச்ரிதா: |
அத மர்த்யோ ம்ருதோ பவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே || 14 ||

பொருள்:

மனத்தைச் சார்ந்திருக்கும் அத்தனை ஆசைகளும் மனதிலிருந்து விடுபட்டுப் போகும்போது, அவன் அப்போதே அழியாத ஆத்மா பிரகாசிக்கின்ற நிலையில் மரணமற்றவன் ஆகிறான்.

மனதின் ஆசைகளை எப்போது விட முடியும்?

இதற்கு முந்தைய மந்திரம் கூறியதுப்போல, அது மட்டுமே இருக்கின்றது, நம்மால் அறியப்படுகின்ற அத்தனையும் அந்த ஆத்மாவை அறிவதற்காகத்தான் அதற்கு மட்டும்தான் என்ற கருத்தை ஆழ்ந்த சிந்தனையின் மூலம் நம்மில் நிலைக்க வைக்கும்போது, ஒன்றிலிருந்து ஒன்றிற்குத் தாவிக்கொண்டிருக்கும் மனம் அந்த ஆத்மாவிலேயே ஒடுங்கி, அனாவசியமாக வெளியே அலைப்பாயாமல், ஆசை வசப்பட்டு பொருள்களின் பின் செல்லாமல் இருக்க உதவும்.

அதாவது, ஏற்கனவே பார்த்ததுப்போல, எண்ணங்களை மனதில் ஒடுக்கி, மனதை புத்தியில் ஒடுக்கி, புத்தியை ஈஸ்வர சித்தம் என்கின்ற சத்வகுணத்தில் ஒடுக்கி, அந்த சத்வ குணத்தையும் ஆத்மாவில் ஒடுக்கும்போது, அவன் எந்த ஆசைகளும், எண்ணங்களும், குணங்களும் அற்ற குணாதீதன் என்ற நிலைக்கு உயருகின்றான். அதுவே அவன். அவனே நான் என்பதில் அவனிடத்தில் திடம் உண்டாகும். அவனே திடஞானி எனப் போற்றப்படுகின்றான்.

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।
अथ मर्त्योऽमृतो भवत्येतावद्ध्यनुशासनम् ॥ १५॥

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: |
அத மர்த்யோம்ருதோ பவதி ஏதாவத்யனுசாஸனம் || 15 ||

பொருள்:

மனத்தின் ஆசைகள் என்ற அத்தனை முடிச்சுகளும் அவிழும்போது, மனிதன் மரணமற்றவன் ஆகிறான். உபதேசம் இவ்வளவுதான் நசிகேதா.

பொதுவாக, மனிதனிடம் ஆசைகள் மட்டுமல்ல. அவனது மனத்தில் இன்னும் எவ்வளவோ விசய, சுகங்கள் உள்ளன. அவைகளை உணர்ச்சிப் போரட்டங்கள், உணர்ச்சிச் சிக்கல்கள் என ஏராளமாகப் பட்டியலிடலாம். அவைகள் எதையும் ஒவ்வொன்றாக ஒருவனால் என்றுமே நீக்க முடியாது. அதற்கு ஒரே வழி அவன் தன்னை அந்த ஆத்மா என்று உணரும்போது மட்டுமே அவைகள் அத்தனையும் நாசமாகின்றன. அதன்பிறகு தூயமையான அவனது மனம் ஆத்மீக வாழ்வின் உயர் நிலையில் நிற்பதால், அவனுக்கு இனி ஆகப்போவது ஏதுமில்லை. எல்லாம் ப்ரஹ்ம மயம்.

ஆகவே, எனது உபதேசம் இவ்வளவுதான் என்று எமதர்மராஜன் கூறுகின்றார்.

शतं चैका च हृदयस्य नाड्य-
स्तासां मूर्धानमभिनिःसृतैका ।
तयोर्ध्वमायन्नमृतत्वमेति
विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ॥ १६॥

சதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய
தாஸாம் மூர்தானமபி நி:ஸ்ருதைகா |
தயோர்த்வமாயன் அம்ருதத்வமேதி
விஷ்வங்ஙன்யா உத்க்ரமணே பவந்தி || 16 ||

பொருள்:

இதயத்தின் நாடிகள் நூற்றொன்று. அவற்றுள் ஒன்று உச்சந்தலையைப் பிளந்து செல்கிறது. அதன் வழியாக மேலே செல்பவன் மரணமற்ற நிலையை அடைகிறான். மற்ற நாடிகளின் வழியாக வெளியேறுபவன் பல்வேறு கீழ் உலகங்களில் உழல்கிறான்.

இந்த இடத்தில் நாம் அறிய வேண்டிய ஆழமான உண்மை என்னவெனில், ஆத்மா எங்கும், எதிலும் நிறைந்து இருந்தாலும், மனிதன் அதை தன் தலையில் உள்ள புத்தி சக்தியாக உணர்கின்றான். அந்த புத்தி விழிக்கப்பெற்றவன் மரணமில்லா பெருவாழ்வை அடைகின்றான் என்பதை பூடகமாக இந்த மந்திரம் தெரிவிக்கின்றது.

இதுப்புரியாமல், மீண்டும், அந்த மூடிக்கொண்ட பத்தாவது வாசலை திறந்துக் கொண்டு மரணம் அடையவேண்டும் என்பதற்காக பலரும் பலவிதமான மூச்சு பயிற்சிகளை அறியாமையினால் செய்கின்றனர். அந்த வகையிலே, வாசி, லம்பிகா என எதையாவது சொலிக்கொண்டு ஒரு கூட்டம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

உண்மையில் பத்தாவது வாசல் என்பது மனித உடலில் உள்ள சகஸ்ரஹாரம் என்ற சக்கரம் என்பதாக யோகத்தில் கூறப்பட்டாலும், அது உண்மையில் நம்மிடமுள்ள பிட்யூட்டரி, பீனியல் சுரப்பிகள் என்பதாகவே ஆதி ரிஷிகள் அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் இதுப்போன்ற ஆங்கில பெயரில் அதை அழைக்கவில்லை. அதற்கு பதிலாக **பிரம்மரந்திரம்** என்று கூறினர்.

அந்த பிரம்மரந்திரம் என்பது, மனிதன் மட்டுமே அறிவுப்பரிமாணத்தில் உயர் அறிவு வாழ்க்கைக்கு உயர்ந்து, நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் ஆறாம் அறிவு கொண்டான் என்பதினால், இவன் மட்டுமே இவனது புத்தி சக்தியைக் கொண்டு, விவேகத்தினால் விழித்துக் கொண்டு, மனித உடலின் மகத்துவம் உணர்ந்து உயிரை விடவேண்டும்.

அப்போது, அவனது விழித்துக் கொண்ட விவேகம் அவனை அந்த தூய அறிவாகிய ஆத்மா என்பதாக உணர்வதால், அவன் மட்டுமே இனி பிறக்க மாட்டான். பிறந்தால்தானே இறக்க வேண்டும் என்பதினால், அவன் மரணமற்ற பெருவாழ்வை அடைகின்றான் என்பதாக நம்முடைய பண்டைய ரிஷிகள் நமக்கு எடுத்துரைக்கின்றார்கள். இதுவே முடிந்த முடிவு. இதுவெ ஆழமான உண்மை. ஆனால், இது எலோருக்கும் அறிய முடியாது. அதற்குக் காரணம், அவர்கள் அறிவுப்பரிமாணத்தில் உயர, அந்த தூய அறிவை தன்னுள் அனுபவமாக்கும் மனதை முதலில் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**அங்குஷ்ட்டமாத்ர புருஷ வித்யை**

**——————————————————————**

अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा
सदा जनानां हृदये संनिविष्टः ।
तं स्वाच्छरीरात्प्रवृहेन्मुञ्जादिवेषीकां धैर्येण ।
तं विद्याच्छुक्रममृतं तं विद्याच्छुक्रममृतमिति ॥ १७॥

அங்குஷ்ட்ட மாத்ர புருஷோऽந்தராத்மா
ஸதா ஜனானாம் ஹ்ருதயே ஸன்னிவிஷ்ட்ட: |
தம் ஸ்வாச்சரீராத் ப்ரவ்ருஹேன் முஞ்ஜாதிவேஷீகாம் தைர்யேண |
தம் வித்யாச்சுக்ரமம்ருதம் தம் வித்யாச்சுக்ரமம்ருதமிதி || 17 ||

பொருள்:

நசிகேதனுக்கு எமதர்மன் கூறிய உபதேசத்தைப் பொறுத்தவரை கடைசி மந்திரம் இதுவே. இதில்கூறப்பட்ட அங்குஷ்ட்ட மாத்ர வித்யை எனும் புருஷ வித்யை, நசிகேத வித்யை என்ற இந்த இரண்டு முறைகளை நாம் நம்முள் உணர வேண்டிய ஆத்மவித்யை என்பதாகவே பார்த்தோம். அந்த வகையிலே, மனித உடலில் உறைகின்ற ஆத்மா பெருவிரல் அளவுடையது. அது எப்போதும் மனிதர்களின் இதயத்தில் இருக்கின்றது. அது பௌதீக இதயம் அல்ல. அது நம் தலையில் உள்ள இருதயக்குகை எனும் **பிரம்மரந்திரம்** ஆகும். அதனை தனித்த தன்னுடைய அறிவு என்பதாகப் பிரித்துப் பார்க்காமல், எல்லையற்ற பரமனின் பவித்ரமான ஒரே பேரறிவு, பேருணர்வு என்பதாகவே பார்க்க வேண்டும்.

அத்தகைய தூய அறிவாகிய பரமனை புற அறிவுப் போல பார்க்காமல், அது அக அறிவாக நம்முள் இருந்துக் கொண்டு எல்லாவற்றையும் அறியும் அறிவு என்பதாகப் பிரித்தறிய வேண்டும். அதைக் கொண்டுபோய் புற அறிவுடன் ஒப்பிட்டு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது. அதற்கு உதாரணமாக, தென்னை ஓலையிலிருந்து, ஈர்க்குச்சியைப் பிரிப்பது எடுப்பதுப்போல, நம்முடைய அழியக்கூடிய அற்ப உடலில் இருந்து என்றும் அழியாத ஆத்மாவைப் பிரித்தெடுக்க வேண்டும். அதையும் இந்த உடலோடு சேர்ந்து அழியக்கூடியதாக நினைத்துக் கொள்ளக்கூடாது என்பதை இங்கு மகான்கள் வலியுறுத்த வருகின்றார்கள். இதுப்புரியாமல், பெரும்பாலானவர்கள் நான் ஒரு ஜீவாத்மா இதற்கு வேறாக என்னைப் படைத்த பரமாத்மா என்ற இன்னொரு ஆத்மா இருப்பதாக இப்படிப் புரிந்துக் கொள்கின்றார்கள் என்பதாகவே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

मृत्युप्रोक्तां नचिकेतोऽथ लब्ध्वा
विद्यामेतां योगविधिं च कृत्स्नम् ।
ब्रह्मप्राप्तो विरजोऽभूद्विमृत्यु-
रन्योऽप्येवं यो विदध्यात्ममेव ॥ १८॥

ம்ருத்யுப்ரோக்தாம் நசிகேதோத லப்த்வா
வித்யாமேதாம் யோகவிதிம் ச ச்ருத்ஸ்னம் |
ப்ரஹ்ம ப்ராப்தோ விரஜோபூத் விம்ருத்யு:
அன்யோ ப்யேவம் யோவிதத்யாத்மமேவ || 18 ||

பொருள்:

இதுவரை எமதர்மனால் சொல்லப்பட்ட இந்த வித்யைகளை நன்கு புரிந்துக் கொண்ட நசிகேதன் மரணத்தின் தீர்க்க தரிசனத்தை அடைந்தான். இந்த உபதேசத்தைக் கேட்டதுடன் நசிகேதன் நின்றுவிடவில்லை. அந்த தூய அறிவாகிய ஆத்மாவாகவே தன்னை உணர்ந்தான். அவன் இனி பிறக்க மாட்டான். மரணமற்றவனாக மாறிவிட்டான். என்றும் அழியாத தூய அறிவாகிய ஆத்மாவாகவே அவன் ஆகிவிட்டான். மற்றவர்களும் இந்த வித்யையை அறிந்து, இவனைப் போன்றே தன்னையும் அந்த தூய அறிவாகிய ஆத்மாவாக பின்பற்றும் போது, இவர்களும் இறவாப் பெருநிலையைப் பெருகின்றார்கள்.

இந்த கிடைத்தற்கரிய நற்பேறு யாரோ ஒருவருக்கு மட்டும் உரித்தானது அல்ல. இதனைப் பின்பற்றுகின்ற எல்லோரும் இதனை அடையலாம். எனவே, இதனைப் பின்பற்றிப் என்றும் அழியாத ஆத்மாவாகப் பிறவாப் பெருநிலையை உணருங்கள் என்பதாகவே இந்த கடோபநிஷதம் நிறைவுபெறுகிறது.

इति काठकोपनिषदि द्वितीयाध्याये तृतीया वल्ली ॥

|| இதி காடக உபநிஷதி த்விதீயாத்யாயே த்ருதீயா வல்லீ ||

|| இதி கடோபநிஷத் ஸமாப்தா ||

இத்துடன் கடோபநிஷதம் நிறைவு பெறுகிறது.

ஓம் தத் ஸத்!

# கடோபநிஷதம்

(மரணத்திற்கு பின்னால்...)



ப்ரக்ஞன்